# உதயன்

சுடர் 30 கதிர் 312 ...ர் ஆண்டு 2046 புரட்டாதி 17, ஞாயிற்றுக்கிழமை 04.10.2015



மகாராஜா பொதிகள் சேவை

லண்டன், சுவிஸ், பிரான்ஸ்க்கு 01 Kg க்கானகட்டணம் 449/-, கனடாவுக்கு 1Kg க்கு 549/-

GTV Enterprises (Pvt)Ltd.

இல 225 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் 021 - 2224338 / 021-4925024

இல 25 கந்தசாமி கோவில் வீதி வவுனியா 024 - 4930200


# நீதியான விசாரணையே நல்லிணக்கத்துக்கு வழி

## இலங்கை அரசிடம் சுட்டிக்காட்டுகிறார் கமரூன்
## அமெரிக்கத் தீர்மானத்துக்கும் அவர் வரவேற்பு

லண்டன், ஒக்ரோபர் 4

நீதியான விசாரணைகளை நடத்திப் போரில் என் னென்ன சம்பவங்கள் இடம் பெற்றன என்பது குறித்த உண்மைகளைக் கண்டறிந்துகொள்வது, நல்லிணக்கத்துக்கு வழி வகுக்கும் என பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கை அரசிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை குறித்த அமெரிக்கத் தீர்மானத்தை வரவேற்றுள்ள அவர், போரினால் பாதிக்கப் பட்ட மக்களுக்குப் பிரிட் டன் தொடந்தும் அர்ப்பணிப்புடன் உதவும் எனவும் உறுதியளித்துள்ளார்.



இது தொடர்பில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

இந்தத் தீர்மானம், தீர்வு நோக்கிய ஒரு முக்கியமான நடவடிக்கையாகும். இலங்கையின் மீது சாட்டப்படும் போர்க்குற்றங்கள் பற்றிய உண்மையை அறிந்து பக்கம் 21

## வளலாயின் ஏனைய பகுதி டிசெம்பருக்குள் விடுவிப்பு

அந்தப் பகுதி மக்களிடம் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக்.4

எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் மக்கள் கோரிய வளலாயின் ஏனைய பகுதிகளை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்க முயற்சிக்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார் எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன்.

நேற்றுக் பக்கம் 21

## வடக்கு முதல்வருடன் விரைவில் பேசுவேன்

யாழில் சம்பந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.4

வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்த விடயங்கள் தொடர்பில் நாங்கள் சற்று மௌனமாக இருந்தோம். அவருடன் விரைவில் பேசவுள்ளோம். எமது மக்களுக்காக நாங்கள் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டிய கடப்பாடு இருக்கின்றது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

உதயன் பக்கம் 21

## கிளிநொச்சிக்கு நாளை வருகிறார் மைத்திரிபால

யாழ்ப்பாணம், ஒக்.4

கிளிநொச்சி மாவட்டத்தின் பரவிப்பாஞ்சான் பகுதியில் மக்களை மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பக்கம் 21

## யாழ்.போக்குவரத்தில் பல்வேறு குறைபாடுகள்

போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக்.4

போக்குவரத்துச் சேவைகள் சீரான நேர அடிப்படையில் உள்ளபோதும் சில குறைபாடுகளையும் மக்கள் எதிர்கொள்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது என போக்குவரத்துத் துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். பக்கம் 21

## பொறுப்புக் கூறலில் தனியாகக் கவனம் செலுத்தவேண்டும்

சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கூட்டாக வலியுறுத்தல்

ஜெனிவா, ஒக்.4

இலங்கையின் பொறுப்புக்கூறல் முயற்சிகளில் தனியான கவனம் செலுத்தப்படவேண்டும் என்று சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

ஜெனிவாவில் கடந்த மூன்று வாரங்களாக நடந்து வந்த ஐ.நா மனித உரிமைகள் சபையின் 30 ஆவது கூட்டத்தொடர் நேற்றுமுன்தினம் நிறைவடைந்தது.

இந்தக் கூட்டத்தொடரின் ஒட்டுமொத்த செயற்பாடுகள் குறித்தும், பத்து அமைப்புகள் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன. இதில் ஜோர்தான், யேமன் மற்றும் பக்கம் 21

## சந்தேகத்தை விட்டுத் தள்ளுங்கள்

எதிர்க்கட்சித் தலைவர் உதயனுக்கு பிரத்தியேக செவ்வி

சூரியகாந்தி பக்கம் 2,3

## சேயா கொலைக்கு நீதி வேண்டி யாழ்ப்பாணத்தில் போராட்டம்




யாழ்ப்பாணம், ஒக்.4

கொட்டதெனிய பகுதியில் பாலியல் வன்புணர்வுக்குட் படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட 5 வயதுச் சிறுமி சேயாவுக்கு நீதி கோரி யாழ். மத்திய பஸ் நிலையத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட் டது.

புதிய மாக்சிச லெனினிசக் கட்சியும், சமூக நீதிக்கான வெகுசன அமைப்பும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை பக்கம் 21

## சிகரெட், மதுபானம் விலைகள் அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.4

சிகரெட் மற்றும் மதுபானங்களின் விலைகள் நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி 1000 சிகரெட்டுகள் மீதான வரி 2ஆயிரத்து 140 ரூபா அதிகரிக்கப்பட்டு 21,610 ரூபாவிலிருந்து 23,750 ரூபாவாக பக்கம் 21

## அமெ. தீர்மானத்துக்கு இதுவரை 38 நாடுகள் இணை அனுசரணை

ஜெனிவா, ஒக்.4

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை குறித்துக் கடந்த முதலாம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு நேற்றுமுன்தினம் வரை 38 நாடுகள் இணை அனுசரணை வழங்கியுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் நிறைவடைந்தது. இந்த அமர்வின் கூட்டத்தொடரில், இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகளை பக்கம் 21












Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிறுவர் மருத்துவ முகாம் நேற்று மல்லாகம் ம.வியில்



வலி.வடக்கு, ஒக். 4
சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு நேற்றுச் சனிக்கிழமை மல்லாகம் மகாவித்தியாலயத்தில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் பாடசாலைச் சிறுவர்களுக்கான மருத்துவ முகாம் இடம்பெற்றது.
இந்த மருத்துவ முகாமில் பொது வைத்தியம், கண் வைத்தியம், உளநல வைத்தியம், சிறுவர் வைத்தியம் உட்பட பல வைத்தியர்கள் கலந்து கொண்டு பரி சோதனைகளை மேற்கொண்டனர்.
இதில் விருந்தினராக மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், யாழ் மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் கே.ஸ்ரீமோகனன், மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.சுசீந்திரன உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.
இந்த மருத்துவ முகாமில் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள்,பெற்றோர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர். (த-86)

# இலங்கை போன்று சகல நாடுகள் மீதும் ஐ.நாவின் கவனம்

## வேண்டும் என்கிறது பாகிஸ்தான்

ஜெனிவா, ஒக்.4
இலங்கை தொடர்பாக தான் வெளிப்படுத்திய தீவிரத்தை பயங்கரவாதத்தை எதிர்கொள்ளுதல் என்ற போர்வையில் சித்திரவதைகள், வன்முறைகள் போற்றவற்றில் ஈடுபடும் முக்கிய நாடுகள் மீதும் ஐ. நா மனித உரிமைகள் ஆணையாளர் வெளிப்படுத்தவேண்டும் என பாகிஸ்தான் கோரியுள்ளது.
ஜெனிவாவுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஜமீர் அக்ரம் விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
கடந்த முப்பது வருடங்களாகப் பயங்கரவாதமற்றும்பிரிவனைவாத சக்திகளை எதிர்கொள்வதற்கு இலங்கை மேற்கொண்ட முயற்சிகளுக்கு பாகிஸ்தான் என்றும் ஆதரவாகச் செயற்பட்டுள்ளது.
இலங்கையில் பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டம் முடிவுக்கு வந்துள்ளதைத் தொடர்ந்து அந்த நாட்டு மக்களுக்குச் சர்வதேசசமூகத்தின் ஆதரவு தேவை என பாகிஸ்தான் கருதுகின்றது.
இலங்கை தொடர்பாக தான் வெளிப்படுத்திய தீவிரத்தை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர், உலகின் முக்கிய நாடுகள் பயங்கரவாதத்தை எதிர்கொள்வது என்ற போர்வையில் இழைக்கும் வன்முறைகள் குறித்தும் காண்பிக்கவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ)



*எட்டாவது நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்றுக் கொண்ட பின்னர், யாழ்.மாவட்டத்துக்கு முதல் தடவையாகப் பயணம் மேற்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நேற்று மதியம் உதயன் பத்திரிகை அலுவலகத்துக்கு வருகை தந்தார். அவரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், உதயன் குழுமத் தலைவருமாகிய ஈ.சரவணபவன் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி யசோதை சரவணபவன் ஆகியோர் வரவேற்றனர். (த)*

# தமிழருக்கு நியாயம் வழங்காத தீர்மானம்

### *ஜெயலலிதா கண்டனம்*



சென்னை, ஒக்.4
ஐ. நா. மனித உரிமைகள் ஆணையகத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், இலங்கைத் தமிழர்களுக்கு எந்த விதத்திலும் நியாயம் வழங்குவதாக இருக்காது. இது இலங்கை அரசுக்கு சாதகமாகவும், இலங்கைத் தமிழர்களுக்குப் பாதகமாகவும் இருக்கும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.
இது குறித்து முதல்வர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
தமிழ்நாடு சட்ட சபையில் கடந்த 16ஆம் திகதி ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு செயல். வடிவம் கொடுக்க மத்திய அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதையே தற்போது ஐ. நா சபையின் மனித உரிமைகள் கூட்டத்தில் நிறைவேற் றப்பட்ட தீர்மானம் எடுத் துரைக்கின்றது.
ஐ. நா. மனித உரிமைகள் சபையின் அமர்வில் இலங்கையே போர்க் குற்றங்கள் பற்றி விசாரித்துக் கொள்ளலாம் என்ற வகையில் தீர்மானம் நிறைவேற்றக் கூடிய சூழல் உள்ளது என்பதையும், அதனைத் தடுத்து நிறுத்த வேண்டிய கடமை இந்தியப்பேரரசுக்கு உள்ளது என்பதையும் நான் தெளிவாக தமிழ்நாடு சட்ட சபையில் தெரிவித்திருந்தேன்.
எனினும், மத்திய அரசு இது தொடர் பாக எவ்வித நேர்மறை நடவடிக் கையையும் எடுக்கவில்லை. இந்தத்தீர்மானம் இலங்கைத் தமிழர்களுக்கு எந்தவிதத்திலும் நியாயம் வழங்குவதாக அமையாது. இது இலங்கை அரசுக்குச் சாதகமாகவும், இலங்கைத் தமிழர்களுக்கு பாதகமாகவும் அமைந்துள்ள தீர்மானம் [illegible] றுள்ளது. (த-வ)


கலை ஆர்வலர்களுக்காக
மீண்டும்
அளப்பருங்கருணை
கொக்குவில் கலாபவனம் வழங்கும் தாகூரின் சன்னியாசி நாடகத்தையும், கவிதைகளையும் கொண்டதொரு
நடன நாடகம்
இன்று 04 ஒக்ரோபர் 2015
மாலை 6.00 மணி
கூவர் அரங்கம்,
யாழ். மருத்துவபீடம்.
நுழைவுக்கட்டணம் ரூ.500/-
யாழ். மருத்துவபீட பழைய மாணவர் சங்கம்.

# 70,000 பனை விதைகள் வவுனியாவில் நடப்படும்



வவுனியா, ஒக்.4
வவுனியா மாவட்டத்தில் 70ஆயிரம் பனம் விதைகளை நடுகை செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
வவுனியாவில் நேற்று முன் தினம் காலை 10.00 மணிக்கு வவுனியா பனை அபிவிருத்தி சபையின் மாவட்ட இணைப்பாளர் நா.பாஸ்கரன் [illegible] இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
வவுனியா மாவட்ட உதவி பிரதேச செயலாளர் திருமதி.சாரதா கர்ணன் பனை விதையை நாட்டி செயற்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.
இந்த நிகழ்வில் பேராறு நீர்த்தேக்கத் திட்ட உத்தியோகத்தர் மற்றும் வவுனியா மாவட்ட பனை அபிவிருத்தி சபையின் உத்தியோகத்தர்கள் , பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-421)

# கைக்குண்டுகள் மீட்கப்பட்டன



யாழ்ப்பாணம், ஒக். 4
யாழ்ப்பாணத்தில் உடுப்பிட்டி, எழுதுமட்டுவாழ் தெற்கு பிரதேசங்களில் வெடிக்காத நிலையில் கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.
எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் காணி துப்புரவு செய்தவர்கள் அங்கு கைக்குண்டு காணப்பட்டதையடுத்து கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவித்தனர்.
இதனடிப்படையில் பொலிஸாரின் விசேட அதிர டிப் படையினர் மூலம் கைக் குண்டு அப்புறப்படுத்தப்பட்டது.
இதே போன்று உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கு அண்மையில் முன்னர் இராணுவமுகாம் அமைந்திருந்த வீட்டின் மலசல கூடத்தை தொழிலாளர்கள் நேற்றைய தினம் துப்புரவு மேற்கொண்ட போது இரண்டு கைக் குண்டுகள் வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டன. இது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-9-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 வருடங்கள் எமது இளைஞர்கள் ஆயுதத்தால் மனவுறுதி காட்டினர்

## மன்னாரில் தெரிவித்தார் முதலமைச்சர்

மன்னார், ஒக். 4

கடந்த 30 வருட காலத்தின் போது எமது இளைஞர் யுவதிகள் ஆயுதங்கள் வாயிலாக தமது மன உறுதியை காட்டி வாழ்ந்தார்கள். இனி விளையாட்டுக்கள் மூலமாகவும் கல்வி மூலமாகவும் வேறு வழிகளிலும் எமது மன உறுதியை வெளிக் காட்டும் காலம் உதயமாகியுள்ளது என வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபையின் மாகாண பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி ஒதுக்கீட்டின் நிதியத்தில் இருந்து மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்ட மன்னார் மாவட்ட பல்தொகுதி உள்ளக விளையாட்டரங்கு திறப்பு விழா நேற்றுக்காலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இதன் போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு குறித்த விளையாட்டு அரங்கை திறந்து வைத்த பின் உரையாற்றுகையிலேயே வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தனது உரையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குறித்த பல் தொகுதி உள்ளக விளையாட்டரங்கினை கட்டி முடிக்க பணம் போதவில்லை. எனவே தொடர்ந்து பெற்ற நிதியங்களைக் கொண்டு 2014ம் ஆண்டிலேயே இது பூர்த்தி செய்யப்பட்டது.

தொடர்ச்சியாக மூன்று வருட ஒதுக்கீடுகளில் இருந்து சுமார் 350 லட்சம் செலவில் வடமாகாணத்தில் முதல் பல்தொகுதி விளையாட்டரங்காக இது கட்டி முடிக்கப்பட்டது.

விடாப்பிடியாக நின்று இதைக் கட்டி முடித்த சகலருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக. பூப்பந்தாட்டம், கைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம் மற்றும் டெனிஸ் போன்ற விளையாட்டுக்கள் விளையாட வசதி படைத்தது இந்த விளையாட்டரங்கு.

அண்மைக் காலங்களில் எமது விளையாட்டுத்துறை மாகாண ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் படிப்படியான முன்னேற்றங்களை அடைந்து வருகின்றன. வீர வீராங்கனைகளுக்கான வசதிகளும் ஊக்குவிப்புக்களும் எமக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதிகளிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுமார் 30 வருட காலத்தின் போது எமது இளைஞர் யுவதிகள் ஆயுதங்கள் வாயிலாக தமது மன உறுதியை காட்டி வாழ்ந்தார்கள். இனி விளையாட்டுக்கள் மூலமாகவும் கல்வி மூலமாகவும் வேறு வழிகளிலும் எமது மன உறுதியை வெளிக்காட்டும் காலம் உதயமாகியுள்ளது.

அண்மையில் நான் போதைப் பொருள்தடுப்புக்கூட்டமொன்றுக்கு கொழும்பு சென்றிருந்தேன். நண்பரும் சட்டத்தரணியுமான அமைச்சர் ஜோண் அமரதுங்க அவர்களுடன் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அப்பொழுது அங்கு பேசிய போதைப் பொருள் தடுப்பு நிறுவனத்தின் தலைவர் வடமாகாணம் விரைவில் மற்றைய மாகாணங்கள் சகலதையும் பின்நிறுத்தி எல்லா விதத்திலும் முன்னேற்றம் அடைந்து விடும் என்ற கருத்தை அங்கு முன்வைத்தார்.

முன்னைய இயக்க இளைஞர்களே இந்தியாவில் இருந்து போதைப் பொருட்களைக் கடத்தி வந்து இங்கு விற்றுப் பணம் சம்பாதிக்கின்றார்கள் என்ற கருத்தை அங்கு அப்போது அவர் முன்வைத்தார். அப்போது தான் அவர் எம்மை அவ்வளவு உயர்த்தி வைத்துப் பேசியதன் மர்மம் புரிந்தது. உடனே ஆயுதம் ஏந்திய 150,000 இராணுவ வீரர்கள் பரந்து கிடக்கும் வடமாகாணத்தில் ஒரு சில தமிழ் இளைஞர்கள் போதைக் கடத்தலில் மிக வெற்றிகரமாக ஈடுபட்டிருக்கின்றார்கள் என்று கூறுகின்றீர்களா என்று திருப்பிக் கேட்டேன். அதற்கு அவர் பதில் கூறவில்லை- என்றார்.

(த-வ-56)

# போதையில் வாகனம் செலுத்திய ஐவருக்கு ரூ.50,000 அபராதம்

யாழ்ப்பாணம், ஒக். 4

மதுபோதையில் வாகனம் செலுத்தியவர்களுக்கு சுமார் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது மன்னார் நீதிமன்று. அத்துடன் அவர்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

வெவ்வேறு இடங்களில் வாகனங்களை மதுபோதையில் செலுத்திச் சென்ற குற்றச்சாட்டில் மன்னார் பொலிஸாரால் 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நீதிவான் ஏ.ஜி.அலெக்ஸ் ராஜா முன்னிலையில் இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேக நபர்கள் தம்மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டனர். இதனையடுத்து 3 பேருக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபாவும் 2 பேருக்கு தலா 11 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. அவர்கள் அபராதம் செலுத்தத் தவறின் 3 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. அவர்கள் அனைவருக்கும் 3 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு அது 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அவர்கள் 5 வருட காலத்துக்குள் மீண்டும் மதுபோதையில் வாகனம் செலுத்திச் செல்வார்களாயின் அவர்களுக்கு அந்தக் குற்றத்துக்கான தண்டனையும் இப்போது விதிக்கப்பட்ட 3 மாதங்கள் சிறைத் தண்டனையையும் அவர்கள் அனுபவிக்கவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (த-4)

# சாதாரணதர மாணவருக்கான செயலமர்வு முல்லைத்தீவில்





முல்லைத்தீவு, ஒக் .4

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சரசவி மித்துரோ ஒழுங்கு செய்த ஜி.சி.ஈ. சாதாரண தரத்தில் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான விஞ்ஞான, கணித பாடங்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கு நேற்றுக்காலை 8.30 மணியளவில் முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி கேட்போர் கூடத்தில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவுக் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன், முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரி அதிபர் க. சிவலிங்கம் , டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் பொது முகாமையாளர் ஜெயந்த ரத்நாயக்கா, கம்பனியின் வடக்கு-கிழக்கு பிராந்திய முகாமையாளர்களான அருண ஜெயசிங்க, கோசல ரத்நாயக்கா, தினேஷ் தர்மரட்ன, துசார பஸ்நாயக்க, எம்.குகன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

முன்னதாக விருந்தினர்களுக்கு மலர் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டதுடன் விருந்தினர்களால் மங்கள விளக்கு ஏற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் சுமார் 300 மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். இதில் கலந்துகொண்ட அனைத்து மாணவர்களுக்கும் 2015 ஆம் ஆண்டுக்கான கணித, விஞ்ஞான மாதிரி வினாத்தாளும் 2011ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையிலான கணித, விஞ்ஞான பாடங்களுக்கான கடந்தகால வினா விடைகளை உள்ளடக்கிய நூல்களும், மாணவர்களுக்குத் தேவையான காகிதாதிகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் வித்தியானந்தக் கல்லூரியில் கல்வி பயிலும் வறிய மாணவர்கள் 93 பேருக்கு பாதணிகளும் வழங்கப்பட்டன. சம நேரத்தில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும் சுமார் 300 மாணவர்களுக்கான கருத்தரங்கு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இக்கருத்தரங்குக்கான முழு அனுசரணையை டேவிட் பீரிஸ் கம்பனி வழங்குவது குறிப்பிடத்தக்கது. (த-102)

# வாழைக்குலைத் திருடரால் விவசாயிகள் திண்டாட்டம்

வலி.வடக்கு, ஒக். 4

புன்னாலைக்கட்டுவன் வடக்கில் தொடரும் வாழைக்குலைத் திருட்டினால் வாழைச் செய்கையாளர்கள் செய்வதறியாது திண்டாடுகின்றார்கள்.

கடந்த வியாழக்கிழமை அதிகாலையிலும் சுமார் 25ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய வாழைக்குலைகள் திருடப்பட்டுள்ளன.

சுமார் 15 முதல் 20 வரையான வாழைக் குலைகள் புன்னாலைக் கட்டுவன் மஸ்கன் வீதியில் அமைந்துள்ள இரண்டு வாழைத் தோட்டங்களில் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை உடுவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் கிராம அலுவலர்களும், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் வாழைக்குலைத் திருட்டுக்கள் சம்பந்தமாக முறையிட்டபோதிலும், இதனை கட்டுப்படுத்த ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக சுன்னாகம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பிரதேச செயலாளர் முன்னிலையில் கூறிச் சமாளித்துள்ளார்கள்.

குறிப்பிட்ட விடயம் தொடர்பாகப் பொலிஸார் கூறிய சில மணித்தியாலங்களிலேயே இந்தக் களவுகள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

(த-86)



*எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்றுக் கொண்ட பின்னர் யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நேற்று முன் தினம், நல்லூர் கந்தசுவாமி கோயில், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆகியவற்றுக்குப் பயணம் செய்தார். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்குச் சுற்றுலாவுக்கு வந்திருந்த பாடசாலை மாணவர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் அளவளாவினார்.* (த)

# வன்னியில் ஹக்கீம்

வவுனியா, ஒக். 4

வவுனியாவுக்கான பயணத்தை மேற் கொண்டுள்ள நகர அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு வவுனியா நீர்ப்பாசன திணைக்களத்துக்குச் சென்று அலுவலகத்தைப் பார்வையிட்டதுடன் குறைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் வவுனியா மாவட்ட செயலகத்தில் நகரத் திட்டமிடல் அபிவிருத்திக் கூட்டத்தையும் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடத்தினார். இதில் நகர அபிவிருத்திச் செயற்திட்டங்கள் தொடர்பாக அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது.

இதில் வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர, திணைக்களத்தின் அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான், வடமாகாண சபை உறுப்பினர் ஜெயதிலக, பிரதேச செயலாளர் கா. உதயராஜா, நகர சபை செயலாளர் கா. சத்தியசீலன் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த)



# சட்டவிரோதமாக மாடு வெட்டியவர் கைதானார்

வடமராட்சி, ஒக். 4

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஞானசாரியார் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள வேளுண்டி மயானத்தில் சட்ட விரோதமாக மாட்டிறைச்சி வெட்டிய ஒருவரைப் நெல்லியடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை காலை 6 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

கால்நடை வைத்தியசாலையினால் அடையாளமிடப்பட்ட மாடே இவ்வாறு வெட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக முதற்கட்ட விசாரணையை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளனர்.

இந்த மயானத்தில் வழமையாக அனுமதி பெற்ற மாடுகள் [illegible] பட்டு வருகின்றமை குறி[illegible]க்கது.

(த-422)

# ஓட்டோ-மோ. சைக்கிள் விபத்தில் சிறுவன் காயம்

வலி. வடக்கு ஒக்.4

சுன்னாகம் நகரப் பகுதியில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற ஓட்டோ-மோட்டார் சைக்கிள் விபத்தில் 7 வயதுச் சிறுவன் ஒருவர் தலையில் காயம் அடைந்துள்ளார்.

காங்கேசன்துறை வீதியில் இடம் [illegible] வீதிக்கு வந்தமையால் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த பெண் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் ஓட்டோவுடன் மோதுண்டார்.

இதில் மோட்டார் சைக்கிள் சேதத்துக்கு உள்ளாகியதுடன்; அதில் தாயுடன் வந்த சிறுவனும் தலையில் காயத்துக்கு உள்ளானான்.

சுன்னாகம் பொலிஸார் உடனடியாக சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

(த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கில் பாலர் கல்வி வளர்ச்சி; அச்சுவேலி இளைஞர் முன்மாதிரி

அச்சுவேலிப் பிரதேசத்தில் உள்ள ஏழு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களின், கல்வி வளர்ச்சிக்கு உதவுவதற்காக, அறக்கட்டளை ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. தன்னார்வ இளைஞர்கள் குழுவொன்றின் மனங்களில் உதித்த எண்ணங்கள் ஒரு சேர்ந்து இந்தப் புதிய திட்டத்தைச் செயலாக்கி உள்ளது.

இந்தப் புதிய அமைப்பு முதலில், தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையும் கற்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான, அபிவிருத்திக்கான செயல் திட்டங்களை முன்னெடுக்க உள்ளதாக அறியவந்துள்ளது.

இனம் காணப்பட்டுள்ள பாடசாலை ஒவ்வொன்றுக்கும், தனித்தனியான குழுக்கள் சென்று கல்வி நடவடிக்கை மற்றும் அது சார்ந்த செயற்பாடுகளுக்கு இடையூறாக உள்ள காரணிகள் தொடர்பாகத் தகவல்களைத் திரட்டி வருகின்றன.

அவற்றை அடிப்படையாகக் கொண்டு, மாணவர்களிடம் கல்வி மேம்பாட்டை மேலுயர்த்துவதற்கான உதவிகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த உதவிகள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் மேற்பார்வைக்கு உட்பட்ட முறையிலேயே நடைபெறும் என்பதும் விதிமுறையாக வகுக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான கல்விக் கட்டமைப்பில், ஆரம்பக் கல்வி என்ற முதற்கூறு, பத்து வயது வரை உள்ள பருவமாகும். அந்தக் காலம் மிக மிக முக்கியமானது. அந்தப் பருவத்தில் ஆசிரியர்கள், பெற்றோரின் உரிய கவனிப்பு மிகவும் அவசியம். அது இல்லாத பட்சத்தில், அவர்கள் பாடசாலையில் இருந்து இடைவிலகுவதும், அனேக தரப்பினரின் கல்வி தறுக்கணித்துப் போவதும் வழமையாகி வருகிறது. அதனைப் பெருநட்டம் என்றும் வகுக்கலாம்.

ஆகையால், இதனைக் கருத்தில் கொண்டு, எமது சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும், அத்தகைய நிலை உருவாகாதிருக்க உதவ வேண்டும்.

இன்னொரு முக்கிய விடயம். கிராமப்புறங்களில் இயங்கும் பாடசாலைகளில் உரிய வள வசதிகள் மிக மிகக் குறைவு; பலவற்றில் பூச்சியம் என்று கூடக் கூறலாம்.

அதனால், பெற்றோர் தமது பிள்ளைகளை, தரம் ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்புக்களில் கற்கும் மாணவர்களை, நகரப்புறப் பாடசாலைகளுக்கு அனுப்பும் நிலை அதிகரித்து வருகிறது.

உள்ளார்ந்து பார்த்தால், இது சமூக மட்டத்தில் கல்விசார் போதனையில் ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கும் பாதகமான வழிக்கு இட்டுச் செல்கிறது. அத்தோடு, கல்வியின் சிறப்பையும் மேன்மையையும் பொசுக்கிவிடுகிறது.

அதேவேளை, நிறுவன மயப்படுத்தப்பட்ட நிலையில், கிராம மட்டத்தில் கல்விக்கு ஊக்குவிப்பு முன்னெடுக்கப்பட்டால், அது பெற்றோர்களையும் மற்றும் பாதுகாவலர்களையும் விழிப்படையச் செய்யும்.

இளைஞர்கள் தமது சக்தியை, சமூக நலனுக்கும், எதிர்காலச் சந்ததியினரின் கல்வி மேம்பாட்டுக்கும் பயன்படுத்தும் நிலை, உயர்ந்து வடமாகாணம் முழுவதற்கும் பரவினால்--

கல்வியால் பெருமைபெற்ற வடக்கின் தமிழ் மக்கள், ஈழம் வாழ் தமிழ் மக்கள் கல்வி கேள்விகளில் மீண்டும் மேன்னிலையை எய்தலாம். பட்டிதொட்டி எல்லாம் கல்விச் செல்வம் செழித்து வளரும்.

அச்சுவேலிப் பிரதேசத்தின் தன்னார்வ இளைஞர்களது முன்முயற்சி, முன்னுதாரணம் ஏனைய பகுதிகளுக்கும் தொற்றிக்கொள்ளும்போது, வடக்கின் கல்விநிலை, அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த மேன்னிலைக்கு உயரும் என்றால், அது மிகைப்படுத்தப்பட்ட ஒன்று அல்லவே.

# பிரபலங்களுடன் புகைப்படம் எடுப்பதைவிட அவர்கள் வழியில் வாழ்வதே சிறந்ததாகும்

## இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக்.4

சமுதாயத்தில் உயர்ந்தோர், பிரபலங்களுடன் நின்று புகைப்படம் எடுத்துப் பெருமைப்பட்டுக்கொள்ளாமல், அவர்கள் வழியில் வாழ வேண்டும். அதற்குச் சிறிதளவாவது முயற்சிக்கவேண்டும் – இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன்.

அகில இலங்கை காந்தி சேவா சங்கமும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு 'டி'யும் மெய்யியற் கழகமும் இணைந்து நடத்திய 'காந்தியின் பிறந்ததினமும் உலக அஹிம்சை தினமும்' நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அங்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் இருப்பது தமிழகத்தை விட்டு வெளியே வந்த உணர்வை எனக்கு ஒருபோதும் தந்ததில்லை. இந்தியப் பெரியோர்களை மதிக்கும் பண்பை இங்கு காண்கிறேன். அது காந்தியாக இருக்கட்டும் இல்லை, அப்துல் கலாமாக இருக்கட்டும் எமது நாட்டுப் பெரியோருக்கும் இங்கு மரியாதை கொடுக்கிறீர்கள்.

நான் யாழ்ப்பாணத்தில் பல பாடசாலைகள், சனசமூக நிலையங்களுக்குச் சென்றிருக்கின்றேன். அங்கெல்லாம் மகாத்மாகாந்தியின் உருவப் படங்கள், திருவள்ளுவர், அப்துல் கலாமின் படங்கள் நினைவாக வைத்து கௌரவித்து மரியாதை செலுத்துகிறார்கள். இதற்கெல்லாம் நாம் நன்றிக் கடன் பட்டிருக்கின்றோம். இதற்கான நன்றியை வெறும் வார்த்தைகளில் கூறிவிடமுடியாது. வார்த்தைகள் கடந்தவை அவை. இதனை நினைத்து நான் மிகவும் மகிழ்வடைகிறேன்.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது யாழ்ப்பாண மக்கள் சாதாரணமானவர்கள் இல்லை என்பதை நீங்கள் நிரூபிக்கின்றீர்கள். இதன்மூலம் எதிர்காலச் சந்ததிக்கு அன்பு, பண்பை வளர்க்கின்றீர்கள்.

காந்தியின் பிறந்ததினம் ஐ.நாவால் சர்வதேச அஹிம்சைத் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு கொண்டாடப்பட்டு வருகின்றது.

1927ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த மகாத்மா காந்தி தனது பயணத்தின் பெருமளவு நாள்களை வடக்கு மாகாணத்திலேயே செலவிட்டார். இளைஞர்கள்தான் வருங்காலத் தலைவர்கள் என்று அவர் தெரிந்துகொண்டு பல பாடசாலைகளுக்கும் சென்று மாணவர்களைச் சந்தித்தார்.

காந்தியின் பிறந்தநாளான இன்று நான்கூறவிரும்புவது, காந்தியின்வழி வாழுங்கள் என்பதுதான். மகாத்மா காந்தி அன்பானவர். அன்பால் அனைத்தையும் வெல்லலாம். அதிகாரத்தால் எவரையும் வெல்ல முடியாது. அதனால் தான் அவர் அஹிம்சையைத் தெரிந்தெடுத்தார். சமுதாயத்தில் உயர்ந்தோருடன் நின்று புகைப்படம் எடுத்துப் பெருமைப் பட்டுக்கொள்ளாமல் அவர்கள் வழியில் வாழவேண்டும். அதற்குச் சிறிதளவாவது முயற்சிக்க வேண்டும். குழந்தைகள், பெற்றோர், மூத்தோர், அயலவர் என அனைவரிடமும் அன்பாக இருங்கள். இவை மட்டுமல்ல தாவரங்கள், விலங்கினங்களில் கூட அன்புவைத்தல் தவறில்லை. காந்தி வழியில் நடப்போம். – என்றார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக சமூகவியல்துறையின் தலைவர் பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கனும், கௌரவ விருந்தினர்களாக காந்தி சேவா சங்கத்தின் தலைவர் தி.இராசநாயகமும் ,மெய்யியற்துறைத் தலைவர் கலாநிதி க.கஜவிந்தனும் கலந்துகொண்டதுடன் பல்கலைக்கழக மாணவர்களும் காந்தி சேவாநிலையத்தினரும் ஆர்வலர்களும் கலந்து கொண்டனர். (ற-10)

## வாகனங்களின் சந்தைப் பெறுமதியில் 90 வீதம் வரை லீசிங் வழங்க முடியும்

### நிதி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஓக். 4

மோட்டார் வாகன லீசிங் சம்பந்தமாக நிதி நிறுவனங்களால் பின்பற்றப்பட வேண்டிய புதிய முறைமைக்கமைய, வாகனங்களுக்கு வழங்க வேண்டிய லீசிங் வசதி, வாகனங்களின் சந்தைப் பெறுமதியில் நூற்றுக்கு 70 வீதத்தில் இருந்து 90 வீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க அறிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைய, வாகனங்களின் சந்தைப் பெறுமதியில் 70 வீதம் மட்டுமே லீசிங் வசதி வழங்க முடியும் என்ற சுற்றறிக்கை ஒன்று இலங்கை மத்திய வங்கியினால் அண்மையில் வெளியிடப்பட்டது.

இதன்படி வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்வோர் ஆரம்பக் கட்டணமாக அதன் பெறுமதியில் 30 வீதப் பணத்தை கட்டா யம் செலுத்த வேண்டிய நிலை இருந்தது.

எவ்வாறாயினும் இந்த முறைமையை மாற்றி வாகனங்களின் சந்தைப் பெறுமதியில் நூற்றுக்கு 90 வீதம் வரை லீசிங் வசதி பெற முடியும் என்று நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இதன்படி வாகனங்களின் சந்தைப் பெறுமதியில் 10 வீதப் பணத்தை செலுத்துவதன் மூலம் வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்ய முடியும். நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் ரவி கருணாநாயக்க இதனைத் தெரிவித்தார். (த-வ)

## சடலத்தை பொறுப்பேற்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள உரிமை கோரப்படாத சடலமொன்றை உரித்துடையோர் வந்து பெற்றுச்செல்லுமாறு வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் கேட்டுள்ளார். தெல்லிப்பழை வைத்திய சாலையிலிருந்து மல்லாகம் நீதிமன்றக் கட்டளைப்படி பொலிஸாரால் இந்தச் சடலம் கடந்த 12 ஆம் திகதி யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டது.

கட்டுவன் தெற்கைச் சேர்ந்த இரத்தினம் பாலசுப்பிரமணியம் (வயது 48) என்பவரின் உடலே உறவினர்களால் இன்னமும் உரிமை கோரப்படாத நிலையில் உள்ளது. அந்தச் சடலத்தை உறவினர் அல்லது உரித்துடையோர் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற-4)

## ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்து தெற்கில் பரவலாகச் சுவரொட்டி



கொழும்பு, ஒக் 04

'ஏகாதிபத்தியச் சக்திகளைத் தோற்கடித்து நாட்டைப் பாதுகாத்த ஜனாதிபதிக்கு எமது நன்றிகள்' என்று தெரிவித்து தெற்கில் பரவலாகச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

ஐ.நா. விசாரணை அறிக்கை மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை மீதான அமெரிக்காவின் தீர்மானம் இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் நேற்று முன் தினம் ஜெனிவாவில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நன்றி தெரிவித்து அவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



SKILLS
COLLEGE OF TECHNOLOGY

# உயர்தரப் பரீட்சையின் பின் நீங்கள் எதிர்பார்ப்பது...

- உயர் சம்பளம் பெறும்
- குறுகிய காலத்தில் பூர்த்தி செய்யக்கூடிய
- சமூகத்தில் நல் அந்தஸ்த்துள்ள

பாடநெறி

- ஏற்றுக்கொள்ளப்பட்ட அனுபவமுள்ள நிறுவனத்தில்
- நியாயமான விலையில்
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு

## அனைத்துடனும் கற்றுக்கொள்ள...

### Your Pathway to Success...

- C&G Post Graduate Diploma in Engineering — Level 7
- C&G Graduate Diploma in Engineering — Level 6 | BEng - Final Year — Level 6
- C&G Advanced Diploma in Engineering — Level 5
- C&G Diploma in Engineering — Level 4
- C&G Diploma in Engineering — Level 3 ← G.C.E. A/L Maths or Science
- SCOT Certificate in Engineering ← G.C.E O/L, G.C.E A/L Commerce or Arts

**கட்டார் நாட்டில் தொழில் வாய்ப்பிற்கு எங்களிடம் வரம்**

2022 உலக காற்பந்து போட்டியிற்கு தயாராகும் கட்டார் நாட்டில் என்ஜினியர் தொழிலுக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா பாடநெறி இலங்கையில் பூர்த்தி செய்து அதன் பின் பட்டப்படிப்பு இறுதி ஆண்டில் வேலை வாய்ப்புடன் எமது புதிய கிளை SCOT டோகா கட்டார் கிளையில் தொடர வாய்ப்பு எங்களிடம்.

**புதிய பாடநெறி ஆரம்பம்**
**2015 ஒக்டோபர்**

மேலதிக விபரங்களுக்கு

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 021 4 666 699 |
| கண்டி | 081 4 666 699 |
| நுகேகொடை | 0773 620 362 |
| குருனாகல் | 037 3 616 868 |
| மாத்தறை | 0773 326 336 |

## City & Guilds Diploma in Engineering

- Civil Engineering
- Quantity Surveying (QS)
- Motor Vehicle Engineering (Hybrid)
- Electrical & Electronic Engineering
- Mechanical Engineering
- AutoCAD & Revit

**பாடநெறியை பூர்த்திசெய்யும் சகலருக்கும் வேலை வாய்ப்பு / பயிற்ச்சி வசதிகள்!**

- உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு உயர் அந்தஸ்துள்ள City & Guilds சான்றிதழ் எம்மிடம்
- வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு தேவையான TVEC அங்கீகாரம் எம்மிடம்
- பாடநெறி முழுத்தொகையை பகுதிகளாகச் செலுத்தும் இலகு முறை
- பல்கலைக்கழக மற்றும் என்ஜினியர் துறையில் நிபுணத்துவமுள்ள விரிவுரையாளர்கள்

City & Guilds APPROVED CENTRE | Sheffield Hallam University | University of Derby | northumbria University

Jaffna Campus
Navalar Road, Jaffna.
021 4 66 66 99
jaffna@skillsinternational.lk

Kandy Campus
Peradeniya Road, Kandy.
081 4 66 66 99
kandy@skillsinternational.lk

Kurunegala Campus
Puttalam Road, Kurunegala.
037 3 61 68 68
kurunegala@skillsinternational.lk

Nugegoda Campus
No. 102, Stanley Thilakaratne Mw, Nugegoda.
011 4 696 666
scot@skillsinternational.lk

Matara Campus
No. 68, Dharmapala Mawatha, Matara.
041 4 501 501
matara@skillsinternational.lk

Opening Soon
Gampaha Branch
Ampara Branch


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
30
04
1925



மறைவு
23
09
2015

### திருமதி தங்கராசா ராஜேஸ்வரி

லண்டனை வசிப்பிடமாக கொண்ட திருமதி தங்கராசா ராஜேஸ்வரி 23-09-2015 அன்று நோர்வேயில் இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற திரு கந்தையா தங்கராசயாவின் (ஓய்வு பெற்ற பிரதம தபால் அதிபர்) அன்பு மனைவியும், அன்னார் சியாமளா(லண்டன்), சுகுமார்(லண்டன்), சங்கர்(லண்டன்), துளசி(நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஷீலா(லண்டன்), ஸ்ரீதேவி (லண்டன்), ரோஹான் கிறிஸ்ரோபர் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும், சரஸ்வதி(லண்டன்), சந்திரவதி(லண்டன்), சயந்தன்(நோர்வே), தாமரை(நோர்வே), சங்கீதா (லண்டன்) ஆகியோரின் பேத்தியும் ஷேனாய் (லண்டன்) இன் பூட்டியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 10-10-2015 அன்று பிற்பகல் 12.00 மணிக்கு (City of London Crematorium - Aldersabrook Road Manor Park London E12 5DQ ல் தகனம் செய்யப்படும். என்பதை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

+442085141559
363 Dersingham Avenue
Manor Park ,London
E12 6JX

தகவல்
குடும்பத்தினர்

## மண்டலாபிஷேக பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், ஒக். 4

நெடுந்தீவு மேற்கு நெழுவினி சித்தி விநாயகர் ஆலயத்தின் இருபத்தி நான்காவது மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறும். இன்றைய தினம் 1008 சங்காபிஷேகச் சிறப்புக் கிரியைகள், மகேஸ்வர பூசைகள் என்பன இடம்பெறும்.

(த-7)

## விழிப்புலனற்றோர் சங்கத்தின் நாட்டார் பாடலுக்கு முதலிடம்

சாவகச்சேரி, ஒக். 4

சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான அரச கலைப் போட்டிகளில் கைதடி விழிப்புலனற்றோர் சங்கத்தின் நாட்டார் பாடல் தேசிய நிலையில் முதலிடம் பெற்றுள்ளதென தென்மராட்சிப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர் .

மாவட்ட நிலைப் போட்டியில் முதலிடம் பெற்ற கைதடி விழிப்புலனற்றோர் சங்கத்தினர் தேசிய நிலைப் போட்டியிலும் கலந்துகொண்டு முதலிடம் பெற்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-9)

## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை இம்மானுவேல் (யோகம்)
(முன்னாள் புகைப்படப் பிடிப்பாளர்)



மவுண்கார்மேல் வீதியைப் பிறப்பிடமாகவும், இல.12, புனித செபஸ்தியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை இம்மானுவேல் (யோகம் - முன்னாள் புகைப்படப் பிடிப்பாளர்) 02.10.2015 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - நேசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சிசிலியா தம்பதியினரின் பாசமிகு மருமகனும், எமிலியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற விஜயன் மற்றும் குமார் (ஜேர்மனி), வதனி, பாமினி (ஜேர்மனி), காலஞ்சென்ற வசந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனிஸ்ரா, கரோலின், நோபேட், மதன் ஆகியோரின் மாமனும், திவ்யா (ஏஞ்சல் இன்ரர்நஷனல் பாடசாலை மானிப்பாய்), டொனால்ட், மேர்லின், சன்றோய், டிலானி, டினா -கிறிசாந்தன், ஸ்ரெபி (நவீல்ட் பாடசாலை), சந்துரு (கியூடெக் முன்னாள் பணியாளர்), பபித்தா, நிலோஜி, சிறோமி, ஜொய்சி, மெலானி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஒபிலியா, ஸ்டேஜன்,ஜெனத்தன்,சார்லின் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.10.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

12, சென் செபஸ்ரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P - 077 287 5362

தகவல் :
குடும்பத்தினர்.

(C19163,11,15)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.4

ஏழாலை மகாவித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் மா.ஆனந்தகுமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராசாவும், கௌரவ விருந்தினர்களாக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுலகுமாரனும், உடுவில் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் தி.கிருஷ்ணகுமாரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(த-ரி- 2)

## உலக ஆசிரியர் தினம்

நெல்லியடி, ஒக் 4


நெல்லியடி மத்திய கல்லூரி ஆசிரியர் தினம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரிக் கலையரங்கில் சிரேஷ்ட மாணவத் தலைவன் செல்வன் பா.வினித்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக இந்தப் பாடசாலையின் பழைய மாணவனும், பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரியுமான ச.ஸ்ரீராமச்சந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

(த-35)

## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை சித்திரவடிவேல்



வேலணை கிழக்கு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை சித்திரவடிவேல் 03.10.2015 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வர்களான பொன்னையா - நாகமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், செல்லம்மா, கந்தையா, காசிலிங்கம், அன்னலட்சுமி மற்றும் சரஸ்வதி, யோவதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், விஜயலெட்சுமி, தெய்வேந்திரம், மகேந்திரன் (கனடா), வீரலெட்சுமி, காலஞ்சென்ற இராசலெட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசகுலசிங்கம், சிவலிங்கம், தனலட்சுமி மற்றும் காலஞ்சென்ற யோகமங்கலநாயகி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சாட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேலணை 4.

தகவல் :
குடும்பத்தினர்.

(65125,11,15,16)

## மரண அறிவித்தல்

### திருமதி பரிமளம் கனகசபை



இணுவில் மேற்கு வட்டுவினியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் நாவற்குழியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரிமளம் கனகசபை 02.10.2015 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2015) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நாவற்குழி இந்துமயானத்திற்கு கொண்டு செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

61/1, கேரதீவு வீதி,
நாவற்குழி, கைதடி
021 205 0968, 075 059 4971

தகவல்:
சிவானந்தன் (ஆனந்தன் மருமகன்)
சுப்பிரமணியம் மில்.

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம் ஒக்.4

தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தின் 62 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் இன்று நிலைய மண்டபத்தில் தலைவர் சி.சதீஸ்குமார் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக வலி. மேற்கு பிரதேச சபையின் சனசமூக நிலைய அலுவலர் கலந்து கொள்வார். (த-9)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
### வேலுப்பிள்ளை விவேகானந்தன்

திதி: அபரபக்க ஸப்தமி
(04.10.2015)

அன்னை மடியில்
27.07.1943

இறைவன் அடியில்
15.10.2014

ஆண்டொன்று போனதுவோ அப்பா... ஆனாலும் உம் நினைவு ஆறாது
அழுதழுது கண்கள் உலர்ந்தனவே அவனிக்கு மீண்டும் வரமாட்டீரோ
ஆண்டவன் படைப்பதில் அழிப்பும் நியதி..
ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம் அப்பா...
ஆண்டவனாய் எமக்கிருந்தீர் அப்பா...
ஆறாத்தொழுது அழுது அஞ்சலிங்கின்றோம். அப்பா...
ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

மிசாலை கிழக்கு,
மிசாலை.

குடும்பத்தினர்.

(19164) (14,15,16)

## என்றும் நெஞ்சை விட்டு நீங்கா நினைவுகள்

7 ஆம் வருட நினைவஞ்சலி



உதயம்
25.07.1923

அஸ்தமனம்
08.04.2008

அமரர்
### முத்தையா பாலசுப்பிரமணியம்
(இளைப்பாறிய உப அதிபர்)
திதி: திருதியை

முதலாம் வருட நினைவஞ்சலி



உதயம்
27.03.1933

அஸ்தமனம்
14.10.2014

அமரர்
### தங்கரத்தினம் பாலசுப்பிரமணியம்
(இளைப்பாறிய ஆசிரியை)
திதி: ஸப்தமி (04.10.2015)

எம் அன்பு அப்பா, அம்மாவே நீங்கள் அமரர்களாகி விட்டீர்கள்
நாங்கள் அநாதைகளாகி விட்டோம்
நீங்கள் வழிகாட்டிய பாதையில் சென்று உங்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்போம்.

ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

உங்கள் அன்புப் பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் அறிமுகவிழா

யாழ்ப்பாணம், ஒக்.4

வேதநாயகம் தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகள் – 2 , யாழ்ப்பாண மண்ணின் நனவிடை தோய்தல் குறித்தான ஆக்கங்களின் தொகுப்பு நூல் அறிமுக விழா கைதடி கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.3 மணிக்கு கைதடி முத்துக் குமார சுவாமி மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஓய்வுநிலை அதிபர் ப.செல்லத்துரை தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் நூலின் மதிப்பீட்டுரையை மூத்த எழுத்தாளரும், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான கே.ஆர்.டேவிட் நிகழ்த்தவுள்ளார். (த–ரி–2)


## 31 ஆம் நாள் இதய அஞ்சலி

"ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையானது" (தி.பா.84:1)

அமரர் ஞானசவுந்தரி இராசநாயகம்

எம்முடன் 02.06.1931 — இறைவனுடன் 04.09.2015



அன்னாரின் பிரிவால் துயருறும் எம் சக ஆசிரியை திருமதி சத்தியகுமாரி ஜோஜ் மரியதாஸ் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

பாடசாலைச் சமூகம்
யா/குளமங்கால் றோ.க.வித்தியாலயம்.



## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
கந்தப்பிள்ளை இராசரத்தினம்



மறைந்ததுவோ ஆண்டுகள் எட்டு
மறக்கவும் முடியவில்லை
குறைவிலா எமைக்காத்த
குலவிளக்கே ஏன் மறைந்தீர்
நித்தம் உங்கள் நினைவுகள்
எம்மை வந்து வாட்டுதே
இறைவனின் திருப் பாதத்தில்
என்றுமே சாந்தி அடைவீர்கள்
ஓம் சாந்தி!!! சாந்தி!! சாந்தி!

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.
தாவளை இயற்றாலை, கொடிகாமம்.

மலர்வு 31.11.1954 — உதிர்வு 03.10.2007

[60502] [12.15 I6]



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தையா நயினார்

(அம்பாள் பழைய பாட்ஸ்கடை உரிமையாளர்)

தோற்றம் 10.01.1947 — மறைவு 14.10.2014

திதி:04.10.2015

ஓராண்டு சென்றாலும் நாளாக நாளாக
தீராது உங்கள் பிரிவின் வலி
கால் நூற்றாண்டு கடந்தாலும் உங்கள்
கருணை முகம் காணாது அடங்காது நாம் கதறி அழும் ஒலி
வானுறையும் தெய்வ சந்நிதியில் ஆன்ம ஈடேற்றம் பெற
இறையாசிவேண்டி அஞ்சலிக்கின்றோம்.


இல.05, 05 ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

என்றும் [illegible]
குடும்பத்தினர்.



## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 30 . 04 . 1934



மறைவு 09 . 09 . 2015

அமரர் வாழ்நாள் பேராசிரியர்
### கந்தையா குணரத்தினம்

கடந்த 09.09.2015 புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் தந்தை வாழ்நாள் பேராசிரியர் கந்தையா குணரத்தினம் அவர்கள் சுகவீனமுற்றிருந்தபோது அவரை அன்புடன் பராமரித்த யாழ். போதனா வைத்தியசாலை, கொழும்பு போதனாவைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள்,வைத்தியசாலை ஊழியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது தந்தையின் இறுதிக் காலங்களில் பலவிதமான உதவிகள் புரிந்தும், மன ஆறுதல் தந்த யாழ்.பல்கலைக்கழக சமூக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள்,மாணவர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள், நண்பர்கள்,உறவினர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது தந்தை இறைவனடி சேர்ந்தபோது பலவிதமான உதவிகள் புரிந்தும்,எமது இல்லத்திற்கு வருகை தந்தும் தொலைபேசி மூலமும், மின்னஞ்சல் மூலமும் துயர்பகிர்ந்தோருக்கும்,மலர்வளையம் வைத்தும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டும், கொழும்பிலும் எமது இல்லத்திலும், யாழ். பல்கலைக்கழகத்திலும் எமது தந்தைக்கு மிகச் சிறந்த முறையில் இறுதி மரியாதை அளித்த அனைவருக்கும், இரங்கல் உரையாற்றிய பல்கலைக்கழக சமூகத்தினர் அனைவருக்கும், யூனியன் கல்லூரி சமூகத்தினர் அனை வருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது தந்தையின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 07.10.2015 புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்)

பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(65005) (13.15)

குடும்பத்தினர்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 30.10.1930



ஆண்டவன் அடியில் 04.09.2015

### அமரர் செல்லையா இரத்தினவேல்

(இரத்தினவேல் மாஸ்ரர்- முன்னாள் இளைப்பாறிய சிரேஷ்ட கணித ஆசிரியர் - ஹாட்லிக் கல்லூரி. கணித விரிவுரையாளர்- ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பலாலி. நைஜீரியா.சீசெல்ஷ்)

பிறப்பிடம் - யாழ். பருத்தித்துறை வசிப்பிடம் -ஆஸ்திரேலியா Melborne

அன்புள்ள நல்ல அரும்பெரிய உறவே
உங்களைப் பிரிந்து நாமும் உள்ளமுறக் குமுறுகின்றோம்
என்ன கொடுமையிங்கு எம்மை ஏன் விட்டுப் பிரிந்து சென்றீர்கள்
எந்நாளும் உங்கள் நினைவாய் இங்கு ஏங்கித் தவிக்கின்றோம்...!
பேரும் புகழும் கொண்டு பாரினில் வாழ்ந்து
இன்று பேரின்ப வீடு சென்ற எம்பெரும் வழிகாட்டியே
நூறாண்டுகளானாலும் உங்கள் நினைவலைகள் எம்மை விட்டகலா
உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...!

அன்னாரின் மரணச் செய்திகேட்டு தொலைபேசி வாயிலாகவும் நேரில் வந்தும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அவரது இறுதிக்கிரியைகளில் நேரடியாகப் பங்குபற்றித் துயர் பகிர்ந்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவியவர்களுக்கும் எமது துயரம் கலந்த நன்றிகள்.

மனைவி (0061 3880 27974)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Unilever

# இப்போது உலகின் மிகச் சிறந்த லக்ஸ் நறுமணத்தில் குளித்திடுங்கள்




BLIPPAR APPஐ டவுன்லோட் செய்யுங்கள் ▸ FULL SCREEN க்கு படத்தை பொருத்தவும் ▸ ரோஜாக்களால் உருவாக்கப்பட்ட BLIPP Image தோன்றும்

உங்கள் ஸ்மார்ட் ஃபோனுக்குரிய App ஸ்டோர் (App store) இற்கு சென்று BLIPPAR Appஐ டவுன்லோட் செய்யுங்கள். பின்பு Appஐ open செய்து லக்ஸ் விளம்பரங்களில் உள்ள பிரேன்ச் ரோஜாக்களின் மீது அல்லது சோப் கட்டியிலுள்ள மலர்களின் மீது உங்கள் தொலைபேசிக் கெமராவை காட்டுங்கள். அப்போது திரையில் ரோஜாக்கள் தோன்றும். அதன் பின்பு உங்களது செல்பி (selfie) ஒன்றை எடுத்து அதனை Lux Facebook pageக்கு upload செய்யுங்கள்.

Just a little LUX

அபான்ஸ் எலைட் காட்சியறைகள் இரவு 9 மணி வரை திறந்திருக்கும்

# சாதனையாளர்களின் மதிநுட்பமான தெரிவு

4 YEAR WARRANTY

0% INTEREST

அங்கொன்றும், இங்கொன்றுமாய் பொருத்தப்பட்ட பல கணினிகள் சந்தையில் இருந்தாலும் உலகத்தரம் வாய்ந்த கணினியொன்றை பெறுவதற்கு சிறந்த இடம் அபான்ஸ் மாத்திரமே

Lenovo

intel inside PENTIUM | Windows 10

**LENOVO IP 100 CEL**
- INTEL CEL DC Processor
- 2GB RAM
- 500GB Hard Disk
- 15.6" Display
- Windows 10

ரு.51,900
விசேட விலை ரு.44,900
* 3வருட உத்தரவாதம்
* 12மாத வட்டியின்றிய கொடுப்பனவு

**LENOVO IP 100 PQC**
- INTEL PQC Processor
- 4GB RAM
- 500GB Hard Disk
- 15.6" Display
- DOS

ரு.55,900
விசேட விலை ரு.49,900
* 1வருட உத்தரவாதம்
* 12மாத வட்டியின்றிய கொடுப்பனவு



LENOVO® IDEAPAD™ 100

DELL

**DELL 5558 i7**
- i7-5500U 5th Generation
- 8GB RAM
- 1TB Hard Disk
- 4GB Nvidia
- 15.6" Display

ரு.138,990
விசேட விலை ரு.122,990
4 YEAR WARRANTY

**DELL 5558 i5**
- i5-5200U 5th Generation
- 4GB RAM
- 1TB Hard Disk
- **Windows 8.1**
- 15.6" Display

ரு.106,990
விசேட விலை ரு.95,990
4 YEAR WARRANTY

**DELL 3543 i3**
- i3-5005U 5th Generation
- 4GB RAM
- 500GB Hard Disk
- 15.6" Display

ரு.81,990
விசேட விலை ரு.71,990
4 YEAR WARRANTY

**LENOVO G 50 i5**
- i5 5200 5th Generation
- 4GB RAM
- 1TB Hard Disk
- DOS

ரு.92,900
மாதாந்தம் 7,783 ரூபாவிலிருந்து
* 12மாத வட்டியின்றிய கொடுப்பனவு
4 YEAR WARRANTY

**LENOVO G 50 i5 VGA**
- i5 5200U 5th Generation
- 4GB RAM
- 1TB Hard Disk
- DOS
- 2GB GFX NVIDIA

ரு.99,900
* 12மாத வட்டியின்றிய கொடுப்பனவு
4 YEAR WARRANTY

**LENOVO G 50 i5**
- i5 5200 5th Generation
- 4GB RAM
- 1TB Hard Disk
- DOS

ரு.125,900
மாதாந்தம் 9,700 ரூபாவிலிருந்து
* 3வருட உத்தரவாதம்

**HP 15 - R263 DC**
- Intel Cel Dual Core 2840
- 4GB RAM
- 500GB Hard Disk
- 15.6" Display

ரு.50,900
மாதாந்தம் 4,920 ரூபாவிலிருந்து
FREE VIRUS GUARD

**HP 15R260 BING**
- Intel Cel Dual Core 2840
- 2GB RAM
- 500GB HDD
- 15.6" Display
- Windows(R) 8.1

ரு.53,990
மாதாந்தம் 5,167 ரூபாவிலிருந்து
4 YEAR WARRANTY

**HP 15 AC i3**
- i3-5010 - 5th Generation
- 4GB RAM
- 500GB Hard Disk
- 15.6" Display

ரு.71,500
மாதாந்தம் 6,834 ரூபாவிலிருந்து
4 YEAR WARRANTY

**HP 15-R285**
- Intel® Core™ i3-5010U - 5th Generation
- Windows 8.1
- 4GB RAM, 500GB HDD
- 15.6" Diagonal HD BrightView - WLED-backlit Display

ரு.77,500
மாதாந்தம் 7,367 ரூபாவிலிருந்து
FREE VIRUS GUARD

**HP 15 AC i5**
- i5-5500 - 5th Generation
- 4GB RAM
- 1TB Hard Disk
- 15.6" Display

ரு.91,900
மாதாந்தம் 8,534 ரூபாவிலிருந்து
4 YEAR WARRANTY

**HP 15-R286**
- Intel® Core™ i5-5200U - 5th Generation
- Windows 8.1
- 4GB RAM, 1TB HDD
- 15.6" Diagonal HD BrightView - WLED-backlit Display

ரு.96,900
மாதாந்தம் 8,950 ரூபாவிலிருந்து
FREE VIRUS GUARD

acer explore beyond limits™

**ES1-531-DC**
- INTEL Dual Core CEL N3050 DC
- 4GB RAM
- 500GB Hard Disk
- 15.6" Display

விசேட விலை ரு.47,990
மாதாந்தம் ரு.3,599

**E5-573-i3**
- i3-5015 5th Generation
- 4GB RAM
- 1TB Hard Disk
- 15.6" Display

விசேட விலை ரு.68,990
மாதாந்தம் ரு.5,199
4 YEAR WARRANTY

**E5-573-i5**
- i5-5200 5th Generation
- 4GB RAM
- 1TB Hard Disk
- 15.6" Display

விசேட விலை ரு.91,990
மாதாந்தம் ரு.6,799
4 YEAR WARRANTY

**E5-573-i7**
- i7-5500 5th Generation
- 8GB RAM
- 1TB Hard Disk
- 15.6" Display
- 2GB VGA

விசேட விலை ரு.114,990
மாதாந்தம் ரு.8,599

IT HOTLINE 5886655 | us at www.facebook.com/abansit

நாடெங்கிலுமுள்ள அபான்ஸ் & அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் கிடைக்கும்

Abans

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விலை ரூ.48/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 237

# புனர்வாழ்வளிக்கும் இயன்மருத்துவம்





வேகமாக முன்னேறிவரும் இயந்திர வாழ்வில் நேரமின்றி ஓடி ஓடிப் பணம் சம்பாதிப்பதிலேயே கவனமாய் இருக்கின்றோம் நாம். இவ்வாறு ஓடி ஓடிச் சேமித்த பணத்தை அனுபவிக்காமலே நோய்களுக்கு ஆளாகி மருந்துகளுக்குச் செல்விடும் நிலை இன்று எம்மிடையே அதிகரித்து வருகின்றது.

மனிதன் தோன்றிய காலம் முதலே நோய்களும் தோன்றிவிட்டன. மனித இன முன்னேற்றத்துடன் நோய்களும் பற்பல வடிவங்களில் மிகவும் வீரியத்துடன் மனிதனை ஆட்டிப் படைக்கின்றன. இருப்பினும் மனிதனது புதிய கண்டுபிடிப்புக்கள் மூலம் அதற்கான மருத்துவ முறைகளும் வளர்ந்து கொண்டே செல்கின்றன. நவீனகால மருத்துவமானது பல புதிய கண்டுபிடிப்புக்களுடன் பலபடிகளைக் கடந்து இன்று மிகவும் உயர்ந்த நிலையில் இருக்கின்றது. இந்த நவீன மருத்துவத்தின் ஒரு பிரிவே இயன் மருத்துவம் (Physiotherapy) ஆகும்.

இயன்மருத்துவம் பற்றியும், இயன்மருத்துவர்கள் எவ்வாறான நோய்களுக்கு எவ்வகையான முறையில் சிகிச்சையளிக்கின்றனர் என்பது பற்றியும் எம்மில் பலருக்குத் தெரியாது. சாதாரண மக்களுக்கு மட்டுமன்றி சுகாதாரத் துறையில் சேவையாற்றும் பலருக்கும் இது பற்றிய விழிப்புணர்வு மட்டம் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. இதனால் தான் இயன்மருத்துவ சேவையை நாடிவரும் சேவை நாடிகளின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றது.



இவ்வாறான மருத்துவ முறை இருக்கின்றது என்பது தெரியாமலே பல நோயாளிகள் குறிப்பாக பக்கவாதம் (stroke) பாரிச வாதம் (spinal cord injury) சிறுபிள்ளைகளில் ஏற்படும் மூளை வளர்ச்சி, சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் (cerebral palsy) மற்றும் அவர்களின் பிந்திய வளர்ச்சிப்படி நிலைகள் (Developmental delay) அவர்களின் உடல் அவயவங்களில் ஏற்படும் குறைபாடுகள் (Congenital deformities) மற்றும் மாற்றுத் திறனாளிகள்(people with desabilities) போன்றோர் தமது வாழ்க்கையின் அன்றாடச் செயற்பாடுகளை (Activities of daily living) இயல்பு நிலைக்கு கொண்டுவர முடியாமல், தனித்துச் (independently) செயற்படமுடியாமல் அவதிப்படுகின்றனர். இதனால் அவர்களும் அவர்களைச் சார்ந்த அவர்களது குடும்பங்களும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றன. இதற்கான மூல காரணம் இவ்வாறான நோய்களுக்கு இயன் மருத்துவம் (Physiotherapy) மூலம் சிகிச்சையளிக்க முடியும் என்பதை அவர்கள் அறியாமையே ஆகும்.

(Movement for health) உடல் இயக்கமே ஆரோக்கியத்துக்கு வழி என்பதைக் குறிக்கோளாகக் கொண்டே இயன்மருத்துவம் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. அதாவது நீங்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கும் நோய்களற்ற சமூகம் உருவாகவும் உடல் இயக்கம் இன்றியமையாதது என்பதேயாகும்.

இயன்மருத்துவம் புனர்வாழ்வு மருத்துவத்தின்(Rehabilitative medicine) ஒரு பகுதியாகும். வயதாதல், சில நோய்கள், விளையாட்டுக்களின் போதும் அன்றாட வாழ்க்கையின் போதும் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் பிற சூழல் காரணிகள் என்பவற்றின் மூலம் உடல் இயக்கச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட அல்லது குறைவடைந்த அல்லது இழந்த ஒருவருக்கு சிகிச்சையளிப்பதன் மூலம் அவரின் உடல் இயக்கத்தைப் பேணி (maintain) உடல் அசைவுகளை மீள் உருவாக்கி (Restore movement) அவரை இயல்பு நிலைக்குக் கொண்டுவர (Rehabilitate) உதவுவதே இயன்மருத்துவத் துறையின் நோக்கமாகும்.

பாதிப்புக்கள் என்ன என்பதை அறிந்து உரிய சிகிச்சைகள் மூலம்(early identification&intervention) குறிப்பிட்ட பாதிப்புக்கள் அதிகமாவதைத் (worsening of conditions) தடுத்து (Prevention)அவர்களது இயல்பு நிலை வாழ்க்கையை மேம்படுத்துவதன் (Promote) மூலம் புனர்வாழ்வளிக்கின்றனர் (Rehabilitation) இயன்மருத்துவர்கள். புனர்வாழ்வு என்பது ஒருவரால் இதுவரையில் செய்யமுடியாமல் இருந்த அன்றாட வாழ்க்கைச் செயற்பாடுகளைச் (Activities of daily living means Ambulation, Bathing, Personal Hygiene, Dressing, Eating&toileting Activities) சுயமாகச் செய்யக்கூடிய நிலைக்கு (functioning independently) மாற்று வழிகள் மூலமும் இயல்பான முறைமூலமும் முன்னேற்றலாகும்.

உடல் இயக்கம் சார்ந்த அனைத்து வியாதிகளுக்கும் இந்தமுறை மூலம் சிகிச்சை பெறலாம். பெரும்பாலும் பௌதிக சக்திகள் (Physical means. heat,cold, pottential&electrical energy) மூலமும் உடல் இயக்கச் செயற்பாடுகள் மூலமுமே (Kinesiology) சிகிச்சையளிக்கப்படுகின்றது.

இயன்மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் சிகிச்சை முறைகளாவன: மின்சிகிச்சை (Electro therapy) குளிர் மூலம் வழங்கப்படும் சிகிச்சை (cryotherapy) வெப்பம் மூலம் வழங்கப்படும் சிகிச்சை (Heat& wax therapy) கைகளால்,மனித வலுவால் செய்யப்படும் சிகிச்சை (manual therapy) நீர்வழிச் சிகிச்சை (Hydro therapy), suspension therapy உடற் பயிற்சிகள் மூலம் வழங்கப்படும் சிகிச்சை (Exercise Therapy) ஒளிச் சிகிச்சை (Photo Therapy) என்பனவாகும்.

இயன்மருத்துவத் துறைமூலம்சிகிச்சை அளிக்கப்படக் கூடிய சில நோய்களாவன.

**1. சகலவிதமான வலிகளுக்குமான சிகிச்சை**

கழுத்து வலி (Neck Pain)
தோள்மூட்டு வலி (Shoulder Pain)
தாடை வலி (Temporomandibu lar Joint Pain)
முதுகு வலி (Back Pain)
இடுப்பு வலி (Hip pain) போன்றவை யாகும்.
உலகின் அனைத்து விதமான மூட்டுக்களில் ஏற்படும் வலிகள் (All Joint Pain)
குதிகால் வலி (Heel Pain)
போன்றவற்றுக்காகக் குணப்படுத்தும் சிகிச்சை முறைகளையும் கொண்டுள்ளது.

**2. எலும்பு மூட்டுக்கள் மற்றும் தசைகள் தொடர்பான பிரச்சினைக்கான இயன் மருத்துவம்.**

உடலின் தசைகள், தசைநார்கள் என்பவற்றில் ஏற்படும் சில காயங்கள் (Injury to Muscles & Ligaments)
தசைப்பிடிப்பு (Muscle Cramp, Muscle Spasm)
தசை இறுக்கம் (Muscle Stiffness)
மூட்டு இறுக்கம் மற்றும் மூட்டு வாதம் (Joint Stiffness & Arthritis)
எலும்புமுறிவு ஏற்பட்டுசத்திர சிகிச்சைக்கு பின்னான சிகிச்சை முறைகள் (அசைவுகளை மீள் உருவாக்கலும் தொழிற்படச் செய்தலும்) (Post - Operative Management After Fractures)
முள்ளந்தண்டு தொடர்பான பிரச்சினைகள்(Cervial Spondylosis Ankylosis Spondylitis, Spondylolisthesis, Disk Prolapce or Herniation etc....)
மூட்டு மாற்று சத்திரசிகிச்சைக்கு முன் பின்னான சிகிச்சை முறைகள் (Pre & Post opperative managements after joint replacement)

**3. நரம்புத் தொகுதி சம்பந்தப்பட்ட சில நோய்களுக்கான இயன்மருத்துவம் (Neurological physiotherapy)**

முக்கியமாக பக்கவாதம் (Stroke) பாரிசவாதம்(spinal cord injury) மற்றும் சிறுபிள்ளைகளில் ஏற்படும் மூளை வளர்ச்சியுடன் சம்பந்தப்பட்ட நோய்கள் (Cerebral palsy) போன்றவற்றுக்குத் தேவையான சிகிச்சை வழங்கி அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கமுடியும் இந்த மருத்துவத்தின் மூலம்.

அத்துடன் மேலும் சில நரம்புகளில் ஏற்படும் நோய்கள்/ நரம்புகள் செயலிழத்தல் (Nerve palsy,eg:d Radial,ulna common peraneal nerve palsy, facial nerve palsy/Bell's palsy) போன்றவற்றுக்கும் சிகிச்சை பெறமுடியும். அதாவது குறிப்பிட்ட பாதிப்புக்குள் ளான பகுதியை அதன் பாதிப்பு அதிகரிப் பதிலிருந்து தடுத்து அசைவுகளை மீள் உருவாக்கி மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருதலே இயன் மருத்துவத்தின் பிரதான நோக்கமாகும் (Prevent worsening& movement re education)

**4. குழந்தைகளுக்கான இயன் மருத்துவம் (Paediatric physiotherapy)**

முன்னர் குறிப்பிட்டவாறு குழந்தைகளின் மூளை வளர்ச்சி பாதிக்கப்படல், (Cerbral palsy), அவர்களில் வளர்ச்சிப் படிநிலைகள் பிந்திய நிலையில் காணப்படல், (Developmental delay, முண்ணான் சம்பந்தமான பிரச்சினைகள் (spinabi fida) மற்றும் பிறப்பின் போது ஏற்படும் பாதிப்புக்களான ஒரு பக்கக் கையின் செயற்பாடுகள் இழக்கப்படல் (Erb's palsy) கழுத்துத் தசை இறுக்கமடைந்து காணப்படல் (Torticolis) என்பவற்றுக்கும். சிறுபிள்ளைகளில் காணப்படும் அவயவங்களின் குறைபாடு (congenital deformities) வளைந்த கால்கள் (Bowlegs&knock knees) உள் வளைந்த பாதங்கள் (congentila Talipes Equinovarus(CTEV)), பிழையான நடை (abnormal Gait (tips toe&intoeing gait) போன்றவற்றுக்கும் சிகிச்சை பெறமுடியும்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வளிக்கும் இயன்மருத்துவம்

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

பிரதானமாக குழந்தைகளின் பாதிப்பு நிலைக ளுக்கேற்ப அவர்களால் முடிந்த மிக உச்சச் செயற்பாட்டைச் சுயமாகச் செய்யவைப்பதற்கு உதவுவதே இந்த இயன்மருத்துவ சிகிச்சையாகும். (Help children to reach their maximal functional level of independence)

**5. சுவாசத் தொகுதி சம்பந்தமான சில நோய்களுக்கான இயன் மருத்துவம்** (Respiratory physi otherapy)

சுவாசத் தொகுதி சம்பந்தப்பட்ட நோய்கள் ஆஸ்துமா, நாட்பட்ட சுவாச நோய்கள் (COPD, Bronchiectasis) சுவாசத் தொகுதி சம்பந்தப்பட்ட சத்திர சிகிச்சை களுக்குப் பின்னரான சிகிச்சைகள் என்ப வற்றைப் பெறமுடியும்.

அதாவது உங்கள் நோய்களுக்கு ஏற்ப எவ்வாறான மூச்சுப் பயிற்சிகளையும் அவ்வாறான படுக்கை நிலைகளையும் ஆறுதலான நிலைகள் (Relaxation positions) உங்களுக்கு கற்றுத் தருவதுடன் நீண்ட நாள் சளித்தொல்லைகளில் இருந்தும் உங்களை விடுவிக்க முடியும்.

**6.** Cardiac Rehabilit ation programme **(இருதய சத்திரசிகிச்சைக்குள்ளானவர்களுக்கான விசேட புனர்வாழ்வுப் பயிற்சிகளையும் வழங்குகின்றது)**

**7. சத்திர சிகிச்சை மற்றும் பிரசவ காலத்துக்குரிய இயன்மருத்துவம்.**

அனைத்து சத்திர சிகிச்சைகளுக்கு முன் பின்செய்யவேண்டிய ஆயத்தப்பயிற்சிகள் தொடர்பான அறிவுரைகள் (pre&post opp. advices &physiotherapy)

சத்திரசிகிச்சைக்குப்பின்னரானபயிற்சிகள் (post opp physiot herapy)

பிரசவ காலத்துக்கு முன் பின்னரான இயன் மருத்துவம்.pre&post natal physiotherapy

பிரசவகாலத்தில் மற்றும் பிரசவத்துக்குப் பின்னர் ஏற்படும் பிரச்சினைகளுக்கான இயன்மருத்துவம் (Back pain, Diastasis recti, pubis pain (தசை இறுக்கம், தசைப்பிடிப்பு )muscle cramp,(Urinery incontinence) சிறுநீர் கசிவு).

**8. விளையாட்டுத் துறை சார் இயன்மருத்துவம்**

விளையாட்டுக்களின் போது ஏற்படும் உபாதைகளுக்கான சிகிச்சை (muscle cramp, sprain,strain,

விளையாட்டு வீரர்களின் திறனை அதிகரிப்பதற்கும் (increase the power & endurance) விளையாட்டுக்களின் போது ஏற்படும் உபாதைகளைத் தடுப்பதற்கும்(injury prevention) இயன்மருத்துவம் உதவுகின்றது.

அத்துடன் மாற்றுத் திறனாளிகளுக்கும் (people with Disabilities) அவர்களுடைய நாளாந்த செயற்பாடுகளைச் சுயமாகச் செய்யக்கூடிய வகையில் அவர்களுக்கான உதவும் கருவிகளை (Walking aids, supportive devices, corrective devices) வழங்கிஅவர்களுக்கு ஆதாரமளிக்கின்றது இந்த மருத்துவம்.

இன்று உடலியக்கத்துடன் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான இன்றியமையாத சிகிச்சை முறையாக இயன்மருத்துவம் காணப்படுகின்றது. உடலியக்கம் பாதிக்கப்பட்ட ஒருவரை உரிய சிகிச்சையளிக்காது படிப்படியாக நிரந்தர இயலாமைக்கு இட்டுச் செல்வதைத் தடுத்து இழந்த செயற்பாட்டை மீளப்பெற்று அவர்கள் இயல்பு வாழ்க்கையை வாழ இன்றே இயன்மருத்துவம் சிகிச்சை முறையே நாடி அதன் மூலம் உச்ச பயனைப் பெற ஒரு போதும் தயங்காதீர்கள்.

**க.கௌசிகா**
B.Sc physiotherapy
இயன்.மருத்துவர், இயன் மருத்துவ பிரிவு
யாழ். போதனா வைத்தியசாலை.












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு நிறைவில்

# 125 கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயம்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக விரிவுரையாளர்
– யாழ்.பல்கலைக்கழகம்

**கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய பெருவிழா இன்று கொண்டாடப்படுவதையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.**

யாழ். நகரின் கிழக்கே 3.மைல் தொலைவில் பழைய துறைமுகநகர் எனப் பெயர் பெற்ற கொழும்புத்துறை நகர் இயற்கை எழில்வளம் கொண்ட நகராக அமைந்துள்ளது. கொழும்புத்துறையின் மத்தியில் கம்பீரமாக உயர்ந்து நிற்கிறது அருள் வளம் பொழியும் செபமாலை அன்னை ஆலயம். ஒல்லாந்தர் ஆட்சியிலே திருமறையை அழிவில் இருந்து பாதுகாக்க கோவாவில் இருந்து இலங்கை வந்து மாறுவேடத்தில் வேத போதபணியாற்றி– இந்த ஆண்டு புனிதர் பட்டம் பெற்றுள்ள யோசவ் வாஸ் அடிகளார் முதலில் பாதம் பதித்த மண் கொழும்புத்துறை மண்ணாகும்.

இந்தக் கட்டுரைக்கான தகவல்கள் கொழும்புத் துறை செபமாலை அன்னை ஆலய நூற்றாண்டு விழா மலரில்; (1890 – 1990); இருந்தும் பங்குத் தந்தை அன்ரன் மத்தாயஸ்; அடிகளாரிடம் இருந்தும் பெறப்பட்டன.

120 ஆண்டுகள் பழைமை மிக்க கொழும்புத்துறை செபமாலை மாதா ஆலய வரலாறானது 1890 ஆம் ஆண்டு முதல் பதியப்பட்டுள்ளது. ஒல்லாந்தர் காலத்துக்கு முன்னதாகவே கொழும்புத்துறையில் ஓலைக் குடிசையிலான ஆலயம் ஒன்று இருந்த போதிலும் ஒல்லாந்தரின் வேத கலாபனையினால் இங்கிருந்த முன்னோர் மாதா சொரூபத்தை மறைத்து வைத்திருந்ததாக அறியவருகிறது. நிலைமை சீரான பின்னர் செபிப்பதற்கு சொரூபம் இல்லையே என மக்கள் ஏங்கிய போது அங்கு நின்ற வேப்ப மரப் பொந்தினுள் ஒரு மாதா சொரூபம் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அந்த பழைய சொரூபமே இன்றும் ஆலயத்தில் பயன்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. அந்தக் குறிப்பிட்ட வேப்ப மரத்தின் இலை நோய்களைத் தீர்க்கும் அருமருந்தாக இருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

மடுப்பதிக்குச் செல்ல வசதியற்றவர்களுக்கு அன்னையைத் தரிசிக்கும் வாய்ப்பை வழங்கும் நோக்குடனேயே கொழும்புத்துறையில் செபமாலை அன்னை ஆலயம் உருவாக்கப்பட்டது என்பதற்கு இங்கு நடக்கும் திருநாள்கள் சான்றாக உள்ளன என நூற்றாண்டு விழா மலரில் (1890 – 1990) பிலிப் அருளானந்தம் தெரிவிக்கிறார்.

1886 இல் அயர்லாந்து நாட்டைச் சார்ந்த ஓ.பிளங்கன் அடிகளார் மேற்படி ஆலயத்தை இடித்து விட்டு அயர்லாந்து நாட்டுப் பாதுகாவலர் புனித பத்திரிசியார் பெயரில் சிலுவை வடிவிலான புதிய ஆலயம் ஒன்றைக் கட்ட ஆரம்பித்தார். இவ்வாறு கட்டப்பட்டு வந்த ஆலயத்தின் முழுக் கட்டடமும் ஒரு நாள் இடிந்து விழுந்துள்ளது. ஆலயத்தின் பாதுகாவலராகத் தெரிந்து கொள்ளப்பட்ட செபமாலை அன்னையை மாற்றி புனித பத்திரிசியாரை பாதுகாவலராக அமைக்க முற்பட்டதாலேயே இந்த விபரீதம் ஏற்பட்டதென மக்கள் நம்பினர்.

1890 – 1891 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பூலோகசிங்கம் அடிகளார் தற்போதைய ஆலயத்துக்கான கட்டட வேலைகளை பங்கு மக்களின் உதவியோடும் – நன்கொடையாளர்களின் உதவியோடும் ஆரம்பித்தார். அப்போது கொழும்புத்துறை அநாதைகள் இல்லத்துக்குப் பொறுப்பாக இருந்த ஜே.பி.மியறி அடிகளாரின் துணையாளராக பூலோகசிங்கம் அடிகளார் இருந்தமையால் அவரின் வழிகாட்டுதலுக்கு அமையவே இவர் பணியாற்றினார். 1893இல் கௌதியர் அடிகளாரின் அயராத முயற்சியால் ஆலயக்கட்டடத்தின் நடுப்பகுதி; கட்டி முடிக்கப்பட்டது. 1898இல் கௌதியர் அடிகளாரின் தனிப்பட்ட முயற்சியால் பிரான்ஸ் நாட்டில் உள்ள அவரின் நண்பர்களிடம் இருந்து பெருந்தொகைப் பணம் ஆலயக் கட்டட நிதிக்காக நன்கொடையாகப் பெறப்பட்டது.

செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதியே முதன்மையான திருவிழாத் தினமாக அமைந்திருந்தாலும் வசதி கருதி செப்ரெம்பர் மாதத்தில் வரும் முதல் ஞாயிறு தினமே இங்கு திருவிழா கொண்டாடப்படுகிறது.

ஆரம்ப காலங்களில் கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயம் கொழும்புத்துறை அநாதைமட பொறுப்பாளரின் நிர்வாகத்திலும் – பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குடனும் இணைந்திருந்தது. பின்னர் வழிமீசாம் என்ற கட்டமைப்புக்குள் திருநெல்வேலி புனித சவேரியார் ஆலயத்தில் இருந்த குருக்களால் பராமரிக்கப்பட்டது. கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தின் பங்குப் பணியாளர்களாக ஓ.பிளங்கன் அ.ம.தி. அடிகளார் – ஜே.பி.மியறி அ.ம.தி. அடிகளார் – பூலோகசிங்கம் அ.ம.தி. அடிகளார் – கௌத்தியா அ.ம.தி. அடிகளார் – எம்.ஜே.நீக்கிலஸ் அ.ம.தி அடிகளார் – எச்.பெருசல் அ.ம.தி. அடிகளார் – பி.பவற்றில் அ.ம.தி. அடிகளார் – யுத்தீன் அ.ம.தி. அடிகளார் (1931) – அல்பிறெட் அ.ம.தி. அடிகளார் (1947) – பிலிப் பொன்னையா அடிகளார் (1950) – பீற்றர் அ.ம.தி. அடிகளார் 1950 – எஸ்.அந்தோனிப்பிள்ளை அ.ம.தி.அடிகளார் (1952) – லைசறோவ் அ.ம.தி. அடிகளார் (1953) – ஏ.சார்வே அ.ம.தி அடிகளார் (1954) – வி.கூசைப்பிள்ளை அ.ம.தி அடிகளார் (1954) – எஸ்.எஸ்.வில்வரசிங்கம் அ.ம.தி அடிகளார் (1955) – ஜே.ஏ.பிரான்சிஸ் அ.ம.தி அடிகளார் (1955) – ஏ.லெ போண் அ.ம.தி அடிகளார் (1958) – ஏ.வசன்பேக் அ.ம.தி அடிகளார் (1962) – பி.சந்தியாப்பிள்ளை அடிகளார் (1965) – பிரான்சிஸ்குலாஸ் அ.ம.தி அடிகளார் (1969) – அதிரியான் யோசவ் அ.ம.தி அடிகளார் (1972) – லூயிஸ் பொன்னையா அ.ம.தி அடிகளார் (1974) – எஸ்.கிறிஸ்ரியன் வாஸ் அடிகளார் (1977) – ரி.மகேந்திரன் ராஜநாயகம் அடிகளார் (1981) – ஏ.எப்.குலாஸ் அ.ம.தி அடிகளார் (1983) – ஜே.ஏ.பிரான்சிஸ் அ.ம.தி அடிகளார் (1984) – ஜே.இ.ஜெயசீலன் அடிகளார் (1991) – செபமாலை துரம் அ.ம.தி அடிகளார் (1992) எம்.டேவிற் அடிகளார் (1993) – சி.ஜி.ஜெயக்குமார் (1994) ஆகியோர் பணியாற்றியுள்ளனர்.

லெபோண் அடிகளாரின் காலத்தில் (1958) பழுதடைந்திருந்த கூரையின் முற்பகுதி திருத்தப்பட்டுள்ளது. வசம்பேக் 1962 அடிகளார் காலத்தில் பீடப்பகுதி உயர்த்தி அமைக்கப்பட்டு அறைவீடு கட்டியெழுப்பப்பட்டது. சந்தியாப்பிள்ளை அடிகளார் (1965) சக்கிறிஸ்ரி தளத்துக்குச் சிமெந்து போட்டு செப்பனிட்டார். பிரான்சிஸ் குலாஸ் அடிகளார் 1969 இல் நடுக்கோயில் நிலப்பகுதியைச் செப்பனிட்டார். அதிரியான் யோசவ் அ.ம.தி அடிகளார் 1972 வத்திக்கான் சங்க தீர்மானப்படி ஆலய சபையை உருவாக்கினார். முன்மண்டபத்துக்கான அடிக்கல்லை நட்டார். வணபிதா லூயிஸ் பொன்னையா அ.ம.தி அடிகளாரும் துணையாகப் பணியாற்றிய ஏ.சிங்கராயர் அ.ம.தி. அடிகளாரும் சுற்றுலா வந்த மருதமடு அன்னையை ஆலயத்தில் சிறப்பாக தங்கிச்செல்ல ஒழுங்கு செய்தார்கள். கிறிஸ்ரியன்வாஸ் அடிகளார் (1977) துண்டிச் சந்தியில் அமைந்துள்ள வழிகாட்டும் மாதா சொரூபத்தை இறப்பியல் ஆசீர்வாதம் வழங்கிய காணியில் நிறுவினார்.

தொடர்ந்து இவ்வாலயம் அந்தோனியார் பங்கோடும் அன்னம்மாள் பங்கோடும் இணைந்திருந்த பின்னர் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தை நிரந்தரமாக பாஷையூர் பங்குடன் இணைத்துவிட்டார். ரி.மகேந்திரன் ராஜநாயகம் அடிகளார் (1981) முன் மண்டப வேலை முழுவதையும் பூர்த்திசெய்து பீடப்பகுதியை திருத்தி நற்கருணைக் கிறாதி – நிரந்தர மணிக் கூட்டுக் கோபுரத்துக்கான அத்திபாரத்தை இட்டார். முதல் முதலாக இங்கு பாலர் பாடசாலை அமைக்கப்பட்டது.

பிரான்சிஸ் குலாஸ் அ.ம.தி (1983) பவனிக்கான தேரை உருவாக்கினார். ஜே.ஏ.பிரான்சிஸ் அ.ம.தி மணிக்கோபுரத்தை பூர்த்தி செய்தார். ஜெயசீலன் அடிகளார் (1991) காலத்தில் முதல் குரு ஏ.ஜே.யாவிஸ் அடிகளாரின் முதல் திருப்பலி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவர்களுக்குப் பின்னர் எம்.டேவிற் – சாள்ஸ் கொலின்ஸ் – யேசுரட்ணம் ஆகியோர் பணியாற்றினர். சாள்ஸ் கொலின்ஸ் – யேசுரட்ணம் அடிகளாரின் முயற்சியால் ஆலய கைக்கோயில் அமைக்கப்பட்டு பீடப்பகுதி அழகுபடுத்தப்பட்டது. 1999 ஆம் ஆண்டு அன்னையின் பவனிக்காக தேர் உருவாக்கப்பட்டது. லூர்து அன்னை கெபி ஆலய வளவினுள் அமைக்கப்பட்டு ஆலய மதிலும் கட்டியெழுப்பப்பட்டது.



2003 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி முதல் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் பணிப்பின் பெயரில் கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயம் தனிப்பங்காக இயங்கத் தொடங்கியது. புதிய பங்கின் முதல் பங்குத்தந்தையாக யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறையில் பணியாற்றி வந்த அன்ரன் மத்தாயஸ் அடிகளார் பொறுப்பேற்று இரு பணிகளையும் கவனித்து வருகிறார். ஆலயப் பணிகள் பற்றிக் கருத்துத் தெரிவித்த சொலமன் டொன் பொஸ்கோ – அன்ரன் மத்தாயஸ் அடிகளார் பங்குத்தந்தையாக பொறுப்பேற்ற பின்னர் வழிபாட்டில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. வழிபாடுகளில் விசேட கவனம் செலுத்தப்படுகிறது. எல்லோரும் குறிப்பாக மாணவர்கள் திருவிவிலியத்துடன் திருப்பலிக்கு வந்து பக்தியாகப் பங்குபற்றுகிறார்கள். விசுவாசிகள் மன்றாட்டை எழுதி வந்து வாசிக்காமல் இயல்பாகவே சொல்லுகிறார்கள். விசேட விதமாகக் குருக்கள் அழைக்கப்பட்டு குணமாக்கல் வழிபாடுகள் நடத்தப்படுகிறது – என்றார்.

அன்ரன் மத்தாயஸ் அடிகளாரின் காலத்தில் பங்கில் மறைக்கல்வி வகுப்புக்கள் – கலந்துரையாடல்கள் – சந்திப்புக்கள் என்பவற்றை நடத்தும் நோக்குடன் 2006 ஆம் ஆண்டில் ஆலய மண்டபம் கட்டியமைக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு நற்கருணை சிற்றாலயம் அமைக்கப்பட்டு அமைதியான சூழலில் மக்கள் இறைவனோடு உரையாட வழிசெய்யப்பட்டது. கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய பங்கில் இருந்து ஏ.யாவீஸ் அடிகளார் – யேசுதாசன் அன்ரன் அருள்தாஸ் அடிகளார் – மரியநாயகம் அருள்தாஸ் செ.தா அடிகளார் ஆகிய மூன்று குருக்களும் திருக்குடும்பக் கன்னியர் சபையில் அருட்சகோதரி சுகிர்த செல்வி – ஏழைகளின் சிறிய சகோதரிகள் சபையில் அருட்சகோதரி றொசீன் மரியா ஆகிய இரண்டு கன்னியர்களும் பணியாற்றி வருகின்றமை இப்பங்கின் விசுவாச வளத்துக்கு பலம் சேர்க்கும் விடயமாகும். திருவாளர் சொலமொன் டொன் பொஸ்கோ நற்கருணைப் பணியாளாராக செப்ரெம்பர் மாதம் 2015 ஆம் ஆண்டு ஆயரால் அபிஷேகம் செய்யப்பட்டுள்ளார்.

பகுதிநேரச் செய்திப் பணியில் ஈடுபடும் எஸ். யேசுதாஸ் கருத்துத் தெரிவிக்கும் போது – அன்ரன் மத்தாயஸ் அடிகளார் பங்குத் தந்தையாக பொறுப்பேற்ற அடுத்த ஆண்டில் சுனாமி இயற்கை ஏற்பட்டது. பங்குத்தந்தையின் ஏற்பாட்டில் பங்கில் நிதி சேகரித்து உதவினோம். அதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் பங்கில் நிதி சேகரித்து தேவையில் இருப்போர்க்கு உதவும் பழக்கத்தை பங்கு ஒரு தொடர் செயற்பாடாகக்; கொண்டுள்ளது.

போரின் பின்னர் முழங்காவிற் பங்குக்குக் கொழும்புத்துறை பங்கு இளைஞர்கள் சென்று அங்குள்ள இளைஞர்களுடன் கலந்துரையாடி வீடுகளைத் தரிசித்து அவர்களின் துன்பத்தைப் பகிர்ந்து கொண்டோம். இது போன்ற செயற்பாடுகள் எமது பங்குத்தந்தையின் முன்னெடுத்தலில் செயற்படுத்தப்பட்டன. இவை எல்லாம் காலத்தோடு ஒட்டிய – மிகவும் தேவையான – அதே வேளை பெரிய செலவு கொண்ட செயற்பாடுகள் அல்ல. இது போன்ற செயற்பாடுகளை மற்றைய பங்குகளும் செய்வது உண்மையில் கிறிஸ்தவத்தை வாழ்ந்து காட்டும் வழிகளாகலாம். அத்தோடு கட்டைக்காட்டுப் பங்குக்கு இது போன்று சேகரிக்கப்பட்ட நிதியில் கிணறு ஒன்றைக் கட்ட உதவினோம். 2015 ஆம் ஆண்டு வேஸ்பர் தினத்திலும் இவ்வாறு நிதி ஒன்றை சேகரிப்போம் எனப் பங்குத்தந்தை அறிவித்துள்ளார். பல பங்குகள் அறியாத ஒரு விடயம் ஏ–9 வீதி மூடப்பட்டிருந்தபோது ஓராண்டு காலமாக ஒவ்வொரு ஞாயிறு தினத்திலும் இறைச்சியுடன் உணவு சமைத்து எமது ஆலயத்தில் வைத்து உதவியதாகும் என்றார்.

125 ஆண்டு நிறைவில் கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயப் பங்கு மேலும் வளர வாழ்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலைதீவில் கொமர்ஷல் வங்கியின் முழு அளவிலான வங்கிச்

மாலைதீவுத் குடியரசுக்கான தனது சேவைகளை விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளதாக கொமர்ல் வங்கி அறிவித்துள்ளது. மாலைதீவு தீவுக்கூட்டத்தில் முதல் வரிசை வங்கியொன்றை முழு அளவில் செயற்படுத்துவதற்கான அங்கீகாரம் உரிய அதிகாரபூர்வ அமைப்புக்களிடம் இருந்து கிடைத்துள்ளது.

இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கி மாலைதீவு நாணய அதிகார சபை மற்றும் இலங்கை மத்திய வங்கி என்பனவற்றிடம் இருந்து மாலை தீவில் கிளை ஒன்றை நடத்துவதற்கான உரிய அனுமதிகளைப் பெற்றுள்ளது.

கொமர்ல் வங்கியின் கடல் கடந்த செயற்பாடு கொண்ட மூன்றாவது நாடாக மாலைதீவு அமையவுள்ளது. 2003ல் வங்கி பங்களாதேஷில் பிரவேசித்தது. அதன் பிறகு இவ்வாண்டு ஜுன் மாதத்தில் வங்கி மியன்மாரில் பிரதிநிதிகள் அலுவலகம் ஒன்றை திறந்தது.

கொமர்ஷல் வங்கியின் புதிய கிளை 'கொமர்ஷல் வங்கி மாலைதீவு தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம்' எனப் பெயரிடப்படவுள்ளதாக வங்கி அறிவித்துள்ளது.

நாணயமாற்று கட்டுப்பாடுகள் மற்றும் விதிமுறைகளுக்கு அமைய வங்கி 50 வீதம் முதலீட்டை மேற்கொள்ளும். எஞ்சிய கட்டுப்பாட்டை மாலைதீவின் முன்னணி கம்பனிக் குழுமம் ஒன்று கொண்டிருக்கும்.


'மாலைதீவில் முழு அளவிலான கிளை ஒன்றை செயற்படுத்த அனுமதி கிடைத்துள்ளமை எமக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது' என்று கூறினார் கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜெகன் துரைரட்ணம். 'இலங்கையும் மாலை தீவும் மிக நெருக்கமான இருதரப்பு உறவுகளைக்கொண்டுள்ள நாடாகும். பொருளாதார ரீதியாகவும் மிக நெருக்கமான பிணைப்புக்களைக்

COMMERCIAL BANK

கொண்டுள்ளன. இலங்கை கம்பனிகள் மாலைதீவில் ஹோட்டல்கள் நிர்வகிக்கின்றன. மாலைதீவின் உல்லாச பொழுது போக்கு விரும் தோம்பல் பிரிவுகளில் அதிகளவான இலங்கையர்கள் தொழில் புரிகின்றனர். மாலைதீவில் இருந்து இங்கு வருகை தருபவர்கள் பலர் கல்வி மற்றும் சுகாதார பிரிவுகளில் சேவைகளைப்பெற்று வருகின்றனர். எனவே கொமர்ஷல் வங்கி போன்ற ஆற்றலும் சக்தியும் கொண்ட ஒரு வங்கி மாலைதீவில் நிலை கொண்டிருக்க வேண்டும் என்ற தர்க்கம் வலுவடைகின்றது' என்று அவர் மேலும் கூறினார். ஏற்கனவே கொமர்ஷல் வங்கி கொழும்பில் இருந்து மாலைதீவுக்கு கணிசமான கடல் கடந்த சேவைகளையும் வளங்களையும் விஸ்தரித்துள்ளது என்று அவர் தொடர்ந்து கூறினார்.

'மாலைதீவில் பிரவேசிக்கும் எமது மூலோபாயம் முதலில் ஒரு கிளையை தொடங்குவதாகும். அதன் பிறகு ஐந்தாண்டு காலப் பகுதியில் கிளைகளின் எண்ணிக்கையை மூன்றாக அதிகரிப்பதாகும்' என்று துரைரட்ணம் விளக்கினார். 'நடமாடும் அலகுகள் மற்றும் ATM இயந்திரங்கள் என்பனவும் முக்கிய இடங்களில் ஸ்தாபிக்கப்படும். விரிவான பூகோள பரப்பளவை கருத்திற் கொண்டு தொழில்நுட்பம் அதி உச்ச மட்டத்தில் பயன்படுத்தப்படும்' என்று அவர் விரிவாக மேலும் விளக்கினார்.

சேமிப்புக் கணக்கு, நடைமுறை கணக்கு, நிலையான வைப்புகள், தனிநபர் கடன்கன், வீட்டுக்கடன், கிரடிட் கார்ட், மேலதிகப் பற்று, வர்த்தகக் கடன்கள், வர்த்தக நிதிச் சேவைகள், இணைய வங்கி சேவை, நடமாடும் வங்கி சேவை, வெளிநாட்டு நாணய சேவை, நாணய மாற்று சேவை எனத் தனியாருக்கும் நிறுவனங்களுக்கும் பல சேவைகளை வழங்க கொமர்ஷல் வங்கி திட்டமிட்டுள்ளது. (த)


உங்கள் கடின உழைப்பின் மீதான நிலையான பாதுகாப்பான சூழலுக்கு ஒரே தீர்வு சம்பத் வங்கியின் NRFC மற்றும் RFC சேமிப்புக் கணக்குகள்.

**சம்பத் Ultimate ஊடாக கிடைக்கும் நன்மைகள்:**

- ஈட்டும் வட்டிக்கு வரியில்லை.
- ஆரம்ப ATM அட்டை மற்றும் முதல் வருட SMS Alertz சேவை இலவசம்.
- அதிகூடிய வட்டி வீதம்.
- போட்டிமிக்க நாணய மாற்று வீதம்.
- கடன் மற்றும் மிகைப்பற்று வசதி.
- NRFC கணக்குகளிடையிலோ, NRFC மற்றும் RFC கணக்குகளிடையிலோ, ஒரே வங்கி அல்லது வேறு வங்கிகளிடையிலோ எந்தவொரு நாணயத்திற்குமான பரிமாற்றத்தினை மேற்கொள்ள முடியும்.
- சன்ஹிந்த சேவர் கணக்கு வைத்திருப்போருக்கு 0.25% மேலதிக வட்டி. (அமெரிக்க டொலர்களுக்கு மட்டும்.)

இச்சலுகைகளை அனுபவித்திட இன்றே சம்பத் வங்கியின் Ultimate NRFC அல்லது RFC சேமிப்புக் கணக்குகளை ஆரம்பியுங்கள்.

SampathBank ULTIMATE NRFC/RFC

Like us on facebook.com/Sampathbanklk

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

Sampath Bank Fitch Ratings A+(lka) | 0112 30 30 50 | www.sampath.lk

சம்பத் வங்கி PLC-PQ 144 ஸ்ரீலங்காவின் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டும், கண்காணிக்கப்பட்டும் வரும் வர்த்தக வங்கி.

Grant McCann


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் ,சங்கத்தின் சமூக செயற்பாட்டு மேம் பாட்டுத்திட்டத்தின் முன்னெடுக்கப்படும் உயர்த்தும் கரங்கள் திட்டத்தில் முல்லைத்தீவை சேர்ந்த தாய் அல்லது தந்தையை இழந்த கல்வி கற்கும் 15 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ஜ-86)




மட்டுவில் தெற்கு அ.மி.த.க.வித்தியாலய மாணவர் நாடாளு மன்றின் இரண்டாவது அமர்வு அண்மையில் வித்தியாலய அரங் கில் இடம்பெற்றது. அமர்வில் வைத்திய கலாநிதி சிவசங்கர், தென் மராட்சி கல்வி வலய உயர் அதிகாரிகள் உட்பட பெற்றோர்களும் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர். (ஐ)




விளஸ் ஸ்ரீ லங்கா என்ற அமைப்பின் ஏற்பாட்டில் பிரச் சினைகளில் சிக்கித் தவிக்கிறீர் களா தீர்வு இயேசுவிடம் எனும் நிகழ்வு யாழ்ப்பாணம் மாநகர சபை மைதானத்தில் இடம் பெற்றது. (ஐ)




நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 33 அடி உயர இரட் டைவாசல் சப்பைரதத்தின் வெள்ளோட்ட விழா அண்மையில் இடம்பெற்றது. வெள்ளோட்ட நிகழ்வைத் தொடர்ந்து நீர்வைக்கிழார் ச.லலீசன் தலைமையில் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது. இதில் ஆலயப் பிரதம குரு வண. சா.சோமதேவக்குருக்கள், நீர்வேலி வாய்க்காற் றரவைப் பிள்ளையார் கோவில் பிரதம குரு வண. ஆ.சந்திரசேகரக் குருக்கள், நீர்வைமணி கு.தியாகராஜக் குருக்கள் ஆகியோர் ஆசியு ரைகளையும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திரு முருகன் ஆகியோர் வாழ்த்துரைகளையும் வழங்கினர். (ஜ-86)





சர்வதேச லயன்ஸ் கழகத்தின் சங்கானை அரி மாக் கழகம் யாவருக்கும் சேவை என்ற தொனிப் பொருளில் சங்கானை லயன்ஸ் கழகத்தின் தலை வர் லயன் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தலை மையில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் கற்கும், தாய் தந்தையை இழந்த மாணவர் களுக்கு சப்பாத்துகள் வழங்கும் நிகழ்வு நடை பெற்றது. அதனைத் தொடர்ந்து கரவெட்டி விக் னேஸ்வரா ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு பற்சுகாதாரம் தொடர்பான கருத்தரங்கும் இடம் பெற்றது. தொடர்ந்து பசுமைப்புரட்சி எனும் தொனி யில் பாடசாலையைச் சுற்றி நிழல் மரங்கள் மற் றும் பயன்தரும் பழமரங் களும் நடப்பட்டன. (ஐ)




உரும்பிராய் கருணாகரப் பிள் ளையார் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா அண்மையில் இடம் பெற்றது. பிள்ளையார் அழகிய சிற்பத் தேரில் ஏறி வெளி வீதியுலா வலம் வந்து அடியவர்களுக்கு காட்சியளித்தார். அடியவர்கள் கர்ப்பூரச்சட்டி எடுத்தும் அடியழித் தும் அங்கப்பிரதட்சிணம் செய் தும் தமது நேர்த்திகளை பக்தி பூர் வமாக நிறைவேற்றினர். (ஜ-86)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வடக்கு மாகாண சபையினால் 2015 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியின் ஊடாக வாழ்வாதார உதவித்திட்ட அடிப்படையில் சுயதொழில் ஊக்குவிப்பாக விளையாட்டரங்க வீதி கோப்பாய் தெற்கு கோப்பாயைச் சேர்ந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் திருமதி கருணாநிதி சீதாலெட்சுமி என்பவருக்கு நல்லினப்பசுவும் கன்றும் வழங்கிவைக்கப்பட்டது.(ஐ)



மன்னார் பனங்கட்டிக்கொட்டு கிராமத்தைச் சேர்ந்த ஒரு தொகுதி மக்களுக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் இலவசமாக வாசிப்பு மூக்குக்கண்ணாடிகளை வழங்கி வைத்தார். (ஐ)





யாழ். பல்கலைக்கழக சட்ட மாணவர் ஒன்றியத்தினால் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு சட்டங்கள் பற்றிய பயிற்சி நிகழ்வில் வளவாளராக சட்டத் தரணி வினோதன் மற்றும் யாழ். பல்கலைக் கழக சட்ட மாணவர் ஒன்றிய செயலாளர் செல்வராஜ் டினேசன் மற்றும் ஆசிரியர்களும் கலந்துக்கொண்டனர். (ஐ)



யாழ். போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்திருவிழா புனித சவேரியார் குருமட வரலாற்றுத்துறை விரிவுரையாளர் அருட்திரு ச.வி.பி. மங்களராஜா அடிகள் தலைமையில் நடைபெற்றது. கூட்டுத் திருப்பலியைத் தொடர்ந்து அன்னையின் திருச்சொரூபம் பக்தர்களிடையே எடுத்து வரப்பட்டது. வைத்தியசாலை நிர்வாகத்தினர், வைத்தியர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் திருவிழாவில் கலந்து கொண்டனர். (ஐ-135)





தரம்-6 கணிதம் புதிய பாடத்திட்டம் நூல் வெளியீட்டு விழா வயாவிளான் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. நிகழ்வில் யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி ஓய்வு நிலைப் பீடாதிபதி கலாநிதி.தி.கமலநாதன், கல்லூரியின் பழைய மாணவர் சங்க உறுப்பினரிடம் இருந்து சிறப்புப் பிரதியைப் பெற்றுக்கொள்கிறார் அருகில் நூலாசிரியர்கள் வி.குகநாதன், ச.வ.பாலமுரளி ஆகியோரையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (ஐ)







மல்லாகம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலய மாணவர்களின் கல்விக் கண்காட்சி வித்தியாலய அதிபர் சி.சிவகுமாரன் தலைமையில் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தெல்லிப்பழை க்ல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் அ.ஈஸ்வரநாதன் கல்விக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். மற்றும் விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி அ.[illegible] மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ஐ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### விற்பனைக்கு
யப்பான் தயாரிப்பான ஹொண்டா சுப்பர்கப் - 50 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
(65089)(13.15)
தொ.பே. :077 923 5993, 077 749 8865

### காணி வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம், சுண்டுக்குளிக்கு அருகில் நில.பர. 2 குளி 0.25 விஸ்தீரணம் 6 அறைகள் கொண்ட வீட்டுடன் கிணறும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :
077 0229 762, 076 535 6714

### விற்பனைக்கு
ஒரே பெட்டியில் 4 பொருள்கள் வைத்து விற்பனை செய்யக்கூடிய 2 தட்டு மிக்சர் கண்ணாடி அலுமினிய பிற்றிங் புதியது விற்பனைக்கு உள்ளன.
தொடர்பு : 078 459 4656

### மோட்டர் சைக்கிள் விற்பனைக்கு
H.V- xxxx தொடர் இலக்கமுடைய CD 100ss விற்பனைக்குண்டு.
தொடர்பு : 076 879 7369

### கச்சேரியடியில் வீடு வளவு விற்பனைக்கு
யாழ் கச்சேரியில இருந்து 300m தூரத்தில பென்சிகோஸ் லேன், கண்டி றோட், இல. 11/4, இரண்டு பரப்புடன் வீடு விற்பனைக் குண்டு.
பார்வையிடும் நேரம் 8am - 6pm ஞாயிறு
தொ.இல : 071 997 0559

### வீடு விற்பனைக்கு
கொய்யாத்தோட்டம், 5A, புது வீதியில் அமைந்துள்ள வீடு (1¾ பரப்பு) விற்பனைக்கு உண்டு. பிரதி சனி,ஞாயிறு ஒரு மணிவரை பார்வையிடலாம்.
(65095)(13.15)
தொ.பே. : 071 628 4700

### காணி விற்பனைக்கு
சாவகச்சேரி, டச்சு வீதி ,மண்டுவில் காளி கோயிலுக்கு முன்பாக உள்ள 5 பரப்புக் காணி பயன்தரு மரங்களுடன் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 940 1614

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111


## ஏனையவை

### அமெரிக்க விசா லொத்தர்
அ ஃ தகுதியுடையவர்கள் விசா லொத்தர் மூலம் அங்கு குடியேறலாம்.
BBS NETTING
(19238)(14.15.16) தொடர்பு: 077 581 1106

### சகலகலாவல்லிமாலை
சீர்பிரித்து, அரும்பதங்கள், பொழிப்புரையுடன் காரைநகர் மணி வாசகசபை வெளியீடு செய்துள்ளது . 25/= ரூபா பெறுமதியான நூல் 10/= மட்டுமே. மாணவர்கள் பயன் பெற பாடசாலை அதிபர்கள் வழிசெய்க .
பெறும் இடம்:
பூபாலசிங்கம் புத்தகசாலை

### உடனடி வேலை வாய்ப்பு
* மோட்டார் கிரேடர் இயக்குநர் (Motor Grader Operator)

தகுதியுள்ளவர்கள் தமது விண்ணப்பம் மற்றும் தகுதிச் சான்றிதழ்களுடன் உடனடியாக நேரில் வரவும்.
மனிதவள முகாமையாளர்
45,காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்
(65099)(13.15) தொ.பே. :021 222 6239



* பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (நர்மினி)

### பயிற்சி வகுப்புக்கள்
10 விதமான சாறிபிளவுஸ், சல்வார் கட்டிங், கேக் ஐசிங் என்பன பயிற்றுவிக்கப்படும்.
(65096)(13.15) தொ.பே. :075 550 5047

### தொடர்புகொள்ளவும்
தெல்லிப்பழைச் சந்தியை அண்மித்து கே.கே. எஸ். வீதியில் வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு ஏற்ற வகையில் கட்டடம் கட்டி வாடகைக்குக் கொடுக்கப்படும்.
(65134)(13.15) தொடர்பு: 077 772 9525

### அமெரிக்க Green Card Lottery - 2017
அமெரிக்க Green Card Lottery விண்ணப்பிப்பதில் 13 வருட அனுபவமிக்க எமது நிறுவனத்தில் 2017 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விவரங்களை ரூபா 15/= முத்திரையொட்டப்பட்டு சுய முகவரியிட்ட தபாலுறையை Bristol Cyber Cafe, No.3/3-4 Bristol Street, Colombo - 01 எனும் முகவரிக்கு அனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம்
Tel: 011 239 3919, 077 427 6579
W/A44843 www.bristolcc.biz

### தையல்
இந்தியாவில் 8 வருட அனுபவம் வாய்ந்த பெண் ரெய்லரால் சாறி பிளவுஸ், சுடிதார் ஆகியவை நவீன முறையில் தைத்துக் கொடுக்கப்படும்
இடம் : குமாரசாமி வீதியிலிருந்து பிரம்படி வீதி, கொக்குவிலுக்கு மாற்றப்பட்டுள்ளது.
தொடர்பு : 076 639 9277

### ரிதுசன் வகுப்புக்கள்
யாழ். பல்கலைக்கழகத்துக்கு அருகில் ஆண் மாணவர்களுக்கு மட்டும்.
ACCOUNTS,ECONOMICS, ENGLISH, MATHS & LOGIC For O/L,A/L
(65098)(13.15) தொ.பே. :076 803 5262

### ஆள்கள் தேவை
யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஐஸ்கிறீம் மற்றும் சைவ உணவகத்திற்கு கீழ்க்காணும் வெற்றிடங்கள் உள்ளன.

* சமையலாளர்கள் (ஆண்/பெண்)
* உதவி சமையலாளர்கள் (ஆண்/பெண்)
* சுத்திகரிப்பாளர் (ஆண்/பெண்)
* உணவு பரிமாறுபவர்கள் waiters (ஆண்கள் மட்டும்)
* சிற்றுண்டி தயாரிப்போர் (ஆண்/பெண்)
* ரீ மேக்கர் (ஆண்கள்)
* அனுபவமுள்ள ஐஸ்கிறீம் வாகன சாரதி (A Licence)

உடன் தொடர்பு கொள்ளவும்
குமார் : 077 771 0785
442, Hospital Road,
Jaffna.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## தேவை

### காணி தேவை
இணுவில் மருதனார் மடத்துக்கும் கொக்குவிலுக்கும் இடையில் கே.கே.எஸ் வீதியில் குத்தகைக்கு காணி தேவை.
தொடர்பு : 075 927 3070

### தேவை
கமுகு (பாக்குமரம்) மட்டைகள் தேவைப்படுகின்றன. கமுகமர தோட்டங்கள் அல்லது வீடுகளில் வைத்திருப்பவர்கள் தொடர்புகொள்ளவும்.
(65063)(13.15)
தொ.பே. : 077 385 2648

### ஆசிரியர் தேவை
தரம் - 7 இல் கல்வி கற்கும் மாணவிக்கு தமிழ்ப் பாடம் கற்பிப்பதற்கு அனுபவமுள்ள ஆசிரியை தேவை.
தொடர்பு:
(65131)(14.15.16) 076 807 9161

### வேலையாள்கள் தேவை
* காசாளர்
* உணவு பரிமாறுபவர்

HOTEL ROLEX
340, ஆஸ்பத்திரி வீதி-யாழ்ப்பாணம்
T.P-077 907 9888
(தொடர்பு கொள்ள வேண்டிய நேரம் 2.p.m - 4.00p.m வரை)

### வீடு வாடகைக்குத் தேவை
யாழ்.நகருக்கு அருகில் அல்லது யாழ்.நகரிலிருந்து 5km 3 பேர் அடங்கிய ஆசிரியர் குடும்பம் வசிப்பதற்கு வீடு ஒன்று தேவை.
தொடர்பு : 071 552 3089

### தேவை
கிளிநொச்சியில் இயங்கும் முன்னணி பிறிண்டிங் நிலையத்தில் கடமைபுரிய கிறபிக் டிசைனர்கள் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் ஆண், பெண் இருபாலாரும் விரும்பத் தக்கது. அனுபவத்திற்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் சலுகைகள் உண்டு. உடன் தொடர்புகொள்ளவும்.
(65094)(13.15) தொ.பே. 077 186 6733

### அர்ச்சகர் தேவை
அருள்மிகு காளியம்மன் என வழங்கும் காமாட்சியம்மன் ஆலயத்திற்கு தினமும் காலை மாலை (நித்திய நைமித்திய) பூசை செய்வதற்கு அர்ச்சகர் தேவை.விண்ணப்பங்களை சுயவிவரங்களுடன், மாத ஊதியத்தையும் குறிப்பிட்டு 10.10.2015 இற்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வேண்டிக்கொள்கின்றோம்.
அனுப்பவேண்டிய முகவரி:
இ.தர்மலிங்கம் (தலைவர்) சிவன் வீதி, உடும்பிராய் கிழக்கு, உடும்பிராய்.
(65092)(13.15) நிர்வாகசபை.

### தேவை
நெல்லியடி நகர்ப்பகுதியில் வர்த்தக நடவடிக்கைகளுக்கு கடை வாடகைக்குத் தேவை. 077 772 9525 என்னும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
(65135)(13.15)

## வாடகைக்கு

### அறை வாடகைக்கு
யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதி யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில் வேலை பார்க்கும் பெண் கள் இருவருக்கு சகல வசதியுடன் அறை வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
851/34, கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம்
(65133)(14.15.16) 021 222 1781

### அறைகள் வாடகைக்கு
யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அருகில் ஆண் மாணவர்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் அறைகள் வாடகைக்கு உள்ளன.
(65097)(13.15) Ph.No. 076 803 5262

### வீடு வாடகைக்கு
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு தபாற்கந்தோர் அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
(65056)(13.15)
தொடர்புகளுக்கு: 077 347 2628

### வாடகைக்கு
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் யாழ்தேவி A/C ரயில் தரித்து நிற்கும் வெள்ளவத்தை ரயில் நிலையத்திற்கு முன்பாக இல.08, புகையிரத வீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் தனி அறைகள், இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்குண்டு.
தொடர்பு : 071 299 1256, 011 250 4281
(C19237,11,15,16)

### வாடகைக்கு
ஆனைப்பந்தியடியில் அனெக்ஸ் வாடகைக்கு உண்டு. உத்தியோகத்தர்களுக்கு உகந்தது.
தொடர்பு: 371/3,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(65104)(13.15)

### வீடு வாடகைக்கு
61/6 நல்லூர் குறுக்கு வீதியிலமைந்த 10 அறைகள், 2 Hall, 2 சமையலறையுடன் கூடிய 4600 சதுரஅடி, மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. கடந்த 5 வருடங்களாக அரசநிறுவனத்தின் பாவனையிலுள்ளது . அரச தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 136 4312

### வீடு வாடகைக்கு
கொக்குவில் மேற்கு பொன்னையா லேன், ஆனைக்கோட்டையில் 3 பேர் தங்கக்கூடிய சகல வசதிகளும் கொண்ட தனி வீடு வாடகைக்கு உண்டு. மற்றும் வாடகை நேரில் பேசித் தீர்க்கப்படும். தேவைப்படின் தளபாட வசதியும் செய்துகொடுக்கப்படும்.
தொடர்பு : 0777707465, 0777656948

## வேலைவாய்ப்பு

### வேலைவாய்ப்பு
FR Advertising கம்பனியில் புதிதாக திறக்கப்படவுள்ள கிளைகளுக்கு அடிப்படை சம்பளத்துடன் வேலைவாய்ப்பிற்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. முன் அனுபவம் அவசியம் இல்லை. பயிற்சி அறித்து இணைத் துக்கொள்ளப்படுவர்.
தகைமை : O/L, A/L.
O/L இல்லாதவர்களும் நேர்முகப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கொழும்பு, திருகோணமலை, மேலதிக தகவல்களுக்கு.
076 843 3804, 077 208 3140, 077 280 3773

### வேலைவாய்ப்பு
ரூ.48000 அதி உயர் சம்பளம். விமான நிலையம், துறைமுகம், தனியார் தொழிற்சாலை ஆகியவற்றுக்கு (வயது: 18-40)ஆண், பெண், உணவு, தங்மிடம் முற்றிலும் இலவசம். 6 மாதத்தில் நிலையான தொழில். இன்னும் 50 வேலை வாய்ப்புகள் மற்றும் அதிஉயர் சம்பளம்.சிறந்த எதிர்காலம். வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்.
தொடர்புகொள்ளவும்:
077 956 9606, 075 420 4351

இலங்கை முழுவதும் இப்போது உடனடி வேலைவாய்ப்புகள். நீங்கள் எதிர்பாக்காத வருமானத்தை ஈட்டிக்கொள்ளலாம். சொக்லேட், கோடியல்,பாம்மா, சோயா, குளிர்பானம் ஆகிய துறைகளில் உடனடியாக 75 வேலைவாய்ப்புக்கள். (வயது: 18 - 55) உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். ஆண், பெண். சம்பளம் (20000 - 40000) நாள் சம்பளம் - OTயுடன் 1500 (OT-1 Hrs) நாள் சம்பளம் பெற்றுக் கொள்ளலாம் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
T.P. 075 028 7319, 078 308 8234

நாள்சம்பளம் 1500/= மாதாந்தம் எவ்வளவு? உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். சொக்லெட், பாம்மா, ஐஸ்கிறீம் போன்ற தொழிற்சாலைகளின் அனைத்துப் பிரிவுகளுக்கும். வந்த நாளிலே வேலை. ஆண்/பெண், (18-55) OT உடன் 40000/= இற்கும் அதிகமான சம்பளம் (நாள்சம்பளம், கிழமைச்சம்பளம், மாதச் சம்பளம்) உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
T.P. 077 401 7543, 755 446 898

சொன்ன சம்பளம் கிடைத்ததா? மாதக் கடசியில் (8000 -12000) ஆகிய சம்பளமா கிடைத்தது. உணவு,தங்குமிடம்,உங்கள் சம்பளத்தில் கழித்துக்கொண்டார்களா? இதோ உண்மையான சம்பளம் நாள் சம்பளம் -1500/= உங்கள் விரும்பப்படி ஒவ்வொரு நாளும் சம்பளம் உணவு, தங்குமிடம் உடை ஆகியன முற்றிலும் இலவசம். உங்கள் சம்பளத்தை நீங்களே கணக்குப் போட்டு பார்த்துக்கொள்ளவும். (நாள்சம்பளம் - 1500×25 Day= 37500) (உண்மையான சம்பளம்) பிரதான தொழிற்சாலைகளில் லேபல், உற்பத்தி, பொதியிடல் ஆகிய பிரிவுகளுக்கு. ஆண், பெண் (வயது: 18 -50) வரும் நாளிலே வேலை.
T.P. 775 977 259, 77 891 0598

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச வைத்திய முகாம்

யாழ்ப்பாணம், ஒக். 4
நல்லூர் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் இலவச வைத்திய முகாம் ஒன்று இன்று முன்னெடுக்கப்படவுள்ளது.
மணியந்தோட்டப்பகுதியில் உள்ள மணிபுரி முன்பள்ளி 6ஆம் குறுக்குத் தெரு, 5ஆம் குறுக்குத் தெரு ஆகிய பகுதிகளில் காலை 8 மணிதல் பிற்பகல் 1 மணிவரை குறித்த வைத்திய முகாம் முன்னெடுக்கப்படுவதுடன் தொற்று நோய்கள் சம்பந்தமான விழிப்புணர்வுக்கருத்தரங்கும் நடைபெறும். அத்துடன் கண் பரிசோதனையும் மூக்குக்கண்ணாடி வழங்கலும் மணிப்புரி முன்பள்ளி மண்டபத்தில் வழங்கப்படும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

# கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக்.4
நல்லூர் சங்கிலியன் வீதியில் அமைந்துள்ள ட்ரில்லியம் முன்பள்ளியின் மாணவர் சித்திர கைவேலை ஆக்க வெளிப்பாட்டுக்கண்காட்சியானது நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியது. குறித்த கண்காட்சியை வடமாகாண ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரதிப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா திறந்து வைத்தார். இந்தக் கண்காட்சி இன்று ஞாயிற்றுக் கிழமை மு.ப 9.00 மணிமுதல் பி.ப 5.00 மணிவரையும் நடைபெற்று முடிவடையும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-10)

# கிளைக்குழுக் கூட்டம்

சாவகச்சேரி ஒக்.4
சாவகச்சேரி பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுக் கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சங்கத்தின் 23 கிளைகளிலும் கூட்டுறவு அலுவலர்கள் முன்னிலையில் இடம்பெறுமென மாகாண கூட்டுறவு ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் அறிவித்துள்ளார். (த-9)

**கணக்காளர் தேவை**
வியாபாரஸ்தாபனம் ஒன்றுக்கு பெண் கணக்காளர் தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு : 077 248 7772

**வெளிநாட்டு வேலைவாய்ப்பு**
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அனுமதியுடன்
புறூனை (Brunei)

| உத்தியோக வகை | எண்ணிக்கை | சம்பளம் Brunei Dollars (ஒரு டொலர் 100/-) |
|---|---|---|
| பொது தொழிலாளர்கள்(ஆண்) | 100 | 500 + OT |

மேலதிக தகவல்கள்
★ மூன்று வருட ஒப்பந்தம்
★ 08 மணிநேர வேலை மற்றும் வாரத்தில் 6 நாள்கள்
★ உணவு, தங்குமிடம், மருத்துவம், போக்குவரத்து, ஒருவழிப் பயணச் சீட்டு இலவசம்
★ நாளொன்றுக்கு 2 தொடக்கம் 3 மணித்தியாலம் வரை மேலதிக வேலை நேரம்.
★ மேலதிக சட்ட திட்டங்கள் மற்றும் விதிமுறைகள் புறூனை சட்டத்திற்கு அமைவானது.
கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் சுயவிவரக்கோவை, கடவுச் சீட்டு பிரதியை அனுப்பவும்.
SAINAS TRAVELS & TOURS
No.19, Playground Road, obesekarapura, Rajagiriya
Mobile: 077 731 1880, 077 758 8781
Email: stmazoorsl@yahoo.com, Sainastravels@gmail.com
(19243) (14,15,16) App. No AL/1004/01/15

**இயந்திரமோ ஒன்று! வேலையோ பல!!**
3D ஹீட் பிறஸ் மெசின்
விசேட விலைக்கழிவுடன்
கிடைக்கும் இலாபமோ மிக அதிகம் !!!
Studio ,Colour Lab, Book Shop,Gift Centers, Communication.. போன்ற வியாபார ஸ்தலங்களிற்கு உகந்தது






விலை ரூ 125,000 இற்கு மேல்
பிரிண்ட் செய்யக்கூடிய சகல பொருட்களும் எம்மிடம் உண்டு
மக், பிளேற், ரிங் போத்தல், ஸ்ரோன்ஸ், ரீ சேர்ட், டைல் போன்றவற்றில் பிறின்ற் செய்யக்கூடியது
077 201 5330
077 385 0089
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitya,Colombo - 03
max adz

**VACANCIES**
SALES EXECUTIVE (Male & Female)
We are a company dealing with Children educational programme and there is an exciting & excellent opportunity for Self - motivated, committed indivduals to take up the responsibility as
SALES EXECUTIVE
Requirements
* GCE (A.L) Qualified
* Below 35 years old (School leavers may apply for trainee position)
* Good communication skill in English & Tamil
Benifits
→ An attractive salary
→ Travelling allowances
→ Commissions payments
→ Telephone facilities
→ Motorbike allowances
→ Incentive & Overseas trips for target achievers
→ Career development (Management position)
If you believe that you are the right cantidate, Please e-mail or contact immediately.
Branch Manager: G.Anthany
Phone No: 077 356 6835, 021 567 1130
Pioneer House (PVT) Ltd.
No.100, 2nd Floor, Manipay Road, Jaffna.
E-mail: jaffnapioneerthouse@gmail.com



**ஆர். எஸ் பதி (மருந்து) இயற்கை தைலம்** ஆர்.எஸ்.பதி நேட்சுரோ
தலைவலி, காய்ச்சல், தடிமன், கை கால்வலி, மூட்டுவலி, சைனஸ் முதலிய நோய்களுக்கு சிறந்த நிவாரணம்
05ml Rs. 125/=
20 ml Rs 250/=
50 ml Rs 500/=
100 வருட கால பழமைவாய்ந்த இயற்கை ஆயுர்வேத நோய் நிவாரணி ஆர். எஸ். பதி மருந்து நேட்சுரோ
இலங்கை ஆயுர்வேத திணைக்களத்தின் அனுமதி சான்றிதழ் பெற்று நாடு பூராகவும் விநியோகிப்போர்.
N.S.Y. Distributors (Pvt) Ltd.
18, Sangabo Mawatha, Borupana Road, Ratmalana,
Tel: 011 2622 955 / 011 2622956 /075 410 5230



**வேலை வாய்ப்பு**
இலங்கையிலே பிரபல்யமான (Diamond Innovation group) நிறுவனத்தின் யாழ்ப்பாண கிளைக்கான முகாமையாளருக்கான பதவி வெற்றிடங்கள் உள்ளன. பதிவுகளுக்கு முந்துங்கள்.
* கல்வித்தகைமை O/L,A/L.
* வயதெல்லை 18 - 30.
* சந்தைப்படுத்தல் துறையில் முன் அனுபவம் விரும்பத்தக்கது.
* கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
* உணவு, தங்குமிடவசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.
தொடர்பு : 077 673 3731
(65129)(11,15,18)

**காசாளர் தேவை**
யாழ் நகரில் இயங்கும் பிரபல கருவாடு விற்பனை நிலையத்துக்கு கணக்கு பதிவு தெரிந்த காசாளர் தேவை. 35 வயதுக்கு மேற்பட்டோர் விரும்பத்தக்கது.
தொடர்பு : 077 230 6390
(65132)(12.15)

**வைர விழா**
செல்வி மியூறியல் வயலட் ஹட்சின்ஸ்
அம்மையாரினால் 1955ஆம் ஆண்டில் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட "கருணா நிலையம்" தனது திருப்பணியில் 60 ஆவது ஆண்டு நிறைவையொட்டி 10.10.2015 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஒப்புக் கொடுக்கும் நன்றித்திருப்பலி வழிபாட்டில் கலந்து கொள்ளும் வண்ணம் பழைய மாணவர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
கருணா நிலையம், கிளிநொச்சி.
(63521,11,15,17)




**TOSHIBA COPIERS**
NEW STOCK IN FROM EUROPE
MODELS AVAILABLE
Toshiba e-Studio 182
232 , 233 , 283 , 305
355 , 455
சிறப்பு விலை தள்ளுபடி
பதிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர் மற்றும் தொழில் நுட்பவியலாளர்கள்.
Contact:-
0714 307 660 Rs. 40,000/- onwards
ABC Trade & Investments (Pvt) Ltd.
No.03, Bandaranayakapura Road, Rajagiriya.
Tel:- 0115 877 700, Fax:- 0112 868 555
info@abcsrilanka.biz , www.abcsrilanka.biz





Saravana Tex
ஆசிரியர் தினத்தினை முன்னிட்டு சிறப்புத் தள்ளுபடி
சரவணா ரெக்ஸ் நல்லூர்
கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், பன்சி சாறிகள் என்பன எங்கும் இல்லாத விசேட விலைக்கழிவில்...
(வேறு கிளைகள் இல்லை)
சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
மூன்று தினங்கள் மட்டுமே.. 05,06,07 ஒக்டோபர் 2015 வரை
526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர், (பின் வீதி) (சிவன் கோவில் அருகில்) யாழ்ப்பாணம். தொ.பேசி: 021 222 1723

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாம் உங்களுக்கு உதவ தயார்

**•Visit Visas •Rejected Visas**

நிராகரிக்கப்பட்ட மற்றும் புதிய விண்ணப்பங்கள்

*Appeals & Rejected Visas *Special Occasions
*Family & Friends Visit *Medical Visits
*Tourist/Business Visits

- Australia
- Canada
- China
- France
- Germany
- Italy
- Japan
- New Zealand
- Netherlands
- Norway
- Switzerland
- Sweden
- UK
- USA

**100%** உத்தரவாதம்*
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

**THE VISA CENTRE**
Migration, Work & Study Solutions

Level One, 21, Maitland Crescent, Colombo 07.

**HOTLINES:**
**0777 633 955 / 0777 633 977 / 0773 444 447**

அனைத்து விதமான கட்டணங்களும்
The Visa Centre
தலைமை காரியாலயத்தில் மட்டுமே செலுத்தப்படல் வேண்டும்..

Tel: 5 334433 Fax: 5 352303 Email: info@thevisacentre.com
www.thevisacentre.com

FLEX Graphic

**Majestic** Cineplex Jaffna

**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்



| | |
|---|---|
| மஜெஸ்டிக் ப்ளாட்டினம் | 10.30 / 2.30 / 6.30 |
| சில்வர் | 10.15 / 2.15 / 6.15 |
| ப்ரொன்ஸ் | 10.30 / 2.30 / 6.30 |

விசாரணை ☎ 021- 2227712

CeylonTheatres
www.ceylontheatres.lk

## பணியாளர்கள் தேவை

A9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சியில் அமைந்துள்ள சிவகுரு காட்வெயர் நிறுவனத்திற்கு கீழக்குறிப்பிடும் பணியாளர்கள் தேவைப்படுவதால் நேரில் அல்லது தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும். ஆண்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படுவர். கணக்காய்வுப் பகுதியிலும் கணினியிலும் போதிய அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

1. கணக்காளர்
2. கணக்காய்வு உத்தியோகத்தர்
3. சிட்டை எழுதுனர்
4. இயந்திர அரிகல் அரிவதில் அனுபவமுள்ளவர்.
5. மோட்டார் சைக்கிள் திருத்துனர்.
6. மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பதில் அனுபவம் உள்ளவர்.
7. சமையல்காரர் (இவர் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.)

(63523)(14,15,17)

**தொடர்புகளுக்கு: 077 772 2305**

## உடனடி வேலையாள்கள் தேவை

1) உப ஒப்பந்தக்காரர்கள் பின்வரும் வேலைகளுக்குத் தேவை.

- தச்சு வேலை (Formwork) சதுர அடி 45/=
- கொங்கிறீட் கன அடி 70/=
- கம்பி வேலை 1kg 18/=
- செங்கல்வேலை (9சுவர்) கன அடி 60/=
- பூச்சு வேலை வர்க்கடி 35/=

2) எமது நிறுவனத்திற்கு பின்வரும் தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர்.

- மேசன்
- தச்சுத் தொழில்
- கம்பி வேலையாள்கள்
- கூலியாள்கள்

தகுதியான உப ஒப்பந்தக்காரர்கள், வேலையாள்கள் கீழ் உள்ள தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

No.88, பலாலி வீதி,
திருநெல்வேலி (கொமர்ஷல் வங்கி அருகில்)
**T.P - தமிழ் - 077 497 2756**
**சிங்களம் - 076 820 4531**

(65103,11,15,16)

## வேலை வாய்ப்பு

கொழும்பில் இயங்கிக்கொண்டிருக்கும் MEDICAL, SURGICAL,LOBORATORY,COSMETICS, CONSUMABLES AND EQUIPMENT கம்பனி யாழ் நகரில் கிளையை ஆரம்பிக்க உள்ளதால்.....

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. MARKETING/ SALES REPRESENTATVE (ஆண்கள்)
தகைமை:- A/L,ஆங்கிலசித்தி, சாரதி அனுமதி பத்திரம்.

02.BILL CLERK (பெண்கள்) தகைமை: O/L

03. DELIVERY BOY
தகைமை:- O/L ஆங்கிலம் சாதாரண சித்தி,சாரதி அனுமதிப் பத்திரம்.

- அனைத்திற்கும் வயதெல்லை:- 18-35 வரை
- 7 நாள்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டி முகவரி

THE MANAGER
13A, 55th LANE
COLOMBO - 06

மின்னஞ்சல்:-info.vacancies jaffna@gmail.com

## அலுவலக உதவியாளர் தேவை

யாழ் வணிகர் கழக அலுவலகத்திற்கு அலுவலக உதவியாளர் (Peon) தேவை. விண்ணப்பங்கள் 10.10.2015 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது நேரடியாகக் கையளிக்கலாம்.

இல165, மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்

யாழ் வணிகர் கழகம்

## மருத்துவப் பொருள் சந்தைப்படுத்துநர் தேவை
(Medical Marketing Executives)

G.C.E. A/L விஞ்ஞானப் பிரிவில் படித்த,கணினி அறிவுள்ள, 30 வயதிற்கு உட்பட்ட,மோட்டார் சைக்கிள்/ கார் சாரதி அனுமதிப் பத்திரம் உள்ள வடமாகாணத்தில் (யாழ்,கிளி,முல்லை,வவுனியா,மன்னார்) பணியாற்றக் கூடிய மருத்துவப் பொருள் சந்தைப்படுத்தும் அனுபவம் உள்ள ஒருவராக தாங்கள் இருப்பின் உடன் விண்ணப்பிக்கலாம். குளுக்கோமீற்றர்,ஸ்றிப் சந்தைப் படுத்தலில் அனுபவம் இருப்பின் சிறப்புத் தகுதியாகக் கருதப்படும். சுயவிவரக்கோவையுடன் தகுதிச் சான்றிதழ்களின் நிழல் பிரதிகளையும் அனுப்பவும்.

**விண்ணப்ப முடிவு நாள்- 08.10.2015**

Medcon (pvt) Ltd,
No: 218,1/1, ஆஸ்பத்திரி வீதி, (Micro pc systems மேல் மாடி)
யாழ்ப்பாணம்
077 012 4415, 021 492 3587




A leading IT learning & Software Developments Centre

**OFFICE ADMINISTRATIVE ASSISTANT (PART TIME) (Female) - JAFFNA**

REQUIREMENTS INCLUDE

- A minimum of 3 passes at GCE A/Ls in any stream.
- Sound knowledge of Microsoft Office packages, Photoshop should be advanced
- Excellent communication skills.
- Able to work in dynamic environment.
- Below 28 years of age

**MARKETING MANAGER (Male or Femalo)**

REQUIREMENTS INCLUDE

- A minimum of 3 passes at GCE A/Ls in any stream.
- Minimum 1 year experience in the relevant field.
- Knowledge and experience in the excution of marketing, Communiction & public relation activities.
- Able to work in dynamic environment.
- Below 30 years of age

If you are suitable for these positions please send your CV on or before **08th October 2015 to info@exampoint.lk**

**ExamPoint (Pvt) Ltd.** 0776 28 48 45
No- 120/6, Palaly Road, Kantharmadam, Jaffna.
Tel : 021 221 6400 Email :info@exampoint.lk Web :www.exampoint.lk

## விற்பனைக்கு

இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இருலோத் இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :
011 5554 321, 071 685 0342

## J.C.B இயந்திரம் விற்பனைக்கு

இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப் பட்ட P-08/p-21 இன பதிவு செய்யப்படாத J.C.B இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :
011 5554 321, 071 685 0342

## வேலையாள்கள் தேவை

கொழும்பு-04, கொழும்பு-07 தர்மபால மாவத்தையில் அமைந்துள்ள Highrise கட்டடங்களுக்கு மேசன் பாஸ் கூலியாள்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர். திறமைக்கு ஏற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தங்குமிட வசதி Site இல் வழங்கப்படும். தகுதியானவர்களுக்கு நிரந்தர வேலை வழங்கப்படும்.

Piripun Holdings (pvt) Ltd,
92, Dharmapala Mawatha
Colombo- 07
077 730 7752, 077 727 0551

## இலவச தாதிப் பயிற்சி நெறிக்கு ஆள்சேர்த்தல்

செரண்டிப் சிறுவர் இல்லம் ,யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் தாதிய பயிற்சிக்கல்லூரியில் இலவசமாக தாதிய பயிற்சி நெறியினை ஆரம்பிக்க உள்ளது. இப்பயிற்சி நெறியினைத் தொடர விரும்பும் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன:

பயிற்சிக்காலம்-3 வருடங்கள்

தகைமை- க.பொ.த. உயர்தரத்தில் ஏதாவது ஒரு பிரிவில் 2 பாடங்களில் சித்தி.

விண்ணப்ப முடிவு திகதி- 12.10.2015

பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி-**
**இல. 1009**
**திருநகர் தெற்கு,**
**கிளிநொச்சி.**

## ஹட்டன் நஷனல் வங்கி பிஎல்சி

**யாழ்ப்பாணம்**

ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள கடைத்தொகுதி விற்பனைக்கு

**அமைவிடம்: இல. 305/01, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

**அளவு : காணி - 6.82 Kls**
**இரு மாடிக் கட்டடம் - 1490 சதுர அடி**

மேலதிக விவரங்களுக்கு அலுவலக நேரங்களில் அழைக்கவும்
021 225 5141, 077 353 0409, 077 780 3250

விலைக்கோரல்களை 2015 ஒக்டோபர் 25 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

The Manager
Hatton National Bank PLC
Prem Plaza
No - 171, Jaffna Road, manipay

The Senior Manager (R & CQM)
Hatton National Bank PLC Recoveris
Department, Level
18, HNB Towers,
No 479, Jayah Mawatha, Colombo-10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
17.11.1966

மறைவு
14.10.2014

### ஆவுடையப்பன் அசோக்குமார்

ஆண்டொன்று மறைந்து
விட்டது அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின்
சோகம்
ஆறவில்லை நம் இதயம்
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுக்ள என்றும்
எம் மனதைவிட்டு நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்

(65152)(10.15.17)

41/1, துரைராஜா வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி ருக்குமணி பத்மநாதன்



சண்டிலிப்பாய் மடத்தடியைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ருக்குமணி பத்மநாதன் நேற்று (03.10.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பன் - செல்வி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சீனியர் - நாகமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும், பத்மநாதனின் பாசமிகு மனைவியும், அருள்நேசன் (ஜேர்மனி), ஜெகநேசன் (கனடா), அருந்ததி (லண்டன்), சுகந்ததி, பத்மநேசன் (ஆசிரியர் - யா/ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாலயம்), வரதேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

தகவல் :
கணவர், பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### கனகசபை செல்லத்துரை

(ஓய்வுபெற்ற ஊழியர் சாவகச்சேரி
ப.நோ.கூ.சங்கம்)



சரசாலையைப் பிறப்பிடமாகவும், கைதடி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை செல்லத்துரை நேற்று (03.10.2015) சனிக்கிழமை மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், வள்ளியம்மையின் அன்புக்கணவரும், மதிரூபன் (ரூபன் களஞ்சியம்), மதியழகன் (ஹொலண்ட், பாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாரூபன் (கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) கோமதி (கொலண்ட்) ஆகியோரின் அன்பு மாமனும், சண்முகேஷ் காயத்திரி (கொலண்ட்) ஆகியோரின் அன்புப் பேரனும், கனகமணி, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான நடராசா, முத்துலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 12 மணியளவில் ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

கைதடி கிழக்கு, கைதடி

(65169)(10.17)

### மகாதேவா வசந்தராசா (வசந்தன்)

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகாதேவா வசந்தராசா 25.09.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகன கிரியைக்காக மு.ப 11.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்: குடும்பத்தினர்
T.P: 077 528 6623



தோற்றம்: 31.12.1951
மறைவு: 25.09.2015

சுதுமலை வடக்கு
மானிப்பாய்

(65140) (12.15.16.17)

## மரண அறிவித்தல்கள்

### நாகேசு சிவசோதி

(முன்னைநாள் பங்காளர்,சரஸ்வதி லிமிட்டெட் கொறணை)



காரைநகர் வாரிவளவை சேர்ந்த நாகேசு சிவசோதி கடந்த 02.10.2015 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குளியாப்பிட்டி வர்த்தகர் நாகேசு சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான கொச்சிக்கடை வர்த்தகர் கணபதிப்பிள்ளை-மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும் புஸ்பவதியின் அன்புக் கணவரும் கேதீஸ்வரன்(பாபு- கனடா), இந்துமதி(கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவபாலன் (கொழும்பு), ரூபராணி(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு (வர்த்தகர்- இங்கிரியா) காலஞ்சென்ற பரஞ்சோதி (வர்த்தகர்- குளியாப்பிட்டி), ஆகியோரின் அன்புச்சகோதரனும் வாமதேவன் (வர்த்தகர், கொச்சிக் கடை),புனிதவதி ஆகியோரின் மைத் துனரும் அபிராமி, சந்தோஷ், அபிநயா, ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் நாளை (05.10.2015) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் மல்லிகை S.M கேணியடியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மல்லிகை S.M கோணியடி
காரைநகர்
075 760 2756 .077 127 9224

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(c 19361) (12.15.16)

### திருமதி நல்லம்மா பொன்னையா

பிறப்பு: 03.06.1920
இறப்பு : 01.10.2015



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா பொன்னையா 01.10.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் நடராசா, ஏரம்பமூர்த்தி, செல்லப்பா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவமணி, காலஞ்சென்ற துரைராசா மற்றும் மல்லிகாதேவி, நவரத்தினம், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் பரமேஸ்வரி, தவராசா ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற காசிநாதர் மற்றும் சாரதாதேவி, நடராசா, சிவக்கொழுந்து, சிவநாதன் (ஜேர்மன்), மனோகரி (ஜேர்மன்) ஆகியோரின் மாமியும், லோகாஜினி, கஜன், மயூரன், சசிகுமார், காலஞ்சென்ற கஜகுமார் மற்றும் சயந்தி, நிசாந்தி, பாரதி, பகீரதி, தர்சினி, பிரபாலினி, கோபிராஜ், சர்மிளா, யதுசன், யதுசா, யதீசன் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற கஜானி மற்றும் கவினா, பாவரசி, நிகரன், திகழரன், சாய்னா, சாயிராம் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(C/19161)(10.17)

### இளையதம்பி தர்மரட்ணம்



மட்டக்களப்பு, ஏறாவூரைப் பிறப்பிடமாகவும் மணியந்தோட்டம் 2 ஆம் குறுக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி தர்மரட்ணம் 02.10.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பிள்ளையம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசு மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும்,பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இரட்னேஸ்வரி மற்றும் ஜெகதீஸ்வரி, வாசுகி,ஜெகதீஸ்வரன், றமணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், குகநாதன் (இந்திரன்), காலஞ்சென்றவர்களான செல்வராசா, முரளிதரன், சத்தியவதனி ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற இராசலட்சுமி மற்றும் நாகரத்தினம், காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் பரமேஸ்வரி, சண்முகவடிவு, நமசிவாயம், கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரமும், காலஞ்சென்ற கர்னா மற்றும் ரவீந்திரன் (பிரான்ஸ்), சாந்தி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், துவாரகன் (டென்மார்க்), திவாகன் (லண்டன்), திலக்ஷன், தர்சன், மிதுனன், மதுஷன், ஸ்ரான்லினி, நிரோஜினி,றனேஸ் (லெபனான்) தனுஷன், வினுஷன், யானுஜன், நித்தியா, டஜேந்தினி, விஜேந்தினி, றோயினி, கிரிதரன், இந்திக்கா, மிதுசிகா, மிதுசன், அபினயா ஆகியோரின் பேரனும்,மைக்கல் ஜக்சன்,தியாஸ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2015)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல. 44,
2ஆம் குறுக்குத்தெரு,
மணியந்தோட்டம்.

(65147) (13.15.16.17)

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே. 077 494 9320

## பொலிஸ் மோசடிப் பிரிவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக். 4

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு தடைசெய்யப்பட வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் பிற்போட்டுள்ளது. பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவுபிரதமரின்உத்தரவுப்படி இயங்கும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ள நிறுவனம் எனத் தெரிவித்து எல்லே குணவன்ச தேரர் மற்றும் கலாநிதிகாலோபொன்சேகா ஆகியோரினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுவுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாயின் நேற்றுத் தெரிவிக்க முடியும் என்று மனு வின் பிரதிவாதிகளான பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட குழுவினருக்கு நீதிமன்றம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

எவ்வாறாயினும் எதிர்ப்பு தெரிவிப்பதற்குக் கால அவகாசம் வழங்குமாறு பிரதிவாதிகள் தரப்பில் நேற்று நீதிமன்றில் முன்னிலையாகிய ஜனாதிபதி சட்டத்தரணி குறிப்பிட்டார். இந்நிலையில் மீண்டும் எதிர்ப்பு தெரிவிப்பதற்கு எதிர்வரும் 6ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்குவதாக மேல்முறையீட்டு நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு அறிவித்துள்ளது.

(த-வ)

## நிதி மோசடிகள் ஆணைக்குழு மகிந்தவுக்கு மீண்டும் அழைப்பு

கொழும்பு, ஒக். 4

பெரியளவிலான மோசடிகள் தொடர்பில்விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் முன்னிலையாகுமாறு முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குரு நாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச வுக்கு மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 15ஆம் திகதி சமுகமளித்து வாக்கு மூலம் அளிக்குமாறு குறித்த ஆணைக் குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் விளம்பரம் செய்யப்பட்ட அரச ஊடகங்களுக்கானநிலுவைக்கொடுப்பனவு தொடர்பில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இதற்கு முன்னரும் மகிந்த ராஜபக்ச குறித்த ஆணைக்குழுவிடம் இந்த விவகாரம் தொடர்பில் வாக்குமூலம் அளித்திருந்தார்.

அவரது வாக்கு மூலத்துக்கமைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள்பொதுச்செயலாளரும் அமைச்சருமானசுசில்பிரேம ஜயந்தவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

(த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளலாயின்

காலை உயர் பாதுகாப்பு வலயத்தில் விடுவிக்கப்பட்டு மக்கள் மீளக்குடியேற்றப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிட்ட இரா.சம்பந்தன், அங்குள்ள மக்களைச் சந்தித்து அவர்களின் தேவைகள் மற்றும் அந்தப் பிரதேசத்தில் உள்ள நெருக்கடிகள் பற்றிக் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது அந்தப் பிரதேச மக்கள் தமது வாழ்விடத்தின் வெறுமையான பகுதியே விடுவிக்கப்பட்டுள்ளது என்றும், தொழில் மேற்கொள்ளும் பகுதிகளான மயிலிட்டி மற்றும் தோட்டப் பகுதிகள் இதுவரை விடுவிக்கப்படாத காரணத்தால் வாழ்வாதாரத்தில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ளவதாகவும் தெரிவித்தனர். அத்துடன் மீளக்குடியேறிய பகுதிகளில் ஓலைக் குடிசைகளில் வாழ்வதால் வரவுள்ள மாரி காலத்தை எண்ணி அச்சத்துடன் வாழ்வதாகவும், இதனால் தமக்கு வாழ்விடம், கழிப்பறை போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த இரா.சம்பந்தன், உங்கள் கோரிக்கைகள் அனைத்தும் படிப்படியாக நிறைவேற்றப்படும். அதிலும் குறிப்பாக நீங்கள் கோரிய உங்கள் கிராமத்தின் தொழில் வாய்ப்புக்கு ஏற்ற ஏனைய நிலப்பரப்புகள் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் விடுவிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படும்–என்றார்.

அதன் பின்னர் சம்பந்தன், விடுவிக்கப்பட வேண்டிய வளலாயின் ஏனைய நிலப்பரப்புகள், [illegible]லி, காங்கேசன்துறை போன்ற இடங்களை நேரில் சென்ற பார்வையிட்டதுடன் மக்கள் வாழ்விடங்களில் படையினரால் அமைக்கப்பட்டுள்ள முகாம்கள், உல்லாச விடுதிகள் போன்றவற்றையும் பார்வையிட்டார். இதன்போது யாழ் [illegible]வட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் உடனிருந்தார். (த-10-101)

## வடக்கு

விருந்தினர் விடுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில், எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே இரா.சம்பந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், முதலமைச்சரால் கூறப்பட்ட சில கருத்துக்கள் எங்களுடைய மனதில் சில கேள்விகளை எழுப்பியுள்ளன. தேர்தல் காலத்தில் அந்த விட[illegible]ங்களுக்கு நாங்கள் பதில் சொல்வது அதிகம் பொருத்தமானதாக இருக்காது. அதற்குப் பின்னர் ஐ.நா. இந்த அமர்வு இடம்பெற்றது. அந்த நேரத்திலும் நாங்கள் வேறுபட்ட கருத்துக்களைக் கூறுவது அல்லது எங்களுக்குள் [illegible]ழப்பம் இருப்பதாக தென்படுவது அதிகம் பொருத்தமான ஒரு விடயமாக அமைந்திருக்காது.

அந்தக் காரணத்தின் நிமித்தம் நாங்கள் இந்த விடயங்களைப் பற்றிச் சற்று மௌனமாக இருந்தோம். ஆனால் இந்த விடயம் சம்பந்தமாக விரைவில் முதலமைச்சருடன் பேச இருக்கின்றேன். பேசவேண்டிய கடமைப்பாடு இருக்கின்றது. நாங்கள் பேசி அறிய வேண்டிய விடயங்களை அறிந்து அதற்குப் பிறகு நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக, மக்களுடைய நலன் கருதி செயற்படுவோம்.

இன்று எங்களது மக்கள் முக்கியமான காலகட்டத்தில் இருக்கின்றார்கள். நீண்ட காலமாக பலவிதமான துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் உள்ளாகிய மக்கள், பலவிதமான அழிவுகளை எதிர்நோக்கிய மக்கள் இன்னமும் தங்களுடைய வாழ்க்கையை ஆரம்பிக்க முடியாமல் இருக்கின்றனர்.

அவர்களைப் பொறுத்த வரையில் ஓர் அரசியல் தீர்வு ஏற்பட்டு அதன் மூலமாக ஒரு வித்தியாசமான எதிர்காலத்தைப் பெறுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு வந்திருக்கின்றது. இந்த வாய்ப்பை எவரும் குழப்பக் கூடாது. அதனை நாங்கள் நிறைவேற்றவேண்டும். அதை நாங்கள் அடைய வேண்டும். அதை இலக்காக வைத்து எங்களுடைய கருமங்களை கையாண்டு நாங்கள் நல்ல முடிவுகளை எடுக்க வேண்டும். நாங்கள் அதனைச் செய்வோம் – என்றார்.

இதன் போது யு.என்.டி.பி.யினால் வடக்கு அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதி, முதலமைச்சரின் செயற்பாடு காரணமாகத் திரும்பிச் சென்று விட்டது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த இரா.சம்பந்தன், இந்த விடயங்கள் தொடர்பில் முழுமையான தகவல் இல்லை. ஆனால் எங்களுடைய பேச்சில் (முதலமைச்சருடனான) இந்த சகல விடயங்களும் இடம்பெறும் – என்றார்.

(த-5-101)

## யாழ்.போக்குவரத்தில்

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை மேற்கொண்டார்.

ரயில் மூலம் யாழ்ப்பாணத்துக்கு வந்த அவர், போக்குவரத்துச் சேவைகள் சீரான நேர அடிப்படையில் உள்ளபோதும் சில குறைபாடுகளையும் மக்கள் எதிர்கொள்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், ரயில் சேவைகள் தொடர்பில் குறைபாடுகள் அவதானிக்கக் கூடியதாக உள்ளது இதற்கான தீர்வுகளை ஏற்படுத்துவதற்கும் மாற்றப்பட்ட ரயில் சேவையின் நேர அட்டவனை பற்றிய அறிவுறுத்தல்களை வழங்வதற்கு யாழ். வந்துள்ளேன்–என்றார்.

நேற்று யாழ்.வந்த போக்குவரத்துத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா யாழ். ரயில் நிலையத்தைப் பார்வையிட்டதுடன் அங்கே மூடப்பட்ட சிற்றுண்டிச் சாலை, பயணிகளின் ஓய்வறை என்பவற்றைப் பார்வையிட்டு இதனை ஒழுங்குபடுத்துமாறும் அறிவுறுத்தலை வழங்கினார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவானந்தா, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாலை முகாமையாளர் ஆகியோர் உடன் இருந்தனர்.

தொடர்ந்து கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு பயணம் செய்த போக்குவரத்து அமைச்சர் அங்கு பணியாளர்களின் குறை நிறைகளைக் கேட்டறிந்தார்.

அங்கு உரையாற்றிய அவர், யாழ்ப்பாணத்துக்கு வந்து உங்கள் அனைவரையும் சந்தித்ததில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தப் பயணத்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் ரயில், பஸ் போன்றவற்றின் செயற்பாடுகள் என்ன முறையில் நடைபெறுகின்றன என்பதை அறிந்துகொண்டேன்.

யாழ்ப்பாணத்தில் மீள ரயில் பயணம் ஆரம்பித்ததை எண்ணி மகிழ்வடைகின்றேன். மலர்ந்துள்ள நல்லாட்சியில் அனைவரும் ஒற்றுமையான பாதையில் பயணிக்கவேண்டும். போக்குவரத்து எவ்வளவு முக்கியமோ அந்தளவுக்கு நாட்டின் ஒற்றுமையும் முக்கியம். யாழ்ப்பாணத்தில் இருக்கும் அரசியல்வாதிகளும் கவனத்தில் கொள்ளவேண்டும். கடந்த 30 வருட கால உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மக்களுக்குச் சேவையாற்றுவதற்கு நான் மிகவும் ஆர்வமாகவுள்ளேன். போரின் ஒரு பகுதியை நாம் மறந்துவிடவேண்டும். வடபகுதி மக்கள் மீது எனக்கு அதிக அன்புண்டு. போக்குவரத்து அமைச்சராக நான் இருக்கும் காலத்தில் எந்தவொரு தேவையற்ற விடயங்களுக்கும் நான் இடம் தரமாட்டேன். அதற்கு உங்கள் ஒத்துழைப்புத் தேவை. தனியார் சேவையை விட நாம் அதிக சேவையை மக்களுக்கு வழங்கவேண்டும் –என்றார். (த-10-ரி-5-ரி-2)

## நீதியான

பொறுப்புக் கூறுவதுடன் நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தில் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படவேண்டும். இதனை இலங்கை அரசு முன்னெடுக்கவேண்டும்.

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட பிரிட்டன் எப்போதும் முன் நிற்கிறது. அத்துடன் ஐ.நா மனித உரிமைகள் சபை ஆணையாளரின் விசாரணைக்கு ஆதரவளித்த பிரிட்டன், புதிய தீர்மானத்துக்கு அனுசரணையும் வழங்கியது.

இலங்கை அரசு இந்தத் தீர்மானத்துக்குப் பொறுப்பு உறுதி மற்றும் அர்ப்பணிப்பாக செயற்பட்டமையை நாம் வரவேற்கின்றோம். அத்துடன் ஐ.நாவுடன் இணைந்து இலங்கை செயலாற்ற நாம் தொடர்ந்தும் ஊக்கமளிப்போம்.

ஒவ்வொரு சமூகத்துடன் பேசி, அங்கு ஒரு அமைதியான, வளமான மற்றும் ஒன்றுபட்ட நாடு உருவாக்கப்படவேண்டும்–என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ)

## சேயா கொலைக்கு

முன்னெடுத்தன.

நேற்றுச் சனிக்கிழமை முற்பகல் 10 மணி யளவில் ஆரம்பமான இந்த ஆர்ப் பாட் டம் சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றது. அந்த ஆர்ப்பாட்டத்தின்போது, 'நேற்று வித்தியா, இன்று சேயா , நாளை யார்?', 'படு கொலை செய்யப்பட்ட சிறுமி சேயாவுக்கு நீதி வழங்கு', பெண்கள் மீது தொடரும் பாலியல் வன் புணர்வுகளை நிறுத்து', 'போதைப்பொருள் பாவனையை நிறுத்து', 'பாலியல் குற்றங்களுக்கு தனி நீதி மன்றம் அமைத்து விசாரி' போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளைக் கைகளில் ஏந்தியவாறு சிறுவர்களும், பெண்களும் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் கோசமிட்டனர். அத்துடன், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர்கள் கூறினர்.

இது தொடர்பில் அமைப்பின் இணைச் செயலாளர் ச.தனுஜன் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், 'சிறுவர்கள் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளும் துஸ்பிரயோகங்களும் படுகொலைகளும் மிகவும் அதிகரித்துச் செல்லும் அபாயமான சூழல் நாட்டில் தோன்றியுள்ளது. இது ஒட்டுமொத்த மக்களின் வாழ்க்கையையும் பாதிக்கும். இந்தப் படுபாதகச் செயல்கள் சின்னஞ்சிறு குழந்தை கள் மீது கட்டவிழ்த்துவிடப்படுவது கண்டிக்கத்தக்கது.

அண்மையில் புங்குடுதீவு மாணவி மீதான வன்புணர்வுக்குப் பின்னான கொலையைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டங்கள் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டன. இதன் போது ஜனாதிபதி உட்பட பலரும் இவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து வெளியிட்டபோதும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் அரசால் முன்வைக்கப்படவில்லை.

உரிய சட்டங்கள் மூலம் தொடர்ச்சியாக இப்படியான சம்பவங்கள் நடைபெறாது தவிர்ப்பது அரசின் கடமையாகும். இந்த வருடத்தில் இதுவரை சுமார் 6 ஆயிரத்து 500 பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளமை பதிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றைக் கண்டித்தும் போதைப் பாவனையைக் கட்டுப்படுத்தக் கோரியும் பாரபட்சமின்றிய சட்ட நடவடிக்கையை வலியுறுத்தியும் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுகின்றது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(த-10-106)

## பொறுப்புக்

இலங்கை தொடர்பாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தைச் சேர்ந்த, பிலிப் டாம் வெளியிட்டுள்ள இந்தக் கூட்டறிக்கையில் இலங்கை தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் பொறுப்புக்கூறல் விவகாரங்களிலும், உறுதியான முடிவுகளைத் தரு வதற்கு விடாமுயற்சியுடன் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிப்பதிலும் தொடர்ந்தும் தனியான கவனம் செலுத்துவதற்கு ஊக்கமளிக்கிறோம்.

மனித உரிமைகள் சபையின் தலைமைத்துவம், துணிச்சல், உறுதி ஆகியவற்றுக்கு இது, நல்லதொரு முன்னுதாரணமாக அமையும்.-என்றுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகம், மனித உரிமைகளுக்கான சர்வதேச சேவை, ஆட்டிக்கல் 19, மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஆசிய அமைப்பு, மனித உரிமைகள் கற்கைக்கான கெய்ரோ நிறுவகம், சிவிகஸ், ஈஸ்ட் அன்ட் ஹோர்ன் ஆபிரிக்க மனித உரிமைகள் பாதுகாப்புத் திட்டம், மனித உரிமைகள் சட்ட நிலையம், மனித உரிமைகளுக்கான சர்வதேசக் கூட்டமைப்பு, சித்திரவதைகளுக்கு எதிரான உலக அமைப்பு ஆகிய அமைப்புகள் இணைந்து இந்தக் கூட்டறிக்கையை வெளியிட்டுள்ளன. (த-வ)

## சிகரெட்

மாற்றப்பட்டுள்ளது. இதனால் ஒரு சிகரெட்டின் விலை விலை 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுப் புதிய விலை 33 ரூபாவாகும்.

பனம் மற்றும் தென்னஞ்சாராயம் மீதான வரி லீற்றருக்கு 110 ரூபா அதிகரிக்கப்பட்டு ஆயிரத்து 485 ரூபாவிலிருந்து ஆயிரத்து 595 ரூபாவாக மாற்றப்படுகின்றது. இதன்படி சாராயம் ஒரு போத்தலின் விலை 60 ரூபாவால் அதிகரித்துள்ளது.

வெளிநாட்டு மதுபானத்துக்கான வரி லீற்றருக்கு 160 ரூபா அதிகரிக்கப்பட்டு ஆயிரத்து 700 ரூபாவிலிருந்து ஆயிரத்து 860 ரூபாவாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி வெளிநாட்டு மதுபானம் போத்தல் ஒன்றின் விலை 125 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மென்மையான பியர் அல்ககோல் 5வீதத்துக்கு கூடியவற்றுக்கு வரி லீற்றருக்கு 60 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 185 ரூபாவிலிருந்து 245 ரூபாவாக மாற்றப்பட்டுள்ளது. பியர் அல்ககோல் 5வீதத்துக்குக் குறைவானவற்றுக்கு வரி 40 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 150 ரூபாவிலிருந்து 190 ரூபாவாக மாற்றப்பட்டுள்ளது.

இதன்படி 5 வீதத்துக்கும் குறைவான அல்ககோல் பியர் 625 மில்லி. லீற்றர் போத்தலின் விலை 25 ருபாவாலும், மற்றும் 5வீதத்தை விட அதிகமான அல்ககோல் பியர் 625 மில்லி. லீற்றர் போத்தலின் விலை 50 ரூபாவாலும் அதிக ரிக்கப்பட்டுள்ளது என நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (த-வ)

## கிளிநொச்சிக்கு

இடம்பெறவுள்ள தாகக் கிளிநொச்சி மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு நாளை திங்கட்கிழமை காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வருகை தரவுள்ளார். இரணைமடுக் குளத்துக்கு அருகில், உணவு உற்பத்தி தேசிய வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் பங்கேற்பதற்காக வருகை தரும் ஜனாதிபதி மைத்திரிபால, அன்றைய தினமே இந்தக் காணி விடுவிப்பு நிகழ்விலும் கலந்துகொள்ளவுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பரவிப்பாஞ்சான் உள்ளிட்ட சில பகுதிகள் இன்னமும் மக்களிடம் கையளிக்கப்படாத நிலையிலேயே உள்ளன. இந்தக் காணிகளை விடுவிப்பதற்கான அனுமதி கடந்த மாதம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்குக் கிடைக்கப் பெற்றிருந்தது.

இந்த நிலையில், நாளைய தினம் கிளிநொச்சி மாவட்டத்துக்கு வருகை தரும் ஜனாதிபதி மைத்திரிபால, அங்கு காணிகளைக் கையளிக்கும் நிகழ்விலும் கலந்து கொள்ளவுள்ளார். இந்த நிகழ்வில், சம்பிரதாயபூர்வமாக, காணி விடுவிக்கப்பட்டமைக்கான சான்றிதழ் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-5-101)

## அமெ.தீர்மானத்துக்கு

ஊக்குவித்தல் என்ற தலைப்பில் அல்பேனியா, ஆஸ்திரேலியா, ஜேர் மனி, கிறீஸ், லத்வியா, மொண்டிநீக்ரோ, போலந்து, ருமேனியா, மசிடோனியா, பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இணைந்து தீர்மானத்தை முன்வைத்திருந்தன.

இந்தத் தீர்மானம், கடந்த முதலாம் திகதி, ஐ.நா. மனித உரிமைகள் சபையில், ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

எனினும், இந்தத் தீர்மானத்துக்கு எதிர்வரும் 16ஆம் திகதி வரை இணை அனுசரணை நாடுகளாக இணைந்து கொள்ள முடியும் என்று, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நேற்றுமுன்தினம் வரை மேலும் 24 நாடுகள், இணை அனுசரணையாளர்களாக இணைந்து கொண்டுள்ளன.

எஸ்தோனியா, பிரான்ஸ், அயர்லாந்து. ஜப்பான், தென்கொரியா, சியராலியோ, ஒஸ்ரியா, பொஸ்னியா ஹெர்செகோவினா, கனடா, சைப்பிரஸ், செக் குடியரசு, டென்மார்க், பின்லாந்து, ஜோர்ஜியா, ஹங்கேரி, இத்தாலி, லிச்ரென்ஸ்ரெய்ன், லக்ஸ்சம்பேர்க், மால்டா, நோர்வே, ஸ்லோவாக்கியா, ஸ்லோவேனியா, ஸ்பெய்ன், சுவீடன், சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளே புதிய இணை அனுசரணையாளர்களாக நேற்றுமுதினம் வரை இணைந்துள்ளன.

இதையடுத்து, குறித்த தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியுள்ள நாடுகளின் எண்ணிக்கை 38 ஆக அதிகரித்துள்ளது.

(த-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையைக் கண்டறியாவிட்டால் சர்வதேசம் எம்மைப் பகைத்துவிடும்

## மக்களும் ஆட்சியைக் கவிழ்த்துவிடுவர் எனப் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.4

மனித உரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேசத்தின் குற்றச்சாட்டை நாம் நிவர்த்தி செய்ய வேண்டும். அதற்கான வேலைத்திட்டங்களை நாம் சிறப்பான முறையில் முன்னெடுக்க வேண்டும். இல்லையேல் சர்வதேசத்தின் விரோதத்திற்கு நாம் உள்ளாக நேரிடும். அதுமாத்திரமின்றி உண்மையைக் கண்டறியாவிட்டால் மக்களும் எம்மை ஆட்சியிலிருந்து தூக்கி எறிந்து விடுவர்.

– இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சமாதானத்துக்கான தேசிய இயக்கம் ஏற்பாடுசெய்திருந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

உண்மையைக் கண்டறியவே உள்ளகப் பொறிமுறையை ஏற்படுத்தவுள்ளோம். தவறுகள் வெளிப்பட வேண்டும். வடக்கு மட்டுமன்றி, வெலிக்கடை, ரதுபஸ்வெலவிலும் படுகொலைகள் நடந்துள்ளன. அவற்றை யார் செய்தது எனக் கண்டறிய வேண்டும்.

ஜனவரி 8ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மக்களே ஆணையை வழங்கினர். அவரின் தலைமையில் நாம் ஜனநாயகத்தை நாட்டில் ஏற்படுத்தினோம். இதேபோல உண்மையைக் கண்டறியவும் தயாராகவுள்ளோம். தவறுகள் இடம்பெற்றிருந்தால் அவற்றைத் திருத்திக்கொள்வது எமது கடமை.

இதன்போது நாம் படையினரைக் காட்டிக் கொடுத் துச் செயற்படமாட்டோம். அதற்கான அவசியமும் எமக் குக் கிடையாது.

நாம் எவரையும் வேட்டையாடுபவர்களல்லர். எனினும், மகிந்தவின் காலத்தில் சரத் பொன்சேகா வேட்டையாடப்பட்டார். ஜனாதிபதி வேட்பாளராக அவர் நின்றதே அவர் செய்த குற்றம். அதற்குப் பெரும் தண்டனையை அவர் எதிர்கொள்ள நேர்ந்தது.

நாம் மஹிந்த போன்று எவரையும் பழிவாங்கப்போவதில்லை. உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவை ஏற்படுத்துவதே எமது நோக்கம்.

நாம் முன்னெடுத்த நல்லிணக்கம் மற்றும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளை சர்வதேசம் ஏற்றுக் கொண்டுள்ளது. எங்கள் மீது சர்வதேசம் நம்பிக்கை கொண்டுள்ளது.

எனினும், மனித உரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேசத்தின் குற்றச்சாட்டை ந[...] நிவர்த்தி செய்ய வேண்டும். அதற்கான வேலைத்திட்டங்களை நாம் சிறப்பான முறையில் முன்னெடுக்க வேண்டும்.

இல்லையேல் சர்வதேசத்தின் விரோதத்திற்கு நாம் உள்ளாக நேரிடும். அதுமாத்திரமின்றி உண்மையைக் கண்டறியாவிட்டால் மக்களும் எம்மை ஆட்சியிலிருந்து தூக்கி எறிந்து விடுவர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சர்வதேசத்துக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமையி[...] லேயே சர்வதேசத்[...] எதிர்ப்பை இலங்கை சந்திக்க நேரிட்டது. மகிந்த ராஜபக்ச தனக்காக மாட்டிக்கொண்ட தூக்குகயிற்றிலிருந்து நாமே அ[...]ரைக் காப்பாற்றியுள்ளோம் – என்றார்.

(த–சி)

---

**Personal Class** தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு English, சிங்களம், Spoken with Grammar கற்க விரும்புபவர் களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். ஏனைய பாட ஆசிரியர்கள் ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்பு : 076 702 3797

---

### காணி விற்பனைக்கு

சங்கானை சேச் வீதியில் 8 ¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (75 பனை மரங்களுடன்) சங்கானை மெயின் வீதியிலிருந்து 25 மீற்றர் தொலைவில்.

(65167) (10.17)

தொடர்புகளுக்கு : 072 9360661

---

### வறுத்த அரிசி மா

பிட்டு, இடியப்பம் தயாரிப்பதற்கான (பச்சைத் தண்ணீரில்) அரிசிமா தொழில் ரீதியில் செய்பவர் களுக்கு மலிவு விலையில் உண்டு. விநியோகம் இலவசம்.

(65154) (14.15.16)

தொடர்பு: 076 822 8529

---

### வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி வளாக வீதியில் 1½ பரப்பு காணியுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 965 8252 (65150, 11, 15, 17)

---

### காணி விற்பனைக்கு

வவுனியா வைரவ புளியங்குளத்தில் பண்டாரிகுளம், அம்மன் கோயில் வடக்கு வீதியில் 7 பரப்புக் காணியுடன் கூடிய 2 வீடுகளும் விற்பனைக்கு உள்ளன.

(60613) (10.15.17)

T.P: S. அருளானந்தசிவம்

077 6314 555, 077 2123 444

---

### பணிப்பெண் தேவை

சாவகச்சேரியில் வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

தொடர்பு : 0773095952, 0212270793

---

### வீடு விற்பனைக்கு

மல்லாகம் சந்தியிலிருந்து சிறிது யார் தொலைவில் கட்டுவன் வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய புதியவீடு 2¾ பரப்பு காணியுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 0779628950,0772719229

---

### வீடு வாடகைக்கு

இல. 60, கடைச் சுவாமி வீதி, நீராவியடியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு (இரு அறைகளுக்கு A/C) வாடகைக்கு உள்ளது. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

(65164) (10.17)

தொடர்புகளுக்கு : 076 802 1159

---

### தவறிவிட்டது

மல்லிகை காரைநகரைச் சேர்ந்த நடேசு குலேந்திரன் ஆகிய எனது N.I.C (761692470v) மற்றும் வெளிநாட்டு நாணயம், ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் பொன்னாலை சந்தி, சங்கானை, அளவெட்டி மல்லாகம் ஆகிய பகுதிகளில் 30.09.2015 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் T.P மூலம் தந்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு - 0773088892,0772095045

---

### விற்பனைக்கு

இத்தாலியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய கூலர் விற்பனைக்குண்டு. சுப்பர் மாக்கற்றுக்கு உகந்தது.

தொடர்பு - 0212217252,0779628950

---

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப, 1980ஆம் ஆண்டு விசாக நட்சத்திரம் 4இல் செவ்வாய் 18½ பாவமுடைய கல்வியியல் கல்லூரி ஆசிரியருக்கு மணமகள் தேவை. உத்தியோகம் விரும்பத்தக்கது.

தொடர்பு - 077 371 9463

---

### A/C வாகனம் தேவை

யாழ். நகரில் இயங்கும் வியாபார நிலையம் ஒன்றுக்கு பொருள்கள் ஏற்றி வியாபாரம் செய்வதற்கு HIACEவான் DUAL A/C உடன் மாதாந்த வாடகைக்குத் தேவை.

தொடர்பு : 075 956 5099 (64857) (12.15)

---

### வீடு வாடகைக்குத் தேவை

5 அறைகள், சுற்றுமதில் கொண்ட வீடு குடும்ப பாவனைக்கு யாழ் மாநகரசபை/ நல்லூர்/திருநெல்வேலி பகுதிகளில் உடன் வாடகைக்குத் தேவை

தொடர்பு - 071 082 6635 (65153, 11, 15, 17)

---

### நவீன வீடு வாடகைக்கு

கிளிநொச்சி புகையிரத நிலையத்திலிருந்து 50 மீற்றர் தொலைவில் இல.332, திருநகர் வீதியில், நவீன முறையில், புதிதாக வடிவமைக்கப்பட்ட 10 அறை 10 குளியலறை கொண்டு கீழ்வீடு, மேல்வீடு, வாடகைக்கு உண்டு. (அரசசார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.)

(C/19244) (10.15.17)

0765472474, 0777038250

---

### இலவச கணினி வகுப்புக்கள்

O/L, A/L மாணவர்களுக்கான கற்கை நெறிகள்

I) Diploma in ms office

II) Diploma in Internet Technology

- பெறுமதிமிக்க சான்றிதழ்
- காலம் : 3 மாதங்கள்

**IPS Thirunelveli**

0766852529

---

### காணி விற்பனைக்கு

கைதடி, நாவற்குழி, கோவிலாக் கண்டிப் பகுதியில் போக்குவரத்து வசதியுடன் கூடிய இடத்தில் கடற்கரையை அண்மித்ததாக 10 ஏக்கர் தென்னந்தோட்டக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 6090931

(65143) (10.15.17)

---

### தேவை

கொழும்பில் உள்ள கம்பனி ஒன்றுக்கு பாதுகாவலர்/காவலாளி தேவை. உணவு, தங்குமிடம் வழங்கப்படும். 06.10.2015 அன்று மு.ப. 11.00 மணி தொடக்கம் கீழ்வரும் முகவரியில் நேர்முகத்தேர்வு நடைபெறும்.

**Ceylon Carriers 104, Nawala Road, Narahenpittiya, Colombo-05**

(நாரன்பிட்டிய Keels Super இற்கு அருகில்)

தொடர்பு: 011 258 9960

திரு.பன்விலா

(C/19236) (10.15.17)

---

**SUPER BALL** சுப்பர் போல்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 404

சீட்டிழுப்பு திகதி 2015.10.03

வெற்றி இலக்கங்கள்

54 59 64 68 42 Q

சுப்பர் ஜக்பொட் ரூ. 56,005,300/=

வெல்லப்படவில்லை

---

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

வெற்றி வாரம்: 2681 திகதி: 2015-10-03

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 05 25 46 66 B

போனஸ் இல.: 12

திங்கட்கிழமை ஜக்பொட்: ரூ. 26,848,000/-

---

# Account's clerk தேவை

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றிற்கு Account's clerk தேவை. உங்கள் சுயவிபரக்கோவையை 10.10.2015 இற்கு முன்னர் jaffnavacancy@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு

**Or**

விளம்பர இல. 1515
C/O உதயன், 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
என்னும் விலாசத்திற்கு அனுப்பவும்.

---

### இருதய சிகிச்சை மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு சம்பந்தமான இலவச பயிற்சி முகாமும் நேர்காணலும்

வடக்கின் முன்னணி தனியார் வைத்தியசாலை Northern Central Hospital, Oxonion Heart Foundation உடன் இணைந்து நடாத்தும், இருதய சிகிச்சை சம்பந்தமான பயிற்சி நெறிகளும் அவற்றைத் தொடர்ந்து நேர்காணலும்

**பங்கேற்பாளர்கள்**

01. Nursing Officers with B.Sc or Diploma in Nursing
02 Radiographer (B.Sc) 03. Healthcare Assistants

*Nurses interested in Theatre, Anesthetic and ward based Nursing also welcome.

**இடம் :**

Bright Inn (Sivan Road, Thirunelvely, Jaffna)

**காலம் :**

10.10.2015 (முற்பகல் 11.00)

ஆர்வமுடையவர்கள் உங்களது சுயவிபரக் கோவையை nchjaffna@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 08.10.2015 முன்பாக அனுப்பவும். [...]

மேலதிக தொடர்புகளுக்கு: 0212219989, 0777732892, 0772628639

Nothern Central Hospital, 342 Palali Road, Jaffna.

---

### கடை வாடகைக்கு

140, பலாலி றோட், அம்மன் சந்தி அருகில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 33 01 565

(65145) (10.15.17)

---

### தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள புடைவைக் கடை ஒன்றிற்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை.

(65142) (10.15.17)

தொடர்பு: 021 224 0012, 077 7251 143

---

### 3 மாடி கடையுடன் காணி விற்பனைக்கு

கிளிநொச்சியில் A9 வீதியில் கந்தசுவாமி கோவிலுக்கும் கரடிபோக்கு சந்திக்கும் இடையில் 29'x100' (அடி) கொண்ட காணியில் மூன்று மாடி கடைக் கட்டடம் நிலக்கீழ் (Under Ground) வாகனத்தரிப்பிடம் கட்டிமுடிந்த நிலையில் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: (63896)(10.15.17)

0773403974/0778893227/0773535912

---

### விற்பனை பிரதிநிதி தேவை

சுகந்த ஊதுபத்திக்கு யாழ்ப்பாணத்தில் அனுபவமுள்ள விற்பனை பிரதிநிதி உடன் தேவை.

தொடர்பு - 077 327 3209

---

### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர் க. தர்மகுலசிங்கம் அவர்களின் அன்புச் சகோதரன்

**கந்தையா செல்வகுலசிங்கம்**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ செங்குந்தா இந்துக் கல்லூரி ஆசிரியர் நல்லுறவு மன்றம்

(65144) (12.15.16.17)

---

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **இளையதம்பி கணேஷன்**

(ஓய்வு பெற்ற பிரதம இலிகிதர் - யாழ் கச்சேரி)

உயிருக்கு உயிராக இருந்து
எமைக்காத்த ஐயாவே ஓராண்டு
ஆனாலும் ஆறவில்லை எங்கள்
துயரம் ஐயா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

மண்ணில் 24.10.1926 விண்ணில் 15.10.2014

குடும்பத்தினர்.
"அன்பகம்"
பழம் வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இமயமலைப் பிரதேச தர்மசாலா மைதானம் ரி–20 ஆட்டங்களுக்கு உகந்தது அல்ல

## தோல்வி குறித்து நியாயமான காரணத்தை முன்வைத்தார் டோனி



றியல் மட்றிட் கழகத்தின் சார்பாக அதிக கோல்களை (323 கோல்கள்) அடித்த ரவுலின் சாதனையை சமன் செய்திருந்தார் றொனால்டோ. றொனால்டோவின் இந்தச் சாதனையைக் கௌரவிக்கும் விதமாக றியல் மட்றிட் நிர்வாகமும் வீரர்களும் அவருக்கு விழா எடுத்துக் கொண்டாடியதுடன், குறித்த நிகழ்வில் கொடுக்கப்பட்ட நினைவுப் பரிசுடன் றொனால்டோ. (ம)

இமயமலைப் பிரதேசங்களில் ஒன்றான தர்மசாலாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தியா தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான முதலாவது ரி–20 ஆட்டத்தில் இந்திய அணி 200 ஓட்டங்களை வெற்றியிலக்காக நிர்ணயித்தும் தோல்வியடைந்தது. இந்தத் தோல்விக்கு நடுவர்களின் சில தவறான முடிவுகளும், இரவு நேரத்தில் அதிகமாக இருந்த பனிப்பொழிவுமே காரணம் என்று சாடியுள்ளார் இந்திய அணித் தலைவர் டோனி.

தோல்வி தொடர்பாக டோனி தெரிவித்ததாவது – நடுவரின்சிலமுடிவுகள் எங்களுக்குச் சாதகமாக அமையவில்லை. சில நேரங்களில் இதுவும் ஆட்டத்தின் போக்கை மாற்றிவிடும். டுமினியை விரைவில் வெளியேற்றி இருந்தால் மிகப்பெரும் வித்தியாசம் இருந்திருக்கும். 16ஆவது பந்துப் பரிமாற்றத்தில் டுமினியின் துடுப்பாட்டத்துக்கு எம்மால் விடுக்கப்பட்ட எல்.பி. டபிள்யு. கோரிக்கை நிச்சயம் சரியானது. மைதானத்தின் பெரிய திரையில் அது துல்லியமாகத் தெரிந்தது. அந்தக் கோரிக்கையின் முடிவு இந்தியாவுக்கு சாதகமாக இருந்திருந்தால் ஆட்டமும் இந்தியாவுக்கு சாதகமாக அமைந்திருக்க வாய்ப்புக்கள் அதிகம்.

இரண்டாவது, இரவு நேரத்தில் விளையாடுவதற்கு தர்மசாலா மைதானம் முற்றிலும் ஏற்புடையது அல்ல. மைதானத்தைசுற்றிப் பனியின் உறைவிடமான இமயமலை உள்ளது. இரவு நேரத்தில் குளிரும், பனிப்பொழிவும் துடுப்பாட்டத்தை விட பந்துவீச்சையும் களத்தடுப்பையும் அதிகம் பாதிக்கும். எம்மால் வீசப்பட்ட பந்துகளில் அதிகமான பந்துகள் ஆடுகளங்களில் இறங்கி வரவில்லை. அவை எதிர் வீரரை நோக்கி முழுமையாக வந்தன. இதனால் தென்னாபிரிக்காவின் ஓட்டங்கள் அதிகமாக உயர்ந்தன. இதுவரை இந்த மைதானத்தில் ரி–20 ஆட்டங்கள் நடந்ததே இல்லை. இதுவே முதலாவது ரி–20 ஆட்டம். இந்த அழகிய மைதானம் ரி–20க்கு ஏற்புடையதா என்பதைப் பரிசீலிக்கவே இந்த ஆட்டம் நடைபெற்றது. தர்மசாலா ரி–20 ஆட்டங்களுக்கும் பகலிரவு ஒருநாள் ஆட்டங்களுக்கும் உகந்தது அல்ல. முழுவதும் சூரிய வெளிச்சத்தில் விளையாடக்கூடிய டெஸ்ட் ஆட்டங்களுக்கும், ஒருநாள் பகல் நேர ஆட்டங்களுக்குமே உகந்தது என்றார். அளவுக்கு அதிகமான பனிப்பொழிவால் மைதானம் அடிக்கொரு தடவை பெரிய இயந்திரங்களின் உதவியுடன் உலர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இன்றைய ஆட்டங்கள்

***மைக்கல் வி.கழகத் தொடர்***

மாங்குளம், ஒக். 4

உமராட்சி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டத் தொடர் ஒன்று யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டு வருகிறது.

இந்தத்தொடரில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வதிரி பொம்மேர்ஸ் விளையாட்டுக் கழத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம–422)

**மன்னார் உதைபந்தாட்டத் தொடர்**

மன்னார் உதைபந்தாட்ட லீக்கினால் அழைக்கப்பட்ட அணிகளுக்குஇடையில் நடத்தப்பட்டுவரும் லீக் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சமீபகாலமாக இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு மன்னார் நகரசபை மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் சாவற்கட்டு கில்லறி அணியை எதிர்த்து மன்னார் சின்னக்கடை கிறின் பில்ட் அணி மோதவுள்ளது.

வடமாகாண உதைபந்தாட்டத் தொடர்

வடமாகாண உதைபந்தாட்ட அபிவிருத்திப் பேரவை நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டமொன்று இன்று இலுப்பைக்கடவை அந்தோனியார்புரம் மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் அந்தோனியார்புரம் அணியை எதிர்த்து இளவாலை யங்கென்றிஸ் அணி மோதவுள்ளது.

பாடசாலைகளுக்கு இடையிலான ரி–20

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் துடுப்பாட்டச்சங்கம் நடத்திவரும் 19 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கிடையிலான ரி–20 தொடரின் ஆட்டங்கள் சிலஇன்றுநடைபெறவுள்ளன. யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். ஜோன்ஸ்கல்லூரிஅணியைஎதிர்த்து வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதவுள்ளது.

**வானவில் வி.கழகத்தொடர்**

அராலி வானவில் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறிந்த க்ழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் துணைவி நியூஸ்ரார் அணியை எதிர்த்து அராலி ஜேம்ஸ் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தெல்லிப்பழை 5 ஸ்ரார் அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிறைற் ஸ்ரார் அணி மோதவுள்ளது. (ம–23)

# கோக்லி 1000

இந்தியா தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான முதலாவது ரி–20 ஆட்டத்தில் தென்னாபிரிக்கா 7 இலக்குகள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தியது. இந்த ஆட்டத்தில் 43 ஓட்டங்களை விளாசினார் கோக்லி. இதன்மூலம் அவர் சர்வதேச ரி–20 ஆட்டங்களில் ஆயிரமாவது ஓட்டங்களைக் கடந்த முதல் இந்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

டெஸ்ட் ஆட்டங்களைப் பொறுத்த மட்டில் 45.67 என்ற சராசரியையும், ஒருநாள் ஆட்டங்களில் 50.66 என்ற சராசரியையும், ரி–20 ஆட்டங்களில் 46.55 என்ற சராசரியையும் வைத்துள்ளார் கோக்லி. இதன் மூலம் மூன்று விதமான ஆட்டங்களிலும் 45 ஓட்டங்களுக்கு அதிகமான சராசரியை வைத்துள்ள ஒரே வீரர் என்ற பெருமையையும் கோக்லி பெறுகிறார். (ம)

## கராத்தே தொடர்

யாழ்ப்பாணம், ஒக். 4

பருத்தித்துறை தற்காப்புக்கலையகம் அமரர் சிகான் பொனி றொபேர்டின் ஞாபகார்த்தமாக கராத்தே தொடர் ஒன்றை இன்று நடத்தவுள்ளது.

தும்பளையில் அமைந்துள்ள கராத்தே தற்காப்புக்கலை மண்டபத்தில் காலை 8 மணிமுதல் குறித்த தொடர் நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம)

# தப்பிப் பிழைத்தது சிம்பாப்வே தவறியது மலிக்கின் சதம்

சிம்பாப்வே பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் 5 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரை 1–1 என்று சமன் செய்துள்ளது சிம்பாப்வே.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்ய ஏழே ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து இலக்குச்சரிவை தொடக்கி வைத்தார் மசகட்சா. சிப்கபாவுடன் இணைந்தார் சைறி. இலக்குச்சரிவுக்கு இடம்கொடுக்காமல் நிதானிக்கவே செய்தனர். இலக்குச் சரிவு இல்லாமல் செய்யப்பட்டதற்கு [illegible] ஒருவகையில் பின்னடைவுதான். அணியின் ஓட்டம் 118ஆக இருந்த பொழுது 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சைறி. அரைச்சதம் கடந்தார் சிப்கபா. வில்லியம்ஸ் நிலைக்கவில்லை. சிக்கும்புரா ஆரம்பம் முதல் சிறிது அடித்து ஆடிக்கொண்டிருந்தார். சதத்தை 10 ஓட்டங்களால் தவறவிட்டார் சிப்கபா. ரசா, சிக்கும்புராவுடன் இணைந்து வேடிக்கை காட்ட வீணடிக்கப்பட்ட பந்துகளுக்கான சராசரி ஓட்டங்கள் சரிசெய்யப்பட்டன. முடிவில் சிம்பாப்வே 276–6.

எட்டக்கூடிய இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கினார்கள் அசார் அலியும் அசிப்பும். இருவருமே நிலைக்கவில்லை. வந்த வேகத்தில் பவிலியன் திரும்பினார் சபிக். தற்பொழுது பாகிஸ்தான் 17–3. களத்தில் கபீஸ் மற்றும் மலிக். ரண்அவுட் ஆனார் கபீஸ். அகமட், ரிஸ்வான் இருவரும் பத்து ஓட்டங்களை தாண்டவில்லை. ஒரு முனையில் நம்பிக்கை கொடுத்துக்கொண்டிருந்த மலிக்குடன் இணைந்தார் ஜமின். இணைப்பாட்டம் பக்காவாக நிலைபெற்றது. படிப்படியாக பாகிஸ்தான் சரிவில் இருந்து மீள ஆரம்பித்தது. அரைச்சதம் கடந்தார் மலிக். அவ்வப்பொழுது சிக்சர்களுடன் அரைச்சதத்தை நோக்கி ஜமின். கிடைத்த வாய்ப்புக்களையும் வீணடித்தனர் சிம்பாப்வே வீரர்கள். அரைச்சதம் கடந்து ஆட்டமிழந்தார் ஜமின். இறுதி இரு பந்துப்பரிமாற்றங்களில் 21 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி யென்ற நிலையில் இருந்த பொழுது மலிக் 96 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். போதிய வெளிச்சமின்மையால் விதிமுறைகளுக்கு ஏற்ப சிம்பாப்வே அணிக்கு வெற்றி யென்று வழங்கப்பட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

அல்சேசன் நாய்க்குட்டிகள், ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. கோண்டாவிலில். தொடர்புகளுக்கு:
T.P: 075 6575875 (65162) (10.17)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 493 1111

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் கணினி கல்வி நிலையம் ஒன்றில் பின்வரும் தகைமைகளை உடைய இருவருக்கான வெற்றிடம் உள்ளது.

1) Computer Hardware & Networking
2) Ms office Package
3) Photoshop / Illustrator Designing.

* மேற்படி துறைகளில் கற்பிக்கக்கூடிய திறமையுள்ளவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
* ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
* Salary : Negotiable

முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட சுயவிவரக்கோவையை
jobsjaffna2016@gmail.com
என்ற இணைய முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

## இலவச கணினிப்பயிற்சி

ஐ.நா.அபிருத்தி திட்ட அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டு 2000ம் ஆண்டு முதல் ஆயிரக்கணக்கான மாணவர்கள். அரச ஊழியர்களுக்கு பயிற்சியினை வழங்கிய MCS நிறுவனம் க.பொ.த உயர்தரப்பரீட்சைக்கு தோற்றியமாணவர்களிற்கு அடிப்படையிலிருந்து பட்டக்கற்கைநெறிக்கான தயார்படுத்தல் பயிற்சிகள் உள்ளடங்கலாக கணினி ஆங்கிலக் கற்கை நெறிகள். மேலும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மென்பொருள் நிறுவனங்களிலும் அதிகசம்பளத்துடன் வேலைவாய்பினை உடைய கற்கை நெறிகளையும் வழங்க உள்ளது முதற்கட்டபயிற்சியை அடுத்து Entrance Exam இல் தேர்வு செய்யப்படுவோர் மாத்திரமே இரண்டாம் கட்ட பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவர். விண்ணப்பிக்க விரும்புவோர்

Type Free <Name><District><DOB>& Send To 0772395895

**MCS IT CAMPUS**
34, Sir Pon Ramanthan road, near University of Jaffna
BIT-Universtity of Colombo, CIMA-UK, Engineering- USA

EXPONET Overseas Consultants | LONDON METROPOLITAN COLLEGE

மாணவர்களின் வசதி கருதி புதிய இடத்தில் நவீன வசதிகளுடன் ஆரம்பம்
NO.136, PALALI ROAD, PARAMESWARA JUNCTION, JAFFNA

**IELTS**
Duration : 60 hours (Week I Weekends)
* Student Visa / * Skill Migration

**IELTS**
**LIFE SKILLS A1, B1**
**(Speaking & Listening)**
Duration : 48 hours (Week I Weekends)
UKBAஇன் புதிய நடைமுறைக்கேற்ப Settlement விசாகக்களுக்கான IELTS A1 பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

**APPLIED SPOKEN ENGLISH**
(With Grammar)
Duration : 48 hours (Week I Weekends)
ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்துக்கொள்ள விரும்புவோர்க்கான கற்கை நெறி

**DIPLOMA IN ENGLISH**

**COMPUTER COURSES**
* Certificate in MS Office 2013
* Certificate in JAVA, VB, Net,C#
* Internet | Email
* Diploma in Computer Studies
* Diploma in Computer Programing



அனைத்து வகுப்புக்களுக்கும் புதிய பிரிவுகள் 06-10-2015 அன்று ஆரம்பம்

- இன்றும், நாளையும் பதிவு செய்யும் மாணவர்களுக்கு அனைத்து கற்கை நெறிகளுக்கும் 50% கட்டணக் கழிவு
- பல்கலைக்கழக மாணவர்களுக்கு விசேட கட்டணக் கழிவு (25% - 50%)

**EXPONET (PVT) LTD & LONDON METROPOLITAN COLLEGE,**
No.136, Palali Road, Parameswara Junction, Jaffna
Tel : 011 7555511 Mobile: 0774765990 | 071 4541099

**German Institute**

German, Swiss நாடுகளுக்கான Deutsch மொழி வகுப்புக்கள் Germany யிலிருந்து வருகை தந்த ஆசிரியை P. சுஜேந்தினி அவர்களால் நடைபெறுகின்றது.
T.P: 077 160 4823
(65163) (10.17) Jaffna.

## VACANCY

Agoysoft (Pvt) Ltd is founded in 2012 developing software, Online Concept and Mobile Applications for local and foreign clients

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கிளையில் கீழ்வரும் பணிநிலைகள் வெற்றிடமாக உள்ளன.

- Receptionist
- Software Developers ( Bsc Degree or Equivalent )
- Coordinator
- Driver (Three Years Experience)

புகைப்படம் மற்றும் தெளிவான தகவல்களுடன் உங்கள் சுய விபரக்கோவையினை ஒக்டோபர் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

careers@agoysoft.com
Tel : 0214927348
AgoySoft
20, K.K.S Road, Kokuvil, Jaffna
Tel :011 328 8569, 021 205 2393

**Dip in Mobile Repairing**
கைத்தொலைபேசி திருத்துதல் பயிற்சிநெறி
Hotline : 0771435595
DVD Tutorials FREE
HARDWARE and SOFTWARE
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.



## மனம் வருந்துகின்றோம்

கடந்தசில வாரங்களுக்கு முன்பு நல்லூர் சங்கிலியன் மன்னனது சிலையின் மீது Coca - Cola விளம்பரப்பதாகை ஒன்று சில விசமிகளால் கட்டப்பட்டிருந்தது. இதனை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் மக்களுக்காக தியாகம் செய்தவர்களை என்றென்றும் உயர்நிலையிலேயே மதிக்கின்றோம். இவ்வாறான செயலை இட்டு நாம் மிகவும்மனம் வருந்துகின்றோம்.

Coca - Cola, Distributor
Sivabrothers,
205,Hospital Road,
Jaffna
(65149) (14.15.16)

## மரண அறிவித்தல்

### கந்தையா செல்வகுலசிங்கம்

(சுகந்தினி லொறி உரிமையாளர் - வல்வெட்டி)



வேம்பொடு கேணி, பளையைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்வகுலசிங்கம் 2015.10.02 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா -செல்லம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சிவஞானம் - இராசமணி தம்பதிகளின் மருமகனும், சிவமணியின் அன்புக் கணவரும், செல்வரூபன் (கனடா), வசந்தரூபன்(கனடா), சுகந்தினி, ஆனந்தரூபன் (வாகனஉரிமையாளர்), சிவரூபன் (வாகன உரிமையாளர்), பாமினி(செய்முறைக் காட்டுநர் தாவரவியற் துறை யாழ் பல்கலைக்கழகம்), சாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் நித்தியபானு(கனடா),திலீபன்(ஆசிரியர் - முல்/பாரதி வித்தியாலயம்), வத்சலா ஆகியோரின் அன்பு மாமனாரும், தனபாலசிங்கம் (மணியம்கராஜ் உரிமையாளர்), காலஞ்சென்ற தவமலர் மற்றும் தருமகுலசிங்கம்(அதிபர் - யா/ செங்குந்த இந்துக்கல்லூரி), தவமணி செல்வராணி (நெதர்லாந்து), குமாரகுலசிங்கம் (தேங்காய் வியாபாரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவஞானமணி, சிவநாதன்(நெதர்லாந்து), சிவயோகநாதன்(நெதர்லாந்து), ரகுநாதன்(கனடா) ஆகியோரின் மைத்துனரும் கீர்த்திகன், தரணிகா, நேகா, அபினுகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2015.10.04) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் வல்வெட்டித்துறை ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்துப்பாடசாலை வீதி,
வல்வெட்டி.
077 505 8851

(65127)(14.15.16)

தகவல்:
குடும்பத்தினர்.

# மன்னார் உள்ளக விளையாட்டு அரங்கு முதல்வரால் நேற்று திறந்து வைக்கப்பட்டது

மன்னார், ஒக். 4

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட உள்ளக விளையாட்டு அரங்கினை வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று சனிக்கிழமை உத்தியோக பூர்வமாக திறந்துவைத்தார்.

குறித்த நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண கல்வி, விளையாட்டு, பண்பாட்டு அலுவல்கள், இளைஞர் விவகாரம் மற்றும் கலாசார அமைச்சர் ரி.குருகுலராஜா, கடற்றொழில், போக்குவரத்து மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடமாகாண உறுப்பினர்களான அந்தோனி பிறிமுஸ் சிராய்வா, ஞானசீலன் குணசீலன், மன்னார் மாவட்ட அரச அதிபர் எம். வை.எஸ்.தேசபிரிய, மன்னார் வலயகல்விப் பணிப்பாளர் எம்.என்.சியான், கல்வி, கலாச்சார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

உள்ளரங்க மைதானம் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள், சறுக்கு விளையாட்டு,

யாழ்ப்பாணம் மற்றும் மன்னாருக்கு இடையிலான நட்புறீதியிலான கரப்பந்தாட்டப் போட்டி என்பனவும் இடம்பெற்றன. (ம)

# ஜோகோவிக்கை எதிர்கொள்வது கடினம்

ஜோகோவிக்கை எதிர் கொண்டு விளையாடுவதோ அல்லது வெற்றி பெறுவதோ மிகவும் கடினம் என்று தெரிவித்துள்ளார் முன்னணி வீரரான நடால்.

நலத்திட்டங்களுக்காக நடத்தப்படவுள்ள காட்சி ரென்னிஸ் ஆட்டமொன்றில் முன்னணி வீரர்களான ஜோகோவிக், ரபெல் நடால் கலந்து



கொள்கிறார்கள். குறித்த ஆட் டத்தில் ஜோகோவிக் குடன் விளையாடுவது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே நடால் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நடால் மேலும் தெரிவித்ததாவது "ஜோகோவிக் சிறந்த வீரர். அவரைச் சமாளிப்பது மிகவும் கடினம். அவர் அமெரிக்ககிண்ணத்தை வென்ற பிறகு, அற்புதமாக விளையாடினீர்கள் என்று குறுந்தகவல் அனுப்பினேன். தற்போது அதை அனைவரதும் முன்னிலையில் சொல்கிறேன்" என்றார்.

நடாலை எதிர் கொள்வது கடினம் என்று ஜோகோவிக்கும் கருத்துத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 4.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பிதழ் 04.10.2015


04 OCT 2015



# சந்தேகத்தை விதைத்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேகத்தை விட்

■ *சந்திப்பு* : பிரேம்
*உதவி, படங்கள் :* டிலீப், வயோர்தன்

அரசியல் தீர்வு, தெற்கு அரசியல்வாதிகளின் போக்கு என்பன தொடர்பான சந்தேகத்தை விட்டுத் தள்ளுங்கள் என்று தமிழ் மக்களிடம் வலியுறுத்தியிருக்கிறார் இலங்கையின் எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.

"சந்தேகத்தை விடுங்கள். கருமங்கள் நடைபெறுகின்றனவா இல்லையா என்று பாருங்கள். இன்று வரையில் கருமங்கள் நடைபெற்றிருக்கவில்லையா? 2012ஆம் ஆண்டு நீங்கள் எல்லோரும் சொன்னீர்கள் பிழையாகப் போகின்றது என்று. 2013ஆம் ஆண்டு, 2014ஆம் ஆண்டும் அப்படித்தான் சொன்னீர்கள். இப்போது அப்பிடியொன்றும் பிழையாகப் போகவில்லையே. எல்லாம் சரியாகத் தானே போய்க்கொண்டிருக்கின்றது?" என்றார் அவர்.

எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்றுக் கொண்ட பின்னர் முதற்றடவையாக யாழ்ப்பாணம் வந்திருந்த சம்பந்தன், நேற்று உதயன் பத்திரிகை அலுவலகத்திற்கும் வருகை தந்தார். அரசியல் தீர்வு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைத் தீர்மானம் என்பன தொடர்பில் அவருடன் உரையாடியதிலிருந்து....

*"தமிழ் மக்களிடம் ஒரு கேள்வி இருக்கிறது, எதிர்கட்சித் தலைவராக நீங்கள் தெரிவு செய்யப்பட்டதால் தங்களுக்கு என்ன பயன் அல்லது லாபம்? என்பதுதான் அது. உங்கள் பதில் என்ன?"*

"அந்த நோக்கத்தில் நாங்கள் இந்தப் பதவியை ஏற்கவில்லை. தேர்தலின் போது மக்கள் வழங்கிய வாக்கின் அடிப்படையில் எமது கட்சிக்கு சில – பல காரணங்களின் நிமித்தம் உரித்தானது அந்தப் பதவி.

கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் நான். அதனால் எதிர்க்கட்சித் தலைவராகியிருக்கிறேன். அந்தப் பதவி எனக்குக் கிடைத்த பதவி அல்ல. மக்களுக்கும் – கட்சிக்கும் கிடைத்த பதவி. மக்களுடைய ஜனநாயக முடிவின் அடிப்படையில் கிடைத்தது.

பதவியை நாங்கள் நாடிப் போகவில்லை. சம்பிரதாய முறையின் படி பக்குவமாக நடப்பதாக இருந்தால் என்ன நடைபெற வேண்டுமோ அதற்கமைய அது தரப்பட்டது. எங்களுக்கு வர வேண்டிய பதவி வந்திருக்கின்றது.

அதை நான் என்ன விதமாகப் பயன்படுத்தப் போகின்றேன், குறிப்பாகத் தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமாக எப்படி இந்தப் பதவியைக் கையாளப் போகின்றேன் என்பதைப் பற்றி பகிரங்கமாக பேசுவது அவ்வளவு பொருத்தமாக இருக்காது.

எங்களுக்கு முன்னரும் சர்வதேச சமூகத்துடன் தொடர்பு இருந்தது. எவரையும் சந்திக்கும் நிலைமை இருந்தது. ஆனால் எதிர்கட்சித் தலைவர் பதவியில் இருப்பதன் காரணத்தின் நிமித்தம், இந்த நிலைமை இன்னும் கொஞ்சம் அதிகரிக்கும் – பலமாக இருக்கும்."

*"2016ஆம் ஆண்டு இறுதிக்குள் அரசியல் தீர்வை அடைவதற்கான வாய்ப்பு இருப்பதாக தேர்தல் காலத்தில் சொல்லி வந்தீர்கள். தேர்தலுக்குப் பின்னரான தற்போதைய சூழலில் அதற்கான வாய்ப்புக்கள் – கள நிலமைகள் எப்படி இருக்கின்றன?"*

"அரசியல் தீர்வு ஒன்றைக் காண வேண்டிய சூழல் முற்றிவிட்டது. ஆகையால், அதில் இனி தாமதம் அதிகம் இருக்கக்கூடாது. புதிய அரசு தாங்கள் ஓர் அரசமைப்பை உருவாக்கப் போகின்றோம் என்று கூறுகின்றார்கள். அதில் உள்ளடகப்பட வேண்டிய முக்கியமான விடயம் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு. ஆகையால், வரப்போகின்ற அரசமைப்பில் தீர்வு உள்ளடக்கப்படுமாக இருந்தால், அது 2016ஆம் ஆண்டில் வரவேண்டும்.

இந்திய – இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலம் தொடக்கம் அரசியல் தீர்வு தொடர்பில் பல விடயங்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்திய – இலங்கை ஒப்பந்தம், அதன் விளைவாக ஏற்பட்ட 13 ஆவது திருத்தம், அதேபோல் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ காலத்தில் நடைபெற்ற பேச்சுக்கள், அவர் நியமித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பரிந்துரை, மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா காலத்தில் அவரினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டங்கள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் 2002– 2004ஆம் ஆண்டு காலப் பகுதியில் முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனைகள், ஒஸ்லோ பிரகடனம், ரோக்கியோ பிரகடனம், முன்னாள் ஜனாதிபதி மகிந்த காலத் தில் நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைப்பதற்கு முன்பதாக அவர் ஆற்றிய உரை, அவர் நியமித்த நிபுணர் குழுவின் பரிந்துரைகள், இவ்வாறு பல ஆவணங்கள் இருக்கின்றன. எனவே தீர்வு குறித்து இனியும் பேசுவதற்கு அதிகம் ஒன்றும் இல்லை. எல்லாம் பேசப்பட்ட விடயங்கள். எல்லா நிலைப்பாடுகளும் பதிவில் இருக்கின்றன.

அரசியல் தீர்வை காண வேண்டும் என்ற நோக்கத்துடன் அரசியல் கட்சிகள் செயற்பட்டால் அதற்கு நீண்ட காலத்தை எடுக்க வேண்டியதில்லை என்பது எனது கருத்து."



*"ஆறு மாத காலத்தினுள் புதிய அரசமைப்பைக் கொண்டு வந்துவிடலாம் என்றார் பிரதமர் ரணில். பொதுத் தேர்தல் முடிந்து ஒரு மாதம் ஏற்கனவே முடிந்து விட்டது. மீதியுள்ள ஐந்து மாத காலத்தினுள் புதிய அரசமைப்புக்கான சாத்தியம் உள்ளது என்று நினைக்கின்றீர்களா?"*

"பிரதமரின் கருத்துப் பற்றி நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. என்னுடைய கருத்து, இந்த விடயத்தில் விசுவாசம் வேண்டும் என்பதுதான். இந்த விடயத்தில் அரசியல் சக்திகள் விசுவாசமாகச் செயற்படுவார்களாக இருந்தால் 2016 ஆம் ஆண்டுக்குள் இந்தப் பிரச்சினைக்கு முடிவு கண்டுவிட முடியும்.

இன்று ஐக்கிய தேசியக் கட்சியுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பகுதியினர் இணைந்திருக்கின்றனர். அது இன்னமும் பலம் பெற இடமுண்டு. சிறுபான்மைக் கட்சிகளின் ஒத்துழைப்பும் இந்த அணிக்கு இருக்குமாக இருந்தால் ஓர் அரசியல் தீர்வு ஏற்படக்கூடிய வாய்ப்பு பலமடையும். திடகாத்திரத்துடன் நாங்கள் செயற்பட்டால், அது நடைபெறக் கூடிய ஒரு விடயம்தான்.

*"நீங்கள் திரும்பவும் திரும்பவும் நடைபெறக் கூடிய விடயம், அதற்கான வாய்ப்பு இருக்கின்றது, வாய்ப்புப் பலமடைந்திருக்கிறது என்றுதான் சொல்கிறீர்கள். அதில் ஒரு நிச்சயமற்ற தன்மை தெரிகிறதே?"*

"நிச்சயமாக எதையும் சொல்ல முடியாது; நிச்சயமாக நீங்கள் எதையும் எதிர்பார்க்க முடியாது. இந்தப் பிரச்சினை கடந்த 70 வருடங்களாகத் தொடர்ந்த ஒன்று. நாம் முயற்சிக்க வேண்டும். நிச்சயமாக நடைபெற்றுவிடும் என்று நான் ஒருபோதும் சொல்லமாட்டேன். முயற்சித்தால் நடைபெறக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அதற்கு மேலதிகமாக இப்போது எதையும் சொல்ல வேண்டிய அவசியமில்லை."

*"உண்மையில் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான அரசியல் விருப்பு சிங்கள அரசியல் கட்சிகள் மத்தியில் இப்போது இருக்கின்றது என்று நினைக்கின்றீர்களா?"*

"இருக்க வேண்டும். அவர்களும் பல அனுபவங்களை அடைந்திருக்கின்றார்கள். அவர்களுக்கும் இந்த விடயத்தைப் பற்றித் தெளிவாகச் சிந்திக்க வேண்டிய ஒரு தேவை இருக்கின்றது. சர்வதேச அழுத்தமும் அதிகமாக இருக்கின்றது. அது அவர்கள் மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். எங்கள் மீதும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும்தான். தாமும் இதில் பங்களிப்பைச் செய்து நிரந்தரமான நல்லிணக்கம் – புரிந்துணர்வு ஏற்பட வேண்டும் என்று சர்வதேச சமூகம் முயற்சிக்கின்றது. அதுவும் ஒரு பங்களிப்பைச் செய்யும்.

அதற்காக நிச்சயமாக எதையும் சொல்ல முடியாது. நான் சொல்லவும் மாட்டேன். ஆனால் இது ஒரு சந்தர்ப்பமாக இருக்குமாக இருந்தால் அந்த சந்தர்ப்பத்துக்கு நாங்கள் எல்லோரும் முயற்சிக்க வேண்டும்."

*"13ஆவது திருத்தச் சட்டம், ஒற்றையாட்சி இவற்றுக்குள்ளே அரசியல் தீர்வு என்று தெற்கு அரசியல்வாதிகள் திரும்பத் திரும்பக் கூறிவருகிறார்கள். இதுதான் தெற்கின் நிலைப்பாடு என்றால், தமிழ் மக்கள் இதனை ஏற்பார்களா? இவற்றையெல்லாம்தான் அவர்கள் ஏற்கனவே நிராகரித்துவிட்டார்களே?"*

"தெற்கில் உள்ள அரசியல் தலைவர்கள் எல்லோரும் அவ்வாறு சொல்வதாக நான் சொல்ல மாட்டேன். சிலர் அவ்விதமான கருத்துக்களைக் கூறியிருக்கலாம். கூறியிருக்கின்றார்கள்; அது உண்மை. நாங்கள் பேசுகின்ற பொழுது எங்களுடைய கருத்துக்கள் முன்வைக்கப்படவேண்டும்.

அவர்கள், விசேடமாகத் தேர்தல் காலத்தில் பேசிய பேச்சுக்களின் அடிப்படையில்தான் விடயங்கள் நடைபெறும் என்ற முடிவுக்கு நாங்கள் வரவேண்டியதில்லை. என்னைப் பொறுத்த வரையில் நாங்கள் எங்களது நியாயமான நிலைப்பாட்டை முன்வைத்து அதை நியாயப்படுத்தக்கூடிய காரணங்களை முன்வைத்து, விசேடமாக இன்று சர்வதேச சமூகத்தின் பங்களிப்பும் இருக்கின்ற சூழலில், ஏனைய நாடுகளில் பல்வேறு இனங்கள் – மதங்களைச் சார்ந்த – கலாசாரங்களைப் பின்பற்றுகின்ற மக்கள் வாழுகின்ற நாடுகளில் என்னவிதமான அரசியல் ஒழுங்கின் மூலமாக நல்லாட்சியை ஏற்படுத்தக்கூடிய வழிவகைகள் உருவாக்கப்பட்டனவோ அதேவிதமான நிலமையை உருவாக்குவதற்கு நாங்கள் முயற்சிக்க வேண்டும். கற்பனையின் அடிப்படையில் நாங்கள் பேசவில்லை."

*"நீங்கள் அப்படிச் சொன்னாலும், பிரதமர் ரணில் உள்ளிட்ட தலைவர்கள் ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு, 13ஐ நடைமுறைப்படுத்துவோம் என்று மீண்டும் மீண்டும் சொல்கின்றபோது, அப்படிப்பட்டவர்களுடன் கூட்டமைப்பு ஏன் சேர்ந்து இயங்குகின்றது அல்லது அவர்களுக்கு ஏன் கூட்டமைப்பு ஆதரவளிக்கின்றது என்ற சந்தேகம் தமிழ் மக்களுக்கு எழுகின்றதல்லவா?"*

"நாங்கள் அரசின் பங்காளிக் கட்சியல்ல. அரசுடன் நாங்கள் இணைந்து செயற்படுவதாகவும் சொல்ல முடியாது. அதற்காக, ராஜபக்ஷவின் ஆட்சியிலும் பார்க்க இந்த ஆட்சியில் மாற்றங்கள் உண்டு என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளாமலும் இருக்க முடியாது. அதை நாங்கள் அவதானிக்காமல் இருக்க முடியாது. அதை நாங்கள் மதிக்காமலும் இருக்க முடியாது.

எமது மக்களுடைய உடனடித் தேவைகள் பல தொடர்பில் பல விடயங்கள் நடைபெறவில்லை. அதை நாம் இல்லை என்று சொல்லவில்லை. அதேநேரத்தில் அவர்களுடைய (இன்றைய ஆட்சியாளர்களுடைய) மனப்போக்கும், சிந்தனையும் சாதகமாக இருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுத் தள்ளுங்கள்

**எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் உதயன் பத்திரிகைக்குச் செவ்வி**




கின்றது. தேர்தல் முடிந்து இப்போதுதான் ஒரு மாதம் ஆகியிருக்கின்றது.
அரசியல் தீர்வைப் பொறுத்த வரையில்கூட, ராஜபக்ஷ எந்தவிதமான அரசியல் தீர்வுக்கும் முன்வரவில்லை.
நாங்கள் எதிர்கட்சியில்தான் இருக்கின்றோம். அதற்காக ராஜபக்ஷ அரசுக்கும் தற்போதைய அரசுக்கும் இடையிலான வித்தியாசத்தை நாங்கள் உணராமலும் இருக்க முடியாது. தீர்வுக்கான முயற்சிகளை நாங்கள் முன்னெடுப்பதாக இருந்தால் அதைக் கருத்தில் எடுத்துத் தானாகவேண்டும். எமது நியாயமான நிலைப்பாட்டை முன்வைக்கவேண்டும். எமது மக்களுக்கு கிடைக்க வேண்டியவற்றுக்காகச் சகல வழிகளிலும் நாங்கள் முயற்சிக்க வேண்டும். அதற்கு மேலதிகமாக நாங்கள் ஒன்றும் இப்போது சொல்ல முடியாது."

*"நீங்கள் கூறுவதன் அடிப்படையில் பார்த்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போதும் எதிர்ப்பு அரசியலைத்தான் செய்கிறது என்று எடுத்துக்கொள்ளலாமா?"*

"அதெல்லாம் நீங்கள் (பத்திரிகையாளர்கள்) பயன்படுத்துகின்ற சொற்பதங்கள். அது நான் சொல்வதல்ல. எதிர்ப்பு அரசியல், நட்பு அரசியல் என்பன எல்லாம் நீங்கள் செய்யும் அரசியல். நான் கூறவில்லை. என்னைப் பொறுத்த வரையில் நிதானமான – பக்குவமான அரசியல், விலைபோகாத அரசியல், எமது மக்களுக்காக உறுதியாக நிற்கின்ற அரசியல், அதுதான் எமது நிலைப்பாடு. ஆதரிக்க வேண்டிய கருமங்களுக்காக அரசை ஆதரிப்போம். எதிர்க்க வேண்டிய கருமங்களுக்கு எதிர்ப்போம். எமக்குத் தேவை எமது மக்களுடைய நலன்கள்தான். இந்தச் சொற்பதங்கள் அல்ல."

*"நீங்கள் சொல்வதுபோல கூட்டமைப்பு அரசின் பங்காளி இல்லையென்றால் குழுக்களின் பிரதித் தலைவர் பதவியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டதை எப்படி வியாக்கியானப்படுத்துவீர்கள்?"*

"அதனை அரசின் அங்கமாக நாங்கள் கருதவில்லை. சபாநாயகர் பதவி ஐ.தே.கவைச் சேர்ந்த ஒருவருக்குச் சென்றது. பிரதி சபாநாயகர் பதவி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த ஒருவருக்குச் சென்றது. மூன் றாவது இடத்திலுள்ள கட்சி நாங்கள். எனவே குழுக்களின் பிரதித் தலைவர் பதவி எமக்குக் கிடைத்தது. நாடாளுமன்றத்தில் மூன்றாவது நிலையில் உள்ள ஒரு கட்சி என்ற அடிப்படையில் அந்தப் பதவிக்கு ஒருவரை நியமிக்கச் சொன்னார்கள். நாங்கள் நியமித்துள்ளோம். அவ்வளவுதான். நாடாளுமன்ற சம்பிரதாயத்தின் படி அது நடந்துள்ளது."

*"சர்வதேச விசாரணைதான் வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில் தற்போதைய ஐ.நா. தீர்மானத்தை எப்படிப் பார்க்கின்றீர்கள்?"*

"சர்வதேச விசாரணை நடைபெறவில்லை என்றும் ஒரு காலத்தில் சொன்னார்கள். தற்போது விசாரணை அறிக்கை வெளிவந்திருக்கின்றது. அது மிகவும் தரமான அறிக்கை. சர்வதேச விசாரணையின் பிரகாரம்தான் அது வெளிவந்திருக்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் செயற்பாட்டின் காரணமாக அந்த அறிக்கை வெளிவந்திருக்கின்றது. அறிக்கை வெளிவருவதற்கு முன்பதாக, நடவடிக்கை ஆலோசனை வழங்க மூன்று சர்வதேச நிபுணர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அது சர்வதேச அறிக்கை. ஒரு காலத்தில் எம்மில் சில பேர் அதை ஏற்றுக் கொள்ளக்கூட இல்லை.
இன்றைக்கு நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தின் அடிப்படையில், நீதிமன்றப் பொறி முறைக்குள் பொது நலவாய நீதிபதிகளும் – சர்வதேச நீதிபதிகளும் – சர்வதேச சட்டத் தரணிகளும் – சர்வதேச விசாரணை யாளர்களும் உள்ளடக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றது. அது காலப் போக்கில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அவர், இவர், எல்லோரும் சொல்லும் கருத்துக்கு நான் பதில் சொல்ல முடியாது. எம்மைப் பொறுத்த வரையில் அது நடை பெறவேண்டும்.
ஓர் அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்றும் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. அது அவசியம். ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 32ஆவது அமர்வில் தீர்மானம் தொடர்பான வாய்மொழிமூல அறிக்கையும், 34ஆவது அமர்வில் எழுத்துமூலமான அறிக்கையும் சமர்பிக்கப்பட வேண்டும். எனவே தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது ஐ.நா. மேற்பார்வையின் கீழ் இருக்கப் போகின்றது.
இவற்றையெல்லாம் நான் முன்னேற்றகரமான விடயங்களாகவே கருதுகின்றேன். சர்வதேச சமூகம் முழுமையாக இந்தப் பிரேரணையை ஆதரித்து இருக்கின்றது. அமெரிக்கா, இந்தியா, ரஷ்யா, சீனா என எல்லா நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. இலங்கையும் ஏற்றுக் கொண்டுள்ளது.
இதனை நான் பிற்போக்கான நிலமையாகக் கருதவில்லை. முற்போக்கான நிலமையாகவே கருதுகின்றேன். அதை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும். முறையாக செயற்படுத்த வேண்டும்.
எங்களுக்குள் போட்டிகளில் ஈடுபடாமல், யார் வென்றவர், யார் தோற்றவர் என்று எங்களுக்குள் போட்டிகள் நடத்தாமல் செய்ய வேண்டிய கருமத்தை பக்குவமாக – நிதானமாகச் செய்ய வேண்டும்."

*"ஐ.நா. கூட்டத் தொடரில் பங்குபற்றிவிட்டு நேற்று (வெள்ளிக்கிழமை) நாடு திரும்பிய ஜனாதிபதி மைத்திரி ஊடகவியலாளர்களிடம் பேசும்போது புதிய அரசமைப்புக் கொண்டு வரப்படாமல், போர்க்குற்ற விசா ரணை நீதிமன்றத்தை உருவாக்க முடியாது என்று சொல்லியிருக்கின்றாரே ?"*

"அவர்கள் பல கருத்தைச் சொல்லுவார்கள். அவை எல்லாவற்றுக்கும் நாங்கள் பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை. சில சமயம் அவர் சொல்லுகின்ற கருத்து அவருடைய அரசியலுக்குத் தேவையாக இருக்கலாம்."

*"அப்படியான கருத்துக்களை அவர்கள் சொல்லும் போது தமிழ் மக்களிடத்தில் சந்தேகம் எழுகின் றதே?"*

"சந்தேகத்தை விடுங்கள். கருமங்கள் நடைபெறுகின்றனவா இல்லையா என்று பாருங்கள். இன்று வரையில் கருமங்கள் நடைபெற்றிருக்கவில்லையா? 2012 ஆம் ஆண்டு நீங்கள் எல்லோரும் சொன்னீர்கள் பிழையாகப் போகின்றது என்று. 2013ஆம் ஆண்டு, 2014ஆம் ஆண்டும் அப்படித்தான் சொன்னீர்கள். இப்போது அப்பிடியொன்றும் பிழையாகப் போகவில்லையே. எல்லாம் சரியாத்தானே போய்க்கொண்டிருக்கின்றது.
2015ஆம் ஆண்டில் எல்லாமும் சரியாகத்தான் வந்திருக்கின்றது. ஆகையால், நீங்கள் சும்மா உங்களையும் குழப்பி மற்றவர்களையும் குழப்பாதீர்கள். குழம்பினவர்களின் கருத்துக்களைக் கேளுங்கள். ஆனால் அந்தக் குழம்பினவர்களின் கேள்விகளின் அடிப்படையில் என்னிடம் பதிலை எதிர்பார்க்காதீர்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுக்குநூறாகிறது ஃவோக்ஸ்வேகன் சாம்ராஜ்ஜியம்!

எம்.ரமேஷ்

> நைட்ரஜன் ஒக்ஸைடு மனிதர்களுக்கு நேரடி யாகப் பாதிப்பை ஏற்படுத்தாவிட்டாலும் இது காற்றுடன் கலக்கக்கூடியது. அவ்விதம் கலக்கும்போது மனிதனுக்கு இதய நோய் ஏற்படும். லண்டனில் மட்டும் நைட்ரஜன் ஒக் ஸைடு சுவாசிப்பதால் ஆண்டுதோறும் 9,500 குறைப் பிரசவச் சாவுகள் நிகழ்வதாக கணக் கிடப்பட்டுள்ளது.

புகை நமக்குப் பகை. இன்று ஃபோக்ஸ் வேகன் நிறுவனத்தை புதைகுழிக்கு இட்டுச் சென்றுள்ளதும் இந்தப் புகைதான். இந்த நிறு வனத்தின் தலைவராக கடந்த 8 ஆண்டு களாக கோலோச்சிய மார்டின் விண்டர் கோர்னை வீட்டுக்கு அனுப்பியதும் இந்தப் புகையே.

பெரும் பிரச்சினையில் சிக்கியுள்ள ஃபோக்ஸ் வேகன் நிறுவனத்தின் 78 ஆண்டுக்கால சரித் திரத்தை சற்று பின்னோக்கி பார்த்தால், இன்று உலக அளவில் கார் விற்பனையில் முக்கிய இடத்தில் உள்ள இந்நிறுவனத்துக்கு ஏற்பட்டுள்ள சரிவு அனைவருக்குமே வியப்பாக இருக்கும். ஜேர்மனியின் உல்ஃப்ஸ்பர்க் நகரில் தலை மையகத்தைக் கொண்டு செயற்படும் இந்த நிறுவனம் 1937ஆம் ஆண்டு உருவாக்கப்பட் டது. 1975ஆம் ஆண்டு ஃபோக்ஸ்வே கன் குழுமமாக வளர்ந்த இந்த நிறுவனம் இன்று ஜப்பானின் டொயோட்டா நிறுவனத் துக்கு அடுத்தபடியாக அதிக அளவில் கார் களை உற்பத்தி செய்யும் நிறுவனமாகத் திகழ்கிறது.

**மக்களின் கார்**

1930களின் ஆரம்பத்தில் ஜேர்மனியில் தயாரான கார்கள் செல்வந்தவர்களுக்கு மட்டுமே கட்டுபடியாகக்கூடியவையாக இருந்தன.இதனால் நடுத்தர மக்கள் பெரும் பாலும் போக்குவரத்துக்கு மோட்டார் சைக் கிளையே பயன்படுத்தினர். அப்போது 50 ஜேர்மானியர்களில் ஒருவரிடமே கார் இருந்தது.

1933ஆம் ஆண்டு அப்போதைய ஜேர் மன் அதிபர் அடால்ப் ஹிட்லர், அமெரிக் கர்கள் தங்கள் வீடுகளில் கார்களை வைத் திருப்பதைப் போல ஜேர்மானியர்களும் வீட்டுக்கு ஒரு கார் வைத்திருக்க வேண் டும் என விரும்பினர்.

இப்போது உள்ள சுலப தவணைத் திட்டத் தைப் போல வாரத்துக்கு 5 மார்க் சேமிக் கக்கூடிய குடும்பத்தினர் ஒருகா ரைச் சொந் தமாக்கிக் கொள்ளலாம் என அறிவிக் கப்பட்டது. இதன்படி 3.36 லட்சம் மக்கள் காருக்கு முன் பதிவு செய்தனர். பின்புறம் இன்ஜின் கொண்ட கார்கள் தயாரிக்கப்பட் டன. இத்தகைய கார்களை தயாரிக்க 1938 ஆம்ஆண்டுஉருவானதுதான் ஃபோக்ஸ்வேகன். ஆனால் இரண்டாவது உலகப் போர் தொடங் கியதால் உற்பத்தி பாதிக்கப்பட்டது. 1939ஆம் ஆண்டு ஹிட்லரின் 50ஆவது பிறந்த தினத் தன்று ஒரு காரை இந்த நிறுவனம் அன்பளிப் பாக தயாரித்து அளித்தது.

ஹிட்லரால் போர்க் கைதிகளாகப் பிடிக்கப் பட்டு வதை முகாம்களிலும் தொழிற்சாலை களிலும் அடிமைகளாக நடத்தப்பட்ட மக் களைக் கொண்டு வேலை வாங்கிய நிறு வனங்களுள் இதுவும் அடக்கம் என்பது அந்த நிறுவனத்தின் மீதான கறுப்புப் புள்ளி.

இருந்தாலும் அந்தச் சவால்களை எல்லாம் தாண்டி இன்று இந்த நிறுவனத்துக்கு 27 நாடுகளில் 100 ஆலைகள் உள்ளன. ஃபோக்ஸ் வேகன் கார்கள் ஓடாத சாலைகளே இல்லை எனலாம். அந்த அளவுக்கு இந்த நிறுவன கார் கள் உலகம் முழுவதும் வியாபித்துள்ளன.

**முதல் பொய்**

இரண்டாம் உலகப் போரின்போது இந்த ஆலை இராணுவ வாக னங்களைத் தயாரிக்கவேண் டிய கட்டாயத்துக்குத் தள் ளப்பட்டது. இந்த நிறுவனத்தின் டைப் 82 குபெல் வேகென் கார் கள் இராணுவ வீரர்களின் போக்குவரத்துக்கு தயாரிக்கப்பட்டன. ஏறக்குறைய 15 ஆயிரம் அடிமைகளை கார் தயாரிப்புக்குப் பயன் படுத்தியதாக இந்த நிறுவனம் 1998ஆம் ஆண்டுதான் ஒப்புக் கொண்டது. இதைப் போலத்தான் இப்போதும். 2009ஆம் ஆண்டிலிருந்து தவறு செய்து வந்தது. ஆனால் அது கண்டுபிடிக்கப்பட்டதோ 2013இல். தவறை ஒப்புக் கொண்டதோ 2015இல். இந்தக் குற்றத்திலிருந்து தப்பிக்க முடியாது என்ற சூழல் ஏற் பட்ட பிறகே நிறுவனம் தனது தவறை ஒப்புக் கொண்டுள்ளது.

கடந்த 6 ஆண்டுகளில் இந்த நிறு வனம் தயாரித்த கார்களின் எண் ணிக்கை 1.10 கோடி.

**என்ன தவறு?**

இந்த நிறுவனம் தயாரித்த ஜெட்டா, பீட்டில், கோல்ப், பசாட் மற்றும் ஆடிஏ3 மொடல் டீசல் கார்களில் புகை அளவு சோதனை யைக் காட்டும் மென் பொருள்களில் மோசடி செய்துள்ளது. வாகன புகை சோதனை நடை பெறும்போது இதில் உள்ள சாஃப்ட்வேர் கருவி அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன் றியம் நிர்ணயித்த புகையளவுக்குட்பட்டுத்தான் புகை வெளியேறு வதாகக் காட்டும். ஆனால் உண்மையில் வாகனம் வெளியிடும் புகையின் அளவு நிர்ணயிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் 40 மடங்கு அதிகம்.

**உண்மை வெளி வந்தது எப்படி?**

அமெரிக்காவில் ஓடும் ஃபோக்ஸ்வேகன் கார் களில் 4.82 லட்சம் கார்கள் அதிக அளவு புகையை வெளியிடுவதாக அமெரிக்க சுற்றுச் சூழல் பாதுகாப்பு முகமை (இபிஏ) கண்டுபிடித் துள்ளது. ஃபோக்ஸ்வேகன் செய்துள்ள இந்த தவறுக்கு 1,800 கோடி டாலர் அபராதம் விதிக் கலாம் என இபிஏ பரிந்துரைத்துள்ளது.

வெஸ்ட் வெர்ஜீனியா பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்கள் சிலர் அடங்கிய குழு வினர் நடத்திய ஆய்வில் இது கண்டுபிடிக் கப்பட்டது. 2012ஆம் ஆண்டில் ஆய்வு செய்து 2013இல் இந்தக் குழுவினர் அறிக்கை அளித் தனர். ஆனால் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க இரண்டு ஆண்டுகளாகியுள்ளது.

**நைட்ரஜன் ஒக்ஸைடு**

ஃபோக்ஸ்வேகன் கார்கள் அதிக அளவு நைட் ரஜன் ஒக்ஸைடு வாயுவை வெளியிடுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் அமெரிக்கா வில் ஆண்டு தோறும் 2.5 லட்சம் முதல் 10 லட் சம் டன் வரை நைட்ரஜன் ஒக்ஸைடு கூடு தலாக வெளியேறி சுற்றுச் சூழலை பாதித்துள் ளதாம். இந்த அளவானது இங்கிலாந்தில் உள்ள அனைத்து மின் நிலையங்கள், வாகனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் வேளாண் இயந்திரங் கள் ஒட்டுமொத்தமாக வெளியிடும் நைட்ர ஜன் ஒக்ஸைடு அளவுக்குச் சமமானது என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நைட்ரஜன் ஒக்ஸைடு மனிதர்களுக்கு நேரடி யாகப் பாதிப்பை ஏற்படுத்தாவிட்டாலும் இது காற்றுடன் கலக்கக்கூடியது. அவ்விதம் கலக் கும்போது மனிதனுக்கு இதய நோய் ஏற் படும். லண்டனில் மட்டும் நைட்ரஜன் ஒக் ஸைடு சுவாசிப்பதால் ஆண்டுதோறும் 9,500 குறைப் பிரசவச் சாவுகள் நிகழ்வதாக கணக் கிடப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் ஆண்டு தோறும் 50 ஆயிரம் பேர் மாசடைந்த காற்றை சுவாசிப்பதால் உயிரி ழக்கின்றனர். காற்று மாசடைவதற்கு முக்கிய காரணமே வாக னப் புகைதான். அதிலும் டீசல் வாகனப் புகை பெரும் பங்கு வகிக்கிறது.

(23 ஆம் பக்கம் பார்க்க....)



(நன்றி: தி இந்து)

**உலகை அதிரவைத்தி ருக்கிறது, ஃபோக்ஸ்வேகன் கார்களில், புகை அளவு சோதனையைக் காட் டும் மென்பொருளில் நடந்திருக்கும் மோசடி. இதை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்த ஆய் வுக் குழுவில் பணியாற்றியவர்களில், தமிழகத் தைச் சேர்ந்த இளைஞர் அரவிந்த் திருவேங்க டமும் ஒருவர். அமெரிக்காவின் வெஸ்ட் வெர் ஜீனியா பல்கலைக்கழக ஆய்வுமையத்தில் உதவிப் பேராசிரியராகப் பணிபுரிகிறார் அரவிந்த். அவருடன் மின்னஞ்சல் வழியாக உரை யாடியதிலிருந்து...**

***இந்த விவகாரத்தின் ஆரம்பப் புள்ளி எது?***

அமெரிக்காவில் தூய்மையான போக்கு வரத்துக்கான சர்வதேச சபை எனும் அமைப்பு செயல்படுகிறது. ஜான் ஜெர் மன் என்பவர் அதன் நிர்வாகியாகப் பணியாற்றுகிறார். டீசலில் ஓடும் மூன்று ஃவோக்ஸ்வேகன் கார்கள் வெளியிடும் நச்சுத் தன்மை பற்றி ஆராய வேண்டும் என்ற கோரிக்கையோடு அந்த அமைப்பு எங்கள் பல்கலைக்கழகத்தை அணு கியது. எங்கள் பல்கலைக்கழகமும் இதுபற்றிய ஏராளமான தரவுகளைத் தந்து, இந்த ஆய்வை எங்களிடம் ஒப்படைத்தது.

இத்தகைய பணிகளைச் செய்வதற்காக மாற்று எரிபொருள்கள், இன்ஜின்கள் மற்றும் மாசு வெளியாதல்களுக்கான மையம் என்ற தனியான மையத் தையே நாங்கள் வைத்துள்ளோம். நான் அதில்தான் பணியாற்றுகிறேன்.

***ஆய்வு நடத்தப்பட்ட முறை மற்றும் அதில் கிடைத்த தகவல்களைப் பற்றி விரிவாகச் சொல்லுங்கள்?***

இந்த ஆய்வை நானும் எனது சுவிட் சர்லாந்து நண்பன் மார்க் பெஸ்ச்சும் நடத்தினோம்.

2013ஆம் ஆண்டின் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நாங்கள் கலிஃபோர் னியா மாநிலத்தின் கடற்கரை ஓரமாகச் சுமார் 1,200 கி.மீ. தூரம் சாலைகளில் கார்களில் சென்றோம். அவை ஓடும் போது வெளியாகிற நச்சுப்பொருள் களின் அளவை அளக்கும் கருவிகளை காரில் பொருத்தியிருந்தோம். சாலை களில் போகும்போதும் ஆய்வகங் களில் பரிசோதிக்கும்போதும் இத்தகைய மாசுப்பொருள்கள் வெளியாகும் அள வில் வித்தியாசங்கள் இருக்கவே செய் யும். இது நாங்கள் அறிந்ததுதான்.

கடுமையான விதிமுறைகளைக் கடைப் பிடிக்க வேண்டிய பொறியியலா ளர்கள் நாங்கள் என்பதால் எங்களையே பலமுறை விமர்சித்துக்கொண்டோம். எந்த முடிவுக்கும் வருவதற்கு முன் னால் எங்கள் ஆய்வு முடிவுகளைப் பலமுறை பரிசீலித்தோம். ஒரு கார் நன்றாக ஓடுகிறதா, இல்லையா என்று பார்ப்பது எங்கள் வேலை. மோசடி செய்பவர்களைப் பிடித்துக்கொடுப் பதல்ல. ஆனால், ஃவோக்ஸ்வேகன் கார் களில், சாதாரணமாக நாங்கள் எதிர்பார்க் கும் அளவுகளைவிட மிக அதிகமாக மாசுப்பொருள்கள் இருப்பது தெரியவந்தது. சராசரி அளவைவிட 15 முதல் 30 மடங்கு அதிக அளவில் மாசுகளின் வித்தி யாசம் என்பது நாங்கள் எதிர்பாராதது!

***கார் தயாரிப்பு உலகில் ஜாம்பவானான ஒரு நிறுவனம் செய்த மோசடியை வெளிக்கொணர்ந்த ஆய்வு இது. இந்த ஆய்வை மேற்கொண்ட காலகட்டத்தில் உங்கள் மனநிலை எப்படி இருந்தது?***

(23 ஆம் பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> அமெரிக்கப் பிரேரணையில் ஆறு பந்திகள் நீக்கப்பட்டு அதன் கடுமை குறைக்கப்பட்ட பின்பும் பிரேரணையை எதிர்ப்போருக்கும் பிரேரணையைச் செயற்படுத்துவதில் காலதாமதம் விளைவிக்க முயற்சிப் போருக்கும் ஆணையாளரின் உரை எச்சரிக்கையாக அமைய வேண்டும்.

# இலங்கையை மிரட்டும் சயிட் அல் ஹுசைன்

■ அதிரன்

**ஐ.நா.** மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் அல் ஹுசைன் போரால் பாதிக்கப்பட்டோர் உட்பட சகல இலங்கையர்களுக்கும் நீதி வழங்குவதற்கு கலப்பு நீதிமன்றம் அமைப்பது அவசியம் என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார். ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் சபையில் இலங்கை விவகாரம் தொடர்பாக நேற்று முன்தினம் அவர் வாய்மூல அறிக்கை விடுத்திருந்தார். அதன்போதே கலப்பு நீதிமன்றம் அமைக்கப்படுவதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தினார். அவரின் உரையில் இடம்பெற்ற முக்கிய விடயங்கள் வருமாறு:-

சர்வதேச நீதிபதிகள், விசாரணையாளர்கள், சட்டத்தரணிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றத்தின் மூலமே போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல் குற்றங்கள் தொடர்பான சுயாதீனமான விசாரணையை மேற்கொள்ள முடியும்.

காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு முன்னைய ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்டிருந்த பரணகம தலைமையிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தொடர்ந்தும் செயற்படுகிறது. அதன் நம்பகத்தன்மை, செயற்பாட்டுத்திறன் பற்றி பரந்த அளவில் கவலைகள் தெரிவிக்கப்பட்டிருந்தும் ஆணைக்குழு தொடர்ந்து செயற்படுகிறது. இந்த ஆணைக்குழு கலைக்கப்படவேண்டும்.

போரின் இறுதிக்கட்டத்தில் மாத்திரமன்றி ஒன்பது வருடகாலப் பகுதியை உள்ளடக்கியதாக ஐ.நா. விசாரணை அறிக்கை அமைந்துள்ளது. இலங்கையில் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் பாரதூரமான சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்டுள்ளன என்பவற்றை நம்புவதற்கான நியாயபூர்வமான காரணங்கள் உள்ளன.

இலங்கையின் தற்போதைய நீதித்துறை முறைமை சுதந்திரமான, நம்பகத்தன்மையுள்ள விசாரணைகளை நடத்துவதற்கு உரியதாக இல்லை.

பாதுகாப்புப் படையினரும், பொலிஸாரும், புலனாய்வுத்துறையினரும் கிட்டத்தட்ட முழுமையாகத் தண்டனை விலக்கீட்டை அனுபவிக்கின்றனர். ஆயுத மோதல் ஏற்பட்ட காலம் தொடக்கம் எந்தவிதமான குறிப்பிடத்தக்க மறுசீரமைப்பும் இடம்பெறவில்லை.

வடக்கு, கிழக்கில் இராணுவம் மற்றும் புலனாய்வுச் சேவைகளால் அச்சுறுத்தல்கள், தொந்தரவுகள், மிரட்டல்கள் உட்பட கண்காணிப்பு தலையீடுகள் காணப்படுகின்றன.

போர் முடிவுக்கு வந்து ஆறு வருடங்கள் கடந்த நிலையிலும் இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் நியாயபூர்வமான தீர்வை வென்றெடுக்க வேண்டியுள்ளது.

இரகசியமான மற்றும் அறியப்படாத தடுப்பு இடங்கள் இருப்பது தொடர்பான செய்திகள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. இது தொடர்பான அவசர விசாரணை தேவை.

மேற்கண்டவையே மனித உரிமைகள் சபையின் ஆணையாளரின் வாய்மூல உரையில் தெரிவிக்கப்பட்டவற்றில் குறிப்பிடத்தக்க விடயங்களாகும். 26 பந்திகளைக் கொண்ட இலங்கை தொடர்பான அமெரிக்காவின் பிரேரணையின் நகல் வரைபில் 6 பந்திகள் நீக்கப்பட்டு அதன் கடுமை குறைக்கப்பட்ட நிலையில் மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் கருத்து வெளியாகியது. அவரின் கருத்துகள் இலங்கைக்கு தர்மசங்கடமான நிலைமையை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. கலப்பு நீதிமன்றம் என்ற பெயர் நீக்கப்பட்ட பின்பும் பிரேரணைக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டுவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஆணையாளரின் கருத்து இக்கட்டான நிலைமையை ஏற்படுத்தக்கூடியது. திருத்தப்பட்ட அமெரிக்கப் பிரேரணையின் நகல் வரைவில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுநலவாய நாடுகள் மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த நீதிபதிகள், சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்களைக் கொண்ட நீதிமன்றம் நம்பகரமான விசாரணையை நடத்தும் என்பதை ஆணையாளர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை ஆணையாளரின் உரை எடுத்துக்காட்டுகிறது. அதனால்தான் அவர் கலப்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டிய அவசியத்தை மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்.

அமெரிக்கப் பிரேரணையில் ஆறு பந்திகள் நீக்கப்பட்டு அதன் கடுமை குறைக்கப்பட்ட பின்பும் பிரேரணையை எதிர்ப்போருக்கும் பிரேரணையைச் செயற்படுத்துவதில் காலதாமதம் விளைவிக்க முயற்சிப்போருக்கும் ஆணையாளரின் உரை எச்சரிக்கையாக அமைய வேண்டும். இலங்கைக்குக் கிடைத்த கடைசி வாய்ப்பாக இதனைக் கவனத்தில் கொண்டு அமெரிக்கப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை முழுமையாகச் செயற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பல்லுப் பிடுங்கப்பட்ட பாம்பு

சந்திரசேகர ஆசாத்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30 ஆவது கூட்டத் தொடரில் அமெரிக்காவால் முன் வைக் கப்படும் இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங் கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தீர்மானம் இலங்கைக்கு மிகவும் ஆபத்தானது எனவும் அதன் சில பகுதிகள் நீக்கப்பட வேண்டும் எனவும் முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வலியுறுத்தியிருந்தார். அதை ஆதரிப்பதன் மூலம் இலங்கை அரசு இலங்கை மக்க ளையும், படையினரையும் காட்டிக் கொடுத்து விட்டதாகவும் கண்டனம் செய்துள்ளார்.

சர்வாதிகாரம் கொண்ட ஒரு முடிசூடா மன்னராகத் தான் அதிகாரத்தில் இருந்த போது தன்னை நிலைநிறுத்திக் கொண்ட மகிந்த ராஜபக்ச கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் சகல அதிகாரங்களை யும் இழந்து பல்லுப்பிடுங்கப்பட்ட பாம்பாக மாற்றப்பட்டார். எனினும் தனது வீழ்ச்சியை ஏற்றுக் கொள்ளாத அவர், கடந்த பொதுத் தேர்தல் மூலம் பிரதமர் பதவியைப் பெற்று மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றக் கனவு கண்டார். அந்தக் கனவும் வெறும் கானல் நீராகிவிட்டது.

பல்லுப் பிடுங்கப்பட்ட நிலையிலும் கூட அவர் அடிக்கடி சீறிக்கொள்ளத் தவறுவதில்லை. அவரின் ஆதரவாளர்களும் எதிர்க்கட்சிகளின் கூட்டணி என்ற பேரில் அவரை இப்போதும் சக்தி கொண்ட வீரநாயகனாகக் காட்ட பகீரத முயற்சிகளைச் செய்து வருகின்றனர். ஒரு ஜனாதிபதியாக இருந்து பின்பு பிரதமராகவோ, ஓர் அமைச்ச ராகவோ, எதிர்க்கட்சித் தலைவராகவோகூட வரமுடியாமல் வெறும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்குத் தள்ளப்பட்ட அவர், அதே பழைய திமிருடன் நஞ்சு கலந்த கருத்துக்களை வெளியிட்டு வருகிறார். அதில் ஒரு பகுதியாகவே அமெரிக்கத் தீர்மானம் தொடர்பான கருத்தும் வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் வெளியிடப்பட்ட விசாரணை அறிக்கையை அப்படியே நடைமுறைப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது எனவும், சர்வதேசத்துடன் இணைந்த ஒரு நீதிக் கட்டமைப்பை உருவாக்கும் விதத்திலும், உள்ளகப் பொறிமுறை என்ற பேரில் சர்வதேச விசாரணை மேற்கொள்ளும் வகையிலும் இராணுவத்தினரை நீதிமன்றத்தில் நிறுத்தும் வகையிலும் அமைந்துள்ளது எனவும் குற்றஞ்சாட்டியுள்ளார். இந்தச் சரத் துக்கள் அந்தத் தீர் மானத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் பலர் பெயர் குறிப்பிடப்பட்டு குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர் எனவும் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது எனவும், அவை இலங்கையின் கோரிக்கைக்கு அமைய நீக்கப்பட்டன எனவும் சில தகவல்கள் வெளிவந்தன.

அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்பு அதில் பரிந்துரை செய்யப்பட்ட கலப்பு நீதிமன்றம் என்ற பதம் நீக்கப்பட்டு சர்வதேச நீதிபதிகள், சட்டவியலாளர்களின் பங்களிப்புடன் சர்வதேச சட்டங்களுக்கு அமைவான விசாரணை என்பது அமெரிக் கத் தீர்மானத்தில் முன்வைக்கப்பட்டது. அதிலும் இலங்கையின் வேண்டு கோளின் பேரில் பொதுநலவாய வெளி நாட்டு நீதிபதிகள், சட்டவியலாளர்களின் பங்களிப்புடனான உள்ளக விசாரணை என மாற்றப்பட்டது. அதாவது தற்சமயம் அந்த அறிக்கை பல படிகள் கீழ் இறக் கப்பட்டு கணிசமானளவு அமெரிக்கத் தீர்மானத்தில் மாற்றத்துக்கு உட்படுத் தப்பட்டு விட்டது. அப்படியான ஒரு நிலையிலும்கூட மகிந்த ராஜபக்சவால் திருப்தியடைய முடியவில்லை. குற்றம் புரிந்ததாகக் கருதப்படும் இராணுவத்தினரை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படுவதைக் கூட அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

வெளிநாட்டு பொதுநலவாய நாடுகளின் நீதியாளர்களின் பங்களிப்புடன் விசாரணை நடத்தப்பட்டாலும் இது இலங்கையின் அரசமைப்புக்கு உட்பட்ட உள்ளகப் பொறிமுறையுடனேயே இடம் பெறும் எனப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். இப்படியான ஒரு விசாரணை மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காதென்றே தமிழ் மக்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். இப்படியான ஒரு விசாரணையைக்கூட மகிந்த ராஜபக்சவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதில் உள்ள அடிப்படை, குற்றவாளிகள் தண்டிக்கப்படக்கூடாது என்பது தான். அவர் அதிகாரத்தில் இருந்த போது போர்க்குற்றவாளிகள் எனக் கருதப்பட்ட பலர் தண்டிக்கப்பட முடி யாதபடி அவர்களுக்கு பாதுகாப்பும், பதவி களும் வழங்கப்பட்டன என்பது தகலரும் அறிந்த விடயமாகும்.

**குற்றவாளிகளுக்குச் சிறப்புப் பதவி**

இராஜதந்திர சேவையில் உள்ளவர்களை வெளிநாடுகளில் கைது செய்ய முடியாது என ஒரு பொதுசர்வதேச விதி பின் பற்றப்பட்டு வருகிறது. இலங்கையின் போர்க்குற்றவாளிகள் எனக் கருதப்படும் பல இராணுவ அதிகாரிகளைப் பாதுகாக்க மகிந்த ராஜபக்ச அரசு இந்த விதியைப் பயன்படுத்தி வந்தது.

வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டமை தொடர்பான விவகாரத்தில் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் மேல் தமிழ்த் தேசியத் தரப்பால் குற்றம் சுமத்தப்பட்டது. ஏனெனில், அந்த நாளில் அந்தப் பகுதி சவேந்திர சில்வாவின் கட்டளைக்குட்பட்ட படையணியின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. ஆனால் அவரோ ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையின் பிரதித் தூதுவராக நியமிக்கப்பட்டார்.

157ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதியாகப் போரின் இறுதி நாள்களில் படையினரை வழிநடத்தி பெருந்தொகையான தமிழ் மக்களின் இறப்புக்குக் காரணமாக இருந்த மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், ஜேர்மன் தூதரக அதிகாரியாக நியமிக்கப்பட்டார். இவருக்கு எதிராக சுவிஸ் நாட்டில் வழக்குத் தொடரப்பட்டபோது அவர் தூதரக அதிகாரி என்ற காரணத்தால் அவர் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை.

இவ்வாறே மேஜர் ஜெனரல் பிரசன்ன டி சில்வாவைக் கைது செய்யும்படி லண்டன் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டபோதும் அவரின் இராஜதந்திர அந்தஸ்து காரணமாக அவர் கைது செய்யப்படவில்லை. இவ்வாறே இறுதிப் போரின் போது போர்க்குற்றங்களிலும் மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்டவர்கள் எனக்கருதப்படும் மேஜர் ஜெனரல் உதய பெரேரா மலேசியாவின் பிரதித் தூதுவராகவும் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கனகொட ஜப்பான் தூதுவராகவும் மேஜர் ஜெனரல் விஜயசிறி ஜப்பானின் பிரதித் தூதுவராகவும் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் திரேச சமரசிங்க ஆஸ்திரேலியத் தூதுவராகவும் மேஜர் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா ரஷ்ய பிரதித் தூதுவராகவும் நியமிக்கப்பட்டனர். அதுமட்டுமன்றி வெலிவேரியாவில் குடிதண்ணீர் கேட்டுப் போராடி மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள கட்டளையிட்டு இரு மாணவர்கள் உட்பட மூவரின் கொலைக்குக் காரணமாயிருந்த பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தன துருக்கி தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகராக பதவி வழங்கப்பட்டார்.

அதாவது மகிந்த ராஜபக்ச ஆட்சியில் போர்க்குற்றங்கள் படுகாலைகள் என்பவற்றில் ஈடுபடும் படையதிகாரிகள் சிறப்புப் பதவியுயர்வுகள் பெறுவதுடன் சட்ட நடவடிக்கைகளில் இருந்து காப்பாற்றப்படும் நிலைமையுமே நிலவியது.

அதன் காரணமாகவே, போர்க் குற்றங்கள் மற்றும் மனித குல விரோத நடவடிக்கைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை மகிந்த அரசு நிராகரித்து வந்தது. சர்வதேச அழுத்தம் அதிகரிக்கும்போது உள்ளூரிலேயே சில விசாரணைக் குழுக்களை நியமிப்பதும் படிப்படியாக அவற்றை நீர்த்துப்போக வைத்து செயலிழக்க வைப்பதுமான ஒரு கண் துடைப்பு நாடகத்தை இலங்கை அரசு தொடர்ந்து செயற்படுத்தி வந்தது. ஆனால் மகிந்த அரசு வீழ்த்தப்பட்டு புதிய ஆட்சி ஏற்பட்ட பின்பு சில மாற்றங் கள் ஏற்பட்டன.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு சர்வதேசத்துடன் முரண்படாது இணைந்து செயற்படுவதன் மூலம் தமக்குச் சாதகமான ஒரு நிலைமையை உருவாக்க முயன்று வருகிறது. அதன் அடிப்படையிலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரால் முன்வைக்கப்பட்ட விசாரணை அறிக்கை மற்றும் அமெரிக்காவால் அது தொடர்பாக முன்வைக்கப்பட்ட தீர்மானம் என்பவற்றை எதிர்க்காமல் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை நடத்தி தீர்மானத்தின் வலிமையைக் கணிசமானளவு குறைத்துள்ளது.

ஆனால், அப்படிக் குறைக்கப்பட்ட தீர்மானத்தைக்கூட மகிந்த ராஜபக்சவால் ஏற்கமுடியவில்லை. இராணுவத்தினரை விசாரணை மன்றத்தில் நிறுத்தக்கூடாது என்ற பரப்புரையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளார். விசாரணை என்பது தீர்ப்பல்ல. சம்பவங்கள் நடந்தனவா இல்லையா என்பதைச் சாட்சியங்கள் மூலமும் ஆதாரங்கள் அடிப்படையிலும் கண்டுபிடிப்பதற்குப் பெயரே விசாரணை. அதன்பின்பு அடுத்த நடிவடிக்கைக்குச் செல்லவேண்டும்.

நச்சுப் பாம்பின் வால்கூட ஆபத்துத்தான் அப்படி உண்மையைக் கண்டறிவதற்கான விசாரணையைக்கூட மகிந்த ராஜபக்சவும் அவரது ஆதரவாளர்களும் எதிர்க்கும் நிலையே நிலவுகிறது. அவர்கள் அண்மையில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில், அரசு அமெரிக்க அறிக்கைக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் அமெரிக்க சதி வலையில் வீழ்ந்து விட்டதாகக் கூக்குரலிட்டுள்ளனர். ஒரு சர்வசன வாக்கெடுப்பு நடத்தாமல் வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் பங்களிப்புடனான உள்ளக விசாரணையை நடத்த முடியாது என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச முழங்கியுள்ளார். இவர்கள் அனைவருமே பொதுப் படையாக இராணுவத்தை காப்பாற்றப் போராடுவதாகக் காட்டிக் கொண்டாலும் இவர்கள் மகிந்த குடும்பத்தினரையும் அவர்களுடன் நெருங்கிச் செயற்பட்ட சில படைத் தளபதிகளையும் காப்பாற்றவே முயற்சிக்கிறார்கள்.

போர் இடம்பெற்றபோது முப்படைகளின் தளபதியாகச் செயற்பட்டவரும் பாதுகாப்பு அமைச்சராக விளங்கியவரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவே. பாதுகாப்புச் செயலராக இருந்தவர் அவரின் சகோதரர் கோத்தபாய ராஜபக்சவே. இது மட்டுமன்றி போரை நடத்த நியமிக்கப்பட்ட சிறப்பு ஆணைக்குழுவில் கோத்தபாய ராஜபக்ச,பசில் ராஜபக்ச, முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் இலங்கையின் சார்பில் பிரதிநிதிகள். எனவே போர்க்குற்றங்கள் விசாரணைக்கு வரும்போது போர்க்குற்றங்கள், மனிதகுல விரோத நடவடிக்கைகள் என்பவற்றில் இவர்களின் கட்டளைப் பங்கு வெளிவரவே செய்யும்.

எனவேதான் இந்த விசாரணைகளை முறியடிக்க அவர்கள் சகலவிதங்களிலும் முயற்சிக்கிறார்கள். தற்போது அவர்களால் எதிர்பார்த்த வெற்றியைப் பெற முடியாது விட்டாலும் அமெரிக்கத் தீர்மானம் நடைமுறைக்கு கொண்டுவரப்படும்போது அவர்கள் உச்சக்கட்ட இடையூறுகளை மேற்கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. மகிந்த ராஜபக்ச பல்லுப் பிடுங்கப்பட்ட பாம்புதான். ஆனால் அது வாலால்கூட மற்றவர்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் நச்சுத்தன்மை கொண்டது என்பதை எவரும் மறந்து விடக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மழை நீர் எங்கள் உயிருக்கு நேர்!

ப. சங்கரலிங்கம்

விண்ணில் இருந்து மண்ணில் விழும் உயிர்நீர், மழைநீர். பூமியில் உயிரினங்கள் வாழவும், மண்வளம் செழிக்கவும் இயற்கை வழங்கும் கருணைக்கொடை.

எல்லாப் பொருள்களுக்கும் மாற்றுப் பொருள் உண்டு. மின்சார உற்பத்திக்கு அனல் மின் நிலையம், நீர் மின் நிலையம், அணு மின் நிலையம் எனப் பல வழிகள் உண்டு. ஆனால், தண்ணீர் உற்பத்திக்கு மழை மட்டுமே ஆதாரம்.

மழை பெய்தால்தான் நிலத்தடி நீர்மட்டம் உயரும். அணைகள், ஏரி – குளங்களில் நீர் பெருகும். எனவே, எதிர்காலத் தேவைக்கு நாம் பணத்தைச் சேமித்து வைப்பதுபோல், வருங்காலச் சந்ததியினர் உயிர்வாழ மழைநீர் சேகரிப்பு என்பது இன்றியமையாத ஒன்றாகும்.

பெருகிவரும் மக்கள் தொகையால் தண்ணீர்த் தேவை அதிகரித்து வரும் நிலையில், பருவ நிலை மாற்றம், ஓசோன் படலம் பாதிப்பால் புவி வெப்பமாதல், நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு, ஆழ்துளைக் கிணறுகள் மூலம் அளவுக்கு அதிகமாக நிலத்திலிருந்து நீர் உறிஞ்சப்படுதல் போன்ற காரணங்களால் உலகம் முழுவதும் நிலத்தடி நீர் மட்டம் வேகமாகக் குறைந்து வருகிறது.

இந்த நிலை நீடித்தால் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு, உயிர்கள் மடியும் அபாயம் உருவாகும் என நாஸா விஞ்ஞானிகள் எச்சரித்து வருகின்றனர். 2003ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரையில் உலகில் மக்கள் அதிகம் வாழும் நிலப் பரப்புகளில் முக்கியமான 37 பெரிய நிலப்பரப்புகளை ஆய்வு செய்ததில் நிலத்தடி நீர்மட்டத்தில் 13 நிலப்பரப்புகள் மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளன என்றும் அதில் இந்தியாவில் உள்ள சிந்து நிலத்தடி நீர்ப்பரப்பு, குறைந்துவரும் வேகத்தில் இரண்டாவது இடத்தில் உள்ளதாகவும் நீரியல் விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இலங்கையும் ஆபத்தான கட்டத்தில்தான் இருக்கிறது.

வடக்கிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீரில் நைட்ரேட் போன்ற வேதியல் பொருள்கள் வரையறுக்கப்பட்ட அளவைவிடக் கூடுதலாக உள்ளதாகவும், நிலத்திலிருந்து அதிகமாகத் தண்ணீர் உறிஞ்சப்படுவதே இதற்குக் காரணம் என்று நீண்டகாலமாகத் தெரிவிக்கப்படுகிறது. போதாததற்கு, மனிதக் கழிவுகளும் நிலத்தடி நீருடன் கலந்து அதனை மாசடையச் செய்துள்ளன. இதனால் ஈ–கோலி எனும் பக்றீரியாத் தொற்றும் நிலத்தடி நீரில் அதிகமாகவே இருக்கின்றது.

ஒருபுறத்தில் நிலத்தடி நீர் மாசடைந்து கொண்டே செல்ல, மறுபுறத்தில் தேவைக்கதிகமான நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டு வீணாக்கப்பட்டும் வருகிறது. வடக்கு மாகாண சபை பதவிக்கு வந்தபோதும் சரி, கொழும்பு அரசின் நீர் வளங்கள் சபையும் சரி இதனைக் கட்டுப்படுத்துவதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் நிலத்தடி நீரை வீண்விரயம் செய்யும் போக்குத் தொடர்ந்துகொண்டே செல்கிறது.

இந்த நிலை தொடர்ந்தால் வருகிற 2020ஆம் ஆண்டு கடல்நீர் நிலப்பரப்புக்குள் புகும் அபாயம் உள்ளது என விஞ்ஞானிகள் எச்சரித்து வருகின்றனர்.

போருக்குப் பின்னரான சூழலில் கட்டடக் காடுகளின் ஆக்கிரமிப்புக்கு வடக்கு உள்ளாகியுள்ளது. எங்கு பார்த்தாலும் புதிது புதிதாகக் கட்டடங்கள் முளைத்துக்கொண்டே இருக்கின்றன. இந்தக்கட்டடங்களின் தண்ணீர்த் தேவைக்கு குழாய்க் கிணறுகள் எழுந்தமானத்தில் அடிக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. முன்பு, ஒரு கிணறு வெட்டி முடிப்பதற்கு மாதக் கணக்கான காலமும், லட்சக் கணக்கான பணமும் வேண்டியிருந்தது. இப்போது நிலமை அப்படியில்லை. 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாவில் சில மணி நேரத்தில் பூமியைத் துளைத்துத் தண்ணீரை உறிஞ்சிவிடுகிறார்கள். சில இடங்களில் வயல்களின் நடுவே கூட குழாய்க் கிணறு தோண்டித் தண்ணீரை உறிஞ்சுகிறார்கள். நிலத்தடி நீரை இறைத்து வயல் செய்தால், குடிப்பதற்குத் தண்ணீருக்கு எங்கே போவது? இது குறித்து அதிகாரிகள் எவரும் அக்கறை செலுத்துவதாக இல்லை.

போதாக் குறைக்கு இருக்கின்ற குளங்கள், குட்டைகளும் மூடப்பட்டு வருகின்றன. ஒரு காலத்தில் எல்லாக் கோயில்களின் அருகிலுமிருந்த பெருங்கேணிகள் மூடப்பட்டுவிட்டன. பதிலாகத் தீர்த்தக் கிணறுகள் தோன்றிவிட்டன. எஞ்சிக் கிடக்கும் ஒரு சில குளங் குட்டைகளைத் தூர் வாருவதற்கும் எவரும் இல்லை. கேட்டால், அதிகாரிகள் ஆளையாள் சாட்டுகிறார்கள். இந்தக் கோடையில் அனேகமாக எல்லாக் குளங் குட்டைகளும் வறண்டு காய்ந்து விட்டன. சீரமைப்பதற்கு ஏற்ற நிலை இருந்தது. ஆனால் எவரும் அதனைக் கண்டுகொள்ளவில்லை. பல மில்லியன் பணம் கொடுத்தால் அந்தப் பணத்துக்காக மட்டும் ஒரு சில குளங்களை மறுசீரமைக்கிறார்கள். ஏனைய எல்லாம் தூர்ந்து போகின்றன.

நிலத்தடி நீரையும் வகைதொகையின்றி நாம் வீணாக்கி வரும் நிலையில்,

நீரைச் சேமிப்பதற்கு இருக்கும் ஒரே வழி மழை நீரை உயிர்நீராகக் கருதி அதைச் சேமிப்பதுதான். இதற்கு மழை நீர் சேகரிப்பை மக்கள் இயக்கமாக்க அரசும், அனைத்து அரசியல் கட்சிகளும் முனைப்புடன் செயற்பட வேண்டும்.

மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை மாணவ – மாணவிகள் புரிந்துகொள்ளும் வகையில் பாடசாலைப் பாடத் திட்டத்தில் மழைநீர் சேகரிப்பைக் கட்டாய பாடமாக்கவேண்டும்.

ஆன்மிகம், இலக்கியம், அரசியல் என அனைத்துத் தரப்புக் கூட்டங்களிலும் மழை நீரைச் சேமிப்போம் என உறுதிமொழி எடுக்க வேண்டும்.

உள்ளங்கையில் உலகை அடக்கும் வகையில் தொழில்நுட்பத்தில் வளர்ச்சியடைந்தாலும், உயிர்வாழ உணவு அவசியம். அந்த உணவை உற்பத்தி செய்ய தண்ணீர் முக்கியம்.

எனவே, நீரின்றி அமையாது உலகு என்னும் வள்ளுவர் வாக்கை நெஞ்சில் நிறுத்தி, இந்தப் பூமியை– எதிர்கால எமது சந்ததியினரைக் காக்க மழைநீர் சேகரிப்பைத் தலையாய கடமையாகக் கடைப்பிடிப்போம்.



# சிரிக்க சிந்திக்க சில வரிகள்

கலாபூஷணம் மூ.மாசிலாமணி

யாழ். குடா மற்றும் வன்னி மக்களின் அன்றாட வாழ்க்கை போரின் பிற்பாடு எதுவித முன்னேற்றமுமின்றி ஓடிக் கொண்டிருக்கிறது. பலத்த எதிர்பார்ப்புடன் புதிய அரசு, தமிழ் எதிர்க்கட்சி, அதிகாரப் பரவல், இயல்பு வாழ்க்கை, மீளக்குடி யேற்றம் எனப் பலதரப்பட்ட தலைப்புக்களுடன் வெளிவரும் செய்திகளைப் பார்த்து விட்டுக் காலத்தைக் கடத்தவேண்டிய நிலைப்பாட்டில்தான் தமிழ் மக்கள் உள்ளனர்.

விரக்தியின் வெளிப்பாடாக மக்கள் அடிக்கடி கூறிக்கொள்வது நாட்டை இராமர் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? என்பதுதான். அது உண்மை தான் என்பதை எமது அன்றாட வாழ்க்கையில் காண்கிறோம்.

ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கு வருடத்தில் இரு கோடி ரயில் பயணச் சீட்டு ஓசியில் கிடைக்கும். அதில் ஏசியில் செல்லும் வாய்ப்புக் கிடைப்பது இரட்டை மகிழ்ச்சி. அந்தச் சலுகையை நானும் அனுபவிக்கத் தவறுவதில்லை. கடந்த ஜுன் மாதம் 3ஆம் திகதி கொழும்பு செல்ல யாழ். ரயில் நிலையத்தில் பயணச் சீட்டுக்கு ரூபா 1500 கொடுத்து (ஏற்கனவே ஓசிச் சலுகை முடிந்துவிட்ட நிலையில்) சிரமத்தின் மத்தியில் ஒரு சீற் கிடைத்தது. நாடாளுமன்றத்தில் சீற் கிடைத்தது போன்ற மகிழ்ச்சியில் கோண்டாவில் ரயில் நிலையத்தில் ஏறிவிட்டேன். எனது சீற்றை நம்பர் பார்த்துப் பிடிப்பதற்குள் ரயில் யாழ்ப்பாண நிலையத்துக்கு வந்துவிட்டது. எனக்கோ வியர்த்துக் கொட்டியது. ஏசி வேலை செய்வதாகத் தெரியவில்லை. அந்தச் சமயம் ரயில்வே அதிகாரி ஒருவர் எமது பெட்டியில் ஏறிச் சொன்னார் ஏசி உடைந்துவிட்டது. அனுராபுரத்தில் உங்களுக்கு சீற் கிடைக்கும் என்று.

ஏற்கனவே ஏசியில் பயணம் செய்ய ஏற்ற உடையுடன் ஏறிய நான் பணக்கார வீட்டு அல்சேஷசன் நாய் காரின் பின் சீற்றில் நின்று கொண்டு தலையை நீட்டுவதுபோல் நீட்டி, திறக்க முடியாத யன்னல் வழியாக் கசியும் காற்றை சுவாசித்துக்கொண்டிருக்க ரயில்வே அதிகாரி அடிக்கடி வந்து ஆறுதல் சொன்னார், அனுராதபுரம் வரட்டும் அடுத்த பெட்டியில் சீற் கிடைக்கும் என்று. பதிலுக்கு நான் கேட்டேன் இந்தப் பெட்டியில் மின் விசிறி கிடையாதா என்று. அவர் சொன்னார், இது ஏசி பெட்டி இதற்கு விசிறி கிடையாது. இதுகூட உங்களுக்குத் தெரியாதா என என் வாயையும் அடைத்துவிட்டார். ரயில் ஓடத் தொடங்க காற்றுவரும் எனத் தனது கண்டுபிடிப்பையும் சொல்லத் தவறவில்லை.

அனுராதபுரம் ரயில் நிலையம் வந்ததும் அடுத்த பெட்டியில் பயணிகள் இடித்துத் தள்ளி ஏறிக்கொண்டிருந்தனர். அந்தப் பெட்டியில் ஏறமுடியாதவர்கள் எமது பெட்டிக்குள்ளும் ஏறினர். நின்றபடியும், உட்கார்ந்தபடியும் கொழும்புக் கோட்டையை அடைந்து தமிழ்க் கடையொன்றில் தேநீர் குடிக்க வானொலியில் குற்றாலம் அருவியில் குளித்தது போல் இருக்குதா? எனும் பழைய சினிமாப்பாடல் வயிற்றெரிச்சலை கிளப்பி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸூடோ ஸ்வாமி

# போக்குவரத்துச் சேவையும் (தடைக்)கற்களும்!

அப்போது நேரம் இரவு எட்டைத் தாண்டியிருந்தது. இலங்கை போக்குவரத்துச் சபையின் மன்னார் டிப்போவிற்குச் சொந்தமான அந்தப் பேருந்து ஒளி பாய்ச்சியபடி இருட்டைக் கிழித்து வீதி வழியே விரைந்துகொண்டிருந்தது. சற்றுமுன்புதான் அந்தப் பேருந்து யாழ்ப்பாணம்–மன்னார் பயணத்தை முடித்து பயணிகளை மன்னார் தரிப்பிடத்தில் இறக்கிவிட்டு, ஓய்வடைவதற்காக மன்னார் டிப்போவினை நோக்கி வந்துகொண்டிருந்தது. பேருந்தினுள் சாரதி, நடத்துநர் தவிர ஒரு சில பயணிகளும் காணப்பட்டனர். பேருந்து டிப்போவினை நோக்கிச் செல்லும்போது வழியில் இறங்கிக் கொள்வதற்காகப் பயணித்தவர்களே அவர்கள்.

எழுத்தூர் செல்வநகர் கிராம வீதி வழியே அந்தப் பேருந்து சென்று கொண்டிருந்த போது, திடீரென உந்துருளிகளில் வந்த முகமூடிதாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சரமாரியான கல்வீச்சால் பேருந்து திணறியது. சாரதி திக்குமுக்காடிப்போனார். உரமான விசையைப் பெற்று வந்த கற்கள், பேருந்தின் கண்ணாடிகளை பதம் பார்த்தது மட்டுமல்லாமல், பயணித்த சாரதி உள்ளிட்டவர்களைக் காயமடையவும் செய்தன.

பேருந்து உடனடியாக நிறுத்தப்பட்டு காயமடைந்தவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். விடயமறிந்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த காவல் துறையினர், காயமடைந்த சாரதியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த தனியார் பேருந்து சாரதி ஒருவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.




மறுநாள், எதிர்பார்க்கப்பட்டது போலவே மக்களுக்கு போக்கு வரத்து சேவையை வழங்கும் அரச மற்றும் தனியார் இருதரப்பினரும் பணிப்புறக்கணிப்பில் குதித்தனர். கைது செய்யப்பட்ட தனியார் பேருந்து சாரதியை விடுவிக்கக் கோரி தனியார் பேருந்து தரப்பினரும் முதல்நாள் இடம்பெற்ற தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட ஏனையோர் மீது நடவடிக்கை எடுக்க கோரியும் தமக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரியும் இ.போ.ச. தரப்பினரும் அதி (விடி)காலை முதலே தமது பணிப்புறக்கணிப்பினை ஆரம்பித்திருந்தனர்.

இதனால் அன்றைய நாளில் தமது தேவைகளுக்காக பொதுப்போக்குவரத்து சேவையினை நம்பியிருந்தோர் நெருக்கடியை எதிர்கொண்டனர். காவல்துறையினர் மற்றும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலையீட்டுடன் இ.போ.ச. பணியாளர்கள் தமது சேவைப் புறக்கணிப்பினை அன்று காலை 9 மணியளவில் முடிவிற்குக் கொண்டுவந்திருந்த போதிலும் தனியார் தரப்பினர் தமது சேவைப் புறக்கணிப்பினை மறுநாள் (25) பிற்பகல் வரை தொடர்ந்திருந்தனர்.

மேலே சொன்ன சம்பவம் கதை போன்று தோன்றினாலும், கடந்த 23ஆம் நாள் இரவு மற்றும் 24ஆம் நாள் காலை நேரங்களில் மன்னாரில் இடம்பெற்ற சம்பவங்களின் தொகுப்புத்தான்.

**கீரியும் பாம்பும்**

கீரியும் பாம்பும் போன்ற நடத்தைக் கோலங்களைக் கொண்டியங்கும் இலங்கை போக்குவரத்து சபையினர் மற்றும் தனியார் போக்குவரத்துத் துறையினருக்கு இடையிலான முறுகல் நிலையின் ஒரு கூர்ப்படைந்த படிநிலையே மேலே நீங்கள் கண்டது.

மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் வினைத்திறனான போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்காக செயலாற்ற வேண்டிய இந்த இருதரப்பினரும் அத்தகைய சேவையை கேள்விக்குட்படுத்தும் வகையில் நடந்து கொள்கிறார்கள். இது வேதனையளிக்கும் வகையில் மாறி வருகின்றமை விசனத்திற்குரியது.

வடபிராந்தியத்தில் இ.போ.சவிற்கு சொந்தமான பேருந்துகள் தாக்குதலுக்கு அதுவும் கல்வீச்சு தாக்குதலுக்கு உள்ளாவது இது ஒன்றும் முதற்தடவையல்ல.

கடந்த ஆவணிமாதம் 6ஆம் நாள் முல்லைத்தீவு மற்றும் வவுனியாவுக்கிடையே சேவையில் ஈடுபடும் முல்லைத்தீவு சாலைக்குச் சொந்தமான பேருந்து மீது கூழாமுறிப்பு பிரதேசத்தில் வைத்து கல்வீச்சு நடத்தப்பட்டதில் அதன் நடத்துநர் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை பெற வேண்டியேற்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த இ.போ.சவிற்கு சொந்தமான பேருந்து ஒன்று கடந்த ஜூலை மாதம் 25ஆம் நாள் இரவு வவுனியாவில் வைத்துக் கல்வீச்சுத் தாக்குதலை எதிர்கொண்டது. இதன்போது அந்தப் பேருந்தின் சாரதி தலையில் பலமாகக் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கடந்த மே மாதம் [illegible]ஆம் நாள் யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த இ.போ. ச. பேருந்து வவுனியா தாண்டிக் குளம் பகுதியில் வைத்து கல்வீச்சிற்கு இலக்கானது. இதில் அந்த பேருந்தின் சாரதி காயமடைந்தார். குறித்த பேருந்து தாக்குதலுக்கு இலக்கானபோது அதில் ஐம்பது பயணிகள் வரையில் இருந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி–இராமநாதபுரம் நோக்கி புறப்பட்ட இ.போ.சவின் கிளிநொச்சிச் சாலை பேருந்து ஊழியர்களுக்கும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்க உறுப்பினர்களுக்கும் இடையே கைகலப்பு நிகழ்ந்த சம்பவமொன்று இந்த ஆண்டு தை மாதத்தில் பதிவாகியுள்ளது. கிளிநொச்சி யிலிருந்து தனியார் சேவை பேருந்து ஒன்று புறப்படும் நேரத்திலே புறப்படும் இ.போ.ச. பேருந்து, தனியார் பேருந்தை முந்திச் செல்லுகின்றமையே இந்தக் கைகலப்பிற்குப் பின்னணி என்று தெரிவிக்கப்படுகிறது.

பல சந்தர்ப்பங்களில் இந்த இ.போ.ச. பேருந்துகள் முகங்கொள்ளும் கல்வீச்சுகளுக்கு பின்புலத்தில் இருப்பது தனியார் போக்குவரத்துத் தரப்பினரே எனச் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 27ஆம் நாள் இ.போ.சவின் வவுனியாசாலை ஊழியர்கள், தமது நிறுவன சாரதி மற்றும் நடத்துநர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்தும் அவ்வாறு தாக்குதல் நடத்தியவர்கள் மீதான சட்ட நடவடிக்கையை வலியுறுத்தியும் பணிப்புறக்கணிப்பில் குதித்திருந்தனர். அன்று காலை முதல் முன்னெடுக்கப்பட்ட இந்த பணிப்புறக்கணிப்பினால் பொதுமக்கள் பல்வேறு வகையிலும் பாதிப்புக்குள்ளாகினர்.

**முறுகல்நிலை எவ்வாறு முளைகொள்கிறது?**

இ.போ.ச. பேருந்துகள் சரியான நேரசூசியை அனுசரிக்க தவறுவதே இந்த முறுகல் நிலைக்குப் பிள்ளையார் சுழியை இடுவதாகத் தெரிவிக்கின்றனர் பயணிகள். தனியார் பேருந்துகள் நேரசூசியைக்கு மேலதிகமாக நேரக்கட்டுப்பாட்டாளர்களையும் கொண்டு இயங்குகையில், இ.போ.ச.வின் சில நடவடிக்கைகள், ஆரம்பத்தில் சொல் தாக்குதலுக்கும் பின்னர் கல் தாக்குதலுக்கும் வழிவகுப்பதாகக் கூறுகின்றனர் அனுபவப்பட்டவர்கள். எதுவாக இருப்பினும் சட்டத்தை மீறி கல் தாக்குதலில் தனியார் பேருந்து உரிமையாளர்கள் ஈடுபடுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. தவறுக்குத் தவறு ஒருபோதும் சரியாகிவிடாது.

தனியார் பேருந்து சேவைகள் நேரசூசி மற்றும் நேரக்கட்டுப்பாட் டாளர்கள் போன்றவற்றை கொண்டிருந்தாலும் இ.போ.ச. பேருந்தினை தமது மார்க்கத்தில் கண்டுவிட்டால் அவைகள் நடந்துகொள்ளும் விதமே தனி. அவ்வாறான சந்தர்ப்பங்களில் பேருந்தின் உள்ளே உள்ள பயணிகள் மற்றும் பேருந்தினை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பயணிகள் பாடு பெரும் திண்டாட்டம்தான். பயணிகளை மறந்த விதத்தில் அவர்களுடைய ஓட்டம் இருக்கும்.

**முற்றுப்புள்ளி வைப்பது எவ்வாறு?**

இ.போ.ச. தரப்பினரும் தனியார் போக்குவரத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்த– ஒருங்கிணைந்த – ஏற்றுக்கொண்ட – பயணிகள் நட்புநாடிய போக்குவரத்து அட்டவணையினை நடைமுறைக்கிடுவதே இதற்கான தீர்வாகும். அவ்வாறான ஒரு போக்குவரத்து அட்டவணையினைப் போக்குவரத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் மாவட்டச் செயலகம், வடமாகாண சபை மற்றும் போக்குவரத்து காவல்துறையினரின் உதவியுடன் உருவாக்கிக் கொள்வதுடன் மட்டுமல்லாமல் அதனை மீறும் போதோ உதாசீனம் செய்யும் போதோ அதற்கான உரிய நடவடிக்கைகளையும் முன்னரேயே திட்டமிட்டுக் கொள்வது நல்லது.

கைகலப்புகளின் பின்பும் கல்வீச்சு நடவடிக்கைகளின் பின்பும் சம்பவ இடத்திற்கு வருகை தரும் மக்கள் பிரதிநிதிகளானாலும் சரி, போக்குவரத்து காவல்துறையினரானாலும் சரி அவ்வப்போது உறுதிமொழிகளை தருவது வழமை. ஆனால் காலப் போக்கில் அவை காற்றில் கரைந்து விடுகின்றமை கவலைக்குரியதாக இருக்கின்றது.

வடமாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த இ.போ.ச. – தனியார் போக்குவரத்து சேவை முரண்பாடுகள் இருக்கின்ற போதிலும் ஆங்காங்கே சிலபல சந்திப்புக்கள், கலந்துரையாடல்கள் நடந்தேறிய போதிலும் வினைத்திறனான தீர்வு இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

பயணிகளுக்கு சிநேகபூர்வமான நேர அட்டவணை ஒன்றினை நிறுவி இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்து தரப்பினர் அதனைச் செவ்வனே பின்பற்றச் சம்பந்தப்பட்ட தரப்பினர் குறிப்பாக வடமாகாண சபை உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இல்லையேல் மனங்கோணும் வகையிலான சேவை களுக்காகவும் அனுபவிக்கும் அசௌ கரியங்களுக்காகவும் பயணிகள் தரப்பினர் இந்த இரு சேவைத் தரப்பினர் மீதும் சொல் வீச்சு நடத்தும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணின் பெருமையை உணர்வோம்!



**இணையவள்**

**உடலுறுதி கொண்ட ஆணைவிட மனவுறுதி கொண்ட பெண் சிறப்பு மிக்கவள். பெண்ணுக்குப் பிரசவம் என்பது மறுபிறப்பு என்பார்கள். ஒரு குழந்தை பிறக்கும் வரை எத்தனையோ வேதனைகளைச் சுமக்கின்றாள். தனது உயிரைப் பணயம் வைத்து அந்தக் குழந்தையைப் பெற்றெடுக்கின்றாள். குழந்தை பிறந்து மறு வருடமே அடுத்தக் குழந்தைக்குத் தயாராகி விடுகின்றாள். இதுவே அவளின் தைரியத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு.**

பெண் என்றும் அடிமையல்ல. அவளை எவரும் அடக்கவுமில்லை. அவளே அடங்கி வாழ்ந்தாள். அவளின் மென்மை அடக்கத்தை அணிகலனாக்கியது. அன்றும் இன்றும் பெண்களைப் பாடும் கவிஞர்களே அதிகம். கொடியெனக் கணவன் தோளில் சாய்ந்தாள். கொழுகொம்பாய் அவன் இருக்க, அவனைப் படர்ந்தாள். கரமென மாமியார் உறவில் கைகோர்த்தாள். ஆசானாய்க் குழந்தைகளை ஆற்றுப்படுத்தினாள். நாத்தனார் வாழ்வில் நலன் விரும்பியானாள். மொத்தத்தில் குடும்பச் சொத்தே அவளானாள். பல வீடுகளின் ஆட்சியே நாட்டின் ஆட்சி. பல வீடுகள் இணைந்ததே. நாடு. வீடு விளங்க நாடு விளங்கும். எனவே தான் பெண்கள், வீட்டின் ஒளி அல்லது நாட்டின் ஒளி என்கின்றோம். இந்த வீட்டுக்கு விளக்கேற்ற ஒரு பெண் தேவை என மாமியார் நாடுவதன் சூட்சுமம்தான் என்ன? விளக்கேற்ற விரல்கள் அற்றவர்களா வீட்டிலிருப்போர். புகுந்த வீட்டின் பெருமை ஒளியை உலகுக்கு விளக்கவெனப் புகுந்தவளாதலால் விளக்கெரிக்க ஒரு பெண் வரவேண்டு மென்ற வார்த்தையைப் பிரயோகித்தனர், பெரியோர். மென்மையான இதழ் பட்ட ஊதுகுழல் வெறுங் காற்றை உள்ளெடுத்து இசையாக வெளியே பரப்புதல் போல கணவன் மனையில் மென்மையாகப் புகுந்து சாதாரண குடும்பத்தைத் தரமான குடும்பமாய் உலகுக்கு உணர்த்தப் புகுமனையில் கால் வைப்பாள். உடலுறுதி கொண்ட ஆணைவிட மனவுறுதி கொண்ட பெண் சிறப்பு மிக்கவள். பெண்ணுக்குப் பிரசவம் என்பது மறுபிறப்பு என்பார்கள். ஒரு குழந்தை பிறக்கும் வரை எத்தனையோ வேதனைகளைச் சுமக்கின்றாள். தனது உயிரைப் பணயம் வைத்து அந்தக் குழந்தையைப் பெற்றெடுக்கின்றாள். குழந்தை பிறந்து மறு வருடமே அடுத்த குழந்தைக்குத் தயாராகி விடுகின்றாள். இதுவே அவளின் தைரியத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு. கருணைக்கும் இரக்கத்துக்கும் சகிப்புத்தன்மைக்கும் பொறுமைக்கும் இருப்பிடம் பெண்தான். எனவேதான் ஒரு குழந்தை வளரும் வரையில் தாயின் பராமரிப்பில் இருக்க வேண்டுமென்று சட்டம் கூறுகிறது.

இல்லறத்தை விடச் சிறந்த அறம் ஒருவனுக்கு இல்லை. இந்த இல்லறத்தைச் சிறப்பான முறையில் நடத்த வேண்டுமென்றால், சிறந்த இல்லாள் தேவை. இதன் மூலமே அவன் சமூகத்தின் முன் ஏறுபோல் பீடுநடை பயில முடியும் என வள்ளுவப் பெருந்தகை கூறியிருக்கின்றார். உடலால் வாழும் ஆணைவிட உள்ளத்தால் வாழும் ஆற்றல் பெற்ற பெண் உலகில் சிறப்புப் பெறுகின்றாள். இந்தப் பெண்மையின் பெருமையை உணர்ந்துதான் மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்லமாதவம் செய்திடல் வேண்டுமம்மா என்று கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை கூறுகின்றார். ஒரு அழகிய கற்புடைய பெண் ஆண்டவனின் முழுமையான சிறந்த படைப்பாகவும், தேவதைகளின் பெருமையாகவும், உலகின் அதிஅற்புதமான தனித்த அதிசயமாகவும் விளங்குகின்றாள். என்று ஹெர்மிஸ் என்னும் அறிஞர் கூறுகின்றார்.

நாம் பெற்றிருக்கின்ற வாழ்வுக்கும், அந்த வாழ்வைத் தகுதியுள்ளதாக அமைத்துத் தந்ததற்கும், நாம் கடவுளுக்கு அடுத்தபடியாகப் பெண்களுக்குக் கடமைப்பட்டுள்ளோம் என்று பொவீ என்னும் அறிஞர் மொழிந்துள்ளார். இதனைத்தான் நமது மகாகவி பாரதியாரும் பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவி பேணி வளர்த்திடும் ஈசன். என்று முழுமையாகப் பாடிச் சென்றார். எனவே பெண்ணின் பெருமையை உணர்வோம். புவி பேணி வளர்த்திட அவள் புகழ் பாடுவோம்.

## பெண்ணுக்கு.....

*மாதராய் இவ்வுலகில்*
*பிறந்திட*
*மாதவம் செய்திட வேண்டும்*
*பாரதியின் வாக்கு*
*பொய்மையில்லாதது.*
*பெண்ணுக்கு நிகர்*
*பெண்ணே அன்றி*
*இவ்வுலகில் எவருமிலர் !*

*என் தாயே,*
*மாதராய்ப் பிறக்க மாதவம்*
*நீ செய்தாய்*


*உனை அன்னையாய்ப் பெற*
*மாதவம் நான் செய்தேன்*
*கருவுற்ற காலம் முதல்*
*'உரு'பெற்ற காலம் வரை*
*உன் வயிற்றில் எனைச்*
*சுமந்தாய்*
*தரை தொட்ட காலம் முதல்*
*நடை கொண்ட காலம் வரை*
*உன் இடுப்பில் இடம் தந்தாய்*
*நான் பிறக்கும் முன்பே*
*என் மீது காதல் கொண்டவள்*
*நீ !*
*நான் இறக்கும் வரை*
*அதை மறக்கவே மாட்டேன் !*

*தாயே,*
*பெண்ணைப் பெருமை*
*என்று சொல்ல*
*நீயே ஒரு சாட்சி !*
*தியாகத்தையே தொழிலாகக்*
*கொண்டாய் !*
*அர்ப்பணிப்பையே*
*வாழ்க்கையாக்கினாய்!*
*பெண்ணின் கனிவு இன்றி*
*உலகுக்கு உருளக்கூட*
*தெரியாது!*
*பெண்கள், உலகின் கண்கள்*
*என்ற வர்ணிப்பு*
*வெறும் வார்த்தையில்லை*


*நியதி !*
*காலங்கள் கரைந்தோடினாலும்*
*பெண்ணின் பெருமை*
*உலகில் பொறிக்கப்படும்*
*முத்து மகுடங்கள் !*

*தாய்மையின் பிறப்பிடமே*
*பெண்தான்*
*தயவின் தாயகமும் பெண்தான்*

*நீரின்றி அமையாது உலகு*
*ஆம்,*
*நீரின் நவரசங்களையும்*
*கொண்டவள்*
*பெண் மட்டும் தான்*
*நீரின்றி அமையாது உலகு!*
*பெண் தெய்வங்களை*
*வழிபடும் நம் பண்பாடு*
*வெண் நிலவில் வரும்*
*தேய்மானம் என*
*கண் இன்றிப் பல*
*கயவர்கள் கத்தினாலும்*
*விண் உலகமே*
*வியக்கும்படி*
*தன் முனைப்புடனே*
*முன்னேறும்*
*பெண் இன்றி*
*அமையாது உலகு !*
*ஆயிரம் சூரியனின்*
*வெளிச்சம்*
*கொண்டவள் பெண்.*
*பிறப்பெடுக்கும்*
*ஒவ்வொரு உயிரும்*
*பெண்ணின்*
*பெருமையை*
*உலகே வியக்கும்படி*
*எடுத்துரைக்கும்*
*ஒரு எடுத்துகாட்டுத்*
*தான்...*
*பெண் இன்றி*
*அமையாது உலகு !*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நரியின் தீர்ப்பு

மலையநத்தம் ஓர் அழகிய சிற்றூர். அங்கு இயற்கை வளம் செறிந்து காணப்பட்டன. அந்த ஊரில் சொக்கநாதர் என்ற புலவர் இருந்தார். அவர் பல நற்குணங்களை உடையவர். அவரது கவித் திறனைப் பலரும் பாராட்டினார்கள். அவ ரால் அந்த ஊரே பெருமை பெற்றது. அந்தப் புலவர்; இரக்க குணமும், தயாள மனமும் படைத்தவர். அவர் எதிரில் யார் துன்பப்பட்டாலும் அதை சகித்துக் கொள்ளமாட்டார். உடனே விரைந்து சென்று அவர்களின் துன்பங்களைக் களைய முற்படுவார். அனைத்து மக்களும் அவரது இரக்க குணத்தைக் கண்டு மகிழ்ந்தனர். ஒரு நாள் புலவர் சொக்கநாதர், பக்கத்து ஊரிலுள்ள நண்பரின் மகளுக்குக் கல்வி கற்பிக்கப் புத்தகத்துடன் சென்றார். ஒரு காட்டு வழியே நடந்து சென்று கொண்டிருந்தபோது, திடீரென்று உறுமல் சத்தம் கேட்டது. அந்த சத்தத்துடன் திரும்பிப் பார்த்தார் புலவர். அங்கு மரங்களுக்கிடையில் ஒரு கூண்டில் புலி அடைக்கப்பட்டுக் கிடந்தது. அதைக் கண்டு புலவர் மிகவும் பயந்தார். புலவரைப் பார்த்து விட்ட புலி பரிதாபமாக ஐயா! தயவு செய்து என்னை இந்தக் கூண்டிலிருந்து விடுவித்து விடுங்கள். நீச்சல் தெரியாதவன் கடலில் குதித்து முத்தை எடுக்க விரும்பியது போல, நான் சிறிய மாமிசத் துண்டுக்கு ஆசைப் பட்டு இந்தக் கூண்டில் அகப்பட்டுக் கொண்டேன். என்னைக் காப்பாற்றினால் ஒரு உயிரைக் காப்பாற்றிய புண்ணியம் உமக்குக் கிடைக்கும். அத்துடன், ஒரு உயிரை ஆபத்திலிருந்து காப்பாற்றுவது பெரிய தர்மம் அல்லவா? என்றது. ஒரு உயிரைக் காப்பது பெரிய தர்மம் என்பதை நான் அறிவேன். ஆனால், உன்னைக் காப்பாற்றிய பின்னர் நான் உயிருடன் இருப்பேன் என்று என்ன நிச்சயம்? என்று புலவர் கேட்டார். உடனே புலி, செய் நன்றி கொன்றவனுக்கு மன்னிப்பே கிடையாது, என்னை நம்புங்கள். நான் சத்தியமாக உங்களுக்கு எந்த வித தீங்கும் செய்யமாட்டேன். என்னை விடுவித்து விட்டால், நான் காட்டில் ஓடிப்போய் விடுவேன். தயவு செய்து என் மீது இரக்கம் காட்டுங்கள் என்றது புலி.

புலவர் புலியை நம்பினார். அருகில் சென்று முன்னுள்ள கதவைத் தூக்கினார். புலி சீற்றத்துடன் வெளியே வந்தது. கூண்டுக்குள் அடைப்பட்டிருந்த புலிக்கு நல்ல பசி. புலவரை கொல்ல முற்பட்டது. புலவர் தடுத்து புலியின் வாக்கை நினைவூட்டினார். நீ சத்தியத்தை மீறுகிறாய் என்றார். யாரேனும் நான்கு நடுவரிடம் சென்று கூறுவோம். அவர்களில் பெரும்பாலானோர் என்ன கூறுகிறார்களோ அதன்படி நடப்போம் என்றார் புலவர். முதலில் இருவரும் ஒரு மரத்திடம் சென்றனர். மரம் புலவரைக் கண்டவுடன் வளைந்து வணங்கியது. பின்னர் மரம் நான் சிறு வயதாக இருக்கும் போது இந்த மனிதர்கள் எனக்குத் தண்ணீர் ஊற்றி வளர்க்கிறார்கள். ஆனால், நான் பெரியவனாகி விட்டவுடன் என்னை ஈவிரக்கமின்றி வெட்டுகிறார்கள். அதனால், எனது கிளைகளில் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருந்த பறவையினங்களும், மற்ற உயிரினங்களும் அழிந்து விடுகின்றன. எனது அழகைக் காண வரும் மேகக் கூட்டங்கள், நான் இங்கே மூளியாக, மொட்டையாக இருப்பதைக் காண சகிக்காமல், என் மீது அன்பு மழையைப் பொழியாமல் சென்று விடுகின்றன. ஆகவே, புலியாரே இந்த மனிதன் மீது இரக்கம் காட்டாதீர் என்றது. அதைக் கேட்ட புலவர் திடுக்கிட்டார். பின்னர் இருவரும் ஒரு ஆற்றிடம் சென்று முறையிட்டனர். புலவரைக் கண்டு அந்த ஆறும் வணங்கியது. பின்னர் ஆறு இந்த மனிதர்கள் தன்னை புனிதமானவள் என்று சொல்லி என்னை வணங்குகிறார்கள், போற்றுகிறார்கள். எனினும் என் மீதே குப்பைக் கூளங்களைக் கொட்டுகின் றனர். தொழிற்சாலைகளின் கழிவு நீரையும், சாக்கடை நீரையும் என் மீது பாய விடுகின்றனர். எங்களை கண்ணெனக் காக்கும் மணல் தாயை கதற கதற எடுத்துச் செல்கின்றனர். எனவே புலி அண்ணா, இந்த மனிதன் மீது இரக்கம் காட்டாதே என்றது. இதைக் கேட்ட புலவர் அதிர்ச்சி அடைந்தார். பின்னர் இருவரும் அங்கே பசியால் வாடிக் கொண்டிருந்த ஒரு எருதிடம் சென்று முறையிட்டனர். அந்த எருது அழுதுக் கொண்டே நான் இந்த மனிதர் களுக்கு எவ்வளவோ உதவி செய்து இருக்கிறேன். மேடு பள்ளமான நிலங்களை உழுது, எனது எஜமான் பயிரிட்டு விளைச்சலைப் பெருக்க உழைத்திருக்கிறேன். ஆனால், இப்போது எனக்கு வயதாகி விட்டது. என்னைத் துரத்தி விட்டான். ஆகவே, புலி அண்ணா இவன் மீது இரக்கம் காட்டாதே என்றதும், புலவர் பயந்தார். இதையெல்லாம் ஒரு நரி பார்த்துக் கொண்டே வந்திருந்தது. அதன் கொடூரமான தோற்றத்தையும், அவலட்சணமான வாலையும் பார்த்த புலவர் இது நமக்கு உதவுமா என்று எண்ணினார். ஆனால் நரி, புலவரின் நிலையை எண்ணி இரங்கியது. உங்கள் வழக்கு எனக்குப் புரியவில்லை. எனக்கு அது புரிய நீங்கள் முதலில் இருந்த இடங்களில் நில்லுங்கள். அதைப் பார்த்துதான் நான் தீர்ப்புச் சொல்ல வேண்டும் என்றது நரி. நரி, அவரைக் காப்பாற்றுவதோடு, தன்னையும் காத்துக்கொள்ள எண்ணியது. இருவரையும் அழைத்துக் கொண்டு கூண்டிருந்த இடத்துக்கு வந்தது. புலவரை அவர் நின்றிருந்த இடத்தில் நிறுத்தியது. அவ்வாறே புலியையும் அதன் கூண்டுக்குள் நிறுத்தியது. புலவரை முன்பு போலவே கதவை மூடிக் காட்டுமாறு சொல்ல, அவரும் கூண்டின் கதவை அழுத்தி மூடித் தாளிட்டார். அவ்வளவுதான், புலி பாவம்; முன்பு போல் கூண்டில் அடைபட்டுக் கொண்டது. நரியாரை வாழ்த்தி விட்டு புலவர் விடைப் பெற்றுச் சென்றார்.





சு.நிலானி
தரம் 3 II
யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தி.



பு.சந்தோஸ்
தரம் 2
யா/மல்லாகம் விசாலாட்சி, வித்தி.



ச.அருணா
தரம் 5A
யா/அராலி சரஸ்வதி மகா வித்தி.



றெ.றக்ஷனா
தரம் 1D
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



ந.யோகப்பிரியா
தரம் 5c
யா/சென்.பெனடிற் றோ.க.த.க.வித்தி.



செ.தீர்க்கஜன்
தரம் 8c
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தி.

## விலங்குகளில் சில விசித்திரங்கள்

- சிறுத்தையால் சிங்கத்தைப் போல் கர்ஜிக்க முடியாது. பூனையைப் போல மியாவ் என்ற ஓசையைத்தான் எழுப்பும்.
- ஒரு ஒட்டகத்தைவிடவும் அதிக நாள்களுக்குத் தண்ணீரின்றி எலியால் தாக்குப் பிடிக்க முடியும்.
- ஒட்டகப் பறவை என்று நெருப்புக் கோழி அழைக்கப்படுகிறது. இது ஒட்டகத்தைப் போல பல நாள்கள் தண்ணீர் குடிக்காமலேயே வாழக் கூடியது என்பதால் அதற்கு இந்தப் பெயர்.
- ரங்கொத்தியால் ஒரு நொடிக்கு 20 முறை மரத்தைக் கொத்தித் தள்ள முடியும்.
- காகம் ஒரு மணிக்கு 45 மைல்கள் வேகத்தில் பறக்கும்.



- ஒரு சாதாரண பசு அதன் வாழ்நாளில் 2 லட்சம் குவளை பால் கொடுக்கும்.
- உலகிலேயே மிகச் சிறிய பாலூட்டி, தாய்லாந்தில் காணப்படும் பப்ளியீ என்ற வெளவால் இனமாகும்.
- டொல்பின்கள் ஒரு கண்ணை மட்டும் மூடிக் கொண்டு தூங்கும்.
- நீலத் திமிங்கிலம் எழுப்பும் ஒரு வித விசில் ஒலி, விலங்குகள் எழுப்பும் ஒலிகளிலேயே மிகவும் பலமானதாகும். அதன் அளவு 188 டெசிபல்கள்.
- வேட்டையாடுவது உள்ளிட்ட முக்கியமான பணிகளை பெண் சிங்கமே செய்கிறது. ஆண் சிங்கம் பெரும்பாலும் ஓய்வெடுப்பதும், குழந்தைகளை கவனிப்பது போன்ற பணிகளை மட்டுமே செய்யும்.
- ஜெல்லி மீனில் 95 சதவீதம் தண்ணீர்தான் உள்ளது.
- பெண்குயின்களில் பெண் இனம் முட்டை இடும் பணியை செய்கிறது. ஆண் இனம்தான் அடை காத்து குஞ்சு பொரிக்கும் பணியை மேற்கொள்கிறது.
- மனிதனுக்கு அடுத்தபடியாக சிந்திக்கும் திறன் உள்ள பிராணி சிம்பன்ஸி குரங்குதான்.
- பிறந்த யானைக் குட்டி 6 மாதங்கள் வரை வெறும் தாய்ப்பாலை மட்டுமே குடிக்கிறது.
- யானைக்கு 4 பற்கள் உள்ளன. இவை சுமார் நூறு தடவை விழுந்து முளைக்கின்றன.

## தென்னை

எங்கள் வீட்டுத் தென்னையே
இளநீர் கொடுக்கும் தென்னையே
பந்தல் போடும் கீற்றையே
பாங்காய் அளிக்கும் தென்னையே
தலையை விரித்துக் காற்றிலே
சந்தோஷமாய் ஆடுவாய்
குலை குலையாய்க் காய்களைக்
கொடுப்பாய் மக்கள் வாழவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம்

## 04.10.2015 முதல் 10.10.2015 வரை

## உங்களுக்கு எப்படி?

### மேடம்

குரு, சுக்கிரன், ராகு, சூரியன் அதிக நற்பலன் தருவர். நண்பர்களால் உதவி கிடைக்கும். திட்டங்களை நல்ல முறையில் செயற்படுத்துவீர்கள். பணவரவு கூடும். புத்திரர்களின் சொல்லும், செயலும் சிறப்பாக அமையும். எதிர்ப்பு இல்லாத சுமுக வாழ்வு உருவாகும். மனைவி கருத்து இணக்கம் கொள்வார். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும். பெண்கள் ஆன்மிக வழிபாடு மேற்கொள்வர். மாணவர்கள் சிறந்த மதிப்பெண் பெறுவர். மகாலட்சுமி வழிபாடு, சுபநிகழ்வு தரும்.

### இடபம்

புதன், சுக்கிரன், செவ்வாய், கேது அளப்பரிய நற்பலன் தருவர். முருகப் பெருமானின் அருள் துணை நிற்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்துவீர்கள். பயணங்கள் இனிதாகும். புத்திரர், நண்பர் போல் இணக்கமாக இருப்பர். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழிலில் மூலதன தேவை அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டங்களை கவனமுடன் பின்பற்றவும். பெண்கள், உறவினர் வீட்டு மங்கல நிகழ்ச்சிகளில் பங்கேற்று, அவர்களுக்கு உதவுவர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர். சனீஸ்வரர் வழிபாடு, குடும்ப ஒற்றுமையை வளர்க்கும்.

### மிதுனம்

சுக்கிரன், சனி, சந்திரன் நன்மை தருவர். பொதுப் பிரச்சி;னையில் தலையிட வேண்டாம். உடன் பிறந்தவர்கள் உதவுவர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்களின் செயல் பெருமையளிக்கும். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். இல்லறத்துணை, உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவதுடன் பரிசும் வாங்கித் தருவார். தொழில், வியாபாரத்தில் இப்போதுள்ள நிலைமையே தொடரும். பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள் பாதுகாப்பற்ற இடங்களுக்குச் செல்ல வேண்டாம். வைரவர் வழிபாடு, சகல நலமும் தரும்.

### சிங்கம்

சுக்கிரன், சந்திரனால் மட்டுமே நற்பலன் உண்டு. ஆடம்பரச் செயல்களைத் தவிர்ப்பதால் செலவு குறையும். பேச்சில் நிதானம் கொள்வது, உங்கள் நற்பெயரை பாதுகாக்கும். வீடு, வாகனத்தில் பராமரிப்புச் செலவு ஏற்படும். புத்திரர்களின் உடல் நலத்துக்கு சிறு அளவில் மருத்துவச் சிகிச்சை தேவைப்படும். மனைவி வழி உறவினர்கள் உதவுவர். தொழில், வியாபாரம் சுமாரான பணவரவைத் தரும். பணியாளர்கள் அதிக வேலைப்பளுவைச் சந்திப்பர். பெண்கள் நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். மாணவர்கள் படிப்பில் தீவிர கவனம் செலுத்தினால் தான், அதிக மதிப் பெண் பெற முடியும். முருகனை வழிபடுவதால் புகழ் சேரும்.

### கடகம்

குரு, சுக்கிரன், சூரியன், ராகு அதிக நற்பலன் தருவர். உங்கள் சொல்லை பலரும் வரவேற்பர். வீடு, வாகனம் வாங்க நல்ல யோகம் உண்டு. புத்திரர்களின் செயல்பாட்டிலுள்ள குறைகளைச் சரி செய்வீர்கள். கடன் கொடுத்த பணம் கிடைக்கும் மனைவியின் ஆலோசனை நன்மை தரும். தொழில், வியாபாரம் செழிக்க, புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பணியாளர்கள் நற்பெயரைப் பாதுகாக்கும் எண்ணத்துடன் பணிபுரிவர். பெண்கள் புத்தாடை, அணிகலன் வாங்குவர். மாணவர்கள் பெற்றோர், கல்வி நிறுவனத்தில் பரிசு பெறுவர். பெருமாள் வழிபாடு, தொழிலில் வளர்ச்சி தரும்.

### கன்னி

சனி, செவ்வாய், சுக்கிரனால் நன்மை உண்டாகும். மனதில் தைரியம் கூடும். தேவையற்ற அலைச்சல், பயணங்களைத் தவிர்க்கவும். புத்திரர்கள், உங்கள் சொல் கேட்டு நடப்பர். நோய், கடன் தொந்தரவு குறையும். மனைவியின் கருத்தை ஏற்பீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகும் இடையூறைச் சரி செய்வீர்கள். பணியாளர்கள் வேலை செய்யும்போது, பாதுகாப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டும். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்புடன் பொது அறிவிலும் மேம்படுவர். தட்சணாமூர்த்தி வழிபாடு நிம்மதி தரும்.

### துலாம்

கேது, குரு, புதன், சுக்கிரன் நன்மை தருவர். பேசுவதில் நிதானம் வேண்டும். வெளியூர் பயணம் புதிய அனுபவம் தரும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். வழக்கு விவகாரத்தில் சுமுக தீர்வு கிடைக்கும். மனைவியின் செயல் பெருமை அளிக்கும். தொழில், வியாபாரம் செழித்து பணவரவு கூடும். பணியாளர்கள் பணி இலக்கை எளிதில் நிறைவேற்றுவர். பெண்கள், தாய்வீட்டு உதவி கேட்டுப்பெறுவர். மாணவர்கள் படிப்பில் மேன்மை அடைவர். விநயாகரை வழிபாடு, வெற்றியளிக்கும்.

### விருச்சிகம்

புதன், ராகு, சூரியனால் நன்மை உண்டு. அந்தஸ்து உயரும். அரச உதவி பெற அனுகூலம் உண்டு. வாகன பராமரிப்புப் செலவு குறையும். புத்திரர்கள், உங்களின் வழி காட்டுதலை ஏற்பர். மனைவியின் செயல்களில் ஏற்படும் குறையைப் பெரிதுபடுத்தி பேச வேண்டாம். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும். உறவினர்களின் பாராட்டுக் கிடைக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும். மாணவர்கள் பயிற்சி எடுத்தால் நல்ல மதிப்பெண் பெற முடியும். சூரிய வழிபாடு, நன்மை தரும்.

### தனுசு

குரு, சுக்கிரன், சூரியன் நன்மை தருவர். செயல்களில் முன்னேற்றம் ஏற்படும். பணவரவு அதிகம் பெற புதிய வழி பிறக்கும். உடன்பிறந்தவர்களின் செயலைக் குறை சொல்ல வேண்டாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்கள் வகையில் சிறிதளவு மருத்துவச் செலவு வரலாம். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் ஆலோசனை வாழ்வில் நல்ல மாற்றம் தரும். பணியாளர்கள் வேலை இடத்தில், பாதுகாப்பில் கவனம் கொள்ளவும். பெண்களுக்கு செலவு களில் சிக்கனம் வேண்டும். மாணவர்கள் படிப்பில் ஆர்வம் கொள்வர். ஆஞ்சநேயர் வழிபாடு நம்பிக்கை தரும்.

### மகரம்

கேது, புதன், சுக்கிரன், சனி நன்மை தருவர். செயல்கள் வெற்றிகரமாக அமையும். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி கூடும். வாகனப் பராமரிப்பு செலவு உயரும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். நோய், கடன் தொந்தரவு தீரும். மனைவியின் செயல் குறையை பெரிதுபடுத்த மாட்டீர்கள். தொழில், வியாபாரம் செழித்து பணவரவு கூடும். பணியாளர்கள் வேலையை மிக எளிதாக எடுத்துக் கொள்வர். பெண்கள் பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள், புதிய பயிற்சி முறை மூலம் அதிக மதிப்பெண் பெறுவர். பசுவுக்கு அகத்திக்கீரை, பழம் கொடுப்பது, தொழிலில் வளர்ச்சி தரும்.

### கும்பம்

செவ்வாய், குரு, சந்திரன் நற்பலன் தருவர். சிலரின் புகழ்ச்சியைப் பெறுவதற்காக, சவாலான வேலைகளை ஏற்க வேண்டாம். மனதில் நம்பிக்கை வளரும். வீடு, வாகனத்தில் அதிக பாதுகாப்பு அவசியம். புத்திரர்களை அன்பாக வழி நடத்தவும். சீரான ஓய்வு, உடல் நலம் காக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி ஓரளவு குறையும். பணியாளர்கள் அதிக வேலைப்பளுவை சந்திப்பர். பெண்கள் ஆன்மிக சுற்றுலா செல்ல வாய்ப்புண்டு. மாணவர்கள் நண்பர்களின் செயலில் குறை கண்டுபிடிப்பதை தவிர்க்கவும். கிருஷ்ணர் வழிபாடு, வாழ்வில் மேன்மை தரும்.

### மீனம்

புதன், சந்திரனால் ஓரளவு நன்மை உண்டு. செயல்களில் நிதானம் வேண்டும். பொது இடங்களில் நடக்கும் பிரச்சினையில் தலையிட வேண்டாம். பயணங்களால் ஓரளவு நன்மை கிடைக்கும். புத்திரர்கள் கேட்ட பொருள் வாங்கி தருவீர்கள். முன்னோர் செய்த நற்செயலுக்கான புண்ணியம் கிடைக்கும். மனைவியின் செயல் குளறுபடியை உருவாக்கும். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் தேவைப்படும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டங்களைப் பின்பற்றவும். பெண்கள் நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். மாணவர்கள் படிப்பில் மேம்படுவர். அம்மன் வழிபாடு, சகல நன்மையும் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடர்த்தியான புருவங்கள் வளர



ஆமணக்கெண்ணெய் ஒரு மருத்துவ குணம் வாய்ந்த பொருள். தினமும் ஆமணக்கெண்ணெயை தூங்குவதற்கு முன் கண் இமைகள் மீது தடவவும். வேண்டுமென்றால் ஆமணக்கெண்ணெயை வெதுவெதுப்பாகச் சூடேற்றிக் கூடத் தடவலாம். இவ்வாறு தொடர்ந்து இரண்டு மாதங்கள் தடவினால், கண் இமைகளானது நன்கு வளர்ந்து ஆரோக்கியத்துடன் காணப்படும்.

2. தினமும் கண் இமைகளைச் சீப்பை வைத்து சீவினால் முடியானது நன்கு வளரும். அந்தச் சீப்பை விற்றமின் ஈ எண்ணெயில் நனைத்துச் சீவலாம். வேண்டுமென்றால் விற்றமின் ஈ மாத்திரைகளைப் பொடியாக்கி, எண்ணெய் கலந்து பேஸ்ட் போல் செய்து தடவலாம். இதனால் கண்களில் எந்த அரிப்பும் வராது. மேலும் இதனைத் தினமும் செய்தால் முடி கொட்டாமல், முடியானது நன்கு வளரும்.

3. ஆமணக்கெண்ணெய் விற்றமின் எண்ணெய் கிடைக்காதவர்கள் வாஸ்லினைப் பயன்படுத்தலாம். இது ஒரு சிறந்த நன்மையைத் தரும். இரவில் படுக்கும் முன் கண் இமைகள் மீது வாஸ்லினைத் தடவி, காலையில் வெதுவெதுப்பான தண்ணீரால் கழுவி விட வேண்டும். அவ்வாறு கழுவ மறந்து விட்டால் அன்று முழுவதும் பிசுபிசுப்புடன் இருக்கும்.

4. நல்ல ஆரோக்கியமான புரோட்டீன் நிறைந்த உணவை உண்ண வேண்டும். இதனால் மிகவும் அழகான, அருமையான கண் இமைகளைப் பெறலாம். நமது உடலில் உள்ள தோல், முடி, நகங்கள், ஏன் கண் இமைகளின் அழகுக்குக்கூட தினமும் புரோட்டீன் உணவை உண்ண வேண்டும். மீன், பருப்பு வகைகள், நட்ஸ் மற்றும் புரோட்டீன் நிறைந்த உணவுகளை தினமும் உணவில் சேர்க்க வேண்டும்.

## ஆண்களும் அழகுபெற....

வேலை நிமித்தமாக வெளியில் சுற்றும் ஆண்களின் முகம் எளிதில் கறுத்துவிடும். அவர் கள் ஐஸ் கட்டியை துணியில் கட்டி முகத்துக்கு ஒத்தடம் தர முகம் பொலிவடையும்.

வெளியில் அலைவதனால் தலைமுடி உதிர்வதை தடுக்க நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகிய மூன்றையும் கலந்து தலைக்கு தேய்த்து வர முடி உதிர்வது தடுக்கப்படும்.

சிகரெட் குடித்து உதடு கருமையாக இருப்பவர்கள் மாதுளைச் சாறு, புதினா இலையை உதட்டில் தடவி வர உதடு செந்நிறமாகும்.

சுத்தமான சந்தனத்தை பாதாம் எண்ணெயில் குழைத்து முகத்தில் பூசி, இந்த கலவை



காய்ந்ததும் முகத்தைக் கழுவலாம் .
தக்காளியை நன்றாகப் பிசைந்து அதனோடு 4 – 5 துளிகள் எலுமிச்சை சாறு கலந்து முகம், கழுத்து பகுதி மற்றும் கைகளில் பூசிக்கொள்ளலாம்.

முகத்தைக் கழுவியபின்னர் சிறிதளவு பாலை உள்ளங்கையில் எடுத்து முகத்தில் பூசவும். இவ்வாறு தொடர்ந்து 2 – 3 வாரங்கள் வரை செய்துவந்தால் உங்கள் சருமம் பொலிவடைந்திருப்பது கண்கூடாகத் தெரியும்.

சிறிதளவு இளநீரை முகம், கழுத்து பகுதி, கைகளில் பூசிவந்தால் சரும நிறம் மாறும்.

சீரகம் மற்றும் முள்ளங்கி ஆகியவற்றை தனித்தனியே தண்ணீரில் கொதிக்கவைத்து, அந்தத் தண்ணீரில் முகத்தைக் கழுவினால் மாசுகள் அகற்றப்பட்டு முகம் பிரகாசமாகத் தோன்றும்.

புதினா மற்றும் எலுமிச்சை சாறுகளை கலந்து முகத்தில் தடவலாம்

முட்டையின் வெள்ளைக் கருவை வாரம் இருமுறை முகத்தில் பூசிவந்தால் சரும நிறம் சிவப்பாக மாறுவதோடு மிருதுவாகவும் மாறும்.

அன்னாசிப் பழத்தின் சாறு, தர்பூசிணி மற்றும் பப்பாளி பழ சாறுகளும் சரும நிறத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## சுவையான சிக்கன் சாப்ஸ்

**தேவையான பொருள்கள்:**

சிக்கன் – அரைக் கிலோ
பெரிய வெங்காயம் – 2
தக்காளி – 2
பச்சை மிளகாய் – 3
கறிவேப்பிலை – சிறிதளவு
இஞ்சி, பூண்டு விழுது – 2 கரண்டி
மஞ்சள் தூள் – அரைக்கரண்டி
மிளகாய் தூள் – 2 கரண்டி

**வறுத்துப் பொடிக்க:**
சோம்பு – 1 கரண்டி
சீரகம் – 1 கரண்டி
மல்லி விதை – 1 கரண்டி
மிளகு – அரைக்கரண்டி
வரமிளகாய் – 5 – 6
வெந்தயம் – அரைக்கரண்டி

**வதக்கி அரைக்க:**
தேங்காய் – 3 கரண்டி
சோம்பு – அரைக்கரண்டி

தாளிக்க:
பட்டை – 2 துண்டு
சோம்பு – அரைக்கரண்டி
எண்ணெய், உப்பு – தேவையான அளவு

**செய்முறை :**
சிக்கனுடன் உப்பு, மஞ்சள் தூள் மற்றும் இஞ்சி, பூண்டு விழுது சேர்த்து அரை மணி நேரம் ஊறவைக்கவும். பொடி செய்ய வேண்டியவற்றை வெறும் தாச்சியில்; சிவக்க வறுத்துப் பொடி செய்துகொள்ளவும். அரைக்கரண்டி எண்ணெயில் தேங்காயையும், சோம்பையும் லேசாக வதக்கி அரைத்துக் கொள்ளவும். வெங்கா யம், பச்சை மிளகாய் மற்றும் தக்காளியைப் பொடியாக நறுக்கி வைக்கவும். தாச்சியில் எண்ணெய் ஊற்றி தாளிக்க வேண்டியவற்றைத் தாளித்து, வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலை சேர்த்து வதக்கவும். வெங்காயம் வதங்கியதும் தக்காளி சேர்த்து குழைய வதக்கிக் கொள்ளவும். அதனுடன் ஊறவைத்த சிக்கனைச் சேர்த்து மூடி போட்டு 10 நிமிடங்கள் வதங்கவிடவும். சிக்கன் நன்கு வதங்கியதும் தேங்காய் விழுது, மிளகாய்த் தூள் சேர்த்து கிளறி, அரை ரம்ளர் தண்ணீர் ஊற்றி வேக விடவும். சிக்கன் நன்கு வெந்ததும், உப்பைச் சரிபார்த்து பொடி செய்த பொடியைத் தூவி இறக்கவும்.



## கருவளையத்தை போக்கும் உணவுகள்

பெண்கள் என்ன வேலையாக இருந்தாலும் இழுத்துப் போட்டுக் கொண்டு தாங்களே செய்வார்கள். இப்படி எல்லா வேலைகளையும் இழுத்துப்போட்டுக் கொண்டு பார்த்தாலும்கூட கருவளையம் வந்துவிடும். அதாவது, அதிகப்படியான வேலையைத் தொடர்ந்து செய்யும் போது அதிகப்படியான சோர்வு ஏற்பட்டு, இக்குறைபாடு வந்துவிடும். குருதிச்சோகைப் பாதிப்பு உள்ளவர்களுக்கும் கூட கண்ணில் கருவளையம் வரலாம். வந்த கருவளையத்தைப் போக்க அன்றாட சமையலில் கொஞ்சம் அக்கறை காட்டினாலே போதும். கண்ணில் உள்ள கருவளையத்தை நீக்க இரும்புச்சத்து அதிகம் கொண்ட காய்கறிகளை அதிகம் உண்ண வேண்டும். முருங்கைக்கீரை, அகத்திக்கீரை, முள்ளங்கி, சின்ன வெங்காயம், பூண்டு, அவரைக்கீரை, அப்பிள், நெல்லிக்காய், விளாம்பழம், நாவற்பழம், கமலா ஆரஞ்சு, வாழைப்பழம், வெள்ளரிப்பழம், பாகற்காய், வாழைத்தண்டு போன்றவற்றில் இரும்புச்சத்து அதிகம் உள்ளது.

பொன்னாங்காணி கீரை கூட இதற்கு நல்லது தான். இந்த காய்கறிகளை சமையலில் அதிகம் பயன்படுத்தினாலே நாளடைவில் கருவளையத்தின் பாதிப்பில் இருந்து தப்பிவிடலாம். அழகான கண்களுக்கு சொந்தக்காரி ஆகிவிடலாம். கருவளையம் உள்ளவர்கள், இதுபோக இன்னொரு முறையையும் பின்பற்றலாம். வெற்றிலை போட பயன்படுத்தும் சுண்ணாம்பை ஒரு பட்டாணி அளவு எடுத்துக் கொள்ளுங்கள். அதை ஒரு கப் குளிர்ந்த நீரில் கரைத்து சுமார் ஒரு மணி நேரம் அப்படியே வைத்து விடுங்கள்.

அந்தச் சுண்ணாம்பு நீரானது தெளிந்தவுடன், அதில் இருந்து 2 ஸ்பூன் தெளிந்த தண்ணீரை வேறொரு கிண்ணத்தில் பிரித்தெடுத்துக் கொள்ளுங்கள். பிரித்தெடுத்த தண்ணீரின் அளவுக்கு எலுமிச்சைச் சாறும் பிழிந்து வடிகட்டிக் கொள்ளுங்கள். தொடர்ந்து இரண்டையும் ஒன்றாகக் கலந்து, அதை ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை கண்ணைச் சுற்றிப் பூசுங்கள். கண்விழியில் பட்டுவிடக்கூடாது.

இப்படித் தொடர்ந்து செய்து வந்தால் சில நாள்களில் கண் கருவளையம் மறைந்து விடும். அதன் பின்னர் கருவளையமே வரக்கூடாது என்று நீங்கள் விரும்பினால், உணவு முறையில் தான் மாற்றம் கொண்டுவர வேண்டும். அதாவது, இரும்புச்சத்து அதிகம் உள்ள காய்கறிகளை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெருப்பை விழுங்கியவள்! 4

கண. மகேஸ்வரன்

தொடர்கதை

கேசவனுக்கு அம்மா வியளம் அனுப்பியிருந்தாள்.
அவன் வருவானென்று இருவருமே எதிர்பாராத தருணத்தில் அவன் வந்து சேர்ந்தான்.
"ஏன் மாமி, என்னை வரச்சொன்னியளாம்?"
அவன் கண்கள் அம்மாவைக் கடந்து, அவள் முகத்தில் ஈயென மொய்த்தன.
அனித்தா முகத்தைத் திருப்பி தவிர்த்துக் கொண்டாள். எழுந்து உள்ளே நகர்ந்தாள்.
"இரு, உன்னோட ஒரு விசயம் பேசவேணும்."
அம்மா சொல்வது லேசாகக் காதில் வீழ்ந்தது.
"சொல்லுங்கோ மாமி!"
அவன் ஆவல் ததும்பக் கேட்பதும் புரிந்தது.
"நாங்கள்இல்லாத நேரம் வீட்டுக்கு வந்தியாம். ஏன்..?"
அம்மாவின் வார்த்தையில் அனல் தெறித்தது.
"நீங்கள் இருப்பியள் எண்டுதான் வந்தன். சத்தியமாய் அனித்தா உள்ளை இருந்தது எனக்குத் தெரியவே தெரியாது. எவ்வளவு நேரம் பெல் அடிச்சிருப்பன். நீங்கள் இல்லையெண்டு ஒரு சொல்லுச் சொல்லியிருக்கலாமல்லோ....!"
அப்பாவித்தனமாய் விடையிறுப்பது போல் அவன் என்னை வம்புக்கு இழுத்தான்.
"டேய்... எனக்கென்ன செகிடெண்டு நினைச் சனியே... ஆரும் ஏனெண்டு கேளாவிட்டால் திரும்பியிருக்கலாம்தானே. அவளை ஏன்டா கிலிகொள்ள வைச்சனி?"
அம்மா ஆவேசமாய்ப் பொரிந்தாள்.
"அதுதான் மாமி... இல்ல எண்டு...."
அவன் மீண்டும் சொன்னதையே சொல்ல வந்தபோது, அம்மா நெருப்பாய்ச் சீறினாள்.
"உனக்குவள் எத்தனையாந் தாரம் வேணும்?"
"மாமி....!"
அவன் உரத்து அடக்குமாப்போல் கூவினான்.
"உன்னை நம்பி எந்தப் பெண் கதவைத் திறப்பாள்...? சொல்லடா நாயே..."
அம்மா வெடித்தாள்
அவனும் பதிலுக்கு வெடித்தான்
"....நான் ஒண்டும் மானம் ரோசமில்லாத மடையனில்லை, நீங்கள் நாயே பேயே எண்டு என்னை அவமானப்படுத்துறத்துக்கு. இப்பிடி வாசல்வரை கூப்பிட்டு இம்சைப் படுத்துவியள் எண்டு தெரிந்திருந்தா, இந்த வீட்டு வாசல்படியைக்கூட மிதிச்சிருக்க மாட்டன்...ஓ....!"
"உன்னை ஆர் மிதிக்கச் சொன்னது? அதைச் சொல்லத்தான் கூப்பிட்டன். மானத்துக்குச் சாரன் உடுக்கிறவனாயிருந்தால், இனி இந்தத் திசையிலும் தலை வைச்சுப் படுக்காதை... போ... போடா, போ...?"
அம்மா கட்டளையிடுவதுபோல் பொரிந்து தள்ளினாள்.

அவன் அவமானத்தால் குன்றிப் போயிருக்க வேண்டும். உடனேயே புறப்பட்டுப் போனான். வீராப்பு வசனம் எதுவுமே பேசாமல், அவன் தலை கவிழ்ந்து புறப்பட்டது என்னவோ போலிருந்தது.
அம்மா ஆபத்தை விலை கொடுத்து வாங்கியிருக்கிறாளோ என எண்ணத் தோன்றியது. நான் உண்மையில் உள்ளூரப் பயந்து போனேன். இருந்தாலும் அம்மா இவ்வளவுக்கு முரட்டுத்தனமாக நடந்திருக்கத் தேவையில்லை என்று மனதுக்குப்பட்டது.
அப்பா கடைக்குப்போய் வரமுன்னம் என்ன வேகமாய் ஆடி ஆளையே வெளியேற்றி விட்டாள்.
அம்மா சதுரங்கம் ஆடி நான் பார்த்ததில்லை. சதுரங்க விளையாட்டில் காய் நகர்த்துவதிலும் வலு கில்லாடியாய் இருப்பாள் போலும்.
அம்மாவின் சாணக்கியத்தை நினைக்க வியப்பாயுமிருந்தது. அதன் பின் விளைவுகள் எப்படியிருக்குமோ என்று நினைக்கப் பயமாயுமிருந்தது.
அப்பா என்னதான் கோபக்காரராய் இருந்தாலும், இவ்வளவு வைராக்கியம் வராது. அதற்காக அவரைக் கோழை என்றும் சொல்ல முடியாது. அண்ணன் மகன்தானே, என்ன செய்யப்போகிறான் என்ற எண்ணமே அம்மாவுக்கு இவ்வளவு துணிச்சலைக் கொடுத்திருக்க வேண்டும்.
அப்பா குடையை மடித்து ஸ்கிரீனில் மாட்டி விட்டு நிமிர்ந்தபோது, அம்மா அப்பாவுடனும் வெடுக்கெனப் பாய்ந்தாள்.
"வாருங்கோ...! உங்களுக்குக் குடும்பப் பொறுப்பென்று ஒண்டு இருந்தால்தானே. இனிச் சமையலை மட்டுமில்லை, அதையும் சேர்த்து நான்தான் சுமக்கப்போறன். பென்சன் எடுத்தாச்செல்லே, இனிப் பெட்டிப்பாம்பாய் அடங்கிக் கிடவுங்கோ...!"
அம்மா என்ன சொல்ல வருகின்றாள் என்று புரியாமல் அப்பா திகைப்படைந்திருக்க வேண்டும். வெட்டொன்று துண்டிரண்டாய் வார்த்தைக்கு வார்த்தை மறுத்தானடிக்கும் அப்பா, அந்தச் சொல் கேட்டுக்கொஞ்சம் ஆடித்தான் போய்விட்டார் போலும். அவரிடமிருந்து ஒரு வார்த்தைதானும் வெளிவரவில்லை.
அத்துடனேயே அம்மா அரண்டுபோய் விடுவாள் என்று எதிர்பார்த்தேன். அதுவும் நடக்கவில்லை.
"இஞ்ச பாருங்கோ! குட்டக் குட்டக் குனியிறவனும் முட்டாள். குனியக் குனியக் குட்டுபவனும் முட்டாள்தான். இது நான் சொல்லித் தெரியிறதில்லை. நீங்கள் எப்ப அவளுக்கு ஒரு மாப்பிள்ளை பார்த்து முடிச்சு வைக்கப்போறியள்?"
அப்பா எதற்கும் மௌனமாகியிருந்தார்.
மௌனம் கலக நாஸ்தி என்பதை இப்போதுதான் புரிந்து கொண்டிருப்பாரோ, என்னவோ?
"நான் கேட்கிறேன்னெல்லே.... எப்ப பார்க்கிறதாய் உத்தேசம்?"
"என்னடி...? எதிர்த்தொரு வார்த்தை பேசாத நீ, இன்றைக்கென்னடி என்னையே கேள்வி கேட்கிறாய்? ஆர் கொம்பு சீவி விட்டது?"
ஆத்திரத்துடன் அப்பா பல்லை நெருடுவது துலாம்பரமாகக் கேட்டது.
அம்மா பாவம். அடித்து நொறுக்கினாலும் நொறுக்குவார் போல் இருந்தது.
அடக்க முடியாமல் மெல்லத் தலையை நுழைத்தேன்
"அம்மா! கொஞ்சம் பேசாம இருக்க மாட்டீங்களே....?"
"........... உன்னை யாரடி இங்க மூக்கை நுழைக்க சொன்னது? நீ உள்ள போகலாம்....!"
"அம்மா ......!" அம்மாவா இப்படி?
அம்மாவின் வார்த்தையால் அதிர்ந்தேன்.
ஐயோ! என்னைக் கேசவனுக்கா?
அவனை என்ன பேச்சுப் பேசித் துரத்தி விட்ட அம்மாவா, இப்போது என்னை அவனிடம் பலிக்கடாவாக...
எனக்குக் கலியாணமே வேண்டாம் என்று பெருங் குரலெடுத்துக் கத்த வேண்டும் போலிருந்தது. முடியவில்லை.
இயலாமை எவரையும் எதையுமே செய்ய வைக்கும்போல...
"அது ஒருபோதும் நடக்காது!"
அப்பா ஆப்பறைந்தாற் போல் வார்த்தையை வீசி அடித்துச் சொன்னார்.
"அப்ப எது நடக்கும்? என்ன செய்வதாய் உத்தேசம்?"
"அது எனக்குத் தெரியும்."
"தெரியுமெண்டால்? உங்கடை சொந்த பந்தங்களுக்கைதான் ஒருதரும் சீர்வரிசை செனத்தி இல்லாமல் பெண்ணெடுக்க மாட்டினமே... உங்களுக்கோ கேட்கிறதைக் கொடுக்கவும் வ்க்கில்லை....!"
"செல்லம்மா....!"
வீடே அதிர பெரும் கூச்சல் போட்டார் அப்பா.
அம்மாவின் அந்த வார்த்தைகள் மிகக் கொடியவைதான். அப்பாவால் மட்டுமல்ல, யாராலுமே தாங்க முடியாதுதான்.



உருத்திர மூர்த்தியை நேரில் தரிசித்தாற் போல் பதறியது தேகம்
"அண்ணன்ர மேனுக்கு நான் அவளைக் கட்டி வைக்கப்போறன்!"
பயத்தோடு ஏறிட்டேன்.
"ஆ..........ஆ.........."
அப்பா நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டார்.

*(நெருப்பு உமிழும்)*



# ஆண்டவனின் அவதாரம்

அறியாத வயதில் 'அ'னாவுக்கு
அத்திபாரம் இட்டாய்
"அப்பா" என்று தப்பாய் சொன்னால்
அமுத மொழி என்டாய்
அறைக்குள் அடைத்து வைத்து
வெளியில் அழுக்கு என்டாய்
ஆசையாய் ஆரும் தூக்கினால்
அலையாதீர் என்டாய்


கன்னத்தில் கறுப்பு பொட்டுவைத்து
கண் திருஷ்டி என்டாய்
உப்பு இன்றி உனவு அளித்து
ஊட்டம் என்டாய்
உலகுக்கு என்னை காட்டி நீ
உத்தமனாய் வாழச்செய்தாய்
நீ என் அன்னை அல்ல அந்த
ஆண்டவனின் அவதாரம்.

கா.கிரிதரன்,
கந்தசாமிநகர்,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.காசிப்பிள்ளை

சிறுகதை



# அரசியல் ஆதாயம்!

எங்களுடைய நாட்டிலை இனப்பிரச்சினை ஆரம்பித்த காலத்திலைதான் தமிழ் இளைஞர்கள் பலர் விசாரணைக்கென்று கைது செய்யப்பட்டார்கள். சிலர் சிறையிலடைக்கப்பட்டார்கள். இப்படியே பல்வேறு வகையான நெருக்கடிகள் தொடங்கின. இதைக் கண்ட பலர், பிள்ளைகளைக் காப்பாற்றும் நோக்கில் வெளிநாடுகளுக்குப் பறக்க ஆரம்பித்தனர். சிலர் கொழும்பு வரை சென்று பிள்ளைகளை மட்டும் அனுப்பிவிட்டு வீடு திரும்பினர். இவர்களுடன் இளையராசாவும் இணைந்து கொண்டான்.

இளையராசா ஏ.எல். வரை படித்தவன். ஆங்கிலத்திலும் ஓரளவுக்கு கதைக்கக்கூடிய திறமையுமிருந்தது. இவன் படிப்பை முடித்த பின் வாகன விபத்தொன்றினால் ஒரு கையை இழந்திருந்தான்.

மீசாலையில் வசித்து வந்த இளையராசா பலவிதமான கெடுபிடிகளுக்கு மத்தியில் கொழும்பைச் சென்றடைந்தான். அந்தக் காலத்தில் கொழும்பிலுள்ள தங்குமிடங்களில் எல்லாம் தமிழ் ஆள்களே நிரம்பி வழிந்தனர். யாரைப் பார்த்தாலும் வெளிநாடுகளுக்கு ஆள்களை அனுப்பும் முகவர்களுடன்தான் கதைத்துக் கொண்டிருப்பார்கள். "என்னை லண்டனுக்கு அனுப்புங்கோ.....", "எங்களைக் குடும்பமாக கனடாவுக்கு அனுப்புங்கோ.....", "பிளேன் ரிக்கற் தாற அண்டைக்கே முழுக்காசும் தந்திட்டுப்போறம்....." இப்படியே கதைப்பவர்கள் ஒருபுறம். முகவர்களைத் தேடித்திரிபவர்கள் இன்னொருபுறம்.

இளையராசாவும் ஒரு முகவருடன் கதைத்து காலதாமதமின்றி ஜேர்மனியைப் போய்ச் சேர்ந்தான். ஜேர்மனிக்குப் போனவுடன் முகாமொன்றிலேயே இளையராசா விடப்பட்டான். அங்கே ஆயிரத்துக்கு மேற்பட்ட யாழ்ப்பாணத்துப் பொடியங்கள். மூன்று வேளையும் சாப்பாடு. சாப்பிட்ட பின் கூட்டம் கூட்டமாக இருந்து கதைப்பதும் படுத்துறங்குவதுமாகத்தான் நாள்கள் நகர்ந்தன.

இப்படியே ஆறு மாதங்கள கடந்த பின் ஒருநாள் முகாம் பொறுப்பதிகாரியுடன் வேறு சிலரும் வந்து இளையராசா உட்பட அங்கிருந்த எல்லோரையும் விசாரணை செய்தனர். விசாரணையின் போது தமிழ் மொழிபெயர்ப்பாளரும் ஒருத்தர் இருந்தார். ஏன் இங்கு வந்தீர்கள்? உங்களுக்கு உங்கள் நாட்டில் என்னென்ன பிரச்சினைகள் இருந்தன? உங்கள் நாட்டில் உள்ள பிரச்சினைகள் தீர்ந்தால் திரும்பவும் போவதற்கு சம்மதமா? இப்படியே பல கேள்விகளைக் கேட்டார்கள்.

இதன் பின்னர் தினமும் நூறு பேரளவில் சொற்ப வாழ்வாதார உதவிகளும் கொடுத்து ஜேர்மனியில் தங்குவதற்கு தற்காலிக அனுமதிப்பத்திரமும் வழங்கி முகாமிலிருந்து வெளியேற்றினார்கள். முதல் நூறு பேரில் இளையராசாவும் வெளியேறினான். அந்தக் காலத்தில் சிறிலங்காவிலிருந்து அகதியாகப் போனவர்களுக்கு ஜேர்மனி நாட்டு மக்களின் அனுதாபப் பார்வை நிறையவே இருந்தது. இதனால் இவர்களுக்கு மக்களாலும் தொண்டு நிறுவனங்களாலும் பலவிதமான உதவிகள் கிடைத்தன.

இளையராசா அங்கிருந்த பழக்கடையொன்றின் பின்புறமாக இருந்த அறையில் தங்கினான். ஒருவாரம் கடந்த பின் இளையராசாவின் அறைப் பக்கமாக சில கிறிஸ்தவ மதத்தொண்டர்கள் வந்தார்கள். ஒரு கையுடன் நின்றவனைக் கண்டவுடன் ஆங்கிலத்திலேயே பல விடயங்களைக் கேட்டறிந்துவிட்டு இறுதியாக அங்கு நின்ற கிறிஸ்தவ தொண்டர் ஒருவர் சொன்னார்,

"நீர் எங்கள் மதத்துக்கு மாறினால் உமது வாழ்வுக்கு என்றுமே உறுதுணையாக நாமிருப்போம். நீர் ஒரு கையையும் இழந்த நிலையிலிருப்பதால் இயேசுபிரானின் அருள் உமக்குக் கிடைக்க வேண்டும். இதற்காக நாம் இயேசுவை மன்றாடிக் கேட்போம். இன்றே கிறிஸ்தவ மதத்துக்கு மாற வேண்டும். என்ன சொல்கிறீர்....?"

இளையராசா எல்லா மதங்களைப் பற்றியும் நன்கு அறிந்தவன். ஒவ்வொரு மதமும் இறைவன் ஒருவனே என்ற உண்மையைச் சொல்வதாகத்தான் அவன் நம்பிக்கொண்டிருந்தான். சகல மதங்களும் இறைவனை வெவ்வேறு பெயரால் அழைத்தாலும் வழிபாட்டு முறையில் வேறுபாடுகள் இருந்தாலும் இறுதி முடிவு நன்மைகளைச் செய்வோர் சொர்க்கத்துக்கும் தீமைகளைச் செய்வோர் நரகத்துக்குமே செல்வார்கள் என நினைத்தவன் கிறிஸ்தவ மதத்துக்கு மாற உடன்பட்டான்.

"வெரிக்குட்" என்ற கிறிஸ்தவ தொண்டர், "ஞாயிற்றுக்கிழமை அதிகாலை எங்கள் தேவாலயத்துக்கு வர ஆயத்தமாக நில்லுங்கள். உங்களை ஏற்றிச் செல்ல வாகனத்துடன் வருவோம்" என்றார்.

அவர்கள் சொன்னபடியே ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் வாகனமொன்று வந்தது. இளையராசாவும் அதில் ஏறிக்கொள்ள சற்று நேர ஓட்டத்தின் பின் தேவலாயத்தின் முன் நின்றது. கொட்டும் பனியிலும் சிறுவர் தொடக்கம் முதியோர் வரை ஆயிரக்கணக்கானோர் தேவலாயத்தினுள் நின்றனர். இவர்களின் முன் பல கிறிஸ்தவ குருமாரும் காணப்பட்டனர்.

சொற்ப நேரத்தின் பின் வழிபாட்டுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. எல்லோரும் அமைதி காத்தனர். அதன் பின் தங்கநிறச் சிலுவையில் காணப்பட்ட இயேசுபிரானை நோக்கி கையேந்தி நின்றனர். பின்னர் அங்கிருந்தோர் இயேசுநாதரைப் பற்றிய பாடல்களை இனிமையான குரலில் ஒருமித்துப் பாடினர். ஒவ்வொரு பாடலின் முடிவிலும் அங்கிருந்த குருவானவர்கள் மாறி மாறி இயேசுவின் போதனைகளையும் சொல்லிக்கொண்டிருந்தார்கள். மனிதர்களாகிய நாமெல்லோரும் ஒற்றுமையாகவும் நல்லொழுக்கமாகவும் இருப்பதுடன் எல்லா உயிர்களிடத்தும் அன்பாகவும் இருக்கவேண்டும், இப்படி வாழ்பவர்கள்தான் தேவனுடைய பரலோகத்துக்குச் செல்லமுடியும் என்ற மாதிரியே அன்றைய போதனைகள் தொடர்ந்ததை இளையராசா தனக்குத் தெரிந்த ஆங்கில அறிவின் மூலம் தெரிந்து கொண்டான்.

சரியாக மூன்று மணித்தியாலத்தின் பின் வழிபாடு முடிந்தது. எல்லோரும் பக்கத்திலிருந்தவர்களுக்கு கை கொடுத்து தங்கள் அன்பை வெளியிட்டனர்.

இளையராசா ஒரு கையுமில்லாமல் ஒரு புறத்தில் ஒதுங்கி நின்றதைக் கண்ட பலர் அவனை அணுகிக் கதைக்க ஆரம்பித்தனர். சிறிலங்காவிலிருந்து அகதியாக வந்தவர், ஒரு கை இல்லாததினால் வேலைகளைச் செய்ய முடியாது என்பதை அறிந்த பலர் தங்களுடைய கையினுள் இருந்த பெறுமதியான ஒவ்வொரு பண நோட்டைக் கொடுத்துவிட்டுச் சென்றனர். இறுதியாக அந்தத் தேவாலயத்தின் குருமார்கள் இளையராசாவை அனுதாபப் பார்வையுடன் அணுகினர். ஒவ்வொருவராக மாறி மாறிக் கதைத்தனர். பின் தங்களுக்குள்ளேயும் ஏதோ பேசிக்கொண்டனர். ஈற்றில் ஒரு குருவானவர் – "இந்தத் தேவாலயத்துக்குரிய ஓர் அறையில் நீர் இன்றே வந்து தங்கலாம். சாப்பாடு ஏனைய செலவுக்கான பணமும் தருவோம்"– என்றார்.

அன்று தொடக்கம் இளையராசா அந்தத் தேவாலயத்திலுள்ள ஓர் அறையிலேயே தங்கினான். பணத்துக்கும் பஞ்சம் ஏற்படவில்லை. ஓரளவு வசதியாகவே வாழ்ந்தான். இந்தக் காலத்தில் வாரத்தின் மூன்று நாள்களின் இரவுவேளையில் ஒரு குருவானர் இளையராசாவிடம் வந்து தமிழ்மொழியைப் படிப்பார்.

இப்படியே ஆண்டுகள் பல கடந்தன. அன்றொரு நாள் தமிழ் படிக்கும் குருவானவர் கேட்டார். "உங்கடை நாட்டிலை ஆட்சி மாற்றமொன்று ஏற்பட்டிருக்குதாம். இந்த மாற்றத்தினால் உங்கள் இனத்துக் குரிய உரிமைகள் கிடைக்குமா?" என்று. எங்கட நாட்டிலையுள்ள பெரும்பான்மை இனத்தாரிடையே இரண்டு பெரிய கட்சிகள் இருக்கு. இந்தக் கட்சிகளில் ஒன்றே ஆட்சிக்கு வருவது வழக்கம். ஆட்சிக்கு வரும் கட்சியினர் தமிழினத்துக்கு உரிமைகளைக் கொடுத்தால் மீண்டும் அந்தக் கட்சி எக்காலத்திலுமே ஆட்சிக்கு வர முடியாதளவுக்கு இனவாதப் பரப்புரை இடம்பெறும். தற்போது பெரிய கட்சிகள் இரண்டும் ஒன்றிணைந்தது போல இருந்தாலும் இனவாதத்தில் ஊறிய பெரும்பான்மை மக்கள் வருங்காலத் தேர்தல்களில் தங்களைப் படுகுழியில் தள்ளி விடுவார்களோ என்ற பயத்தினால் தமிழினத்துக்கு இப்போதைக்கு உரிமைகள் கிடைக்க வாய்ப்பில்லை" என்றான் இளையராசா.

"அப்படியா......? அரசியல் ஆதாயம் கருதியே உங்களினத்தின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இல்லையா......?" என்றார் குருவானவர்.

தங்களுடைய நிலைமை, கடவுளின் பிரதிநிதிகளுக்கே தெரிந்திருக்கிறதே என்று நினைத்துச் சந்தோசப்பட்டான் இளையராசா. தான் ஆலயத்தில் தங்கியிருந்தது நல்லதாகப் போயிற்று என்று அவன் என்றுமில்லாதவாறு புளகாங்கிதமடைந்தான்.

> இளையராசா ஒரு கையுமில்லாமல் ஒரு புறத்தில் ஒதுங்கி நின்றதைக் கண்ட பலர் அவனை அணுகிக் கதைக்க ஆரம்பித்தனர். சிறிலங்காவிலிருந்து அகதியாக வந்தவர், ஒரு கை இல்லாததினால் வேலைகளைச் செய்ய முடியாது என்பதை அறிந்த பலர் தங்களுடைய கையினுள் இருந்த பெறுமதியான ஒவ்வொரு பண நோட்டைக் கொடுத்துவிட்டுச் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆரோக்கியம்

எந்தக் கதாபாத்திரத்தையும் மையப்படுத்தாமல் ஒரு சம்பவத்தை அல்லது பிரச்சினையை மையப்படுத்தும் படங்களின் வகையைச் சேர்ந்தது பிரம்மாவின் இயக்கத்தில் வந்துள்ள *"குற்றம் கடிதல்"* ஆகும். யதார்த்தத்தைச் சமரசம் செய்துகொள்ளாமல் விறுவிறுப்பாக இதைக் கையாண்டுள்ள பிரம்மாவின் முயற்சி பாராட்டத்தக்கது.

லாரியில் பயணம் செய்யும் அந்த இளம் ஜோடியின் முகத்தில் பெரும் கலவரம். குறிப்பாக அந்தப் பெண்ணின் முகத்தில். அதற்கான காரணத்தைச் சொல்வதாக விரிகிறது படம்.

தனியார் பாடசாலையொன்றில் ஆசிரியையாகப் பணியாற்றுபவர் மெர்லின் (ராதிகா பிரசித்தா). திருமண விடுப்பு முடிந்து பள்ளிக்குச் செல்கிறார். சக ஆசிரியையின் வேண்டுகோளை ஏற்று அவரது வகுப்பைக் கவனித்துக்கொள்ளச் செல்கிறார். அங்கே மெர்லின் செய்யும் ஒரு சிறு தவறு ஒரு பையனைக் கடுமையாகப் பாதித்துவிடுகிறது. மெர்லினையும் பெரும் சிக்கலில் தள்ளி விடுகிறது.

அந்தப் பையன் என்னவானான்? ஆசிரியைக்கு என்ன நடக்கிறது? இந்த இருவரையும் சுற்றியிருப்பவர்கள் இந்தப் பிரச்சினையை எப்படி அணுகுகிறார்கள்? பிரச்சினையின் வேர் எப்படிப் பார்க்கப்படுகிறது? இந்தக் கேள்விகளுக்கான பதிலாகப் பரபரவென்று நகர்ந்து செல்கிறது படம்.

ஒரு சம்பவம் அதனோடு சம்பந்தப்பட்டவர்களாலும், காவற்றுறை, ஊடகம், பொதுமக்கள் ஆகியோராலும் எவ்வாறு பார்க்கப்படுகிறது என்பதை யதார்த்தமாகவும் அழுத்தமாகவும் காட்டியிருக்கிறார் இயக்குநர். பார்வையாளர்களைப் பதற்றத்துக்கு உள்ளாக்கும் இந்தச் சம்பவங்களை யொட்டிப் பல தரப்பட்ட மனிதர்கள் வருகிறார்கள். ஒவ்வொருவரின் கோணமும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. எல்லோருடைய பின்னணிகளும் முறையான பிரதிநிதித்துவம் பெறுகின்றன. அசம்பாவிதம் நிகழக் காரணமான ஆசிரியையின் உணர்வு, பள்ளி நிர்வாகத்தின் அணுகுமுறை, பாதிக்கப்பட்ட சிறுவனின் தாய்மாமனின் கோபம், அம்மாவின் கையறு நிலை, என எல்லாமே அடர்த்தியானவை.

காட்சிகளால் கதை சொல்லும் கலை பிரம்மாவுக்குக் கைகூடியிருக்கிறது. பிரச்சினையில் மாட்டிக்கொள்ளும் ஆசிரியையின் காற்செருப்பில் ஒரு பிளாஸ்டிக் உறை ஒட்டிக்கொள்கிறது. அது தெரியாமல் அவர் நெடுந்தூரம் நடந்து வருவது, அவரது பதற்றம் அவரை எந்த அளவுக்கு ஆட்கொண்டிருக்கிறது என்பதைக் காட்டி விடுகிறது.

24 மணிநேரத்தில் நடக்கும் சம்பவங் களினூடே வேகமாக நகர்கிறது படம். வேகமான திரைக்கதை என்றாலும் பல்வேறு நுட்பங்களையும் தவறவிடாமல் பதிவுசெய்திருப்பது சிறப்பு. மனிதன் என்னதான் சூழ்நிலைக் கைதியானாலும், எல்லோருமே பதற்றத்தில் மனித நேயத்தைத் தொலைத்து விடமாட்டார்கள் என்னும் உண்மையையும் படம் காட்டுகிறது.

கோபத்தின் உச்சியில் இருக்கும் தாய்மாமன் பள்ளியின் முதல்வரைச் சொற்களால் வறுத்தெடுக்கிறார். அதற்குப் பதிலாக முதல்வரின் மனைவி சொல்லும் சில வார்த்தைகள் அவர் மனதைத் தொடுகின்றன. "நாங்க விட்டிட மாட்டோம் தம்பி" என்று அந்த அம்மையார் மெய்யான உணர்வுடன் சொல்லும்போது தாய் மாமனின் மனம் நெகிழ்வதை உணர முடிகிறது.

பாதிக்கப்பட்ட அன்னையை, ஆசிரியை சந்திக்கும் இடம் அற்புதமான கவிதை. மனித



இயல்பின் மகத்தான பரிமாணத்தை அழகாகக் காட்டும் காட்சிகள் இவை.

சிறுவனின் தாய்மாமன் பொதுவுடமைச் சித்தாந்தம் பேசும் தோழராக வருவது யதார்த்தம். ஆனால் அரசியல் கோட்பாடு பேசப்படும் இடங்கள் இயல்பாக இல்லை. ஆசிரியையின் கிறிஸ்தவத் தாயார் தன் மகள் ஒரு இந்துவைத் திருமணம் செய்துகொண்டது குறித்துக் காட்டும் வெறுப்பும் நம்பும்படி இல்லை. பாடசாலைக் காட்சிகளும் பாடசாலைக்கு அருகிலுள்ள குடியிருப்புப் பகுதியின் காலைநேரக் காட்சிகளும் இயல்பாக இருக்கின்றன.

பாலியல் கல்வி குறித்த விவாதம் தேவைக்கதிகமாக நீள்வதைத் தவிர்த்திருக்கலாம். ஊடகங்களின் போக்கைச் சொல்லும் காட்சிகள் கூர்மையாக இருந்தாலும் திரைக்கதையில் கச்சிதமாக ஒட்டவில்லை. சில காட்சிகள் துருத்திக்கொண்டிருக்கின்றன. குறிப்பாகப் பையனின் தாய் மாமனின் சமூக உணர்வைக் காட்டுவதற்கான காட்சிகள்.

நடிகர்கள் தேர்வு திரைக்கதையின் நம்பகத்தன்மைக்குப் பெரிதும் உதவியிருக்கிறது. பாத்திரங்கள் உண்மை வாழ்வில் நாம் சந்திக்கும் மனிதர்களுக்கு மிக நெருக்கமாக இருக்கிறார்கள். கிட்டத்தட்ட எல்லோருமே புதுமுகங்கள். ஒவ்வொரு நடிகரையும் கதாபாத்திரமாகவே மாற வைத்திருப்பதில் இயக்குநரின் ஈடுபாடும் உழைப்பும் தெரிகின்றன. ராதிகா பிரசித்தாவின் நடிப்பு அபாரம். குற்றவுணர்வும் பீதியும் பதைபதைப்பும் அவர் முகத்தில் தத்ரூபமாகப் பிரதிபலிக்கின்றன. பல சமயம் அவர் கண்களே எல்லாவற்றையும் சொல்லி விடுகின்றன. சங்கர் ரங்கராஜனின் இசையில் பாடல்கள் இனிமையாக உள்ளன. பின்னணி இசை திரைக்கதையின் ஆழத்தைக் கூட்டுகிறது. மணிகண்டனின் ஒளிப்பதிவு படத்துக்கு இயல்புத் தன்மையைத் தருவதில் பெரும் பங்கு வகிக்கிறது. பாரதியாரின் சின்னஞ்சிறு கிளியே பாடலைப் படமாக்கிய விதம் அற்புதம். கன்னத்தில் முத்தமிட்டால் என்னும் வரியைக் காட்சிப்படுத்திய விதமும், அடுத்த வரியைப் பாடாமல் இசையால் இடைவெளியை நிரப்பிய விதமும் படத்தின் அடிநாதத்துக்கு பொருத்தமாய் அமைந்து மனதை நெகிழச் செய்கின்றன.

சி.எஸ்.பிரேமின் படத்தொகுப்பு அருமை. விடுதிக்கு அருகே நடக்கும் கட்டைக் கூத்து கதாபாத்திரத்தின் நிலையைப் பிரதிபலிக்கிறது. ஆனால் இந்தப் பொருத்தத்தை நீட்டிமுழக்காமல் சிக்கனமாகப் பயன்படுத்திக்கொள்கிறார் பிரேம். கடைசிக் காட்சியில் தோழர் உதயன் ஊடகத்திடம் பேசுவார் என்று எதிர்பார்க்கிறபோது அவர் கமராவைக் கையால் மறைத்துத் திரையில் கருப்பு வர்ணத்தைப் படரவிடுவதோடு காட்சியை முடித்துக்கொள்கிறார். இப்படித்தான் பல காட்சிகளில் படத்தொகுப்புக் கூர்மையாக இருக்கிறது.

ஒரு சம்பவத்தை முன்வைத்துச் சமூக யதார்த்தத்தையும் மனித இயல்புகளையும் அழுத்தமாகக் காட்டியிருக்கும் 'குற்றம் கடிதல்' தமிழ் சினிமாவுக்கு ஒரு நல்ல வரவு. மனித மனம், பழிவாங்க மட்டுமல்ல; மன்னிக்கவும் தயாராக இருக்கும் என்னும் உண்மையைக் கவித்துவமாகக் கூறும் ஆரோக்கியமான படம் இது.

---

# நட்பை மதியுங்கள்!

■ ப.ஷஜீபனா

நட்பென்பது ஆணுக்கும் ஆணுக்குமிடையில், பெண்ணுக்கும் பெண்ணுக்குமிடையில் என்பதையும் தாண்டி ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலும் உண்மையான நட்புள்ளது. இதை எவராலும் மறுக்க முடியாது.

ஒரு ஆணும் பெண்ணும் நண்பர்களாகப் பழகினாலே அவர்களைக் காதலர்கள் என்று சமூகம் பட்டம் கட்டி, நட்பையே கொச்சைப்படுத்திவிட்ட காலம் ஒன்றிருந்தது. ஆனால் நிலைமை மாறி விட்டது. ஆண் பெண் நட்பையும் இன்றைய சமூகம் ஓரளவுக்காவது புரிந்து அதை ஏற்றுக்கொண்டிருக்கின்றது.

நட்பென்ற மூன்றெழுத்துப் போர்வைக்குப் பின்னால் தவறு செய்யும் இளைஞர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அதையெல்லாம் தாண்டி நட்பு, தனது உண்மையுடன் வாழ்கிறது.

ஆணுக்கும் ஆணுக்குமான நட்பும் பெண்ணுக்கும் பெண்ணுக்குமான நட்பும் திருமணத்தையும் தாண்டி நீடிக்கும். ஆனால் ஓர் ஆணுக்கும் பெண்ணுக்குமான நட்பு அப்படி நீடிப்பதில்லை. பாடசாலை, பல்கலைக்கழகம் என்பவற்றைத் தாண்டி ஆண் பெண் நட்பு நீடிப்பதில்லை. அந்த நிலையை இந்தச் சமூகம் இன்னும் எட்டவில்லை. திருமணத்தின் பின்னரும் ஆண்கள்தான் உண்மையான நட்பை வைத்திருப்பார்கள் என்று பலர் கூறினாலும் அந்த நட்பு முறியும்போது ஆண்கள் அதனை இலகுவாகத் தூக்கி எறிந்து விடுகின்றார்கள். பெண்கள் படும் அவஸ்தையை அவர்கள் அனுபவிப்பதுமில்லை. அறிவது மில்லை.

தமது நேரத்தை எவ்வாறு செலவழிப்பது என்று தெரியாமல் அரட்டையடிப்பது உண்மையான நட்பல்ல. புரிந்துணர்வு, நம்பிக்கை, அன்பு, பாசம், மதிப்பு, பண்பு என்பவற்றைக் கொண்டதுதான் உண்மையான நட்பு. காதல் என்பது சிலருக்குக் கடைசி வரை நிலைத்திருந்தாலும் பலரிடம் நிலைத்திருப்பதில்லை. ஆனால் நட்பென்பது சாதி, மதம், மதிப்பு என்பவற்றைத் தாண்டி நிலைத்திருக்கின்றது. உண்மையான நட்பென்பதில் புரிந்துணர்வு மிகமுக்கியம். ஒரு நண்பன் தனது தோழியையோ அல்லது ஒரு நண்பி தனது தோழனையோ உண்மையாகப் புரிந்திருக்க வேண்டும். எனது நண்பன் இப்படித்தான், என் நட்பு உண்மையானது என்ற நம்பிக்கை அவசியம்.

முதலில் நண்பனையோ அல்லது நண்பியையோ நம்பவேண்டும். அவர்கள் சொல்லும் சொல்லில் மதிக்க வேண்டும். சந்தேகம் என்பது அறவே இருக்கக்கூடாது. புரிதலும் நம்பிக்கையும் நட்பில் அவசியம். ஒரு நண்பன் சொல்லும் கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டும். உண்மையான நட்புக்கிடையில் பயம் என்பது இருக்கக்கூடாது.

தனது நண்பனையோ அல்லது நண்பியையோ தனது அதிகாரத்தினுள் வைத்திருக்க வேண்டும் என்று நினைப்பது முட்டாள்தனம். நட்பென்பது ஒரு புனிதமான உறவு. நண்பர்கள் சுதந்திரப் பறவைகள். பிறகு எதற்காக நட்பினுள் பயம்?

எனது நண்பன் அல்லது நண்பி எனது விருப்பப்படிதான் இருக்கவேண்டும், நான் சொல்வதைத்தான் செய்ய வேண்டும் என நினைப்பது நட்பின் இயலாமைத்தனம். ஒரு நண்பன் தவறு செய்யும்போது அதனைத் திருத்துவது நட்பின் புத்திசாலித்தனம். நண்பன் செய்வதெல்லாம் தவறு என்று திருத்திக் கொண்டிருப்பதும் நட்பின் அடிமைத்தனம். ஒன்றைப் புரிந்துகொள்ளுங்கள். நட்பென்பதும், நண்பர்களென்பதும் இறைவன் கொடுத்த வரம். நண்பர்களை மதியுங்கள். நட்புக்கு மதிப்பளியுங்கள். எந்த நிலைமை வந்தாலும் உங்கள் நட்பைத் தூக்கி எறியாதீர்கள். உண்மையான நட்பு, நண்பர்கள் பிரிந்தாலும் அது வாழ்ந்து கொண்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைப்பக்கம்

Sudharshan

ஏதேனுமொரு நிமிடமுள்ளின் இரண்டாவது அசைவுகளின் நீட்சியிலும் ஒரு கவிதையாய்த் துளிர் விடுகிறாய்.

**அழகன்** @azhagan_

ஒருவனை உற்சாகமடையச் செய்வதில் நீங்கள் தரும் சிறு புன்னகைபோதும் வேறெதும் பெரிதாய் தேவையில்லை.

எப்போது என்னிடம் ஒரு முரண் கண்டாயோ, அன்றிலிருந்து உன் அத்தனை செயல்களும் எனக்கு முரணாகவே படுகிறது.

**பனித்துளி** @mymin

ஏதேனும் பெரும் இழப்பை சிறுவயதில் சந்தித்தவர் களிடம் இருக்கும் வாழ்க்கை பற்றிய புரிதல் நிதர்சன சாட்டைகளை கொண்டிருக்கும்.

Gobinath Retwee

**முல்லை**

பிடித்தவற்றை ரசிப்பவற்றை மனதில் பட்டவற்றை சட்டென்று பகிர்ந்து கொள்ளக் கூடிய ஓர் உறவை வாழ்க்கைக் காலத்தில் சம்பாதித்து விட வேண்டும்.

**ரைட்டர் ரகளை**

தவறுகளை மன்னிக்க முடிகிறது. மனிதர்களைத் தான் மன்னிக்க முடியவில்லை...

**அனாமிகா**

நான் நல்லவன் என்பதற்கு சாட்சி நான் செய்த எந்தத் தவறுக்கும் சாட்சி இல்லை என்பதே.






மரத்தை வெட்டாதீங்கன்னு சொன்னா, கேட்குறீங்களா..??
இப்ப பாருங்க...
பொண்ணுங்க எல்லாம்,
காத்து வரலை ன்னு
எவ்ளோ கஷ்டப்பட்றாங்க..!!

## இவங்கலாம் இன்னமும் இருக்காங்கய்யா !! சொன்னா நம்புங்க...

1) துப்பட்டாவின் நோக்கம் அறிந்து போடற பொண்ணுங்க
2) சரக்க மோந்து பார்த்தாலே மயக்கம் போடற பசங்க
3) கை முறுக்கு சுடத் தெரிந்த பாட்டிங்க
4) எவ்ளோ பெரிய சிக்கு கோலத்தையும் அசால்ட்டா போடற அம்மாக்கள்
5)அப்பா ஏதாவது கேட்டா நின்று பொறுமையாப் பதில் சொல்ற பிள்ளைங்க
6) ஒரே ஒரு மொபைல் ,ஒரே ஒரு சிம்கார்ட், ஒரே ஒரு காதல் இருக்கிற பொண்ணுங்க ,பசங்க
7) மல்லிகைப் பூவையும் கண்ணாடி வளையலையும் நேசிக்கும் பெண்கள்
8)பொண்ணுங்க கிட்ட பேச கூச்சப் படற பசங்க. முறைப் பையன பார்த்தா வெட்கப்படற பொண்ணுங்க.
9) மதிய உணவை ஒன்றாக அமர்ந்து சாப்பிடும் குடும்பங்கள்
10)சொந்த மண்ணையும் மொழியையும் மறக்காத மனிதர்கள் என !! இவங்கலாம் 100 ல 27 தான் இருக்காங்க.



**கணவன்:** என்னம்மா இது? இத்துனூண்டு இருக்கு. முட்டைய கலக்க கூட இல்ல! அப்படியே ஃபுல் பாயிலா போட்டிருக்க?
மனைவி: முட்டை என்ன நானா போடுறேன்? கோழி போட்டது சின்னதா இருக்கு, அதுக்கு நான் என்ன செய்ய?சும்மா குறை சொல்லிகிட்டு இருக்காம தொட்டுகிட்டு சாப்பிடுங்க!
இது மூன்று வருடம் ஆன ஜோடிங்க!

**கணவன்:** என்னம்மா!
இன்னைக்கு என்ன சமையல் செய்யனும்?
**மனைவி:** அதையும் நான்தான் சொல்லனுமா?
எனக்கு என்ன பிடிக்கும்னு தெரியாதா? அதை செய்யுங்க!
இது பத்து வருடத்துக்கு மேற்பட்ட ஜோடிங்க!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதித் தமிழன் கண்டது பட்டினிப் போராட்டம்!

■ சு.சொக்கலிங்கம்



மக்களாட்சி இல்லாத ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உண்ணா நிலைப் போராட்டத்தின் மூலம் மன்னனின் கவனத்தைத்திருப்பி வெற்றி கண்டாள் பெண் ஒருத்தி என்பதை அகநானூறு கூறுகிறது.

பசுமை நிறைந்த அந்தக் காட்டை முதுகோசர்கள் என்னும் நிலஉரிமையாளர்கள் எருதுகள் பூட்டி, உழுது, நீர்பாய்ச்சி, பண்பட்ட நிலமாக்கி, பயறு விதைகளை விதைத்து சிறந்த தோட்டமாக்கிப் பாதுகாத்து வந்தனர்.

ஒருநாள் அந்தத் தோட்டத்தை பசு ஒன்று மேய்ந்து விடுகிறது. அது கண்ட முதுகோசர்கள் அப்பசுவிற்குரியவனை அழைத்து விசாரிக்கின்றனர். அவன் தன்னுடைய கவனக் குறைவால்தான் இப்படி நேர்ந்தது என்று தன் குற்றத்தை ஒப்புக்கொள்கிறான். அதற்காக வருந்துகிறான். ஆயினும் முதுகோசர்கள் சினம் அடங்கினாரில்லை.

தம் கண்ணிலும் மேலாகக் காத்த அத்தோட்டம் அழிவதற்கு இவனே காரணம் எனக்கூறி அவன் கண்களைப் பிடுங்கி விடுகின்றனர். இதைக் கேள்வியுற்ற அவன் மகள் அன்னிமிஞலி கொதித்தெழுகிறாள். தன் தந்தைக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கு நியாயம் கிடைப்பதற்காக பட்டினிப்போராட்டத்தைத் தொடங்குகிறாள். உண்கலத்தில் உணவிட்டுஉண்ணாமலும்,தன்னை அழகுப்படுத்திக்கொள்ளாமலும்,தூய உடை உடுத்தாமலும் இருக்கிறாள்.

இப்போராட்டம் பல நாள்கள் தொடர்கிறது.

போராட்டத்தைக் கைவிடும்படி கேட்கும்ஊராரிடம்தன்தந்தையைக் கொடுமைப் படுத்தியவர்களை மன்னன் ஒடுக்கும் வரை ஓயாமல் போராடுவேன் என்று கூறிப் போராட்டத்தைத் தொடர்கிறாள். இச்செய்தி நாடெங்கும் பரவி, மன்னன் திதியனின் செவிக்கும் எட்டுகிறது.

போராடும் அந்தப் பெண்ணை அழைத்து, அவளை உசாவி, உண்மை நிலையை அறிந்து கொள்கிறான் மன்னன். இக்கொடிய செயலைக்கேட்டுக் கொதிப்படைகிறான். தன் குடிக்கீழ் வாழும் ஒருவனுக்கு இக்கொடுஞ்செயல் செய்த அந்த முதுகோசரைக் கொன்றொழிக்கிறான். இந்தச் செய்தியைக் கேட்ட அன்னிமிஞலி தனது பட்டினிப் போராட்டத்தைக் கைவிடுகிறாள். மக்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

மக்களாட்சியில் ஏழையின் குரலுக்கு மதிப்பளிப்பதில் வியப்பொன்றுமில்லை. ஏழைப் பெண்ணின் உணர்வுகளுக்கும் முடியாட்சியில் மன்னர்கள் மதிப்பளித்து ஆண்டதே தமிழர்களின் பாரம்பரியம் என்பதைக் காட்டும் சங்க இலக்கியப் பாடல் இதுதான்:

*முதைபடு பசுங்காட்டு அரில்பவர் மயக்கிப்*
*பகடுபல பூண்ட உழுவுறு செஞ்செய்*
*இடுமுறை நிரம்பி ஆகுவினைக் கலித்துப்*
*பாசிலை அமன்ற பயறுஆ புக்கென*
*வாய்மொழித் தந்தையைக் கண்களைத்*
*- தருளாது*
*ஊர்முது கோசர் நவைத்த சிறுமையின்*
*கலத்தும் உண்ணாள் வாலிது மூடாஅள்*
*சினத்தில் கொண்ட படிவ மாறாள்*
*மறங்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்*
*செருவியல் நன்மான் திதியற் குரைத்தவர்*
*இன்னுயிர் செகுப்பக் கண்டுசின*
*- மாறியஅன்னிமிஞலி போல*

*(அகம்.மணி.262,1-12)*

# யார் சாதனையாளர்கள்?

■ மயூரதி

புகை கசிந்தாலே அலறும் அலாரங்கள் பீதியூட்டுகின்றன. தீயணைப்புத்துறை இருக்கும் இந்தக் காலத்திலும்நெருப்புஎன்றால்ஓடுகிறோம். நெருப்பை தேவைப்படும்போது உருவாக்கலாம் என்று லட்சம் வருடங்களுக்கு முன்னர் கண்டுபிடித்த ஆதி மனிதனே சாதனையாளன் என்கிறாள் எனது தோழி.

பெற்றோர்

சாதனையாளர்கள் சிலரைச் சொல்லுங்கள் என்றால் பலரும் பில் கேட்ஸ், டோனி, தோமஸ் அல்வா எடிசன், மண்டேலா... என்கிற ரீதியில்தான் பதில் சொல்வார்கள்.

இது அறிவார்ந்தபதில்தான். ஆனால், பெருந்தன்மையான பதில் அல்ல நிச்சயமாக, நியாயமான பதிலும் அல்ல.

ஏனென்றால், இன்றைய நெருக்கடியான உலகில், கழுத்தை நெரிக்கும் போட்டிச் சந்தையில் தன் வயது மற்றும்திறமையை மீறி ஓடி, நீங்கள் கேட்டதில் பாதியையாவது வாங்கிக் கொடுத்துவிட்டு, மீதிக்குசமாளிப்புக் கண்ணீரைத் தன்னுள்ளேயே தேக்கும் வித்தையறிந்த உங்கள் பெற்றோர் சாதனையாளர் இல்லையா?

யாரையெல்லாமோ சந்தித்து, நினைத்துக்கூடப் பார்க்காத பணிவுகளை வெளிப்படுத்தி, வெயில், மழையில் நனைந்து பொருளீட்டி, மகிழ்ச்சிக்கானடிக்கெட் நீட்டப்படும். நிறைய பேர் ஏன் இவ்வளவு நேரம்? என்று அதைப் பிடுங்கிக்கொண்டு ஓடுவார்கள். கால்கடுக்கவரிசையில் நின்ற அவர்களின் பாதங்களுக்கு ஒரு ஒத்தடப் பார்வையை எத்தனை பேர் அளித்துப் போவார்கள்?

படகில் வைத்துக் குழந்தைகளை நதியில் கைவிடும் பெற்றோர்களும் இருக்கலாம். ஆனால் தான் நீரில் மூழ்கி, தன் குழந்தையைத்தலைக்கு மேல் தாங்கி வாழ்க்கையைக் கடக்கும்பாகுபலிபடக்காட்சிமாதிரிதான் அநேகப் பெற்றோர்கள்.

வீட்டிலிருந்து பெற்றோர்கள் இல்லாத இடங்களில், தாத்தா, பாட்டி எனயாரோ ஒருவர்உங்களுக்காகத் தங்கள் கனவுகளை, சின்னத் தேவைகளைத் தியாகம் செய்து தான் உங்களைக் கரைசேர்க் கிறார் கள்.

அவர்களைப் பார்த்து, பெரிசா என்ன செஞ் சுட்டீங்க...? என்று நீட்டி முழக்குகிற நாக்கு எங்கோ ஒரு ஆட்டத்தில் சிக்ஸர் அடித்த விளையாட்டு வீரரைச் சாதனையாளர் என்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

ஆதிக் குரங்கிலிருந்து சாதனையாளரைப் புகழ்வதில் தவறில்லை. ஆனால் அந்தப் பட்டியலை முதல வீட்டிலிருந்து தான் தொடங்க வேண்டும்.

சுற்றிலும் எத்தனை பேர்!

குருதி அழுத்தம், கொழுப்பு என்று 30 வயதுக்காரர்களே நோய்களுடன் அலையும்போது, முறையான வாழ்க்கை காரணமாக, "60 வயதிலும் சளி, காய்ச்சல்கூட பெருசா வந்ததில்லை..." என்பவர்கள், ஒற்றை ஆளாய் 50 பேருக்கு அறுசுவை உணவை நம் வீடுகளில் தயாரிக்கும் பெண்கள், முறை கேடாய்ப் பணம் சம்பாதிக்க வாய்ப்பிருந்தும் நல் மதிப்பீடுகள் காரணமாக அதைத் தவிர்ப்பவர்கள் எனச் சுற்றிலும் எத்தனை பேர்!

பட்டியல் எடுங்கள்

அருகில் இருப்பதாலேயே அமுதசுரபிகளின் அருமை புரிவதில்லை. உழைத்துக் களைத்த கோலத்தில், வீட்டுக்குள் நுழைவதாலேயே கடவுள்கள் அடையாளம் காணப்படுவதில்லை!

வீடு, தெரு, உலகம் என்று தான் சாதனையாளர் பட்டியல் விரிய முடியுமே தவிர, எடுத்தஎடுப்பிலேயே பிரபஞ்ச வீதியில் ஆள் தேடுவதில் என்ன அர்த்தம் இருக்கி றது...?

இன்னொன்றும் இருக்கிறது. உங்களின் சாதனையாளர்களும் இப்படித்தான்; "ஐசக்! அப்பிளைச் சாப்பிடு, அத விட்டுட்டு புவியீர்ப்பு விசை அது, இது என்று உளறாதே..." என்ற விமர்சனத்தையே முதலில் சந்தித்திருப்பார்கள். எனவே, சுற்றியிருக்கிற மனிதர்களின் எளிய சாதனைகளைப் பாராட்டக் கிடைக்கும் எந்த வாய்ப்பையும் நழுவவிட வேண்டாம். இதனால் உங்கள் மனம் விசாலம் அடையும். அடுத்தவரின் வலியை உணர்கிறபோது வாழ்க்கை பற்றிய பார்வை மாறும். இவர்களின் சின்னத் திறமைகளை மதிக்கும்போது உங்களின் சின்னத்திறமையையும்நீங்கள் அடையாளம் காண்பீர்கள்.

இப்போது சாதனையாளர் பட்டியலைத்தயாரியுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கொரு ஆசை!

மீசாலை
பா.பொன்றிலமன்.



உதிரிகளாய் சிதறி
ஒவ்வொரு திசைகளில்
தினமொரு செய்தியால்
தம்மிடை முரண் கொள்ளும்
அரசியல் தரப்புகள்
ஓரணி சேர்ந்திட
எனக் கொரு ஆசை.....
ஒவ்வொரு பொழுதிலும்
வலிகளால் நொந்து
சோகங்கள் சுமக்கும்
துயரது நிறைந்த
எங்களின் சொந்தங்கள்
வாழ்வினில் உண்மையான
வசந்தத்தின் பொழிவு வாசல்
வரை வந்து வீச
எனக்கொரு ஆசை.....
அயலவன் துன்பத்தை
பகிர்ந்திடும் உறவதாய்
அன்பென்ற விருட்சத்தை
வளர்த்திடும் சொந்தமாய்
எம்மவர் மனங்களில்
வஞ்சங்கள் பொடிபட
இன்மொழி பகிர்ந்திடும்
இனியவராயவர்
எம்மிடை உலவிட
எனக்கொரு ஆசை.....
கந்தகம் சுமந்த
எம் காற்றினை
போர் மழை தூவிய
எம் புண்ணிய பூமியை
தண்மையின் தழுவலாய்
இன் இளந் தென்றலாய்
வருடியே நிற்கும்
இளவேனில் பொழுதது
நிறைந்திட எனக்கொரு ஆசை.....
பிச்சையை கேட்டுமே
சில்லறை சேர்த்திடும்
எம் இளஞ் சிறுவரின்
ஏழ்மையைப் போக்கியே
நல்லறிவூட்டிடும் கல்வியில்அவர்
சிகரங்கள் தொட்டு
பல்கலையறிவினைப் படித்திட
கட்டாயக் கல்வியால்
வழியது செய்திட
சட்டங்கள் வந்திட
எனக்கொரு ஆசை.....
பூமியில் பேருடன்
புகழது விளங்கிட
ஒப்பற்ற தேசமாய்
எம் தாய்த் திருநாடு
உயர்ந்திட எனக்கொரு ஆசை.....

## சொற்சிலம்பம் - போட்டி இல: 389

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ✿ | 5 | 6 |
| 7 | | | | ✿ | 8 | | |
| | ✿ | 9 | | 10 | | | ✿ |
| 11 | 12 | | ✿ | 13 | | | 14 |
| 15 | | ✿ | 16 | | ✿ | 17 | |
| | ✿ | 18 | | ✿ | 19 | | |
| ✿ | 20 | | | 21 | | ✿ | |
| 22 | | | ✿ | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:..................................................
பூரணமான தபால் விலாசம்: ..........................................
..............................................................
கையொப்பம்:.......................................................

### இடமிருந்து வலம்

1.பழங்காலக்கதை
5.அளவுக்கு மிஞ்சிய ஆசை
7.சாளரம்
8.வெளிச்ச வேளை
9. திருமணம்
11.இராசதானி/ஊர்
13.உழைத்து சேர்
15.அந்தரப்படு
16.கலம்
17. தீர்வை
18. தாண்டு
19. நாண்
20.அரற்றுதல்
22.சிறிய புள்
23.பொட்டு

### மேலிருந்து கீழ்

1. சொல்லுதல்
2.சாப்பிடு
3.காடு
4.பணத்தை இப்படியும் அழைப்பதுண்டு
5. தற்செருக்கு
6.விலங்குகளுக்கு உள்ள விசேட உறுப்பு
8. காசு
10. இரப்பு
12. சூரியன்
14.முப்புரம்
16.மாணவர்களுக்கு முக்கியமானது
18.புணர்வு
19. இல்லை என்பதைக் குறிக்கும்
20.உருவமற்ற
21. இல்லம்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 387 இற்கான
சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1)சந்ததி (4)இந்த (6)கனவான் (7)கவனம் (9) பதவி (11)திடம் (12)சம்மதி (13)உளி (14)பாகுபாடு (16)பகுதி (18)கம்பன் (19)குறும்பு (20)மையல்

**மேலிருந்து கீழ்**
(1)சங்கதி (2)தகனம் (3)தினம் (4)இன்பம் (5)தலைவிதி (8)வடக்கு (10)தமக்கு (12)சளி (13) உடும்பு (14)பாக்கு (15)பாகம் (16)பன்மை (17)திறல்

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல.389 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (14.10.2015 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 387 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
து.அபிராமி,
இல.515/5 கொழும்புத்துறை கிழக்கு,
யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
திருமதி கு.குலநாயகி
இல 69, ஆனந்த நகர்,
கிளிநொச்சி.

**3 ஆம் பரிசு**
சி.புஸ்பாகர்,
பழைய தபாற்கந்தோரடி,
கரவெட்டி.

**4 ஆம் பரிசு**
த.சிவநேசம்
அளவெட்டி கிழக்கு,
அளவெட்டி.

**5 ஆம் பரிசு**
அ.தனுஜன்,
மாசேரி, வரணி

**பாராட்டுப் பெறுவோர்**
ப.சந்திரஜித்,
பிராமண தெரு,
தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.

த.முகுந்தன்,
மூத்த விநாயகர் கோவிலடி,
கரணவாய் கரவெட்டி

கி.யசோதா,
பொன்னையா, ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

சொற்சிலம்பம் போட்டி இல.389 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 18.10.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி 387 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செய்திப் பத்திரிகைகளும் அவை புரியும் பணிகளும்

# ஊடக சுதந்திரம் மற்றும் அதன் தொழில்சார் கண்ணியம்

ரம்யன்

யாழ்ப்பாணத்தில் ஒரு பத்திரிகையைத் தினசரியாக ஆரம்பித்த காலத்திலும் சரி அதற்குப் பிறகும்கூடப் பலகாலம் வரை இலங்கை அரசு, அரசு சார்ந்த பத்திரிகைகளைத் தவிர வேறு பத்திரிகைகளுக்கு விளம்பரங்களை வழங்குவதில்லையென்ற கொள்கையைக் கடைப்பிடித்து வந்திருந்தது. அதேபோன்று வர்த்தக மற்றும் வேறு தொழில்சார் நிறுவனங்களும்கூட கொழும்பிலிருந்து வெளியாகும் பத்திரிகைகளையே ஆதரித்து வந்தன. இந்த நிலமை வெகுகாலம் வரை நீடித்தது. பிராந்திய மற்றும் சிறிய பத்திரிகைகளும் மக்களைச் சென்றடைகின்றன. விரிவான விற்பனைக்கு உள்ளாகின்றன. அவைகளை மக்கள் விரும்பி வாங்கி வாசிக்கிறார்கள் என்ற நிலைமை தோன்றும் வரை இது நீடித்தது.

தேசிய மட்டத்தில் பெரிய அளவில் விற்கப்படும் பெரிய பத்திரிகைகளுக்கு மட்டுமே விளம்பரங்களை வழங்குவது என்ற ஒரு கோட்பாட்டை அரசு ஒன்று கடைப்பிடிக்குமானால் வர்த்தக மற்றும் தொழில்சார் நிறுவனங்களும் அதே வித கொள்கையை மேற்கொள்ளும்போது சிறிய பத்திரிகைகளால் வரக்கூடிய நன்மைகள் நாட்டுக்கும் மக்களுக்கும் கிடைக்காமல் போய்விடுகின்றன. அந்த நிலையில் பெரிய பத்திரிகைகள் தமது விளம்பரதாரர்களின் கருத்துக்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகின்றன. இன்னொரு விதமாகக் கூறுவதானால் பெரிய பத்திரிகைகள் தமது போசகர்களான பெரிய விளம்பரதாரர்களின் கொள்கை சார்ந்த தமது கருத்துக்களை மக்கள் மீது திணிக்கும் நிலையும் ஏற்படக்கூடும். பக்கம் சாராத் தன்மையை எதிர்பார்க்க முடியாமல் போகும். அதனால்தான் அரசுக்களும் சரி பெரிய நிறுவனங்களும் சரி ஜனநாயக விழுமியங்களை முன்னெடுக்கவேண்டும் என்ற ஒரு நல் நோக்கில் நாட்டில் மாகாண மட்டங்களில் தோன்றி உண்மையான பணிகளில் பாகுபாடுகள் இன்றிச் செயற்படுகின்ற சிறுபத்திரிகைகளுக்கும் விளம்பரங்களை வழங்கி அவை நீடித்து பணியாற்ற உதவும் வகையிலான கொள்கைகளை வகுத்துக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தப்படுகின்றது.

**பத்திரிகை சுதந்திரம்**
(Freedom of the press)

இந்தச் சொற்றொடருக்கு பங்க் அன் பென்னல் (Funk and fennel) ஆங்கில அகராதியில் பின்வரும் கருத்து வழங்கப்பட்டுள்ளது. -

*சட்டங்களால் வழமையாகச் தடை செய்யப்படுகின்ற ஒழுக்கக்கேடுகள், இராஜதுரோகம் மற்றும் அவதூறுகள் போன்றவற்றைத் தவிர்த்து தணிக்கை மற்றும் அரசின் வேறுவிதமான தலையீடுகள் இன்றி சுயேச்சையாக வெளிப்படுத்தும் உரிமை.*

காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப இந்த விடயங்களில் பத்திரிகைகள் தங்களுக்குத் தாங்களே சொந்தக் கட்டுப்பாடுகளை (சுயதணிக்கை) ஏற்படுத்திக் கொள்கின்றன. இலங்கையில் பெரும்பாலான பத்திரிகைகளும் இவ்வாறு சுயதணிக்கை முறையை கடைப்பிடிக்கின்றமை கண்கூடு. அந்த வகையில் பத்திரிகைகள் கடைப்பிடிக்கக்கூடிய சில ஒழுக்க முறைகளை இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்கள் அவையானது வெளியிட்டுள்ளது. சில முக்கிய அம்சங்கள் அடங்கிய ஒழுக்கக் கோவை ஒன்றைத் தயாரித்து பத்திரிகைகள் கடைப்பிடிப்பதற்கென வழங்கியுள்ளது. இந்த தொழில்சார் நடைமுறை ஒழுக்கக் கோவையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன் ஒருசில அம்சங்களை மட்டும் இங்கு நாம் பார்க்கலாம்.

**தொழில்சார் கண்ணியம்**

பத்திரிகைகளும் பத்திரிகையாளர்களும் தமக்கென வலுவான கருத்துக்களைக் கொண்டிருக்கவும் அவைகளை வெளிப்படுத்தவும் சுதந்திரமுடையவர்கள். அதே வேளை அவர்களின் கருத்துக்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்துவதுடன் சமூகப் பொறுப்புணர்வை பிரதிபலிக்கவும் முயற்சி செய்தல்வேண்டும்.

இந்தக் கோவை தனிமனிதனின் உரிமையை பாதுகாப்பதோடு பொதுமக்களது அறிந்துகொள்ளும் உரிமையையும் நிலைநாட்டுகின்றது. இது எழுத்தளவில் மட்டுமன்றி உணர்வு பூர்வமாகவும் மதிக்கப்படவேண்டும். தனிமனித உரிமைகள் தொடர்பாக அது பேரம் பேசுவதில் இறங்குவதாகக் குறுகிய முறையிலோ பொதுமக்கள் தொடர்பாகப் பிரசுரங்களைத் தடுக்கும் வகையில் செயற்படுவதாக பரந்த முறையிலோ இதற்கு அர்த்தம் கற்பிக்கலாகாது.

1. செய்திகளையும் செய்திப்படங்களையும் மிகச் சரியாகவும் திரிபுகள் இன்றியும் வெளியிடுவதற்கு ஊடகங்கள் எல்லா விதத்திலும் நியாயபூர்வமாகக் கவனம் செலுத்தல்வேண்டும்.

2. ஒரு செய்தி அறிக்கையானது அதன் விடய உள்ளடக்கத்தில் பிழையானது என ஆசிரியர்களால் கண்டுபிடிக்கப்படுமிடத்து பிழைதிருத்தம் அல்லது மன்னிப்புக் கோரல் பாதிக்கப்பட்டவரின் விருப்பம் இல்லாத நிலையிலன்றி உடனடியாகவும் பொருத்தமான வகையிலும் உரிய முக்கியத்துவத்துடன் பிரசுரிக்கப்பட வேண்டும்.

3. தனிப்பட்டவர்கள் அல்லது நிறுவனங்கள்




தொடர்பான உண்மையற்ற அறிக்கைகள் அவர்களின் நற்பெயரை, கண்ணியத்தை, கௌரவத்தை, உணர்வுகளை, இரகசியத்தை மற்றும் தொழிலைப் பாதிப்பதாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் பதிலளிப்பதற்கு நியாயமான போதுமான வாய்ப்பு அளிக்கப்படவேண்டும். விடயத்தின் உண்மை நிலை தொடர்பான முறைப்பாட்டாளரின் கருத்துக்கு உட்பட்டதாகவே பதில் இருக்க வேண்டும். சரியற்ற தன்மையைத் திருத்துவதற்கு மேலதிகமாக நீடிக்கலாகாது.

4. முறைப்பாட்டாளரின் பதிலுக்குப் பத்திரிகை நிறுவனம் அல்லது பத்திரிகையாளர் தவறுக்காக மன்னிப்பு அல்லது கவலை தெரிவிப்பதைத் தவிர்த்துப் பதிலளிப்பதாயிருந்தால் பாதிப்புக்குள்ளானவர் அதற்குப் பதிலளிக்க மேலும் ஒரு சந்தர்ப்பம் வழங்கத் தயாராய் இருக்கவேண்டும்.

5. தகவல்களைத் தரும் நம்பகமான மூலங்கள் வேறுவிதமாக அனுமதி வழங்கும் வரை ஒவ்வொரு பத்திரிகையாளரும் அவர்கள் பற்றிய இரகசியங்களைப் பாதுகாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்புடையவர் ஆவார்.

6. குற்றச்செயல்கள் அல்லது குற்ற வழக்குகள் தொடர்பான செய்திகள், விடயத்தில் சட்டப்படியும் பொது நலத்தை உத்தேசித்தும், இருவகையிலும் அனுமதிக்கப்பட்டிருந்தால் அன்றி பின்வருவனவற்றை பிரசுரிக்கலாகாது.

I. பாலியல் குற்றச்சாட்டில் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்கள்,

II. 16 வயதுக்கு உட்பட்டவரும் அதற்கு முன் குற்றம் புரியாதவருமான இளம் நபர் ஒருவர் குற்றச் செயல் ஒன்றில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறார் என்று தெரிந்திருந்தும் அவர் பெயரை வெளியிடுதல்,

III. குற்றம் சாட்டப்பட்ட அல்லது குற்றவாளியான ஒருவரின் உறவினர்களின் பெயர்களைச் சம்மதம் இன்றி வெளியிடுதல்.

7. ஒரு பத்திரிகையாளர் தெரிந்து கொண்டே அல்லது வேண்டுமென்றே இன அல்லது சமய குரோதச் செயல்களை அல்லது வன்முறைகளை வளர்க்கலாகாது.

I. ஒரு நபரின் இனம், நிறம், சமயம், பால் அல்லது உடல் அல்லது மனநோய் அல்லது வேறு குறைபாடுகள் தொடர்பாக பாரபட்சமான அல்லது அவதூறான முறையில் கருத்து வெளியிடுவதைப் பத்திரிகைகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

II. வெளியிடப்படும் விடயத்துக்கு நேரடியாக சம்பந்தப்பட்டிருந்தால் தவிர ஒரு நபரின் இனம், சாதி, சமயம், பால் நிலை மூலம் உடல் அல்லது மனநோய் அல்லது குறைபாடுகள் பற்றிய விவரங்களை வெளியிடலாகாது.

8. தனிப்பட்டவர்களின் சொந்த வாழ்க்கை அவர்களின் வீடு, ஆரோக்கியம், கடிதத் தொடர்புகள் முதலியவற்றை மதிப்பதற்குப் பத்திரிகைகள் விசேட கவனம் செலுத்துதல்வேண்டும். அவர்களின் சம்மதம் இன்றி இந்த இரகசியம் காக்கும் உரிமையில் தலையிடுவதாயின் அதற்கு ஏதாகிலும் மேம்பட்ட பொதுநலனே நியாயப்படுத்தக்கூடியதாய் இருக்கும்.

இரகசியம் காக்கப்படவேண்டும் என்பதற்கான நியாயமான காரணம் இருக்கும் நிலையில் தனியாருக்கு உரிய அல்லது பொதுவான இடங்களில் ஆள்களை அவர்களின் சம்மதம் இன்றி தொலைதூர வில்லைகளை அல்லது கமராக்களைப் பயன்படுத்தி படம் எடுப்பதானது பொது நலனை உத்தேசித்துஅன்றி ஏற்றுக் கொள்ளப்படமுடியாது.

புகைப்படப் பத்திரிகையாளர்கள் உட்படப் பத்திரிகையாளர் எவரும், அச்சுறுத்தல் அல்லது இடைஞ்சல் புரிதல் அல்லது தவறான பிரதிநிதித்துவம் அல்லது தந்திரோபாயம் முதலியவற்றைப் பிரயோகித்து தகவல்களை அல்லது படங்களைப் பெற்றுக்கொள்ள எத்தனித்தலாகாது. பொதுநலனை உத்தேசித்து மற்றும் வேறு வழியில் பெற்றுக்கொள்வது சாத்தியமில்லை என்ற நியாயப்படுத்தும் நிலையில் அன்றி தொலைதூர வில்லைகள் கொண்ட கமராக்கள் அல்லது ஒட்டுக்கேட்கும் கருவிகளைப் பயன்படுத்தலாகாது.

ஒவ்வொரு பத்திரிகையாளரும் தனது தொழில்சார் கண்ணியத்தைப் பேணிக் கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மென்மை பெண்மை இரண்டையும் தூக்கி எறியுங்கள்



**ர.கிருத்திகா**

ஒரு பேட்டி வாசித்தேன்... ஒவ்வொரு பெண்ணும் பெண்மை, மென்மை என்ற போலித்தனங்களில் இருந்து வெளியே வர வேண்டும் என்று!

இந்த சமூகத்தைப் பொறுத்தவரை, ஒரு பெண் என்பவள் சின்ன வார்த்தையை சாதாரணமாகப் பேசினால்கூட அதைப் பெரிது படுத்துவது வழக்கம். அதற்காக அவளை என்ன வேண்டுமானாலும் பேசலாம், அவளின் தரத்தை குறைப்பதாக நினைத்துக் கொண்டு தரம் குறைந்த வார்த்தைகளை அவள் மீது வீசலாம் என்றாகிவிட்டது. அலுவலகம், கலைத்தொழில் எல்லாவற்றிலும் பெண் மேலே வரும்பொழுது இந்த விமர்சனங்களைத் தாண்டாமல் வர முடிவதில்லை.

இந்த வார்த்தைகளை எதிர்கொள்ளும் சில பெண்கள் அப்படியே சுருண்டு முடங்கி விடுகிறார்கள். என் தோழி ஒருத்தி இருக்கிறாள். நல்ல நிலமையில் இருப்பதால் எல்லோருக்கும் நடக்கும் தாக்குதல்கள் நடக்கும். ஆனால், அவள் இருக்கும் இடத்தில் இப்படி ஏதாவது கேட்டால் முடங்கிப்போக மாட்டாள். அனைவருக்கும் உதாரணமாய் எழுந்து இன்னும் உறுதியுடன் ஓர் அலட்சியப் பார்வை பார்த்துவிட்டுக் கடந்துவிடுவாள். அந்த வார்த்தைகள் தனக்கானது இல்லை என்று காதில் போட்டுக் கொள்ளவே மாட்டாள். பேசுபவர்கள் தானே பேசி பேசி ஓய வேண்டியதுதான். அவளின் மனஉறுதி என்னை அசர வைக்கும், வைத்துக்கொண்டு இருக்கிறது.

உடை பற்றி, நம் நடத்தை பற்றி, எதைப் பற்றி வேண்டுமானாலும் பேசட்டும். நாம் நாமாக இருக்க வேண்டும். எந்த வார்த்தைகளின் சூழலிலும் மாட்டிக் கொள்ளக்கூடாது. எதற்குமே கலங்கக்கூடாது என்பதைக் கற்றுக்கொண்டால் ஒவ்வொரு பெண்ணுமே வெற்றியாளர் தான்.

உடை பற்றி, நம் நடத்தை பற்றி, எதைப் பற்றி வேண்டுமானாலும் பேசட்டும். நாம் நாமாக இருக்க வேண்டும். எந்த வார்த்தைகளின் சூழலிலும் மாட்டிக் கொள்ளக்கூடாது. எதற்குமே கலங்கக்கூடாது என்பதைக் கற்றுக்கொண்டால் ஒவ்வொரு பெண்ணுமே வெற்றியாளர் தான்.

பெண்களை முடக்குவது இந்தச் சமூகத்தில் உதிர்க்கும் பெரும்பாலான வார்த்தைகள் தான். நீ இப்படி, அவள் அப்படி, அவள் உடை சரியில்லை, அவள் பேச்சு சரியில்லை... எப்படி எதிர்த்துப் பேசுகிறாள், என்ன திமிர், நாலு ஆண்களுக்கு சரி சமமாக நிற்கிறாள்... என்ன பொம்பளை என்று பல பல விமர்சனங்களை அள்ளிவீச சமூகம் எப்பொழுதும்தயாராகவே இருக்கிறது.

நீ மென்மையானவள், மேன்மையானவள்... உன்னை யாரும் எதுவும் பேசிவிடக்கூடாது. உன்னைத் தவறாகப் பேசிவிடுவார்கள். எனவேமௌனமாகச்செல்.உன்கருத்துகளை உரக்கச் சொல்ல உனக்கு உரிமை இல்லை. அப்படிச் சொன்னாலும் உன்னால் எதிர்த்து நிற்கமுடியாது என்றவார்த்தைகளே திரும்பத் திரும்ப பெண்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.

நம் வீட்டில் வளரும் பெண் குழந்தைகளை படிக்க வைப்பது சுதந்திரமாக, தன்னம்பிக்கையாகச் செயல்படத்தான். யாரையும் சாராமல்தன்காலில்நிற்கத்தான். கஷ்டப்பட்டு கல்வி அளிக்கிறோம். ஆனால், வருங்காலத்தில் அவள் அழகிய தேவதைச் சிறகுகளோடு வெளியே வரும் பொழுது அவள் இன்னும் இந்த வார்த்தைகள், உடை பற்றிய விமர்சனங்கள் எதிர்கொள்ள நேரிடலாம்.

அவர்களைப் இப்பொழுதே தயார்ப்படுத்த வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. உடல் உறுதிக்கு உணவு அளிப்பது, மூளைக்கு கல்வி அளிப்பது மட்டும் வளர்ப்பு இல்லை. ஒவ்வொரு பெண்ணுக்கும், பெண் குழந்தைக்கும் மன உறுதி அவசியம். துணிச்சலுடன் உலகை நேர் கொள்வது மிக அவசியம். ஆணாதிக்கம் ஒழிக என்று கூறிவிட்டு வேலையை பார்ப்பது தவறானது. யாரையும் ஆதிக்கம் செய்ய விடாமல் இருக்க பெண்களுக்கு மன உறுதி தேவைப்படுகிறது. யாரையும் சாராமல் இருக்கும்பொழுது யாரும் அத்தனை எளிதாக ஆதிக்கம் செய்துவிட முடியாது.

அப்படிப்பட்ட மனஉறுதியை நான்பெறுவதற்கு சமூக வலைத் தளங்கள்தான் பெரும் உதவியாக இருந்தன. சமூக வலைத்தளத்தில் இயங்கத்தொடங்கியபோது,வெளிஉலகத்தில் இருக்கும் வக்கிரங்கள் பற்றி அதிகம் அறியவில்லை. பாலியல் வக்கிரங்கள், பெண்களை எளிதாக வார்த்தைகளால் தாக்குவது, ஒளிப்படங்கள் எடுத்துப் போட்டு அசிங்கமாகப் பேசுவது என்ற பலவற்றை வீட்டிலிருந்தே ஒரு திரையில் சந்திக்க முடிந்தது. அவற்றை எல்லாம் கடப்பது அவை பாதிக்காமல் எப்படி இருப்பது என்று எல்லாவற்றையும் படிப்படியாகக் கற்றுக்கொண்டேன். இறுதியில் எல்லாம் பழகிக் கொண்டது.



மட்டுமல்லாமல், யாராவது இவற்றைக் கண்டு பயந்து ஓட முடிவெடுத்தால் அவர்களுக்கும் சொல்ல முடிகிறது. நம் உடலிலோ, நியாயமான வார்த்தைகளிலோ வக்கிரம் இல்லை... பார்க்கும் பார்வையில் மட்டுமே. அடுத்தவர் பார்வைக்காக நாம் கவலைப்படமுடியாது என்று எடுத்துச் சொல்லும் துணிச்சலை கொடுத்தது சமூக வலைத் தளம்.

அண்மையில்கூட இணைய வெளியில் வவுனியாவைச் சேர்ந்த ஒரு பெண்ணைப் பற்றி மிகத் தரக்குறைவாகக் கருத்துக்கள் வெளியிடப்பட்டன. இத்தனைக்கும் அந்தப் பெண் தனது அந்தரங்கத்தை தனது தேவைக்காகப் பதிவு செய்ததைக் களவெடுத்து அதனைப்பார்த்துவிட்டு அவள் மீதே கடுமையாக விமர்சனம் செய்தது இந்தச் சமூகம். அவளது அந் தரங்கத்தைத் தான் களவெடுத்துப் பார்த்தது-பற்றி இந்தச் சமூகத்திற்குக் கிஞ்சித்தும் கவலையில்லை. அடுத்தவளின் அந்தரங்கத்தை களவெடுத்து நுகரும் அசிங்கமான அருவருக்கத்தக்க கேவலமான பிறப்புகளாகத் தாம் இருப்பது குறித்து இந்தச் சமூகத்துக்குக் கவலையில்லை. ஆனால், அந்தச் சம்பவத்தைத் துணிச்சலுடன் எதிர்கொண்டு, ஆம்! அது எனது உடல் தான், எனது தேவைக்கு நான் எடுத்தேன், அதையேன் நீங்கள் பார்த்துக் கொண்டு திரிகிறீர்கள் என்று விமர்சனங்களைக் கடந்து சென்ற அந்தப் பெண்ணை இப்போதும் குற்றஞ்சாட்டிக் கொண்டுதிரிகிறார்கள். இவர்கள் எல்லோரும் யார் என்று பார்த்தீர்களானால் அந்த வீடியோவைத் தமது அலைபேசிகளுக்குள் தரவிறக்கம் செய்து, அதைப் பார்த்து ரசிக்கும் வக்கிரமனம் கொண்டவர்கள். தமது வக்கிரத்தை தமது கேடுகெட்ட தனத்தை மறைக்க அந்தப் பெண்ணைக் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

நல்லவேளை அந்தப் பெண் மிகத்துணிச்சலும் நெஞ்சுரமும் கொண்டவர் என்பதால் தன் உடல் குறித்த விமர்சனங்களை தூசாகத் தூக்கி எறிந்து முன்னேறுகிறார். சமூகத்தின் கீழ்த்தரமான விமர்சனங்களை எதிர் கொள்வதற்கு ஒவ்வொரு பெண்ணிடமும் இத்தகைய நெஞ்சுரம் தேவை.

எதிர்கால பெண் குழந்தைகள் இன்னும் வெளி உலகில் வர வேண்டிய அவசியத்திலும், வேலைப் பார்க்க வேண்டிய கட்டாயத்திலும் உள்ளனர். உங்கள் வீட்டுக் கண்மணிகளுக்கு மன உறுதி அளிக்க வேண்டும். பெண்மை, மென்மை இரண்டையும் உதறிவிட்டு எந்த இழிவு சொற்களும் தனக்கானது அல்ல என்று போய்க்கொண்டே இருக்க தயார்ப்படுத்த வேண்டும்.

இப்படிச் செய்தால் மன அழுத்தங்கள், தற்கொலைகள் பலவற்றைத் தவிர்க்கலாம். மகளை நேசிக்கும் எந்த அப்பாவும் மகளுக்காக மன உறுதியை அளிப்பார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக உறுதிப்பாட்டை நோக்கிய வெளியுறவுக் கொள்கை அமெரிக்க ரஷ்யத் தலைவர்கள் ஐ.நா. பொதுச்சபையில் உறுதி

## மத்திய கிழக்கு தொடர்பில் முரண்பாடு நீடிக்கிறது



உலகின் உறுதிப்பாட்டுக்கு மிகவும் அவசியமாகக் காணப்படும் ஒரு வெளிநாட்டுக் கொள்கையையே தாம் அரவணைத்துச் செல்ல விரும்புவதாக உலகின் மிகப் பெரும் வல்லரசுகளான அமெரிக்கா மற்றும் ரஷ்யா இரண்டும் தெரிவித்திருக்கின்றன. அந்த நாடுகளின் அதிபர்கள் பராக் ஒபாமாவும், விளாடிமிர் புடினும் ஐ.நா. பொதுச் சபையில் இதற்கான உறுதியளித்துள்ளார்கள்.

ஐ.நா. பொதுச்சபையில் இரு தலைவர்களும் இரண்டு மணிநேர இடைவெளியில் ஒருவரையடுத்து மற்றவர் உரை நிகழ்த்தினர். இருந்த போதிலும் சிரியா மற்றும் ஏனைய பகுதிகளிலும் நிலவுகின்ற சிக்கல்களுக்கு இரு தலைவர்களும் ஒருவருக்கொருவர் போட்டியிடுவது போன்ற கருத்துக்களையே முன்வைத்தனர். பிராந்தியத்தின் பிரச்சினைகள் சிக்கலடைவதற்கு இருவரும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டினார்கள். அதேசமயம் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு இருதரப்பும் ஒன்றாகச் செயற்படவும் அவர்கள் விருப்பம் தெரிவித்தார்கள்.

கடந்த திங்கட்கிழமை பேரவையில் உரை நிகழ்த்திய இரு தலைவர்களும் பின்னர் தனிப்பட்ட முறையில் சந்தித்துத் தங்களுக்கிடையேயான பிரச்சினைகள் குறித்து விவாதித்ததுடன் இருதரப்பும் இணைந்து செயற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் பற்றியும் ஆராய்ந்து உள்ளார்கள். இந்தச் சந்திப்பு, கதவுகள் மூடப்பட்டு இரகசியமாக சுமார் ஒன்றரை மணி நேரம் நடந்தது.

அதன்பின் பேராளர்களுக்கு வரவேற்பளிப்பதற்காக ஒபாமா விடைபெற்றுக் கொண்டார். புடின் மொஸ்கோவுக்குப் புறப்பட்டார். அதற்குமுன் ரஷ்ய செய்தியாளர்களிடம் குறுகிய செவ்வியொன்றை வழங்கிய புடின் இரு நாடுகளுக்குமிடையில் உறவுகள் கவலையளிக்கும் விதத்தில் மிக கீழ்நிலையிலேயே காணப்படுகின்றன. அதற்கு அமெரிக்காவின் எதிர்ப்புத்தான் காரணம். இருந்தாலும் இருதரப்பு உறவு நிலையிலாகுதல் வலுப்படுத்தப்படவேண்டும் என்ற ஒரு புரிந்துணர்வு எங்களுக்குள் ஏற்பட்டுள்ளது. இதற்கான ஒரு பொருத்தமான பொறிமுறையை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பாக நாங்கள் ஆலோசிக்கிறோம் என்றார்.

இரு தலைவர்களுக்குமிடையில் பேச்சுக்கள் மிகச் சுமுகமான முறையில் நடந்திருந்தாலும் சிரியா பிரச்சினையில் அதிபர் ஆசாத்தின் பங்கு மற்றும் அரச எதிர் காலம் குறித்துஇருதரப்புக்கும்இடையில்கருத்துமுரண்பாடுகள் நீடிப்பதாகத் தெரிகின்றது. ரஷ்யாவைப் பொறுத்தவரை ஐ.எஸ்.தீவிரவாதிகள் விடயத்தில் ஆசாத்தின் அரசை ஆதரிக்க வேண்டும் என்ற கருத்து நிலவுகின்றது.

அமெரிக்கஅதிகாரிகளைப்பொறுத்தவரைஅண்மையில் சிரியாவில் ரஷ்யப்படைகள் போய் இறங்கியிருப்பதானது ஆசாத்தின் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கெதிரான நடவடிக்கைகளைவிட அவர் தமது எதிரிகளுக்கு எதிராக செயல்படுவதற்காகவே ஊக்கமளிப்பதாகவிருக்கும் என்று கருதுகிறார்கள்.

அமெரிக்கா அந்தப் பிராந்தியத்தில் ராஜதந்திர ஆதிக்கத்தை மேற்கொண்டிருப்பதையும் ஈராக், சிரியா நாடுகளில் ஐ.எஸ்.தீவிரவாதிகளின் நிலைகள் மீது அமெரிக்கத் தலைமையிலான கூட்டுப்படைகள் விமானக் குண்டுத் தாக்குதல்களை நடத்தி வருவதையும் ரஷ்யா நேரடியாகவே எதிர்த்துள்ளது.

கடந்த மாதம் சிரியாவுக்கான ஆயுத விநியோகத்தை ரஷ்யா அதிகரித்திருப்பதுடன் போர்த் தாங்கிகளையும் விமானங்களையும்கூட அதிகரித்து வழங்கியுள்ளது.

கடந்த வாரம் பாக்தாத்தில் கிளர்ச்சியாளர்களின் கூட்டணிக்கு எதிராக ஈரான் மற்றும் சிரியாவையும் இணைத்துக் கொண்டு கூட்டணியொன்றை உருவாக்கப் போவதாக ரஷ்யாவும் ஈராக்கும் அறிவித்திருந்தன.

ஒபாமா தமது ஐ.நா. உரையின்போது சிரியாவில் ரஷ்ய இராணுவக் கட்டமைப்பை உருவாக்குவது குறித்தும் உக்ரேனிய பிரிவினைவாதிகளுக்கு ஆதரவு அளித்து வருவது குறித்தும் நேரடியாக குறிவைத்து கண்டனம் தெரிவித்தார். பயங்கரவாதத்தை முறியடிக்கவும் ஒழுங்கீனத்தைத் தோற்கடிக்கவும் வெளியார் தலையீட்டைத் தவிர்க்கவும் இவ்வாறு செய்யப்படுவதாகக் கூறப்படுகின்றது.

ஒபாமா தெரிவித்தார், "நான் எனது இதயத்தில் கைவைத்துக்கூறுகின்றேன், "உலக நாடுகளாகிய நாம் மோதல்கள் தொடர்பாக மீண்டும் பழைய முறைகளுக்குப் போக முடியாது. பின்பக்கம் திரும்பிப் பார்க்க முடியாது. அதிக செயற்றிறமையுடன் எம்மால் பணியாற்ற முடியாவிட்டால் அவைகளின் எதிர்விளைவுகளால் பாதிக்கப்படுவோம்" என்று.


புடின் தனது பங்குக்குக் தெரிவிக்கையில், "ஈராக், லிபியா மற்றும் மேற்கு நாடுகள் ஜனநாயகத்தை உள்திணிக்க முயற்சி செய்வதுதான் மத்திய கிழக்கிலும் வடஆபிரிக்காவிலும் கொந்தளிப்புக்கள் தலை தூக்கக் காரணமாக இருக்கிறது" என்று சாடினார். "அந்தப் பிரதேசங்களில் வாழுகின்ற மக்கள் மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள்தான். அது அவர்களுக்குத் தேவையும்தான். ஆனால் ஜனநாயகம் என்ற பெயரில் புரட்சிகளை ஏற்றுமதி செய்வதானது வன்முறைகளையும் சமூக அழிவுகளையுமே ஏற்படுத்தியுள்ளது" என்றார் புடின். ஜனநாயகத்துக்கு அதில் வெற்றி கிடைக்கவில்லை என்றும் சொன்னார்.

"இந்த நிலைமையை உருவாக்கியவர்களிடம் நான் கேட்க விரும்புவது நீங்கள் செய்து விட்டதை இப்பொழுதாகினும் உணர்கிறீர்களா என்பதுதான்" என்றார்.

இது நிச்சயம் அமெரிக்காவை நோக்கி விடுக்கப்பட்ட கேள்விதான். ஆனால் பெயர் குறிப்பிடப்படவில்லை.



# காஷ்மீர் பிரச்சினை ஐ.நா. உதவியைக் கோருகிறார் பாகிஸ்தான் பிரதமர்



இந்தியாவும்பாகிஸ்தானும்தங்களுக்கிடையிலான அமைதிப்பேச்சுக்களைத் தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும் என்று ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

பாகிஸ்தானும் இந்தியாவும் தங்களுக்கிடையிலான அமைதிப் பேச்சுக்களைத் தொடர வேண்டும் என்பதுடன் ஆப்கானிஸ்தானுடனும் தனது தொடர்புகளை நீடித்து அந்த நாட்டின் உறுதிப்பாட்டுக்குப் பாகிஸ்தான் உதவ வேண்டும் என்றும் பான்கீ மூன் கேட்டுக்கொண்டுள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரிப்புடன் பான் கீ மூன் சந்திப்பு ஒன்றை நடத்தியதன் பின்னர் விடுக்கப்பட்ட அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலுள்ள கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் பதற்றத்தைக் குறைக்க செயலாளர் நாயகம் தமது பணிமனையில் நற்பணிகளை பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ள பாகிஸ்தான் பிரதமர் காஷ்மீர் தொடர்பாக பாதுகாப்புச்சபை நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை செயற்படச் செய்யவும் காஷ்மீர் மக்களின் கருத்தை அறிய அவர்கள் மத்தியில் கருத்துக்கணிப்பை நடத்தவும் உதவும்படி பான்கீமூனை கேட்டுக்கொண்டிருக்கிறார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

# பதவி இழந்த தாய்லாந்துப் பிரதமர் அரசு மீது வழக்கு

பதவியிலிருந்து நீக்கப்பட்ட தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் யிங்லக் சினோவாத்ரா தம்மை பதவி நீக்கம் செய்தவர்களுக்கு எதிராக பாங்கொக் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

யிங்லக் சினோவாத்ரா மீது குற்றவியல் விசாரணை நடத்தப்பட்டு பதவி நீக்கம் செய்யப்பட்டு ஒரு வருடங்களுக்கு மேல் ஆகின்றது. விவசாயிகளுக்கான மானிய விலை அரிசி விநியோகத்தில் ஊழல் இடம்பெற்றதாக விசாரணை நடத்தப்பட்டு பதவி நீக்கம் செய்யப்பட்ட அவர் சட்ட மா அதிபர் தம்மீதான வழக்கைக் கையாண்ட முறையை ஆட்சேபித்து இப்போது நீதிமன்றத்தை நாடியுள்ளார். அரிசி விநியோக திட்டத்தால் அரசுக்கு பெரிய நட்டம் ஏற்பட்டிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. அவர் மீது குற்றவியல் மீறல்கள் தொடர்பாகக் குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படவிருக்கின்றன.

சினோவாத்ரா தமது மனுவில் சட்டமா அதிபரும் மற்றவர்களும் தமது கடமைகளைச் சரியாக நிறைவேற்றத் தவறியுள்ளார்கள், தமக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் நடவடிக்கை களில் ஈடுபட்டிருந்தார்கள் என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார். இந்த வழக்கைத் தொடர்ந்து முன்னெடுப்பதா அல்லது நிராகரிப்பதா என்பதை நீதிமன்றம் தீர்மானிக்க இருக்கிறது. தாய்லாந்தில் தொடர்ந்து நடந்துவரும் அரசியல் போராட்டத்தின் ஒரு பகுதியாகும் இந்த வழக்கு.

# அம்மா தொலைபேசிகள் தமிழ்நாட்டுப் பெண்களுக்கு



சுய உதவிக் குழுக்களில் பணியாற்றுவதற்காகப் பயிற்றுவிக்கப்படும் பெண்களுக்குக்கைத்தொலைபேசிகள் இலவசமாக வழங்கப்படும் என்று தமிழ் நாட்டு முதலமைச்சர் கடந்த வாரம் தமிழ்நாடு மாநில சட்ட சபையில் அறிவித்தார். முதற் கட்டமாக 20 ஆயிரம் பெண்களுக்கு இவ்விதமான அம்மா கைத்தொலைபேசிகள் பேசிகள் வழங்கப்படவிருப்பதாக முதல்வர் ஜெயலலிதா கூறினார்.

சுய உதவி குழுக்களில் பணியாற்றும் பெண்கள், உறுப்பினர்களின் சுய விவரம், சேமிப்புக்கள், கடன்கள், கடன் திருப்பி வாங்குவதுபோன்ற பதிவுகளை இந்தப் பெண்கள் பேண வேண்டிய கட்டாயம் இருப்பதால் அவர்களுக்கு இந்த தொலைபேசிகள் வழங்கப்படவிருப்பதாக அவர் தெரிவித்தார். மாநிலத்தில் இவ்வாறான பல அம்மா சேவைகள் தொடங்கப்பட்டுள்ளன. அம்மா சிமென்ட், அம்மா குடிதண்ணீர், அம்மா கன்ரீன் எனத் தொடங்கப்பட்டுள்ள பலவற்றில் இதுவும் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்ம வியூகத்துக்குள் எம் இனம்

சாம்–ரமேஸ்குமார்
மருதனார்மடம்

பண்டைய காலம் முதல் பத்ம வியூகம் ஒரு போரியல் முறையாக இருந்து வந்துள்ளது. தாமரை வடிவம் என்பதே அதன் பொருள். இதைச் சக்கர வியூகம் என்றும் அழைப்பார்கள். மகாபாரதப் போரில் அர்ஜுனன் மகன் அபிமன்யு இந்த வியூகம் கொண்டே சாவு எனும் பள்ளத்தில் வீழ்த்தப்பட்டான். அதனால் இந்த வியூகம் மகாபாரதத்தின் மாபெரும் அடையாளமாய் திகழ்கின்றது. போரியலின் வடிவமான பத்ம வியூகம் என்பது ஒரு தேசத்தின் தலைவனைப் பாதுகாப்பது தொடங்கி எதிரி தேசத்தின் போர் வீரர்களைச் சிறைப்பிடிப்பது வரை அதன் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இது பல அடுக்குகளைக் கொண்ட வட்ட வடிவமான வியூகமாக பரிணமிப்பதால் இதை உடைத்து உள்ளே நுழைவதும் பின் வெளியே வருவதும் போர் வீரர்களின் விவேகத்திலும் பயிற்சியிலுமே தங்கியுள்ளது.

இந்தப் பத்ம வியூகம் போரியலுடன் தொடர்புபட்டதாக இருந்தாலும் இது நமக்கு ஓர் உண்மையைப் புலப்படுத்துகிறது. எம் இனமும் போர்க் காலம் முடிந்து ஆறு வருடங்கள் கடந்த பின்பும் ஓர் பத்ம வியூகத்துக்குள்ளே சமாதானம் என்ற போர்வையில் சிறை வைக்கப்பட்டுள்ளது. இனவாதம், மதவாதம், உயர் பாதுகாப்பு வலயம், அரசியல் கைதிகள் விடுதலை மற்றும் காணாமற்போனோர் பட்டியல் என்று பல அடுக்குகளைக் கொண்டதாக இந்த வியூகம் விளங்குகின்றது.

நடைபெற்று முடிந்த எட்டாவது நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதினாறு ஆசனங்களைக் கைப்பற்றி அமோகமான வெற்றியைப் பதிவு செய்து தமிழ் மக்களின் ஆன்மாவாக வடக்கு, கிழக்கில் வலம் வருகின்ற போதும் இந்த வியூகங்களுக்கு உள்ளேயே அதுவும் சிக்கிக் கொண்டுள்ளது.

என்றாலும் தேர்தலில் அது தமிழ் மக்களின் அமோக ஆதரவைப் பெற்று வெற்றி பெற்றிருப்பது, சுற்றியுள்ள பத்ம வியூகத்தை உடைப்பதற்கான முதல் அறிகுறியாகும்.

இந்த அறிகுறிகளுடன் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் கடந்த காலங்களைப் போன்று காலம் தாழ்த்தாது மக்களின் உரிமையையும், அதிகாரங்களையையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கு, காந்தியைப்போல் அகிம்சா வழியில் தொடர்ந்து பயணிக்க முதலில் உறுதி பூணவேண்டும். தம் மக்களின் மீது வகுக்கப்பட்டுள்ள பயங்கர வியூகங்களை நுட்பமான முறையில் உடைப்பதற்கும், மகாபாரத கிருஷ்ணனைப்போல் பேரறிவு கொண்டு செயலாற்றுவதற்கும் பதினாறு ஆசனங்களும் ஒரு குடையின் கீழ் ஒற்றுமையாய் முகமலர்ந்து விவேகத்துடன் முன் வரவேண்டும். அப்போதுதான் எதிரிகளின் சூழ்ச்சிகளை வென்று தர்மத்தை நிலை நாட்ட முடியும்.



> இந்தப் பத்ம வியூகம் போரியலுடன் தொடர்புபட்டதாக இருந்தாலும் இது நமக்கு ஓர் உண்மையைப் புலப்படுத்துகிறது. எம் இனமும் போர்க் காலம் முடிந்து ஆறு வருடங்கள் கடந்த பின்பும் ஓர் பத்ம வியூகத்துக்குள்ளே சமாதானம் என்ற போர்வையில் சிறை வைக்கப்பட்டுள்ளது.

தன் ஆன்மாவின் பலம் கொண்டு தர்ம வழியில் நின்று மகாத்மாகாந்தி தம் மக்களுக்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே எதிர்த்து சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார். அவரால் அது முடியும் என்றால், ஏன்... தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் பெற்றுக் கொடுக்க முடியாது? நிச்சயம் முடியும்! ஆன்ம பலத்தாலும், மனத் தூய்மையாலுமே இதை சாதிக்க முடியும். தம் அகவுலகத்துக்குள் இருந்து இந்த இரண்டு விடயங்களையும் அவர்கள் கொண்டு வர முயற்ச்சிக்கவேண்டும். இல்லையேல் இதைப்பேர்ல் ஒரு வெற்றியை தவறவிட்டு விட்டடோமே என மனம் கலங்குவதில் எந்தப் பயனும் இல்லை.

சூரியன் விடியும் வரை காத்திருப்பதில்லை. அது உதித்த பின்பே விடியல் தொடர்கின்றது. அது போல் சந்தர்ப்பத்தையும், சூழ்நிலையையும் நாமே சர்வதேசத்தின் ஆதரவுடன் உருவாக்கிக் கொள்ளவேண்டும். வாய்ப்புக்கள் எம்மை ஒரு போதும் தேடிவராது. இல்லையேல் கௌரவர்கள் போட்ட பத்ம வியூகத்துக்குள் அபிமன்யு இறந்தது போல், பேரினவாதம் போட்ட, இனியும் போடப் போகின்ற பலவித வியூகங்களுக்குள் தமிழ் மக்கள் அகப்பட்டுத் துன்பப்படவேண்டி வரும்.

# முதுமையை எதிர்கொள்வோம்!



வ.செ. நடராசன்
(கட்டுரையாளர்:
முதியோர் நல மருத்துவர்)

முதுமையிலும் மிகவும் கொடியது என்ன தெரியுமா? அது தான் முதுமையில் ஏற்படும் இயலாமை. அதாவது, வயதான காலத்தில் தனது தேவைகளுக்காக மற்றவர்களைச் சார்ந்திருப்பது.

உதாரணம்: குளிப்பதற்கு, உடை உடுத்துவதற்கு, சாப்பிடுவதற்கு, நடப்பதற்கு இப்படி தன்னுடைய ஒவ்வொரு தேவைகளுக்கும் மற்றவர்களைச் சார்ந்திருப்பதுதான் மிகவும் கொடுமையானது.

இந்த இயலாமையைத் தடுத்து, தன் சொந்தக் காலிலேயே நிற்க ஏதாவது வழிகள் உண்டா?

முதுமையில் எந்த உபாதையும் தராமல், எந்த அறிகுறியையும் வெளிப்படுத்தாமல், இருளில் ஒளிந்திருக்கும் திருடனைப் போல பல நோய்கள் தொல்லையின்றி மறைந்திருக்கும்.

ஆண்டுக்கு ஒரு முறை மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வதன் மூலம் மறைந்திருக்கும் பல நோய்களைக் கண்டு கொள்ள முடியும் மற்றும் அதற்குத் தக்க சிகிச்சை அளிக்க முடியும்.

இயலாமை இன்றி வாழ, வருமுன் காக்க, கால முறைப்படி பரிசோதனை செய்ய வேண்டும்.

முதியவர்கள் இறப்பிற்கு முக்கியக் காரணம் நுரையீரல் சார்ந்த நோய்களாகும். இதைத் தவிர்க்க தடுப்பூசிகள் உள்ளன.

உ.ம். நிமோனியாவுக்கு ஒரே ஒரு தடுப்பூசி போட்டுக் கொண்டால் ஆயுள் முழுவதும் இந்த நோயிலிருந்து விடுபடலாம்.

முதியவர்கள் அடிக்கடி கீழே விழ வாய்ப்புகள் அதிகம் இருப்பதினால், டெட்டனஸ் தடுப்பூசி 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை போட்டுக் கொள்வது நல்லது.

குளிர்காலத்தில் வரும் ப்ளூ காய்ச்சலைத் தடுக்க ஆண்டுக்கு ஒரு முறை ப்ளூ தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளலாம்.

முதுமைப் பருவத்தில் வரும் பல நோய்களை விரட்டும் சக்தி உடற்பயிற்சிக்கு உண்டு. வேகமாக நடத்தல், சைக்கிள் ஓட்டுவது, நீந்துவது, வீட்டிற்குள்ளேயே விளையாடுவது போன்ற உடற்பயிற்சிகளைச் செய்யலாம்.

நாள்தோறும் மூன்றிலிருந்து ஐந்து கி.மீ. தொலைவு நடப்பது நல்லது அல்லது 30 முதல் 45 நிமிடங்கள் வரை உடற்பயிற்சி செய்ய வேண்டும். சிதறி ஓடும் எண்ணங்களை ஒரு நிலைப் படுத்துவதே தியாணம். தியானத்தால் மனம் அமைதி அடைகிறது. தெளிவான சிந்தனை கிடைக்கிறது. மனதை ஒருநிலைப் படுத்தி, நாம் நினைத்ததைச் சாதிக்கக்கூடிய தெளிவு பிறக்கிறது.

[illegible] முழமையை [illegible] தான் மில்லட்ஸ் என்னும் சிறுதானியங்கள் அடங்கிய உணவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுமைக் காலத்திற்கு வேண்டிய எல்லா வகையான சத்துகளும் சிறுதானியங்களில் இருப்பதால், அதை முடிந்த வரையில் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அரிசி மற்றும் உணவில் உப்பைக் குறைக்க வேண்டும், நீரை அதிகம் அருந்த வேண்டும்.

எவ்வளவு வயதானாலும் குழந்தை மனநிலையில் இருக் கவே பலரும் விரும்புவார்கள். நம்மை மற்றவர்கள் தாங்கிக் கொள்ளவேண்டும். அரவணைத்துக் கொள்ளவேண்டும் என்ற ஆசை உங்களுக்கு இருந்தால், நீங்கள் மற்றவர்களைச் சார்ந்து இருக்கவேண்டிய கட்டாய நிலையே உருவாகும்.

அதனால், உங்கள் மீது மற்றவர்களுக்கு வெறுப்பும் வந்துவிடும். எந்தவொரு சின்ன வேலையாக இருந்தாலும் அதை யாருடைய துணையும் இல்லாமல் நீங்களாகவே செய்யப் பழகுங்கள்.

முதுமைக் காலத்தை நிம்மதியாக நகர்த்துவதற்கு பணம் மிக மிக அவசியம். வேகமான வாழ்க்கைமுறை மாற்றங்களைக் கண்டுவரும் இன்றைய உலகில் உண்மையான அன்பிற்கோ, பாசத்திற்கோ மதிப்பு இல்லை. முதுமையில் ஏற்படும் இயலாமையைத் தடுக்க, நடுத்தர வயதிலிருந்தே முயற்சியைத் தொடங்க வேண்டும்.

கால முறைப்படி பரிசோதனை, தினமும் செய்யும் உடற்பயிற்சி, சிறுதானியங்கள் அடங்கிய உணவுப் பழக்கம், தடுப்பூசி போட்டுக் கொள்வது, தினமும் தியானம் செய்வது, முடிந்தளவிற்கு சொந்தக்காலில் நிற்பது அவசியம்.

இத்துடன் தேவையான நிதி வசதியை வைத்துக் கொண்டால், முதுமையில் ஏற்படும் இயலாமை எனும் அரக்கனை கண்டிப்பாக விரட்ட முடியும். பிறர் உதவியின்றி சொந்தக்காலில் நிற்க முடியும்.



நசான்
இனுவில்

# உடல், மனநலம் பணத்தை விட முக்கியம்



இன்று உலகமானது தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் அசுர வேகத்துடன் வளர்ந்து கொண்டிருக்கிறது. எதற்கெடுத்தாலும், எந்தத் துறையிலும் தொழில்நுட்பம் நுழையாத இடமில்லை எனலாம். காற்றுக் கூட உட்புகமுடியாத இடத்துக்கு தொழில்நுட்பம் நுழைந்துவிட்டது. இந்தத் தகவல் தொழில்நுட்பமானது மனிதர்களை இயந்திர மயமாக்கிமனிதஆயுளைக்குறைத்துக்கொண்டு செல்கின்றது. இன்று எந்தவொரு நிறுவனத்திலும் கணினி இல்லாமல் வேலை இல்லை.

கணினிப் பாவனை அதிகரித்துள்ள அதே நேரம் அதனால் ஏற்படும் இலை மறை காயான பக்க விளைவுகளை அதிகரிக்கின்றன. தொழில்நுட்ப வளர்ச்சியின் கணினிப் பாவனை வரமா? சாபமா? எனக்கூற முடியாத நிலையில் நன்மையும், தீமையும் இரண்டறக் கலந்தே உள்ளன.

இத்தகைய கணினிப் பாவனையால் பெரிய பின்விளைவுகளும் ஏற்படுகின்றன. அதற்காக அவற்றை முற்றாக நிறுத்த முடியாது. ஆனால் வரும் பாதிப்புக்களில் முன்னெச்சரிக்கையாக இருந்து எங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

கணினிக்கு முன்னால் இருந்து பல மணித்தியாலங்கள் வேலை செய்வதால் பல உடல் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படுகின்றன. கண் பிரச்சினைகள், கழுத்து, இடுப்பு வலிகள், தலைவலி, மனஅழுத்தம், அக்கறையற்ற நேரகாலம் தவறிய உணவுப் பழக்கங்கள், குடும்பத்தில் சரியான உறவு நிலை பேணப்படாமை போன்ற பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு. அவற்றிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வது அவரவர் கைகளிலேயே தங்கியுள்ளது.

கணினியின் முன் இருந்து தொடர்ச்சியாக வேலை பார்ப்பதால் நமது உடலும், மனமும் சோர்வடையும். பிற்காலத்தில் இந்தச் சோர்வு பெரிய பிரச்சினைகளை உருவாக்கலாம். எனவே இதனைத் தவிர்க்க இடைக்கிடையே ஓய்வுநேர இடைவெளிகளை எடுத்துக்கொள்வது நல்லது. பொதுவாக வேலை செய்யும் நேரங்களில் அடிக்கடி இடைவெளி எடுத்துக் கொள்வதை நிறுவன முகாமையாளர்களோ, சக பணியாளர்களோ விரும்புவதில்லை. அதாவது வேலைப்பளு காரணமாக ஓய்வு என்பது கிடைக்காத ஒன்றாகி விடும். ஆனால் உண்மையில் அவ்வப்போது எடுத்துக்கொள்ளும் சிறிய ஓய்வுநேர இடைவெளிகள் அதிக ஆற்றலையும், புத்துணர்ச்சியையும் தந்து மன அழுத்தத்தையும் போக்கி உற்சாகத்தோடு மேலும் வேலை செய்யத் தூண்டும்.

மேலை நாடுகளுக்கும், நம் நாட்டுக்கும் மாறுபாடான தட்பவெப்ப நிலை காணப்படுகின்றன. அந்த நாடுகள் இயற்கையாகவே குளிர்மையான சூழலில் அமைந்திருக்கின்றன. நம்நாட்டில் செயற்கைக் குளிரூட்டிகள் பொருத்தப்பட்டு எமது இருப்பிடங்கள் குளிர்மைப்படுத்தப்படுகின்றன. பெரும்பாலான நிறுவனங்களில் கணினிகள் உள்ள அறைகளுக்கு குளிரூட்டி வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன. பெரும்பாலான ஊழியர்கள் அலுவலகத்தில் நல்ல குளிர்சாதன அறையில் வேலை செய்துவிட்டு வீட்டுக்கு வந்து வேறு வகையான வெப்ப நிலையில் இருக்கவேண்டி இருக்கிறது. இப்படி அலுவலகம், வீடு என வேறுபட்ட இரு வெப்ப நிலைகளில் பணிபுரிபவர்களை பக்ரீரியாக்கள் மிக அதிகமாக பாதிப்பதாக கூறப்படுகிறது.

எமது நாட்டில் குளிர்சாதன அறையை தினமும் சுத்தம் செய்யும் போக்கு மிகவும் குறைவு. அறை எப்போதும் மூடியே இருக்கும். வெளியிலிருந்தும் எந்தவிதமான குப்பைகளும் உள்ளே வருவதில்லை என்பதால் வாரம் ஒரு முறையோ அல்லது இருமுறையோ மட்டுமே சுத்தம் செய்கிறார்கள். இதைத் தவிர நிலத்துக்கு விரிக்கும் கார்பெற்றை ஆறு மாதத்துக்கு ஒரு தடவையோ அல்லது ஏதேனும் விசேட நாள்களில் மட்டுமோதான் சுத்தப்படுத்துகிறார்கள். குப்பையும் இல்லை, அசுத்தமாகவும் தெரியவில்லை என்றால் எதற்காக சுத்தம் செய்ய வேண்டும் என்பதே இதற்கான காரணம். ஆனால், குளிர்சாதன அறைகளில் இருக்கும் நோய்க்கிருமிகள் உடனே வெளியேறுவதில்லை. அங்கேயே தங்கிப் பல்கிப் பெருகத் தொடங்குகின்றன. சுத்தம் இல்லாத இடங்கள்தான் அவை பெருகுவதற்கு ஏற்ற இடம். அதனால் அந்த அறைக்குள் இருக்கும் மனிதர்களில் நோய்க் காரணிகள் தொற்றுவதற்கு அதிகம் வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, அவற்றைத் தினமும் கிருமிநாசினி கொண்டு சுத்தப்படுத்துவதும் ஆரோக்கியத்துக்கு அவசியமானது.

தொழில்நுட்பத் துறையுடன் சம்பந்தப்பட்டது தான்.இன்றைய எதிர்காலம். அதற்கு ஏற்றாற் போல் தயார் நிலையுடன் அந்தத் துறைக்குள் ஈடுபடல் வேண்டும். கணினிக்கு முன் இருந்து வேலை செய்யும்போது, சம்பந்தமே இல்லாமல் திடீரென அப்செட் ஆகும் அளவுக்கு வேலையில் ஏதாவது இடையூறு இருந்தால் உடனே; அது நீங்கள் ஓய்வு எடுக்கும் நேரம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

இருந்த இடத்தில் இருந்தபடி கைகால்களை நீட்டிக்கொண்டு ஓய்வாக அமர்வது, கழுத் தைச் சுழற்றுவது, கண்களை சிறிதுநேரம் மூடி கண்ணுக்கு ஓய்வு கொடுப்பது, எழுந்து சிறிது நிமிடங்கள் நடந்துவிட்டு வருதல் என்று ஏதாவது ஒரு திசையில் கவனத்தைச் செலுத் துங்கள்.

வேலையை மிகச்சரியாக செய்ய வேண்டும். சிறிய தவறு ஏற்பட்டு விட்டாலும் பணியில் இருந்து நீக்கிவிடுவார்களோ என்ற பயத்தாலேயே பலர் அளவுக்கு அதிகமான வேலையை தலையில் தூக்கிப் போட்டுக்கொண்டு சிரமப்படுவார்கள். இது தேவையற்ற ஒன்று. இந்த உலகம் பரந்து விரிந்தது. உடல்நலம் சிறப்பாக இருந்தால் ஏதாவது ஒரு வேலை செய்து சிறப்பாகவே வரமுடியும் என்று உங்கள் மீது முதலில் நம்பிக்கை வையுங்கள்.

உடலைக் கெடுத்துக்கொண்டு எந்த வேலை பார்த்தாலும் அதனால் எந்தப் பயனும் உங்களுக்கும், உங்கள் உறவினருக்கும் ஏற்படப் போவதில்லை. வேலையால் கிடைக்கும் பணம் மற்றும் வெற்றியைக் கொண்டாட உங்களுக்கு நல்ல மனமும் ஆரோக்கியமான உடலும் அவசியம்.

பசிக்கும்போது சாப்பிட்டு ருசி தெரியும் போது எழுந்துவிட வேண்டும் என்றொரு வழக்கு உண்டு. ஆனால் கணினிதொழில்நுட்ப வேலை பார்ப்பவர்கள் தமது சாப்பாட்டு நேரங்களில்கூட கவனம் செலுத்துவதில்லை. எனவே ஊதியத்தை மட்டும் கருத்தில் கொள்ளாமல் உங்கள் உடல், உள நலனையும் கருத்தில் கொண்டு உங்களை உயர்த்திக் கொள்வீர்களாக.

## உரையாடியதிலிருந்து...

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

தரவுகளை ஆய்வுசெய்வது என்பது எப்போதும் வெறுப்பையோ மன அழுத்தத்தையோ தராது. மேலும், எங்களது ஆய்வில் கிடைத்த தரவுகள் சிறப்பானவை. ஆனால், பல்வேறு தரவுகளை ஒப்பிட்டுச் சல்லடையில் போட்டுச் சலிப்பதைப் போல இந்த ஆய்வு அமைந்ததால், ஆய்வறிக்கைகளைத் தயாரிக்கவே எங்களுக்கு ஓராண்டுக் காலம் பிடித்தது.

***ஃவோக்ஸ்வேகன் கார்களில் பொருத்தியுள்ள இயந்திரங்களில் உள்ள மென்பொருள் எவ்வாறு வேலை செய்கிறது?***

நவீன கார்கள் எல்லாம் தற்போது முழுமையாகக் கணினியால் கட்டுப்படுத்தப்படுகின்றன. மாசு வெளியாதலைக் கட்டுப்படுத்துவதும் ஒரு மென்பொருள்தான். மாசுகளைப் பரிசோதிக்கிற தேர்வுகளின்போது மிகவும் சிறப்பாகச் செயல்படும் வகையிலும் மற்ற நேரங்களில் மோசமானமுறையில் செயல்படும் வகையிலும் இந்த கார்களின் மென் பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதாவது, ஆய்வகத்தில் இருக்கிறோம் என்பதை அந்த கார் உணர்ந்து அதற்கேற்ப நடந்து கொள்கிறது. மாசுப் பரிசோதனைக்கான தேர்வில் இந்த கார் வெற்றிபெற்றது இப்படித்தான்!

***இவ்வளவு பெரிய தாக்கத்தை உங்களின் ஆய்வுகள் ஏற்படுத்தும் என எதிர்பார்த்தீர்களா?***

நிச்சயமாக இல்லை. எங்களுக்கு இதெல்லாம் வழக்கமான சோதனைகள். எங்களின் சோதனை முடிவுகளை நாங்கள் பகிரங்கப்படுத்திவிட்டோம். இப்படிப்பட்ட உலகளாவிய விளைவுகள் வரும் என்று நினைத்துக்கூடப் பார்த்ததில்லை.

அதிக அளவு நச்சுத்தன்மை கொண்ட மாசுகளை வெளியிடும் ஒரு கோடியே 10 லட்சம் கார்களை வெளியிட்டுள்ளதாக ஃவோக்ஸ்வேகன் நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது. அந்தக் கார்கள் வெளியிடும் கூடுதல் மாசு [illegible] ஆண்டும் இங்கிலாந்தில் மட்டும் 23 ஆயிரம் பேரைக் கொல்லக் [illegible] தி கார்டியன் நாளிதழின் பத்திரிகையாளர் ஜான் விடல். இதைப் படிக்கும்போது எங்கள் ஆய்வின் முக்கியத்துவம் எனக்கு மேலும் அதிகமாகப் புரிகிறது.

## சுக்குநூறாகிறது ஃவோக்ஸ்வேகன்....

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

**நஷ்டம்**

இந்த மோசடி பற்றிய செய் திகள்வெளியானதைத் தொடர்ந்து பங்குச் சந்தையில் ஃபோக்ஸ் வேகன் பங்குகள் தொடர்ந்து சரிந்தன. 6,600 கோடி டாலர் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அமெரிக்க அரசு அபராதம் விதித்தால் 1,800 கோடி டொலர் செலுத்த வேண்டியிருக்கும். இதைப் போல பிற நாடுகளும் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளன. அந்த நாடுகளும் அபராதம் விதித்தால் அல்லது ஃபோக்ஸ்வேகன் கார்களுக்கு தடைவிதித் தால், நிறுவனத்தின் 78 ஆண்டுக்கால வளர்ச்சி புகை போல மறையும்.

ஃபோக்ஸ்வேகன் செய்த மோசடி பல நாடுகளுக்கு ஒரு பாடத்தைக் கற்பித்துள்ளது. சுற்றுச் சூழல் பாதுகாப்பு விடயத்தில் மெத்தனமாக இருக்கக் கூடாது என்பது இதன் மூலம் உணர்த்தியுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் விதிமுறைகள் கடுமையாகஉள்ளபோதிலும்,அங்கேயே ஃபோக்ஸ் வேகன் இத்தகைய மோசடி செய்துள்ளது அதிர்ச்சியளிக்கும் விடயம்.

இலங்கையிலும் நிறைய ஃபோக்ஸ்வே கன் கார்கள் ஓடுகின்றன. அவற்றின் மீதான சோதனை எப்போது நடக்கும் என்பது கடவுளுக்குத்தான் தெரியும்.


**பிளாட்டினம் விலை சரிவு**

ஃபோக்ஸ்வேகன் கார்களின் பிரச்சினை யால் பிளாட்டினம் விலைசரிந்துள்ளது. மிக வும் விலை உயர்ந்த உலோகங்களில் பிளாட் டினமும் ஒன்று. ஃபோக்ஸ்வேகன் மோசடியால் அந்த நிறுவன பங்குகள் சரிந்ததில் அர்த்தமுண்டு. ஆனால் பிளாட்டினம் விலை கடந்த 6 ஆண்டு களில் இல்லாத அளவுக்கு சரிந்துள்ளது பல ரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

டீசல் என்ஜினில் புகை அளவைக் கட்டுப்படுத்த பிளாட்டினம் பயன்படுத்தப்படுகிறது. இதனால் பிளாட்டினம் விலை சர்வதேச சந்தையில் சரிந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிளாட்டின தேவையில் நான்கில் ஒரு பங்கு ஆட்டோமொபைல் துறையில் பயன்படுத்தப்படுகிறது. அதாவது 17 லட்சம் அவுன்ஸ் (ஒரு அவுன்ஸ் 28.34 கிராம்) பயன்படுத்தப்படுகிறது. ஒரு காருக்கு சராசரியாக 5.5 கிராம் பிளாட்டினம் பயன் படுத்தப்படுகிறது. காசோலின் கார்களில் பல்லாடியம் பயன் படுத்தப்படுகிறது. பிளாட்டினம் விலை குறைந் தாலும் பல்லாடியம் விலை குறையவில்லை. ஒரு டிராய் அவுன்ஸ் (31 கிராம்) பிளாட்டினம் விலை சர்வதேச சந்தையில் 900 டாலராக சரிந்துவிட்டது. இதற்கு முன்பு ஒரு டிராய் அவுன்ஸ் 1,100 டொலராக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரொனால்டோ 500கோல்கள்

ஆட்டத்துக்கு ஆட்டம் ரொனால்டோவுக்கான விலை நிர்ணயங்கள் ஏறிச் செல்வதைப்போல அவரது தனிப்பட்ட கோல் கணக்குகளும் அவற்றின் சராசரிகளும் ஏறிக்கொண்டுதான் செல்கின்றன. அந்த வகையில் தனது உதைபந்தாட்ட வாழ்வில் 500 ஆவது கோலை விளாசிப் புதிய சாதனை படைத்துள்ளார் போர்த்துக்கல் அணியின் தலைவரும் ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரருமான ரொனால்டோ.

நடைபெற்றுவரும் லாலிகா தொடரில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் ரியல் மாட்ரிட் 2:0 என்ற கோல் கணக்கில் மால்மோ அணியை வீழ்த்தியது. இந்த 2 கோல்களையும் ரொனால்டோ அடித்தார். இதன்மூலம் அவர் 500 கோல்களை அடித்துச் சாதனை புரிந்தார். தனது நாடு மற்றும் கழக அணிகளையும் சேர்த்து ரொனால்டோ 501 கோல்களை அடித்து முத்திரை பதித்துள்ளார். 753 ஆட்டங்களில் அவர் இந்த மைகல்லை தொட்டார். மேலும் ரியல் மாட்ரிட் கழகத்தில் அதிக கோல்கள் அடித்த ரவுலையும் (323 கோல்கள்) ரொனால்டோ சமன் செய்தார். காயத்தால் மெஸ்ஸி ஓய்விலிருந்து வரும் நிலையில் ரொனால்டோ இவ்வாறு அசத்திக்கொண்டிருக்கின்ற காரணத்தினால் கடந்த இரு வருடங்களைப் போன்று நடப்பு வருடத்தின் சிறந்தவீரருக்கானவிருதும்ரொனால்டோவுக்குமிக அருகிலேயே உள்ளது. மொத்தத்தில் மெஸ்ஸியின் வீழ்ச்சி, ரொனால்டோவின் எழுச்சியாக மாறியுள்ளது.

# சென்றார் செரீனா வந்தார் செரபோவா



நடப்பு வருடத்தின் இறுதிப்பகுதியில் நடைபெறவிருந்த, முன்னணி ரென்னிஸ் வீராங்கனைகள் மட்டும் பங்கேற்கும் ரென்னிஸ் தொடரிலிருந்து விலகியுள்ளார் செரினா வில்லியம்ஸ். செரினாவின் இந்த விலகல் செரபோவாவுக்கு அதிக வாய்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

விம்பிள்டன், அமெரிக்கன் ரென்னிஸ் தொடர்களைப் போன்று பெரிதும் எதிர்பார்க்கப்படும் தொடர்களில் ஒன்றுதான் ஒவ்வொரு வருட இறுதியில் நடைபெறும் முன்னணி ரென்னிஸ் வீராங்கனைகள் மட்டும் பற்கேற்கும் தொடர். தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலுமுள்ள வீராங்கனைகளே இந்தத் தொடரில் பங்குபற்றலாம் என்ற நிபந்தனையின் அடிப்படையில் முதலிடத்தில் உள்ள செரினா, இரண்டாவது இடத்திலுள்ள கெலப், மூன்றாவது இடத்திலுள்ளசெரபோவா ஆகியோர் இந்தத்தொடருக்கு, தகுதி பெற்றிருந்தனர். இவர்களைத் தவிர கிவித்தோவா, லூஸி சபரோவா, பென்னட்டா, ரட்வென்ஸ்கா, முருகுசா ஆகி யோர் குறித்த தொடரில் பங்கேற் கலாம் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

இந்த நிலையில் இந்தத் தொடரிலிருந்து எதிர்பாராத விதமாக விலகியுள்ளார் செரினா.

செரினாவுக்கு அடுத்த இடத்தில் தற்பொழுது கெலப் இருந்தாலும் அவரைவிட செரபோவாவே திறமையானவர். ஏனெனில் காயம் காரணமாககடந்தமூன்றுமாதங்களாக செரபோவா ஓய்வில் இருந்ததாலேயே கெலப் இரண்டாவது இடத்துக்குமுன்னேறி செரபோவா மூன்றாவது இடத்தில் பின் தங்கினார். தேவையான அளவு பயிற்சியிலும் ஓய்விலும் இருந்து வலிமையான வீராங்கனையாகத் திரும்பும் செரபோவா நிச் சயம் ஏனைய வீராங்கனைகளைவிட ஆக்ரோசமாகச் செயற்பட அதிகப்படியான வாய்ப்புக்கள் உள்ளன.

இந்த நிலையில் முன்னணிவீராங்கனைகளுக் குள் முதன்மை வீராங்கனையாகச் செரபோவா மாறுவார் என்பதேதற்பொழுது பரவலான எதிர்பார்ப்பாக உள்ளது.

# திக்கு முக்காடவுள்ள தீவுகள்




கிரிக்கெட்டைப் பிரதான விளையாட்டாகக் கொண்டுள்ள நாடுகளில் ஒன்றுதான் மேற்கிந்தியத் தீவுகள். வேறெந்த கிரிக்கெட்கட்டுப்பாட்டுச்சபைகளிலும்இல்லாதஅளவுக்குப் பகையுணர்வும் பழிவாங்கல்களும் பாராட்டப்படுவது இங்கேதான். இந்தப் பகையுணர்வும் பழிவாங்கல்களும் யானை தன் தலையில் தானே மண்ணை அள்ளிக் கொட்டுவதைப்போலதீவுகளுக்கே ஆபத்தைத்தரும் விதமாக அமைவதுதான் அதிகம். இலங்கைக்கு எதிரான தொடரிலும் அவ்வாறே அமையப் போகிறது.

தீவுகளில் உள்ள அதிகார துஷ்பிரயோயங்களையும், தன்னிச்சையான முடிவுகளையும், கொடுப்பனவுச் சிக்கல்களையும் வெளிப்படையாக விமர்சித்த மூத்த வீரர்களான பொலார்ட்டும், பிராவோவும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான அடுத்த தொடரிலேயே களற்றிவிடப்பட்டனர். போர்ம் இல்லாதமையே காரணமாகச் சொல்லப்பட்டது. தென்னாபிரிக்காவை எதிர்த்து ஒரு வெற்றியைக்கூட்ப் பதிவுசெய்ய முடியாமல் திரும்பியது தீவுகள். உலகக்கிண்ணத் தொடரிலும் அவர்கள் இடம்பெறவில்லை. இவர்களை வேண்டும் எனத் தெரிவித்தார் அப்போதைய அணித்தலைவர் சமி. தலைமைத்துவம் உடனடியாக சமியிடம் இருந்து எடுக்கப்பட்டுக் கோல்டருக்குக் கொடுக்கப்பட்டது. உலகக்கிண்ணத் தொடரிலும் தீவுகளால் எதையும்சாதிக்கமுடியவில்லை.

பொலார்ட், பிராவோ ஆகிய இருவரும் அணியில் இடம் பிடிக்க வேண்டும் என்று தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையைக் கடுமையாக விமர்சித்தார் சமி. உடனடியாக அணியில் இருந்து தூக்கப்பட்டுபிராவோ, பொலார்ட் வரிசையில் ஓரங்கட்டப்பட்டார்.

வீரர்களால்தான் நிர்வாகக் குளறுபடிகள் எதனையும் சரிசெய்ய முடியவில்லை, தம்மாலாவது எதாவது மாற்றம் வருகிறதா பார்ப்போம் என்று முயன்று பார்த்தார் தலைமைப் பயிற்சியாளர் சிம்மொன்ஸ். விளைவாக பயிற்சியாளர் இல்லாமலேயே இலங்கை வந்தது மேற்கிந்தியத் தீவுகளின் அணி. மூத்த வீரர்கள் இல்லாமல் (காயம் காரணமாக கெயிலும் இல்லை) [illegible] தலைமைப் பயிற்சியாளர் இல்லாமலேயே இலங்கை வந்துள்ளது. ஒரு அணியை அதன் சொந்த மண்ணில் வைத்து எதிர்கொள்வது நிச்சயம் ஆபத்தானது. ஏனெனில் அந்த அணிக்குப் பழக்கப்பட்ட ஆடுகளங்கள், அதிகப்படியான ரசிகர்கள், சாதகமான தட்ப வெட்ப காலநிலை என்று அனைத்து விதத்திலும் பலம் அதிகரித்திருக்கும். அந்த வகையில் அனைத்து விதத்திலும் பலம்பொருந்திய இலங்கையிடம் தீவுகள் திக்கு முக்காடத்தான் போகிறது. சிரிப்பூட்டும் விடயம் என்னவென்றால் கரீபியனான லாராவின் சாதனைகளை முறியடித்துவிடக்கூடாது என்பதுக்காக சக கரீபியனான சந்தர்போல் அணியில் இருந்து நீக்கப்பட்டமையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org